# இங்கிலாந்தின் சரிதம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 AUG 1933
MADRAS

கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல் சரித்திர போதகாசிரியர்
G. V. ராமய்யர் B.A.,L.T.,
எழுதியது.

ஐந்தாவது பதிப்பு

All Rights Reserved] 1933 [Price 1 Re 4 As.

இப்புத்தகம்

நமது

நாட்டின் வரலாறுகளை

உள்ளது உள்ளபடியே ஆராய்ந்து வெளியிட முயலும்

சிறியார் பெரியோர்களின் உண்மை உழைப்பிற்கு

உரிமையாக்கப்படுகிறது.

P.M. 3562
942

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 AUG 1933
MADRAS

# FOREWORD

The elders among the School Masters of South India do but lip-service to the cause of the Vernaculars; they speak about the need of teaching the young through the medium of the mother tongue and do nothing more. Of the younger teachers of the High Schools most have so little self-reliance that they say they cannot teach the various school subjects in the mother-tongue of the pupils unless they have a Text-book in that tongue to help them. It is therefore refreshing to notice that more than one of our youngest educationists have begun to publish such books. The work to be done is pioneer work. On the one hand, professional pandits do not help in the production of books on modern knowledge in the dialects of South India, and at the same time criticise unduly harshly the style adopted by venturesome authors. On the other hand, people wedded to the method of teaching knowledge subjects in more or less bad English look askance at the efforts of the reformer. It is no easy task under these circumstances to bring out a Tamil Text-Book on English History and Mr. G. V. Rama Ayyar deserves to be congratulated that he has succeeded in his self-imposed task. I hope the book will be used in many schools of the Presidency.

Professor **P. T. Sreenivasa Iyengar,** M.A.

# SELECT OPINIONS.

R. SWAMINATHA AYYAR, Retired Headmaster, Town High School, Kumbakonam writes :—

History of England (in Tamil) by Mr. G. V. Rama Ayyar, B.A., L.T., is indeed an exceedingly good book. It is written in *easy, readable Tamil* and the facts selected are told simply and clearly. At the end of each Chapter is given a set of intelligent questions and at the end of each period dealt with is likewise given a statement of its important events in Chronological order, both of which must be highly helpful to the reader. The book further contains the necessary illustrative maps and genealogical tables presented most clearly and neatly. The book, **instructive as it is in every respect**, deserves all patronage and the learned author deserves the warmest thanks of the school-going public for his pains in having brought out a really useful book.

THE INDIAN EDUCATOR, Madura writes :—

We welcome this neat little book on the History of England written in Tamil by one of our History Assistants in one of our good schools in the Presidency. Parties that talk of want of text books in vernaculars to make the vernaculars media of instruction will be effectively silenced by the pioneer work of Rama Iyer and others. Of course, the modern Tamil may not be the classical Tamil, and Pundits have to be satisfied that it is the fate of all languages at certain stages of development. The book on hand is a short history and the young student in the High School course may be glad to know something of other countries in his own language. We wish the headmasters of schools prescribe books of the type and encourage young enterprising men of Rama Iyer type. Nothing will be too small or too big as help to enterprises of this type.



N. R. SUBBA AYYAR, M.A., L.T., F.M.U., Lecturer in Modern History, Government College, Coimbatore :—

One of the serious objections urged for a long time against the adoption of the Vernacular as the medium of instruction in all subjects of the High School Curriculum except English was the paucity of good Text-books in the vernacular. Whatever might have been the force of this objection in the past, it does no longer hold good. Thanks to the persistent efforts of a few talented teachers there are now in the market really good Text books in Tamil, in History and other subjects.

Mr. G. V. Rama Ayyar, B.A., L.T., Assistant, Town High School, Kumbakonam certainly belongs to the small band of enthusiastic teachers who have helped the Vernacular to come into their own. His Text-book of English History in Tamil has been *carefully planned and successfully executed.* The language is *clear* and the facts are *well-arranged.* The large number of sketch maps should surely help the pupil to grasp the matter dealt with without any difficulty.

I congratulate Mr. G. V. Rama Ayyar on the success of his venture.

THE STUDENT, Chingleput, writes :—

If attempts to make education more effective but easier by vernacularising all teaching in non-language subjects are eagerly to be welcomed, the author of this book is certainly worth all encouragement. He has made the whole field of the history of England available in a readable outline form for the Student. It is intended for the Higher Form and is rightly ushered into the world of text-books by Mr. P. T. Srinivasa Ayyangar with a Foreword in his usual tone of encouragement for all genuine efforts of self-help from the middle class of teachers. Mr. G. V. Rama Ayyar has already familiarised himself to the teaching world of our parts by his "Stories from Indian History" for class V.

## NEW S. S. L. C. SYLLABUS.

### OUTLINES OF THE HISTORY OF ENGLAND.

---

1. *Celtic Britain* : Celtic civilisation—the Druids—arts—industries and trade.

Caesar's invasions—extent of Roman Empire—conquest of Britain—Roman Britain.

2. *The making of England* : The Teutonic migrations—the Anglo-Saxon conquest—"the Heptarchy"—the supremacy of Wessex—the mission of Augustine and the conversion of the English.

The Northmen—the Danish invasions—the work of Alfred and his successors—the recovery of the Danelaw—Edgar and Dunstan.

The Danish conquest—Canute—restoration of the English line—Edward the Confessor—Norman influences—Harold.

The Government of England before the Conquest—the Shire—the Witan—social conditions.

3. *The Norman Conquest* : Causes—the Conquest—effects—Feudalism—Domesday Book—the Church—the rule of the Norman kings—relations with Church, barons and people—anarchy under Stephen.

4. *The Angevin Kings* : Henry II—his empire—his reforms—relations with Church and barons—Ireland.

Richard I—the Third Crusade—John—the loss of Normandy—struggle with Church and barons—Magna



Carta—Social and economic conditions in 11th and 12th centuries.

5. *The growth of Parliament:* Henry III's misgovernment—Simon de Montfort—the Barons' Wars.

Edward I—his wars—Wales and Scotland—relations with the barons—the making of Parliament, 1275—1295.

Edward II's misrule—Bannockburn—Edward III—the French War—Parliament—the Black Death—its social and economic results.

Richard II—the Peasant's Revolt—mis-rule and overthrow—England under the Plantagenets—Literary revival—Chaucer—Church reform—Wycliff and the Lollards.

6. *Lancaster and York :* Henry IV—rebellions—the advance of Parliament—Henry V—the French War—Henry VI—the Regency—Jone of Arc—failure in France—rebellion at home—Wars of the Roses—victory of Yorkists—Edward IV—Richard III.

Importance of 15th century—the fall of Constantinople—voyages of Columbus and Vasco de gama—Renaissance—invention of printing.

7. *The Tudor Monarchy :* Henry VII—his government—Star Chamber—marriage alliances—Henry VIII—the career of Wolsey—relations with Papacy and Spain—revolt against Papal authority—the Spanish marriage—the Reformation—Cranmer—Thomas Cromwell—the dissolution of the Monasteries—Edward VI and the Reformation—Mary and the Catholic reaction—the loss of Calais.

Elizabeth—the religious settlement—the Puritans—the Counter Reformation and the Catholic plots—Mary, Queen of Scots—rivalry with Spain—the Sea-Dogs—the Spanish Armada.

England under the Tudors—Government—relations with Wales, Scotland and Ireland—Maritime activity—Trading Companies—Literature.

8. *The Stuarts: Crown vs. Parliament:* James I—Union of English and Scottish Crowns—the conquest of Ulster—the Pilgrim Fathers—growing opposition of Parliament—the chief points in dispute.

Charles I—Divine Right—conflict with Parliament—Petition of Right—arbitrary government—Strafford and Laud—Ship Money—the growth of public resistance—Pym and Hampden—Scotland and the Covenant—the Long Parliament—Civil War—Oliver Cromwell—the victory of Parliament—the execution of Charles.

The commonwealth-form of Government—Cromwell in Scotland and Ireland—Foreign policy—wars with Holland and Spain—Literature—Milton and Bunyan.

9. *The Restoration and Revolution:* Charles II—his Home and Foreign policy—absolutism with support of France—the Cabal—Dutch Wars—Test Act—Habeas Corpus Act—Exclusion Bill—Whigs and Tories—James II—Monmouth's rebellion—Catholic policy—the Declaration of Indulgence—the Seven Bishops' case—Revolution.

Accession of William and Mary—Bill of Rights—the settlement in Scotland and Ireland: War with France—the Act of Settlement—The reign of Anne—Wars of the Spanish



succession—Treaty of Utrecht—party government—Union with Scotland—Literature—Defoe—Addison—Steele.

10. *The Hanoverian Period:* Reigns of George I and II—the Ministry of Walpole—the Jacobite rebellions—development of Cabinet Government—Wars with France—Austrian Succession War—William Pitt—Seven Years' War.

Accession of George III—Peace of Paris—the power of the Whigs—War of American Independence—Pitt the Younger—outbreak of the French Revolution—English intervention—Union with Ireland—Treaty of Amiens—Napoleonic Wars—naval victories—nation revolts—Peninsular War—Battle of Leipzig—Napoleon's return—Waterloo—Congress of Vienna.

John Wesley and his work.

The Industrial Revolution.

Reigns of George IV and William IV—condition of England after the Napoleonic Wars—Canning's ministry—the Reform Bill.

11. *The Reign of Victoria:* Accession of Chartists—Peel's ministry—Repeal of the Corn Laws-the Crimean War—Palmerton's foreign policy—Disraeli—extension of the franchise and popular education—Gladstone's first ministry—Disraeli and the Treaty of Berlin—England and Egypt—Gladstone and Home Rule—Colonial expansion—New Colonial policy—the Diamond Jubilee—England and Europe—the Dual and Triple Alliances. Literature and science in 19th century.

*Note:* In general a knowledge of details of campaigns and military operations will not be required.

# முகவுரை

அறிவு தரக்கூடிய பாடங்களைத் தாய்ப்பாஷையிலே கற்பித்தல் மிகச் சிறந்தது எனக் கல்வியில் தேர்ச்சி பெற்ற பலர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சரித்திர முதலிய பாடங்களைத் தாய்மொழியிற் கற்பித்தால் சிறுவர்கள் விஷயங்களைச் சிறிது காலத்திலேயே மிகத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியும் என்பது உண்மையான அபிப்பிராயமாகும்.

நமது நாட்டுச் சிறுவர்கள் அன்னிய பாஷைகளின் மூலமாய்ச் சரித்திரங்களைக் கற்று வருவதையும், அக்கால், அவர்கள் மொழிக்காகவும், விஷயத்துக்காகவும் படும் கஷ்டத்தையும், கால நீட்டிப்பையும் உணர்ந்த பெரியார் பலர் கல்வி இலாகா அதிகாரிகளிடத்தில் அவற்றை வற்புறுத்தினர். அதன் பயனாகப் பொருள் அறிவு தரக்கூடிய பாடங்களையெல்லாம் தாய் மொழியிலும் கற்றுக்கொடுக்கலாம் என்ற அனுமதி கிடைக்கலாயிற்று. அம்முறைக்குத் துணை செய்யத் தோன்றியதுதான் இந்தப் புத்தகமும்.

இந்தப் புத்தகத்தில் உள்ள விஷயங்கள் அனைத்தும் விஸ்தாரமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன. நான் அவற்றை அப்படியே மொழி பெயர்க்கவில்லை. பல வருஷங்களாக ஹைஸ்கூல் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து வருவதன் பயனாக ஒருவாறு விஷயங்களைத் தொகுத்து நமது தாய்மொழியில் எழுதியிருக்கின்றேன். இதனால் பாஷையின் நடை பலரும் எளிதில் படித்துணர்ந்து கொள்ளக் கூடியதாகவே இருக்கும் என்பது எடுத்துக்காட்டப்படவேண்டியதில்லை.



தாய்ப்பாஷையில் எழுதப்பட்டுள்ள மற்ற சரித்திரப் புத்தகங்களுக்கும் இப்புத்தகத்திற்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கின்றது. மாணவர்கள் ஒவ்வொரு அத்தியாயமும் முடிந்தவுடன் அதனில் அடங்கியுள்ள விஷயங்களை நன்கு அறிந்துகொள்வதற்குச் சாதனமாய் இருக்கும்பொருட்டுக் கேள்விகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் சிறுவர்களுக்குத் தாமே விஷயங்களை வாசித்து அறிந்துகொள்ளும் திறமை உண்டாகும். மேலும், ஒவ்வொரு பெரிய சரித்திர காலப்பிரிவு முடியுந்தோறும் அக்காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளும் கால வரிசைக்கிரமப்படி சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்துக்கு ஓர் அழகிய முன்னுரையை வரைந்து உதவிய மகா-ா-ா-ஸ்ரீ P. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், M. A. அவர்களுக்கு நான் என்றும் மறவா நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்புத்தகத்தை வெளியிடுவதில் உதவி செய்த என் நண்பரும் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஆசிரியருமான மகா-ா-ா-ஸ்ரீ S. சாரங்கபாணி ஐயங்கார், B.A., L.T., அவர்களுக்கும், எங்கள் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதரான மகா-ா-ா-ஸ்ரீ ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இப்புத்தகத்தைப் போதிய அளவு பரவச்செய்து எனது ஊக்கத்தை வளர்க்கும்படிக்கும், இதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டிச் சீர்திருத்தி உதவும்படிக்கும் அறிவுடைய பெரியோர்கள் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

## ஐந்தாவது பதிப்பின் முகவுரை

"இங்கிலாந்து சரிதம்" என்ற எனது புத்தகத்தை மேல் வகுப்புகளில் பாடப் புத்தகமாக வைத்து ஆதரவளித்த என் சகோதர உபாத்தியாயர்களுக்கு நான் என் மனமார்ந்த வந்தனத்தை யளிக்கின்றேன். சர்க்காரால் வெளியிடப்பட்டிருக்கிற புதிய A Group S. S. L. C. இங்கிலாந்து தேச சரித்திர பாடதிட்டத்தை அனுசரித்து இந்தப் புத்தகத்தின் புதிய பதிப்பில் சில மாறுபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தவிர, சரித்திரப்படிப்பில் மாணவர்களுக்கு அதிக ஊக்கமும் சிரத்தையும் உண்டாகும்படிக்கும் விஷயங்களைத் தாங்களே சுலபமாய் அறிந்து கொள்வதற்குச் சாதனமா யிருக்கும்படிக்கும் ஐந்து உருவப்படங்களும், படங்களும் புதிதாகத் தயாரித்து அமைக்கப்பட்டிருக்கின்றன. என் சகோதர உபாத்தியாயர்கள் இதுவரையிலும் என் புத்தகங்களுக்கு ஆதரவு அளித்ததுபோல் எதிர்காலத்திலும் அவர்கள் தங்களது ஆதரவை அளிக்கவேண்டுமென மிகுந்த வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

G. V. ராமய்யர்

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| I. | நான்முகம் | 17 |
| II. | சரித்திர முந்காலம் | 19 |
| III. | ஸாக்ஸனிய அரசர்களின் காலம் | 26 |
| அத்தி. 1. | ஆங்கிலேயர்கள் குடியேறுதலும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதலும் | 26 |
| 2. | இங்கிலாந்து ஏகாதிபத்தியமானது | 32 |
| 3. | டேனர்களின் படையெடுப்பும் ஆல்ப்ரெடின் ஆளுகையும் | 34 |
| 4. | ஸாக்ஸனிய வம்சத்து இதர அரசர்கள் | 38 |
| 5. | டேனர்களின் ஆட்சி | 42 |
| 6. | எட்வர்டின் ஆளுகையும் நார்மனியரின் படையெழுச்சியும் | 43 |
| 7. | நார்மனியர் இங்கிலாந்தை ஜயித்ததற்கு முன் இங்கிலாந்தின் நிலைமை | 47 |
| IV. | நார்மனிய அரசர்களின் காலம் | 52 |
| அத்தி. 1. | முதலாவது வில்லியம் | 52 |
| 2. | இரண்டாவது வில்லியம் | 57 |
| 3. | முதலாவது ஹென்றி | 59 |
| 4. | ஸ்டீவன் | 61 |
| V. | ப்ளாண்டாஜினட் அரசர்களின் காலம் | 64 |
| அத்தி. 1. | இரண்டாவது ஹென்றி | 64 |
| 2. | முதலாவது ரிச்சர்ட் | 71 |
| 3. | ஜான் | 74 |
| 4. | மூன்றாவது ஹென்றி | 80 |
| 5. | முதலாவது எட்வர்ட் | 83 |
| 6. | 12, 13-வது நூற்றாண்டுகளில் பொது மக்களின் வாழ்க்கை | 87 |
| 7. | இரண்டாவது எட்வர்ட் | 90 |
| 8. | மூன்றாவது எட்வர்ட் | 92 |
| 9. | இரண்டாவது ரிச்சர்ட் | 99 |

VI. லங்காஸ்டர் யார்க் அரசர்களின் காலம் ... 104

அத்தி. 1. நான்காவது ஹென்றியும் ஐந்தாவது ஹென்றியும் ... 104
2. ஆறாவது ஹென்றி ... 107
3. நான்காவது எட்வர்ட் ... 114
4. மூன்றாவது ரிச்சர்ட் ... 116
5. நவீன காலத் தொடக்கம் ... 117

VII. ட்யூடர் அரசர்களின் காலம் ... 120

அத்தி. 1. எழாவது ஹென்றி ... 120
2. எட்டாவது ஹென்றி ... 125
3. ஆறாவது எட்வர்ட் ... 135
4. மேரி ராணியார் ... 138
5. எலிஸபெத் மகாராணியார் ... 140
6. ட்யூடர் மன்னர்களின் காலத்து மக்கட்களின் நிலைமை ... 152

VIII. ஸ்டுவர்ட் அரசர்களின் காலம் ... 157

அத்தி. 1. முதலாவது ஜேம்ஸ் ... 157
2. முதலாவது சார்ல்ஸ் ... 161
3. இங்கிலாந்தில் குடியரசு ஏற்பட்டது ... 169
4. இரண்டாவது சார்ல்ஸ் ... 177
5. இரண்டாவது ஜேம்ஸ் ... 182
6. மூன்றாவது வில்லியமும் மேரியும் ... 186
8. ஆன் அரசியார் ... 190

IX. ஹனோவேரியன் அரசர்களின் காலம் ... 197

அத்தி. 1. முதலாவது ஜார்ஜ் ... 197
2. இரண்டாவது ஜார்ஜ் ... 201
3. மூன்றாவது ஜார்ஜ் ... 210
4. நான்காவது ஜார்ஜ் ... 238
5. நான்காவது வில்லியம் ... 241
6. விக்டோரியா மகாராணியார் ... 245
7. விக்டோரியா மகாராணியார் (தொடர்ச்சி) ... 262
8. எழாவது எட்வர்ட் ... 271

X. வின்ஸர் அரசர்களின் காலம் ... 273

அத்தி. 1. ஐந்தாவது ஜார்ஜ் ... 273



## படங்கள்

1. ரோமானிய காலத்து பிரிட்டன்
2. சப்த ராஜ்யங்கள்
3. டேன்லாப் படம்
4. ஹென்றியின் ராஜ்யம்
5. ரன்னிமீட் படம்
6. பிரான்ஸ் படம்
7. நூறுவருடப் போர் படம்
8. ஹென்றி V சென்ற வழியைக் காட்டும் படம்
9. ரோஜாப்பூப் போர்கள் படம்
10. ஆர்மடா சென்ற வழியைக் காட்டும் படம்
11. உள்நாட்டுப் பெரும்போர் படம்
12. ஸ்காட்லாந்து
13. எழுவருஷப் போர் படம்
14. அமெரிக்கா சுயாதீனப் போர் படம்
15. தீபகற்பப் போர்
16. அயர்லாந்து
17. ஐரோப்பா படம்
18. கிரிமியன் போர்
19. ஐரோப்பியப் பெரும்போர் படம்

## உருவப் படங்கள்

1. தாமஸ் உல்ஸி
2. ஆலிவர் க்ராம்வெல்
3. ஸெண்ட் பால்ஸ் சர்ச் தீப்பற்றி எரிதல்
4. ராபர்ட் வால்போல்
5. இளைய பிட்
6. நெபோலியன் போனபார்ட்
7. வெல்லிங்டன் பிரபு
8. கிளாட்ஸ்டன் துரை
9. ஐந்தாவது ஜார்ஜ்

OFFICE OF THE REGISTRAR OF P...
29 AUG 1933
MADRAS

கடவுள் துணை

# இங்கிலாந்தின் சரிதம்

## I. நூன்முகம்

சரித்திர அறிவின் இன்றியமையாமை:—அறிவு ஓர் அளவுக்கு உட்பட்டது அன்று. நாள்தோறும் அறிய விரும்புவோர்க்கு அது புதிது புதிதாக வளர்ந்து கொண்டு வரக்கூடியதே. இங்ஙனம் வளர்ந்துவரும் தன்மை வாய்ந்த அறிவைப் பெற்றவர்களாவதே மக்கட் பிறப்பின் மாண்பாகும். அந்த அறிவு பலவகைப்படும். அவற்றுள்ளும் மேலானது சரித்திர அறிவே. எவன் உலக சரித்திரத்தை நன்றாக உணர்ந்திருக்கின்றானோ அவனே அனைத்து விஷயங்களையும் அறிந்து நடக்கும் திறமை வாய்ந்தவன் ஆவான். அம்முறையில் ஒவ்வொருவரும் உலக சரித்திரத்தை உணர்ந்திருக்க வேண்டும் என்பது தவறாகாது. என்றாலும், பலருக்கு அதை முழுவதும் கற்றல் இயலாததாக இருக்கலாம். ஆயினும் அவர்கள் தமது தாய் நாட்டின் சரித்திரத்தையும், அதன் தொடர்பினை உடைய பிறநாடுகளின் சரித்திரங்களையுமாவது தவறாமல் கற்றே ஆகவேண்டும். அந்நெறியில் நம்மால் கற்கப் படவேண்டியன நமது (இந்திய) நாட்டின் சரித்திரம், இங்கிலாந்தின் சரித்திரம் என்ற இரண்டுமே ஆகும். அவற்றுள்

இங்கிலாந்து இக்காலத்தில் மிகவும் மேலான நிலைமையில் இருக்கிறது என்பது மிக பிரசித்தமானது. நிலத்திலும் நீரிலும் உள்ள அதனது ஆதிக்கம் மிக வன்மை வாய்ந்தது. வியாபாரம், பொருளீட்டல், இன ஒற்றுமை இவற்றில் முதல் இடத்தில் இருப்பதும் இங்கிலாந்தே. ஆதலின் இதன் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டியதும் நமது நாட்டுச் சிறுவர்களது கடமை ஆகும்.

ஆங்கில நாட்டின் அமைப்பு:—ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு மூலையில் சில சிறிய தீவகள் இருக்கின்றன. அவற்றின் பெயர் பிரிட்டிஷ் தீவுகள் (British Isles) என்பது. அவை இரண்டு பெரிய பாகங்களாக அமைந்து உள்ளன. அவற்றுள் கிரேட் பிரிட்டன் (Great Britain) என்பது ஒரு பாகம். அயர்லாந்து (Ireland) என்பது மற்றொரு பாகம். அத்தீவுகளுக்கும் ஐரோப்பாக் கண்டத்துக்கும் இடையே ஒரு கடற்பிரிவு இருக்கின்றது. அதன் பெயர் இங்கிலீஷ்க் கால்வாய் (English Channel) என்பது.

இங்கிலாந்தைத் தலைமையாகப்பெற்ற பிரிட்டிஷ்த்தீவுகள் இயற்கைக் கோட்டைக்குள் இருக்கின்றன. கடற்கரைகள் ஆங்காங்குத் துறைமுகங்களுக்கு ஏற்றமாதிரியில் பல பிளவுகளாக அமைந்திருக்கின்றன. கப்பல்களின் போக்குவரத்துக்குத் துணைசெய்யக்கூடிய ஆறுகளின் முகத்துவாரங்கள் பல உள. பூமியின் சாரமோ மிகச் சிலாக்கியமானது. கால் நடைகளின் மேய்ச்சலுக்கு உபயோகமான புல் அடர்ந்த மலைப் பக்கங்கள் பல இருக்கின்றன. காடுகள் அதிகம். இரும்பு, நிலக்கரி, ஈயம், துத்தநாகம், தாம்பிரம், தகரம், கற்பலகை முதலிய தாதுப்பொருள்களும், உலோகப் பொருள்களும் அதிகமாகக் கிடைக்கின்றன.



கேள்விகள்:—

1. சரித்திர அறிவால் உண்டாகும் நன்மைகள் யாவை?
2. இங்கிலாந்தின் பெருமைகள் யாவை?
3. பிரிட்டிஷ்த் தீவுகளின் இயற்கை அமைப்பைப் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

---

## II. சரித்திர முற்காலம் (கி. பி. 410-வரை)

ஆதிக்குடிகளும் அவர்களது நாகரிகமும்:—பிரிட்டிஷ்த் தீவுகளின் பூர்வீகக் குடிகளைப்பற்றி நமக்குத் தெரிந்தது மிகக் கொஞ்சம். ஆகிலும் சில குறிப்புக்களினால் அவர்களைப்பற்றி நமக்கு இப்பொழுது இன்னும் சிறிது விரிவாகத் தெரியவருகிறது. சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முன் அத்தீவுகளில் பல நாகரிகமற்ற ஜனங்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் ஐபீரியர்கள் (Iberians) என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஐபீரியா (இப்பொழுது ஸ்பெயின்) தேசத்திலிருந்து வந்தவர்களாகையால் அவர்களுக்கு அப்பெயர் வழங்கலாயிற்று. அவர்களுக்குப் பிறகு அத்தீவுகளில் குடியேறினவர்கள் ஆரிய வம்சத்தைச் சார்ந்த கெல்ட்கள் (Celts) கெல்ட் ஜாதியார்களின் ஒரு பிரிவினராகிய பிரிட்டானியர்கள் (Britons) இப்பொழுது இங்கிலாந்து (England) என வழங்கும் தீவில் குடியேறினார்கள். மற்ற இரண்டு பிரிவினர்கள் இப்பொழுது அயர்லாந்து, ஸ்காட்லாந்து (Scotland) என வழங்கும் தீவுகளில் குடியேறினார்கள். அவர்களுக்குப் பிக்ட்கள் (Picts) எனவும், ஸ்காட்கள் (Scots) எனவும் முறையே பெயர்கள் வழங்கலாயின. அவர்கள் ஐபீரியர்களைக் காட்டிலும் நாகரிகம் வாய்ந்தவர்கள்; மிகவும் உயரமாகவும் அழகாகவும் இருந்தவர்கள்; தேகவலிமையும் தைரியமும் உள்ளவர்கள்; முரட்டுத் தனம் உள்ளவர்கள்; சண்டை செய்வதற்கு வேண்டிய இரும்பு

ஆயுதங்களைச் செய்துகொள்ளவும், அணிந்து கொள்ளத்தக்க தங்க ஆபரணங்களைச் செய்துகொள்ளவும் பழகி இருந்தவர்கள்; நிலத்தை உழுது பயிரிடவும், ஆடுமாடுகளை வைத்து நிர்வகிக்கவும் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை வெட்டியெடுக்கவும் திறமைவாய்ந்தவர்கள். அவர்கள் விக்ரஹ ஆராதனை செய்தார்கள். அவர்களது குருமார்கள் ட்ருயிட்கள் என அழைக்கப்பட்டார்கள். ட்ரூயிட்கள் எதிர்காலத்தில் நடக்கப்போகிற விஷயங்களை முன்னமேயே தெரிந்துகொள்வதற்கு வேண்டிய ஞானமுள்ளவர்கள். அவர்கள் தெய்வங்களைத் திருப்தியடையும்படி செய்ய சில சமயங்களில் நரபலி யிடுவதுமுண்டு.

அந்தப் பூர்வீக ஜனங்களின் சந்ததியார்கள் இப்பொழுது வேல்ஸ் (Wales)மாகாணத்தில் வசித்து வருகிறார்கள். அவர்கள் வெல்ஷ் (Welsh) என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பேசும் பாஷையோ பிரிட்டானியர்கள் முற்காலத்தில் பேசிய பாஷையோடு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

ஸீஸரின் படையெழுச்சிகள்:—பிரிட்டானியர்கள் பிரிட்டிஷ்த் தீவுகளில் குடியேறி ஆட்சிபுரியும் காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் மிக்க அதிகாரம் படைத்தவர்களும், நாகரிகம் வாய்ந்தவர்களுமாய் இருந்தவர்கள் ரோமானியர் (Romans) களே. கி. மு. முதல் நூற்றாண்டில் ரோமானிய சாம்ராஜ்யத்தில் ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) என்ற ஒரு பெரிய தளகர்த்தர் இருந்தார். அவர் கால்(Gaul)(இப்பொழுது பிரான்ஸ்) நாட்டின்மேல் ஒரு சேனையுடன் படையெடுத்து அந்நாட்டை வென்றார். அவர் கால் நாட்டாருடன் போர் புரியும்போது பிரிட்டானியர் அவர்களுக்கு உதவிபுரிந்தனர். இதற்காக அவர்களைத் தண்டிக்கும் பொருட்டு ஸீஸர் தம்முடைய படைகளுடன் பிரிட்டனின்மேல் (கி. மு. 55) படையெடுத்தார். ஆனால் அவர் சண்டை செய்யாமல் தம்முடைய போர்



வீரர்களோடு திரும்பிச் செல்லும்படி நேர்ந்தது. ஆகையால் அவர் மறுபடியும் (கி. மு. 54) ஒரு பெரிய சேனையுடன் இங்கிலீஷ்க் கால்வாயைக் கடந்து பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தார். அவர் பிரிட்டானியருடன் ஒரு கடும்போர்புரிந்து அவர்களைச் சண்டையில் தோற்கடித்தார். அதனால் பிரிட்டானியர்கள் ரோமானிய தளகர்த்தரோடு சமாதானம் செய்துகொண்டார்கள். அதன்படி பிரிட்டானியர்கள் ரோமானியர்களுக்கு வருஷாவருஷம் கப்பம் செலுத்துவதாக ஒத்துக்கொண்டார்கள். பிறகு ஸீஸர் தமது படையுடன் காலுக்குத் திரும்பிச் சென்றார்.

ரோமானியர் பிரிட்டனை ஜயித்தல்:—ஸீஸரின் படையெழுச்சிக்குப்பின் சுமார் நூறு வருஷங்கள் வரையில் ரோமானியர்கள் பிரிட்டனுக்குத் திரும்பவில்லை. ஆனால், கி. பி. முதல் நூற்றாண்டில் ரோமாபுரியில் க்ளாடியஸ் (Claudius) சக்கரவர்த்தியாய் இருக்கும்பொழுது அவர் பிரிட்டனை ஜயிக்க எண்ணி ஒரு பெரிய சைன்யத்தை அனுப்பினார். பிரிட்டானியரும் தங்களால் இயன்ற வரையில் பேராண்மையுடன் போர் செய்தனர். முடிவில் ரோமானியர்கள் பிரிட்டனை வென்றார்கள். இதற்குப் பிறகு பிரிட்டானியர் அடிக்கடி ரோமானியரது ஆளுகைக்குக் கீழ்ப்படியாமல் கலகங்களைச் செய்து வந்தனர். ஆகையால் ரோமானியர்கள் பிரிட்டனில் அநேக இடங்களில் தங்களுடைய படைகளை வைத்துப் பிரிட்டானியர்களைத் தங்களது ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்படி செய்தார்கள்.

போயடீஷியா:—பிரிட்டானியர்கள் அவ்வாறு செய்த கலகங்களில் ஒன்றை அடியிற் கூறுவோம்:—கெல்ட் வம்சத்தின் பிரிவினரான ஐஸீனி (Iceni) என்னும் கூட்டத்தினர் தங்களது ராணியாராகிய போயடீஷியா (Boadicea)வின் கீழ்ப் போர்க்கோலம் பூண்டு லண்டன் (London) நகரத்தை


அழித்து விட்டனர். இச்செய்தியைக்கேட்ட ரோமானியர்கள் ஒரு பெரிய சேனையுடன் வந்து ஐஸீனியர்களைத் தாக்கினர்கள். சண்டை வெகு மும்மரமாய் நடந்தது. முடிவில் ரோமானியர்கள் வெற்றியடைந்தார்கள். தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தைச் சகிக்க முடியாமல் பொயடீஷியா விஷம் தின்று மாண்டார்.

ரோமானியரது ஆட்சி:—இதற்குப் பிறகு ரோமானியச் சக்கரவர்த்தி அநேக கவர்னர்களைப் பிரிட்டனுக்கு அனுப்பி அதனை ஆளும்படி செய்தார். அவ்வாறு நியமிக்கப்பட்ட கவர்னர்களில் ஜூலியஸ் அக்ரிகோலா (Julius Agricola) ஒருவர். அவர் மகாசாமர்த்தியமும் புத்தி நுட்பமும் உடையவர். அவர் பிரிட்டனின் பெரும்பாகத்தை ரோமானியரது ஆட்சிக்கு உட்படுத்தினர். அவர் வடக்கிலுள்ள பிக்ட்களைத் தோற்கடித்துத் துரத்தினர். மேலும் பிக்ட்கள் ரோமானிய ஆட்சிக்கு இடையூறு செய்யாமலிருக்கும் பொருட்டு அவர் போர்த் (Forth) நதியின் முகத்துவாரத்திலிருந்து க்ளைட் (Clyde) நதியின் முகத்துவாரம் வரைக்கும் ஒரு சுவரைக் கட்டுவித்தார். அவர் சில புதிய நியாயஸ்தலங்களை ஏற்படுத்தியும், லத்தீன் (Latin) பாஷையைக் கற்றுக் கொடுத்தும், விவசாயத்தை ஆதரித்தும் வந்தார். ஆகையால் அவருடைய ஆட்சி பிரிட்டானியர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. செவியட் (Cheviot) குன்றுகளின் அடிவாரத்திற்கு அருகில் ரோமானியர்களால் (கி. பி. 122) சக்கரவர்த்தி ஹேட்ரியன் (Hadrian) காலத்தில் மற்றொரு சுவர் கட்டப்பட்டது. இங்ஙனம் ரோமானியர்கள் பிக்ட்களையும், ஸ்காட்களையும் துரத்தியடிப்பதற்காகக் கட்டப்பட்ட சுவர்கள் இரண்டு. இவற்றுள் க்ளைட் நதியின் முகத்துவாரத்திலிருந்து போர்த் நதியின் முகத்துவாரம் வரையில் எழுப்பப்பட்ட சுவர்



ரோமானியரின் ஆட்சிக்குட்பட்ட பிரிட்டனுக்கு (Roman Britain) வட எல்லையாக இருந்தது.

ரோமானிய ஆட்சியின் நன்மைகள்:—மூந்நூறு வருஷங்களுக்கு அதிகமாக ரோமானியர்கள் பிரிட்டனை ஆண்டு




I. அக்ரிகோலா சுவர். II. ஹேட்ரியன் சுவர்.

வந்தார்கள். அவர்கள் காடுகளை அழித்தும், சதுப்பு நிலங்களில் தங்கியிருந்த அசுத்த நீரை இறைத்தும் தாங்கள் வசிப்பதற்கு

ஏற்ற வசதிகளைச் செய்துகொண்டார்கள். பிறகு பிரிட்டனில் அவர்கள் அநேக பட்டணங்களைக் கட்டுவித்து, ஒவ்வொரு பட்டணத்திலும் இராணுவப்படைகளை வைத்தார்கள். மேலும், ரோமானியர்கள் மிக்க நேர்த்தியான சாலைகளைப் போட்டார்கள். அச்சாலைகளில் மிகவும் முக்கியமானதற்கு வாட்லிங் சாலை (Watling Street) என்பது பெயர். இப்போதுகூடப் பிரிட்டனில் ரோமானியர்கள் அமைத்த கோட்டைகளையும் சாலைகளையும் நாம் காணலாம். ரோமானிய ஆட்சியில் வேளாண்மை செழித்து ஓங்கியது. ஆகையால் பிரிட்டனுக்கு, "வடக்கிலுள்ள தானியக் களஞ்சியம்" என்னும் சிறப்புப் பெயர் வந்தது. அவர்கள் ஆட்சிபுரியும்போது தகரம், ஈயம் முதலியன சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டன. பிரிட்டானியர்கள் லத்தீன் பாஷையைக் கற்றுக்கொண்டு ரோமானியர்களுடைய நடையுடை பாவனைகளைப் பின்பற்றி வந்தார்கள்.

**பிரிட்டானியர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல்:—** மேற்கூறிய நன்மைகளைத் தவிர ரோமானியரது ஆட்சியால் இன்னும் ஒரு பெருத்த நன்மையும் உண்டாகியது. அஃதாவது ரோமானியர்கள் தாங்கள் தழுவிய கிறிஸ்தவ மதத்தை இங்கிலாந்திலும் பரவச் செய்தார்கள் என்பதே. பிரிட்டானியர்கள் முதலில் அநேக தேவதைகளை ஆராதித்து வந்தார்கள். அப்பொழுது அவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவவில்லை. ஆனால் அவர்கள் ரோமானிய ஆட்சிக்குள் வந்தவுடன் அவர்களிடமிருந்து கிறிஸ்தவமத உண்மைகளைக் கற்றுக்கொண்டு அம்மதத்தைத் தழுவ ஆரம்பித்தார்கள்.

**ரோமானியர் ரோமாபுரிக்குத் திரும்பிச் செல்லுதல்:—** அப்பால் (கி. பி. 410) ரோமானியர்கள் பிரிட்டனை விட்டுத் திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று. ஏனென்றால் மத்திய ஐரோப்பாவில் வசித்துவந்த காத்ஸ் (Goths) என்னும் ஒரு முரட்டு



ஜாதியார் இடாலி (Italy) தேசத்திற் பிரவேசித்து ரோமாபுரி (Rome)யைத் தாக்கினார்கள். ஆகையால் பிரிட்டனிலுள்ள ரோமானியர்கள் தங்களது தாய் நகரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் படைகளுடன் ரோமாபுரிக்குச் சென்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பிரிட்டனுக்குத் திரும்பி வரவே இல்லை. இவ்வாறு பிரிட்டனில் ரோமானிய ஆளுகை முடிவடைந்தது.

கேள்விகள் :—

1. இங்கிலாந்தின் ஆதிக்குடிகளைப் பற்றியும், அவர்களது நாகரிகத்தைப்பற்றியும் சுருக்கமாய் எழுதுக.
2. அந்த ஆதிக்குடிகளின் சந்ததியார்கள் பிரிட்டிஷ்த் தீவுகளின் எப்பாகத்தில் வசித்து வருகின்றார்கள் ?
3. ஜூலியஸ் ஸீஸர் பிரிட்டனின்மீது ஏன் படையெடுத்தார்? அவரது படையெழுச்சிகள் எவ்வாறு முடிந்தன ?
4. ரோமானியர் பிரிட்டினின் தென்பாகத்தை எப்படி ஜயித்தனர் ?
5. பொயடீஷியாவின் கலகத்தைப் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.
6. ஜூலியஸ் அக்ரிகோலா என்பவர் யார் ? அவரைப்பற்றி உனக்குத் தெரிந்தன யாவை ?
7. ரோமானியர் பிரிட்டனை எவ்வாறு ஆண்டு வந்தனர் ?
8. ரோமானிய ஆட்சியின் நன்மைகள் யாவை ?
9. ரோமானியர் ஏன் பிரிட்டனைவிட்டுத் திரும்பிவிட்டனர்?

| முக்கிய நிகழ்ச்சிகள் | வருஷங்கள் |
|---|---|
| ஸீஸரின் முதலாவது படையெழுச்சி | கி.மு. 55. |
| ஸீஸரின் இரண்டாவது படையெழுச்சி | ,, 54. |
| ரோமானியர் பிரிட்டனை ஜயித்தல் | கி. மு. 43. |
| ஹேட்ரியன் சுவர் கட்டப்பட்டது | ,, 122. |
| ரோமானியர் திரும்பிச் செல்லுதல் | ,, 410. |

# III. ஸாக்ஸனிய அரசர்களின் காலம்

(கி. பி. 410—கி. பி. 1066)

## அத்தியாயம் 1.

### ஆங்கிலேயர்கள் குடியேறுதலும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதலும்

(கி. பி. 410—கி. பி. 664.)

ஆங்கிலேயர்கள் பிரிட்டனில் குடியேறுதல்:—ரோமானியர்கள் பிரிட்டனைவிட்டுத் திரும்பியவுடன், பிரிட்டானியர்கள் சுதந்தரம் பெற்றார்கள். ஆகிலும் பிரிட்டனின் வடபாகத்தில் வசித்த பிக்ட்களும், ஸ்காட்களும் அவர்களுக்குத் துன்பத்தைச் செய்துவந்தார்கள். அதனால் பிரிட்டானியர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு ஜர்மனியின் வடபாகத்தில் வசித்த குட்டானியர்கள் என்ற ஒரு ஜாதியாரின் உதவியை நாடினார்கள். அவர்கள் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் டென்மார்க், நார்வே, ஸ்வீடன் தேசங்களின் சில பாகங்களிலும் வசித்து வந்தார்கள். அவர்கள் ஜூட்கள் (Jutes), ஆங்கில்கள் (Angles), ஸாக்ஸனியர்கள் (Saxons) என்ற மூன்று வகுப்பினராய்ப் பிரிந்து இருந்தார்கள். பிரிட்டானியர்கள் ஜூட்பிரிவினரின் உதவியை மட்டும் நாடினார்கள். ஆகையால் ஜூட்கள் பிரிட்டனுக்கு வந்து பிரிட்டானியர்களுக்கு உதவி செய்தார்கள். பிறகு தங்களது நாட்டிற்குச் செல்லவேண்டியிருக்க அவர்கள் அங்ஙனம் செய்யாது பிரிட்டனின் தென்கிழக்கிலுள்ள கேன்ட் (Kent) மாகாணத்திலேயே தங்கிவிட்டார்கள். மற்ற இரண்டு பிரிவினர்களும் பிரிட்டனுக்குக் கூட்டம் கூட்டமாய் வந்து பிரிட்டானியர்களைத் தோற்கடித்து, மேற்கிலுள்ள மலைப் பிரதேசங்களுக்குத் துரத்திவிட்டு அங்கேயே குடியேறினார்கள். ஆங்கில்கள்




பிரிட்டனின் வடபாகத்திலும், ஸாக்ஸனியர்கள் அதன் தென்பாகத்திலும் குடியேறினார்கள். பிரிட்டனில் ஆங்கிலேயர்கள் குடியேறின பிறகுதான், அந்நாட்டிற்கு பிரிட்டன் என்ற பெயர்போய் இங்கிலாந்து (England) என்னும் பெயர் வந்தது.

ஆங்கிலேயரின் நாகரிகம்:—பிரிட்டனில் குடியேறுவதற்குமுன் ஆங்கிலேயர்கள் அதிக நாகரிகம் இல்லாதவர்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாக வசிப்பது வழக்கம். அவர்கள் அநேக கொடூரமுள்ள பயங்கரமான தெய்வங்களைத் தொழுது வந்தார்கள். அவர்கள் அக்காலத்தில் கிறிஸ்தவர்களாகவும் இல்லை. அவர்கள் கிராமங்களில் வசித்து வந்தார்கள். ஆனதுபற்றி அவர்களுக்கு நகரவாழ்க்கையில் பிரியம் இல்லை. அதனால் அவர்கள் ரோமானியரால் கட்டப்பட்டிருந்த பட்டணங்களையும், கிறிஸ்தவக் கோயில்களை (Churches)யும் இடித்துவிட்டார்கள்.

ஆங்கிலேயரின் ராஜ்யங்கள்:—பிரிட்டனில் குடியேறிய பிறகு ஆங்கிலேயர்கள் அநேக மாகாணங்களை ஸ்தாபித்தார்கள். ஜூட் பிரிவினர் கென்ட் மாகாணத்திலும், வைட் (Wight) தீவிலும், அத்தீவுக்கு எதிரிலுள்ள இங்கிலாந்தின் தென்கரையிலும் குடியேறினர். ஆங்கில்கள் நார்தம்பிரியா (Northumbria), மெர்ஸியா (Mercia), கீழ் ஆங்கிலியா (East Anglia) என்ற மூன்று மாகாணங்களையும் ஸ்தாபித்தார்கள். மற்றொரு வகுப்பினரான ஸாக்ஸனியர்கள் ஸஸெக்ஸ் (Sussex), எஸெக்ஸ் (Essex), வெஸெக்ஸ் (Wessex) என்ற மூன்று மாகாணங்களையும் ஏற்படுத்தினார்கள். ஆகவே ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் ஏழு ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். இவ்வேழு ராஜ்யங்களையும் சேர்த்து ஹெப்டார்க்கி (Heptarchy) அதாவது ஸப்த ராஜ்யங்கள் என்று அழைக்கிறோம்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மன்னருண்டு. இந்த ஏழு மாகாணத்து அரசர்களும் முதன்மையை அடைவதற் குப் பலகாலம் போர்புரிந்தார்கள். அதைப்பற்றி பின்வரும்




அத்தியாயத்தில் காணலாம். போரில் வென்று முதன்மை பெற்ற அரசனுக்கு ப்ரேட்வால்டா (Bretwalda) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இங்ஙனம் முதலில் முதன்மை



பெற்றவர் கெண்ட் மன்னரான எதேல்பர்ட் (Ethelbert) என்பவர்.

போப் கிரிகரி ஆங்கில அடிமைகளைச் சந்தித்தல்:—ஆரு வது நூற்றாண்டின் கடைசியில் கிறிஸ்தவ மதத்திற்கு அதிபதி (Pope) யாக இருந்தவர் கிரிகரி (Gregory) என்ற ஒரு துறவி. அவர் போப் பதவியை அடைவதற்கு முன்னமேயே ரோமாபுரிக் கடைத்தெருவில் அடிமைகளாக விற்பதற்குக் கொண்டுவரப்பட்ட இரண்டு ஆங்கிலச் சிறுவர்களைக் கண் டார். அவர் அச்சிறுவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று கேட்டார். அக்குழந்தைகள், "நாங்கள் ஆங்கில்கள்" என்று பதில் உரைத்தார்கள். அவர்கள் தேவர்களைப்போல் மிகவும் அழகாய் இருந்த காரணத்தால் கிரிகரி, "நீங்கள் ஆங் கில்களோ, எஞ்சல்களோ?" (Angles or Angels) என்று கேட்டார். அப்பொழுது அத்துறவி, 'ஆங்கில்களைக் கிறிஸ் தவ மதத்தைத் தழுவும்படி செய்யவேண்டும்' என்று எண் ணங் கொண்டார். சிறிதுகாலஞ் சென்றவுடன், கிரிகரி கிறிஸ் தவ மதத்திற்கே அதிபதியானார். உடனே அவர் ஆங்கிலேயர் களைக் கிறிஸ்தவர்களாகச் செய்வதற்கு அகஸ்டின் (Augus- tine) என்ற ஒரு சந்நியாசியை இங்கிலாந்திற்கு அனுப்பினார்.

கெண்ட் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல்:—அகஸ்டின் கெண்ட் மாகாணத்தில் (கி. பி. 597) வந்து இறங்கினார். அக் காலத்தில் எதெல்பர்ட் கெண்டில் ஆட்சிபுரிந்தார். அவர் அகஸ்டினுக்கு நல்ல வரவேற்பு அளித்து, தமது மாகாணத் தில் கிறிஸ்தவமதத்தைப் பிரசாரம் செய்ய அனுமதி கொடுத் தார். அவ்வரசரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அவ ருடைய குடிகளும் அம்மதத்தைத் தழுவத் தொடங்கினார் கள். பிறகு காண்டர்பரி (Canterbury) என்னும் இடத்தில் அதற்கு அகஸ்டின் பிரதான ஓர் ஆலயம் கட்டப்பட்டது.

குரு (Archbishop) வாக நியமனம் செய்யப்பட்டார். இம்மாதிரியாகக் கிறிஸ்தவமதம் கெண்ட் மாகாணத்தில் பரவியது. பிறகு கீழ் ஆங்கிலியா, எஸெக்ஸ் என்னும் இராஜ்யங்களிலும் கிறிஸ்தவ மதம் பரவியது.

நார்தம்பிரியாவில் கிறிஸ்தவ மதம் பரவுதல்:—கெண்ட் மன்னரான எதெல்பர்ட் தமது புதல்வியை எட்வின் (Edwin) என்ற நார்தம்பிரியா வேந்தருக்குக் கலியாணம் செய்துகொடுத்தார். அவள் தனது நாயகனது மாகாணத்திற்குச் செல்லும்போது தன்னுடன் பாலினஸ் (Paulinus) என்ற ஒரு துறவியை அழைத்துச் சென்றாள். எட்வின் யார்க் (York) என்னும் இடத்தில் ஓர் ஆலயம் கட்டுவித்து அதற்குப் பாலினஸை ஆர்ச்பிஷப்பாகச் செய்தார். மேலும் அவர் (கி. பி. 627) கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அவரது மாகாணத்திலும் கிறிஸ்தவமதம் விரைவில் பரவிவிட்டது. என்றாலும், நார்தம்பிரியாவிலுள்ள எல்லோரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவவில்லை. அவர்களிற் சிலர் தாங்கள் வெகுகாலமாகத் தொழுதுவந்த தெய்வங்களையே ஆராதித்து வந்தனர். அவர்களுக்குக் கிறிஸ்தவ மதத்தில் சற்றேனும் நம்பிக்கையில்லை. ஆகவே நார்தம்பிரியாவில் உள்ள ஆங்கில்களில் சிலர் புதிய மதத்தைத் தழுவியும், சிலர் புராதன மதத்தை விடாமலும் இருந்தனர். இவ்விரண்டு கட்சிகளுக்கும் அடிக்கடி மதச் சண்டைகள் ஏற்பட்டன. கிறிஸ்தவ மதத்தைத் தழுவாதவரது கட்சியின் தலைமை ஸ்தானத்தை வகித்தவர் மெர்ஸியாவின் அரசரான பெண்டா (Penda) என்பவர். அவர் கிறிஸ்தவ மதத்தைத் தலையெடுக்காமற் செய்ய முயன்றார். ஆகையால் கிறிஸ்தவ மதத்தினரின் கட்சித் தலைவரான எட்வினுக்கும், பெண்டாவுக்கும் ஒரு கடும்போர் நடந்தது. அச்சண்டையில் எட்வின் உயிர் துறந்தார். அவர் இறந்த பிறகு நார்தம்பிரியாவில் கிறிஸ்தவமதம் அடியோடு அழிந்து



விடும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. ஆனால் எட்வினின் பேரனாகிய ஆஸ்வியூ (Oswiu) கெல்ட் பாதிரிகளைத் தமது நாட்டிற்கு வரவழைத்து கிறிஸ்தவமதக் கொள்கைகளை உபதேசம் செய்யும்படி செய்தார். அவர் கிறிஸ்தவ மதத்தின் சார்பாக இருந்து அதன் ஜன்ம விரோதியாகிய பெண்டாவுடன் (கி. பி. 655) போர் புரிந்தார். அச் சண்டையில் மெர்ஸியா அரசரான பெண்டா இறந்தார். அவர் இறந்த பிறகுதான் மெர்ஸியாவில் கிறிஸ்தவமதம் பரவத் தொடங்கியது. அதற்குப் பின் வெஸெக்ஸ் மாகாணத்தில் அம்மதம் சிறிது சிறிதாகப் பரவிற்று. இம்மாதிரியாக ஆங்கிலேயரின் ஏழு ராஜ்யங்களிலும் ஏழாவது நூற்றாண்டு முடிவதற்குள் கிறிஸ்தவமதம் பரவிவிட்டது.

விட்பி மஹாசபை (கி. பி. 664):—பாலினஸ் கட்சிப் பாதிரிமார்களால் பரவச் செய்யப்பட்ட கிறிஸ்தவ மதத்துக்கும், கெல்ட் பாதிரிகள் பரவச் செய்த கிறிஸ்தவ மதத்துக்கும் சில வித்தியாசங்கள் உண்டு. அவை கடவுளை எப்படித் தொழுவது என்பதும், ஈஸ்டர் (Easter) திருவிழாவைப் பிரதி வருஷத்திலும் எப்பொழுது கொண்டாடுவது என்பதும் ஆகும். இத்தகைய அபிப்பிராயப் பேதத்தினால் இவ்விரு கட்சிப் பாதிரிமார்களுக்குள் அனேக வாக்குவாதங்கள் உண்டாயின. ஆஸ்வியூ (664) இரண்டு கட்சி வித்துவான்களையும் அழைத்து விட்பி (Whitby) என்னுமிடத்தில் ஒரு பெரிய சபை (Synod) யைக் கூட்டினார். அங்கே அவ்விரு கட்சியாருக்கும் பெரிய தர்க்கம் நடந்தது. அகஸ்டின் கட்சியைச் சேர்ந்தவர்கள் "சுவர்க்கத்தின் சாவி தங்களது முக்கிய குருவினிடமே இருக்கிறது" என்று சொன்னவுடன், ஆஸ்வியூ 'அக்கட்சியாரின் மதம் தான் சிறந்தது' என்று தீர்ப்புச் செய்துவிட்டார்.

இச்சபை நடந்து நான்கு வருஷங்களுக்குப் பிறகு, சில சீர்திருத்தங்களைச் செய்து மத விஷயங்களை ஒழுங்குபடுத்த எண்ணி ரோமாபுரியிலிருந்து தீயோடோர் (Theodore) என்னும் ஒரு துறவி அனுப்பப்பட்டார். இவர் 'இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் இருக்கும் எல்லாக் குருமார்களும் காண்டர்பரி பிரதான குருவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள்' என்று நிர்ணயம் செய்தார். இன்றைக்கும் இங்கிலாந்தில் இந்த ஏற்பாடுதான் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது.

கேள்விகள்:—

1. ரோமானியர் பிரிட்டனைவிட்டுத் திரும்பியதனால் உண்டான தீமை யாது?
2. ஆங்கிலேயர்கள் பிரிட்டனில் குடியேறினதைப் பற்றிப் பத்து வரிகளில் எழுதுக.
3. ஆங்கிலேயர்கள் பிரிட்டனில் ஏற்படுத்திய ராஜ்யங்கள் யாவை? அவைகளைக் காட்டும் பிரிட்டன் படம் ஒன்று வரைக.
4. ஹெப்டார்க்கி, ப்ரெட்வால்டா என்பன யாவை?
5. ஆங்கிலேயர்களைக் கிறிஸ்தவர்களாக்க கிரிகரி என்ன ஏற்பாடுகளைச் செய்தார்?
6. கிறிஸ்தவ மதம் நார்தம்பிரியாவில் எவ்வாறு பரவியது?
7. விட்பி மஹாசபை செய்த தீர்மானம் யாது? எப்படி?

---

## அத்தியாயம் 2.

### இங்கிலாந்து ஏகாதிபத்தியமானது
### (கி. பி. 664—கி. பி. 802.)

**ஏழு ராஜ்யங்கள் நான்கு ராஜ்யங்களாக மாறினது:—** ஆங்கிலேயர்கள் ஏழு ராஜ்யங்களை இங்கிலாந்தில் ஸ்தாபித்தார்கள் என்பது முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இராஜ்யத்தையும் ஒவ்வொரு மன்னர் ஆண்டு



வந்தார். அவர்களுள் அதிக பலமுள்ள மன்னர்கள் பலஹீனர்களாகிய மன்னர்களை வென்று அவர்களுடைய மாகாணங்களை ஜயித்துக்கொண்டார்கள். வெஸெக்ஸ் வேந்தர் எஸெக்ஸ், ஸஸெக்ஸ் என்னும் மாகாணங்களை ஜயித்துக் கொண்டார். மெர்ஸியா மன்னர் கீழ் ஆங்கிலியாவை வென்றார். ஆகவே ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏழு ராஜ்யங்களும் நான்கு ராஜ்யங்களாக மாறின.

**மேர்ஸியா முதன்மையைப் பெற்றது:—** ஆறாவது நூற்றாண்டில் கென்ட் முதன்மையைப் பெற்றிருந்தது. ஏழாவது நூற்றாண்டில் நார்தம்பிரியா முதன்மையைப் பெற்றது. அந்த ராஜ்யத்தில் இரண்டு மன்னர்கள் விசேஷ அதிகாரம் பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்கள் எட்வின், ஆஸ்வியூ என்னும் இருவர்களே. எட்டாவது நூற்றாண்டில் நார்தம்பிரியா க்ஷீணதசையை அடையவே, மெர்ஸியா முதன்மையைப் பெற்றது. ஆபா (Offa) என்னும் அரசர் (757—795) மெர்ஸியாவில் ஆண்டுகொண்டிருந்தார். அவர் வெல்ஷ் ஜாதியாரைத் தோற்கடித்து மேற்கே துரத்தினார். அவர்களைத் தமது மாகாணத்திற்குள் வரவொட்டாமல் தடுக்க டீ (Dee) என்னும் நதியின் முகத்துவாரத்திலிருந்து ஸேவர்ன் (Severn) நதியின் முகத்துவாரம் வரையில் ஓர் அகழியைக் கட்டினார். இதற்கு ஆபாவின் அகழி (Offa's Dyke) என்று பெயர். ஆபா காலம் சென்ற பிறகு மெர்ஸியாவின் அதிகாரம் சீர்குலைந்தது.

**வெஸெக்ஸ் முதன்மையைப் பெறுதல்:-** பிறகு வெஸெக்ஸ் எக்பர்ட் (Egbert) மன்னரின் ஆட்சிக்காலத்தில் முதன்மையைப் பெற்றது. அவர் மெர்ஸியா அரசனை ஒரு சண்டையில் தோற்கடித்து மெர்ஸியாவைத் தமது ஆளுகைக்கு உட்படுத்தினார். நார்தம்பிரியா ராஜ்யமும் எக்பர்ட்டை எதிர்க்கத் திறமையில்லாமல் அவரை மன்னராக ஒப்புக்கொண்டது.

கென்ட் மாகாணமும் அவரது ஆட்சிக்கு உட்பட்டது. இவ்வாறாக இங்கிலாந்து முழுவதையும் எக்பர்ட் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார். இவர்தான் இங்கிலாந்து முழுவதையும் ஏகமாய் ஆண்ட முதலாவது மன்னர். ஆங்கிலேயரின் ஸப்த ராஜ்யங்களும் ஒழியவே எக்பர்ட்டின் ஏகாதிபத்தியம் இங்கிலாந்து முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டது.

கேள்விகள்:—

1. ஏழு ராஜ்யங்கள் எவ்வாறு நான்கு ராஜ்யங்களாக மாறின?

2. ஆபாவின் ஆளுகையைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

3. எக்பர்ட் தமது ஏகாதிபத்தியத்தை இங்கிலாந்து முழுவதும் எவ்வாறு ஸ்தாபித்துக்கொண்டார்?

---

## அத்தியாயம் 3.

---

### டேனர்களின் படையெடுப்பும் ஆல்ப்ரேடின் ஆளுகையும் (கி. பி. 802—கி. பி. 899)


டேனர்கள் படையெடுத்தல்:—எக்பர்ட் ஆட்சிபுரியும் காலத்தில் (802-839) டேனர்கள் இங்கிலாந்தின்பேரில் படையெடுத்தார்கள். அவர்கள் வட ஐரோப்பாவிலுள்ள நார்வே, டென்மார்க் என்னும் தேசங்களில் வாசம் செய்துவந்த ஒரு முரட்டு ஜாதியார். ஆகையால் அவர்கள் வடதேசத்து மனிதர்கள் (Northmen) என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் கிறிஸ்துமத விரோதிகள். கொள்ளையடிப்பதே அவர்களுடைய தொழில். அவர்கள் மரக்கலங்களில் ஏறிக் கடற்பிரயாணம் செய்து அன்னியநாடுகளின் கரையருகிலுள்ள நகரங்களிற் புகுந்து கொள்ளையடிப்பது வழக்கம். அவர்கள் கோடைக் காலங்களில் கொள்ளையடித்த பொருள்களை வைத்துக்கொண்டு மாரிக் காலத்தைக் கழித்து வந்தார்கள்.



அவர்கள் இங்கிலாந்தின் கிழக்குக் கரையருகில் உள்ள நகரங்களையும், கிறிஸ்தவ ஆலயங்களையும் அழித்தார்கள். கடைசியில் (கி. பி. 835) எக்பர்ட் டேனர்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார். இந்நிலையில் (கி. பி. 839) எக்பர்ட் இறந்தார். பிறகு டேனர்கள் மேன்மேலும் இங்கிலாந்தின் மேல் படையெடுக்கலானார். அவர்கள் முதல் முதலில் இங்கிலாந்திற்குக் கொள்ளையடிக்க வந்தபோதிலும், சில வருஷங்களுக்குப் பிறகு அவர்கள் இங்கிலாந்தின் வடபாகத்திலும் கீழ் பாகத்திலும் குடியேற ஆரம்பித்தார்கள்.

ஆல்ப்ரேடும் டேனர்களும்:—எக்பர்ட்டின் பேரப்பிள்ளைகளில் ஒருவராகிய ஆல்ப்ரேட் (Alfred) (கி. பி. 871) வெஸெக்ஸில் சிம்மாசனம் ஏறினார். டேனர்கள் நார்தம்பிரியா, மெர்ஸியா, கீழ் ஆங்கிலியா என்ற மாகாணங்களிற் குடியேறியதுடன் திருப்தி அடையாமல் அதே வருஷத்தில் வெஸெக்ஸ் மாகாணத்தின் மேலும் படையெடுத்தார்கள். ஆல்ப்ரெட் தமது மாகாணத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராக இல்லை. ஆகையால் டேனர்கள் அவரது சேனையை வெகு சுலபமாய்த் தோற்கடித்தார்கள். ஆல்ப்ரெட் சதுப்பு நிலங்களின் மத்தியிலுள்ள அதேல்னி (Athelney) என்ற ஒரு தீவிற்கு ஓடி ஒளிந்து கொண்டார். கொஞ்சகாலம் சென்றபின், அவர் அத்தீவிலிருந்து வெளிவந்து தமது போர் வீரர்களைக் கூட்டி டேனர்களுடன் எடிங்டன் (Edington) என்னுமிடத்தில ஒரு கடும்போரைப் புரிந்தார். இச்சண்டையில் டேனர்களின் தலைவராகிய கத்ரம் (Guthrum) தோல்வியடைந்தார். உடனே ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதற்கு வெட்மோர் உடன்படிக்கை (Treaty of Wedmore) என்றும் சிப்பன்ஹாம் உடன்படிக்கை (Treaty of Chippenham) என்றும் சொல்வதுண்டு. அதன்படி டேனர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவச்

சம்மதித்தார்கள். அவர்களுக்கு இங்கிலாந்தின் வடபாகமும், கீழ்பாகமும் ஆல்ப்ரெடினால் கொடுக்கப்பட்டன. டேனர்கள்




வெ = வெட்மோர்.

சிப்பன்ஹாம் உடன்படிக்கைப் பிரகாரம் அடைந்த பூமிக்கு டேன்லா (Danelaw) என்று பெயர் வழங்கலாயிற்று. ஏனென்றால் அப்பூமி டேனர்களது ஆளுகைக்குள் வந்த பிறகு



அவர்களுடைய சட்டங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. லண்டன் நகரிலிருந்து செஸ்டர் (Chester) பட்டணம் வரையில் பழைய வாட்லிங்சாலையை ஒட்டி ஒரு கோட்டைக் கிழித்தால், அக்கோட்டிற்கு வடக்கேயும், கிழக்கேயும் உள்ள நாடுகள் டேனர்களுக்கு அளிக்கப்பட்டவை என்று தெரிந்து கொள்ளலாம்.

ஆல்ப்ரெடின் சீர்திருத்தங்கள்:—இவ்வாறு ஆல்ப்ரெட் டேனர்களின் தொந்தரையை நீக்கியவுடன், ஆங்கிலேயர்களின் நன்மையைக் கருதி அனேக சீர்திருத்தங்கள் செய்தார். அவர் டேனர்களின் படையெடுப்பிலிருந்து இங்கிலாந்தைப் பாது காப்பதற்காக ஒரு பெரிய சைன்யத்தை ஏற்படுத்தினார். மேலும், டேனர்களை இங்கிலாந்துக்கு வரவொட்டாமல் தடுப் பதற்கு அவர் அனேக சண்டைக் கப்பல்களைக் கட்டும்படி செய்தார். ஆல்ப்ரெட் ஆங்கிலேயரின் சட்டங்களை ஒழுங்கு படுத்தினதோடு கூடச் சில புதிய சட்டங்களையும் செய்து சேர்த்தார். டேனர்களால் அழிக்கப்பட்ட அனேக கோயில் களைத் திரும்பக் கட்டுவித்தார். கிறிஸ்தவ மதத்தில் அவருக்கு அதிகப்பற்று இருந்ததால், அவர் பாதிரிகளை அனேக இடங்களுக்கு அனுப்பி மதப் பிரசாரம் செய்யும்படி ஏற் பாடு செய்தார். அவருக்குக் கல்வி அபிவிருத்தியில் நோக்கம் அதிகமாகையால், அவர் அனேக கலைஞர்களை வரவழைத்து அவர்களுடன் சம்பாஷணை செய்வதும் உண்டு. இன்னும் ஆல்ப்ரெட் லத்தீன் பாஷையில் எழுதப்பட்டுள்ள அனேக புத்தகங்களை ஆங்கில பாஷையில் தாமே மொழிபெயர்த்தார். மேலும் ஆல்ப்ரெட் ஸாக்ஸனிய அரசர்களின் சரித்திரத்தைக் காலக்கிரமப்படி எழுதும்படிக்கும் செய்தார். ஸாக்ஸனியரது சரித்திரத்தைத் தெரிந்துகொள்வதற்கு அஃது இப்பொழுது ஓர் ஆதார நூலாக இருக்கிறது. இத்தகைச் சீர்திருத்தங்க ளைச் செய்த இப்பெரிய மன்னரிடத்தில் ஜனங்களுக்கு

விசுவாசமும், மரியாதையும் ஏற்பட்டது ஆச்சரியம் ஆகுமோ? அவர்கள் ஆல்ப்ரெடை ஒரு பெரிய மகான் என்று அழைத்தது சரியானதாகும். இங்கிலையில் அவருடைய ஆளுகை (கி. பி. 899) முடிவுக்கு வந்தது.

கேள்விகள் :—

1. டேனர்களின் படையெழுச்சியைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

2. ஆல்ப்ரெடுக்கும் டேனர்களுக்கும் நடந்த போரைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

3. சிப்பன்ஹாம் உடன்பாட்டின்படி தோன்றிய ஏற்பாடு யாது ?

4. ஆல்ப்ரெட் மன்னரின் சீர்திருத்தங்கள் யாவை ?

---

## அத்தியாயம் 4.

---

### ஸாக்ஸனிய வம்சத்து இதர அரசர்கள்
### (கி. பி. 899—கி. பி. 1016)

எட்வர்டும் (899—935) எதெல்ஸ்டனும் (926—940):- ஆல்ப்ரெட் இறந்த பிறகு அவருடைய புதல்வரான எட்வர்ட் (Edward) வெஸக்ஸுக்கு வேந்தரானார். எட்வர்டுக்குப் பிறகு அவருடைய முதல் குமாரரான எதெல்ஸ்டன் ஆட்சி புரிந்தார். அவர் ஒரு சண்டையில் டேனர்களைத் தோற்கடித்து டேன்லாவை மீட்டுக்கொண்டார். எதெல்ஸ்டன் இறந்தவுடன் அவருடைய தம்பிகள் பதினைந்து வருஷங்கள் இங்கிலாந்தை ஆட்சிபுரிந்தார்கள்.

எட்கார் (கி. பி. 959—கி. பி. 975):—எட்கார் ஆல்ப்ரெடின் புதல்வரான எட்வர்டின் பேரப்பிள்ளைகளில் ஒருவர்.



### ஸாக்ஸனிய வம்சாவளி.

எக்பர்ட் (802-839)
|
எதெல்வல்ப் (839-858)
|
எதெல்பால்ட் (858-860) — எதெல்பர்ட் (860-866) — எதெல்ரெட் (866-871) — ஆல்ப்ரெட் (871-899)
|
எட்வர்ட் (889-925)
|
எதெல்ஸ்டன் (926-940) — எட்மண்ட் (940-945) — எட்ரெட் (946-955)
|
எட்வி (955-959) — எட்கார் (959-975)
|
எட்வர்ட் (975-979) — எதெல்ரெட் = எம்மா (979-1016)
|
எட்வர்ட் (1042-1066)

அவரது ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்துக்கு அதிக கீர்த்தி உண்டாயிற்று. அவர் ஒரு காலத்தில் செஸ்டர் பட்டணத்திற்குச் சென்றார். அப்பொழுது அவர் ஏறியிருந்த படகை எட்டுச் சிற்றரசர்கள் டீ (Dee) நதியில் செலுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது.

டன்ஸ்டன்:—எட்கார் மன்னரது ஆட்சியில் டன்ஸ்டன் (Dunstan) என்னும் ஆங்கிலத்துறவி ஒருவர் இருந்தார். அவர் காண்டர்பரியிலுள்ள ஆலயத்திற்குப் பிரதான குருவாக இருந்தார். அவர் பக்தியிற் சிறந்தவர். அவர் எட்கார் மன்னருடைய முக்கிய மந்திரியாகப் பதினாறு வருஷகாலம்

இருந்து ராஜீய விஷயத்தில் உதவி செய்தார். அவர் சந்நியாசிகள் தங்குவதற்கும் ஆசிரியர்கள் கல்வி புகட்டுவதற்கும் உதவியாக அநேக மடங்களை இங்கிலாந்தில் கட்டுவித்தார். அவர் டேனர்களையும் ஆங்கிலேயரையும் அழைத்துச் சமாதானமாய் இங்கிலாந்தில் வாழவேண்டும் என்று புத்தி கூறினர். அதன் மேல் டேனர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் உள்ள சண்டைகள் ஒழிந்து இங்கிலாந்தில் அமைதி ஏற்பட்டது. அவர் கல்வி அபிவிருத்திக்காக அநேக கலாசாலைகளைக் கட்டுவித்ததோடு கிறிஸ்தவமதம் பரவுவதற்கு வேண்டிய காரியங்களையும் செய்தார்.

எதெல்ரெட் (கி. பி. 978—கி. பி. 1013) :—எட்கார் இறந்தவுடன் அவரது மூத்த குமாரரான எட்வர்ட் பட்டத்துக்கு வந்தார். அவர் மூன்று வருஷங்கள் வரையில் ஆட்சி புரிந்து இறந்தார். பின்பு, அவரது சகோதரரான எதெல்ரெட் அரசரானர். அவர் அறிஞர்களுடைய நற்சொற்களைக் கேளாமல் தமது இஷ்டப்படியே காரியங்களைச் செய்து வந்தார். ஆனதுபற்றி அவர் நற்புத்திகேளாத எதெல்ரெட் (Ethelred the Unready) என்று அழைக்கப்பட்டார்.

எதெல்ரெடும் டேனர்களும்:—இம்மன்னரின் ஆட்சிக் காலத்தில் டேனர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்தார்கள். ஆலப்ரெடைப்போல ஆண்மையுள்ள மன்னர்கள் இருப்பார்களாகில் அவர்கள் டேனர்களை வெளியோட்டியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது போர்த்திறமையற்ற எதெல்ரெட் டேனர்களின் படையெடுப்பை நீக்குவதற்கு ஜனங்களிடமிருந்து டேன்கெல்ட் (Danegeld) என்னும் வரியை வசூல் செய்து வசூலான தொகையை டேனர்களுக்குக் கொடுத்தார். ஆயினும் பண ஆசை பிடித்த டேனர்கள் உருசிகண்ட பூனையைப்போல் இங்கிலாந்தின்மேல் பல தடவைகள் படையெடுத்தார்கள். அதனால் எதெல்ரெட் டேனர்களின் படை—



யெழுச்சியை ஒழிப்பதற்கு வேறு ஒரு கொடிய முறையைக் கைப்பற்றினர். அவர் வெஸெக்ஸ் மாகாணத்தில் குடியேறின டேனர்களை (கி. பி. 1002) ஸேன்ட் ப்ரஸ் (St. Brice) என்பவருக்காகக் குறிப்பிட்ட திருநாள் அன்று கொலைசெய்யுமாறு உத்தரவிட்டார். இஃது ஒரு பெரிய படுகொலையாகும்.

டேனர்கள் இங்கிலாந்தை ஜயித்தல்:—இப் படுகொலையின் செய்தி டென்மார்க் மன்னரான ஸ்வீகன் (Swegen) என்பவருக்கு தெரிந்தபொழுது, அவர் மிக்க சினம்கொண்டு இங்கிலாந்தை ஜயிப்பது என்ற எண்ணத்துடன் ஒரு பெரிய சேனையோடு அங்கே வந்து இறங்கினர். எதெல்ரெட் தமது நாட்டிலிருந்து பிரான்ஸின் வடபாகத்திலுள்ள நார்மண்டி (Normandy) மாகாணத்திற்கு (கி. பி. 1013) ஓடி விட்டார். ஏனெனில் அம்மாகாணத்துச் சிற்றரசரின் பெண்ணாகிய எம்மா (Emma) என்பவளை அவர் மணம் புரிந்திருந்தார். பிறகு அவருடைய முதல் மனைவியின் புத்திரரான எட்மண்ட் (Edmund) டேனர்களுடன் போர் புரிந்தார். முடிவில் அவர் டேனர்களுடன் சமாதானத்தைச் செய்துகொண்டார். ஸ்வீகன் (கி. பி. 1014) இறக்கவே, அவருடைய புத்திரரான கன்யூட் (Canute) எட்மண்டுடன் போரிடிச் சமாதானம் செய்துகொண்டார். எட்மண்ட் (கி.பி. 1016) இறந்த பிறகு கன்யூட் இங்கிலாந்தை ஆட்சி புரியலானர்.

**கேள்விகள்:—**

1. டேன்லாவை எப்பொழுது எவ்வாறு ஸாக்ஸனியர்கள் மீட்டுக்கொண்டார்கள்?
2. டன்ஸ்டன் என்ற ஆங்கிலத் துறவியைப்பற்றி நீ அறிந்தன யாவை?
3. எதெல்ரெட் டேனர்களின் படையெழுச்சியை ஒழிப்பதற்குச் செய்த முறைகள் யாவை? அம்முறைகளால் உண்டான தீமை யாது?
4. டேனர்கள் இங்கிலாந்தை எப்படி ஜயித்தார்கள்?

## அத்தியாயம் 5.

### டேனர்களின் ஆட்சி. (கி. பி. 1017-கி. பி. 1042)

கன்யூட் (1017—1035):—இங்கிலாந்தை அரசாண்ட பெரிய மன்னர்களுள் கன்யூட் ஒருவர். அவர் டென்மார்க், நார்வே தேசங்களையும் ஆண்டுவந்தார். அவர் ஒரு டேனரான போதிலும் ஆங்கிலேயர்களை அன்புடன் நடத்தினர். அவர் எதெல்ரெடின் மனைவியும் அப்பொழுது விதவையுமான எம்மா என்பவளை விவாகம் செய்துகொண்டார். அவர் ஆங்கிலேயரின் சட்டங்களைப் பின்பற்றி நீதி தவறாது ஆண்டார். அவர் டேனர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் வித்தியாசம் பாராட்டாமல் உயர்ந்த பதவிகளையும் பூமியையும் கொடுத்தார். அவருக்குக் கிறிஸ்தவ மதத்தில் அபிமானம் அதிகம். ஆனது பற்றி அவர் அநேக பாதிரிகளை அழைத்து அம்மதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும்படி உத்தரவிட்டார். அவரே ரோமாபுரிக்குக் கிறிஸ்தவ மதத்தொண்டராக யாத்திரை சென்றார்.

அவர் இங்கிலாந்தை நான்கு பெரிய பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆங்கிலப் பிரபுவைத் தமக்குப் பிரதிநிதியாயிருந்து ஆண்டுவரும்படி நியமனம் செய்தார். இந்த ஏற்பாடு அவரிடத்தில் ஆங்கிலேயர்களை அதிக அன்பு வைக்கும்படி செய்தது. இந்த ஏற்பாட்டில் உள்ள ஒரு பெருங்குறை கன்யூட்டின் மரணத்திற்குப் பிறகுதான் வெளிப்பட்டது. கன்யூட் இறந்த பிறகு ஒவ்வொரு பிரபுவும் அவரவர் இஷ்டப்படி தம் மாகாணத்தை ஆள ஆரம்பித்தனர்.

கன்யூட்டின் புதல்வர்கள் (1036-1042):—கன்யூட்டின் குமாரர்கள் இங்கிலாந்தை ஆறுவருஷங்கள் ஆண்டுவந்தார்கள். ஆங்கிலேயர்களுக்கு அவர்களிடம நம்பிக்கையும், விசுவாஸ



மும் இல்லை. ஆகையால் அவர்கள் 'டேனர்களின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவரவேண்டும்' என்று தீர்மானம் செய்தார்கள். ஆனதுபற்றி அவர்கள் எதெல்ரெடின் இரண்டாவது மனைவியின் குமாரரான எட்வர்ட் என்பவரை ஆங்கில மகுடத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்கள். அவர் அதற்கு உடன்படவே, ஆங்கிலேயர்கள் எட்வர்டை இங்கிலாந்தின் அரசராகச் செய்தார்கள். இம்மாதிரியாக டேனர்களின் ஆளுகை (கி. பி. 1042) முடிவிற்கு வந்தது. அதே வருஷத்தில் ஸாக்ஸனிய வம்சம் மீண்டும் அதிகாரம் பெற்றது.

கேள்விகள்:—

1. கன்யூட் ஆங்கிலேயரின் அன்பை எவ்வாறு பெற்றார்?

2. ராஜீய விஷயத்தில் கன்யூட் செய்த ஏற்பாடு யாது? அந்த ஏற்பாட்டின் தீமை யாது?

3. டேனர்களின் ஆட்சியை ஆங்கிலேயர்கள் முடிவிற்குக் கொண்டு வந்ததற்குக் காரணம் யாது?

---

## அத்தியாயம் 6.

### எட்வர்டின் ஆளுகையும் நார்மனியரின் படையெழுச்சியும்

எட்வர்ட் (கி. பி-1042. கி. பி. 1066):—எட்வர்ட் தமது தாயின் நாடாகிய நார்மண்டியில் வளர்ந்து வந்தார். ஆகவே அவருக்கு நார்மனியரிடத்தில் அன்பு மிகுந்தது. அவருக்குப் பிரெஞ்சு பாஷையிலும், நார்மனியரின் நடை உடைகளிலும் அபிமானம் அதிகம். அவர் நார்மண்டியிலிருந்து சில பிரபுக்களை இங்கிலாந்துக்கு வரவழைத்து அவர்களுக்கு உத்தியோகங்களையும், உயர்ந்த பட்டங்களையும், பூமியையும் கொடுத்தார். இதைக்கண்ட ஆங்கிலப் பிரபுக்கள் நார்மனியப்

பிரபுக்களிடம் பொறாமையையும் வெறுப்பையும் கொண்டார்கள். அக்காலத்தில் ஆங்கிலப் பிரபுக்களில் மிக்க அதிகாரமுள்ளவர் வெஸெக்ஸ் மாகாணத்துச் சிற்றரசராகிய காட்வின் (Godwin) என்பவர். அவருடைய மகளைத்தான் எட்வர்ட் மணம் செய்துகொண்டிருந்தார். ஆனால் எட்வர்ட் நார்மனிபப் பிரபுக்களின் தூண்டுதலினால், ஆங்கிலப் பிரபுக்களது கட்சியின் தலைவரான காட்வினைத் தேசப் பிரஷ்டம் செய்தார்.

வில்லியமின் பேட்டி:—இதற்குப் பிறகு நார்மனியப் பிரபுக்களின் அதிகாரம் அதிகரித்தது. அவர்கள் எட்வர்டுக்கு ராஜாங்க விஷயமான ஆலோசனைகளைச் சொல்லி வந்தார்கள். எட்வர்டின் ஆட்சியில் நார்மண்டி சிற்றரசராகிய வில்லியம் (William) இங்கிலாந்திற்கு விஜயம் செய்தார். அவர் எட்வர்டின் மாமன் மகனாவர். இச்சமயத்தில் எட்வர்ட் வில்லியமுக்குத் 'தாம் இறந்தபின் ஆங்கிலமகுடத்தை அடையலாம்' என்று உறுதிமொழி கொடுத்ததாக ஒரு வதந்தி உலாவியது. இந்த உறுதிமொழி வதந்தியை ஆதாரமாகக் கொண்டு வில்லியம் 'இங்கிலாந்தின் சிம்மாஸனம் தமக்கு உரியது' என்று சொல்லி பாத்தியம் கொண்டாடினார். பிறகு வில்லியம் நார்மண்டிக்குத் திரும்பிச் சென்றார்.

காட்வின் திரும்புதல்:-சிலகாலஞ் சென்றபிறகு காட்வின் இங்கிலாந்திற்குத் திரும்பினார். எட்வர்ட் காட்வினது தூண்டுதலினால் அதுவரையில் தமக்கு ஆலோசனை சொல்லிவந்த நார்மனியப் பிரபுக்களை அவர்களது நாட்டிற்குச் செல்லும்படி உத்தரவிட்டார். பிறகு ஆங்கிலப் பிரபுக்களின் கட்சி செல்வாக்கும் அதிகாரமும் பெற்றது. காட்வினது மரணத்திற்குப் பிறகு அவரது மூத்த புதல்வரான ஹாரோல்ட்(Harold) வெஸெக்ஸ் மாகாணத்தின் சிற்றரசரானார். எட்வர்ட் அவருடைய ஆலோசனைப்படி ஆட்சி புரிந்துவந்தார். இவ்வாறு



இருபத்துநான்கு வருஷங்கள் ஆட்சி புரிந்த பிறகு எட்வர்ட் மரணமடைந்தார்.

ஹாரோல்டின் ஆட்சி (1066):—எட்வர்ட் இறந்தபிறகு ஹாரோல்ட் ஆங்கிலேயரின் விருப்பத்துக்கு இணங்கி ஆங்கில வேந்தரானார். அப்பொழுது அவருடைய தம்பியாகிய டாஸ்டிக் (Tostig) நார்தம்பிரியாவின் சிற்றரசராயிருந்தார். அவர் பொறாமைகொண்டு தமது தமயனுக்கு விரோதமாய்க் கலகஞ் செய்யத் தலைப்பட்டார். அவர் நார்வே வேந்தரான ஹாரோல்ட் ஹாட்ராடா (Harold Hadrada) என்பவரின் உதவியைநாடினார். அவரும் ஹம்பர் (Humber) நதியின் முகத்துவாரத்தில் ஒரு பெரும் சேனையுடன் வந்திறங்கினார். ஆங்கில வேந்தரான ஹாரோல்ட் இந்தச் செய்தியைக்கேட்டு, டாஸ்டிக், ஹாரோல்ட் ஹாட்ராடா இவர்களுடன் போர் செய்ப ஒரு பெரிய சேனையுடன் வடக்கு நோக்கிச் சென்றார். ஸ்டாம்பர்ட் பிரிட்ஜ் (Stamford Bridge) என்றவிடத்தில் ஒரு பயங்கரமான சண்டை நடந்தது. இதில் டாஸ்டிக்கும் அவரது சிநேகிதரான ஹாரோல்டும் மடிந்தார்கள்.

வில்லியம் இங்கிலாந்தின்மேல் படையெடுத்தல்:—இச்சமயத்தில் நார்மண்டிச் சிற்றரசரான வில்லியம் ஒரு பெரிய சேனையுடன் இங்கிலாந்தின் தென்கரையிலுள்ள பெவென்ஸி (Pevensey) என்ற இடத்தில் வந்திறங்கினார். இச்செய்தியைக் கேள்வியுற்ற ஹாரோல்ட் ஒரு பெரிய சேனையுடன் தெற்கு நோக்கிப் பறந்தோடி வந்தார். வில்லியம் 'எட்வர்ட் கொடுத்த உறுதிமொழியின்படி ஆங்கில மகுடத்தைப்பெறும் உரிமை தமக்குத்தான் உண்டு, என்று கூறினார். மேலும் அவர் படையெடுத்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஹாரோல்ட் வெஸெக்ஸின் சிற்றரசராய் இருக்கும்போது அவர் ஒருமுறை கடற்பிரயாணம் செய்தார். அவர் ஏறியிருந்த கப்பல் கடலில் மூழ்க ஆரம்பிக்கவே, அவர் நார்மண்டியின்

கரைக்கு நீந்திச்சென்று வில்லியமின் உதவியை நாடினர். அப்பொழுது திக்கற்ற ஹாரோல்ட் வில்லியமுக்கு ஆங்கிலமகுடம் கிடைக்குமாறு உதவிபுரிவதாக வாக்களித்தார். ஹாரோல்ட் தமது வாக்கின்பிரகாரம் நடவாமல் தாமே இங்கிலாந்து மன்னரான செய்தியைக்கேட்டு, வில்லியம் கோபங்கொண்டு ஆங்கில மகுடத்தை அவரிடமிருந்து பிடுங்க எண்ணி இங்கிலாந்தின்மேல் படையெடுத்தார்.

**ஹேஸ்டிங்ஸ் சண்டை (1066):**—ஹாரோல்ட் தமது சேனையை ஹேஸ்டிங்ஸ் (Hastings) என்ற ஒரு கிராமத்தின் அருகிலுள்ள குன்றின் சரிவில் நார்மனியருடன் போர் புரிவதற்குத் தயாராய் செய்து வைத்தார். வில்லியம் இச்செய்தியைக் கேட்டு ஆங்கிலச் சேனையை எதிர்க்கப் பெவென்ஸியிலிருந்து சென்றார். பிறகு ஒரு கடும்போர் நடந்தது. அதில் நார்மனியர்கள் முதலில் தோல்வியடைவார்கள் போலத் தோன்றியது. ஆகையால் வில்லியம் தம் குதிரை வீரர்களைச் சண்டை செய்வதற்குப் பயந்து பின்னடைவது போல் பாசாங்கு செய்யும்படி உத்தரவிட்டார். நார்மனியக் குதிரை வீரர்கள் அவரது உத்தரவின்படி திரும்பிச் செல்லலானார்கள். இங்கிலீஷ்ப் போர்வீரர்கள் குன்றின் சரிவிலிருந்து இறங்கி விரோதிகள் பயந்து ஓடுவதாகத் தவறாக எண்ணி, சமவெளியில் அவர்களைத் துரத்தத்தொடங்கினார்கள். இச்சமயத்தில் வில்லியமின் கட்டளைப்படி நார்மனிய வீரர்கள் திரும்பி ஆங்கிலசைன்யத்துடன் போர் புரிந்தார்கள். ஆங்கிலப் போர்வீரர்கள் தரையில் நின்று கத்தி, ஈட்டி முதலிய போராயுதங்களுடன் அதிக தைரியமாய்ச்சண்டை செய்தார்கள். ஆனால் அவர்கள் கடைசியில் தோல்வியடைந்தார்கள். இவ்வாறு நார்மனியர்கள் தங்களது குதிரைப் படையின் பலத்தினாலும் வில்லியமின் உபாயத்தினாலும் வெற்றியடைந்தார்கள். ஹாரோல்ட் தமது கண்ணில் ஓர் அம்பு வந்து பாயவே போர்க்களத்தில் கீழே விழுந்தார்.



உடனே நார்மனிய வீரர்கள் அவரைக் குத்திக் கொன்றுவிட்டார்கள். இம்மாதிரியாக வில்லியம் வெற்றியடைந்த பிறகு தமது படையுடன் லண்டன் நகருக்குச் சென்றார். ஆங்கிலப் பிரபுக்கள் அவரை வரவேற்று கி. பி. 1066-ம் வருஷத்துக் கிறிஸ்மஸ் திருவிழாவன்று இங்கிலாந்து அரசர் என அவருக்கு முடிசூட்டினார்கள். இதற்குப் பிறகுதான் வில்லியம் வெற்றியாளர் (The Conqueror) என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

கேள்விகள்:—

1. எட்வர்டுக்கு நார்மனியரிடம் பிரியம் ஏற்படுவதற்குக் காரணம் யாது? அவர் தமது அன்பை எவ்வாறு வெளிக்காட்டினார்?

2. காட்வின் என்பவர் யார்? அவரைப்பற்றி உனக்குஎன்ன தெரியும்?

3. ஹாரோல்டின் ஆட்சியில் நடந்த விஷயங்கள் எவை?

4. வில்லியம் இங்கிலாந்தின்மீது படையெடுத்ததற்குக் காரணங்கள் யாவை? அவரது படையெழுச்சியைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

5. ஹேஸ்டிங்ஸ் சண்டையில் நார்மனியரின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

---

## அத்தியாயம் 7.

---

### நார்மனியர் இங்கிலாந்தை ஜயித்ததற்கு முன் இங்கிலாந்தின் நிலைமை


**மக்களின் நிலைமை**—நார்மனியர்கள் பிரிட்டிஷ்த் தீவுகளை ஜயித்தகாலம் வரையில் ஆங்கிலேயர்கள் அமைதியுடன் தங்களுடைய நாட்டிலேயே இருந்து வசித்து வந்தார்கள். பட்டணங்கள் மிகக் குறைவு. வியாபாரம் அதிகமாய் நடக்க

வில்லை. அக்காலத்தில் லண்டன் நகரம் ஒரு முக்கிய வியாபாரஸ்தலமாக இருந்தது. அநேகமாய் ஆங்கிலேயர்கள் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டும், ஆடுமாடுகளை வளர்த்தும் வந்தார்கள். பணக்காரர்களுடைய வீடுகள் மரத்தால் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெரிய அறை உண்டு. கண்ணாடி ஜன்னல்கள் கிடையாது. காற்றும் வெளிச்சமும் உள்ளே செல்வதற்கு வழிகளும் கிடையாது. புகைப்போக்கிகளும் இல்லை. அக்காலத்தில் அவர்கள் முரட்டுத்தனமுள்ளவர்களாயிருந்தாலும் அநேகமாய்ச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வந்தார்கள். குற்றவாளிகள்மீது விதிக்கப்பட்ட தண்டனைகள் அவ்வளவு கடுமையாக இல்லை. கொலை செய்தல் போன்ற பெரும் குற்றங்களைச் செய்தவர்கள் தீங்கிழைக்கப்பட்ட குடும்பத்தாருக்குப் பணத்தைக் கொடுத்து வேறு தண்டனையில்லாமல் தப்பிக்கொண்டார்கள். கொல்லப்பட்டவனின் உறவினருக்குக் கொலை செய்வதனால் கொடுக்கப்பட்ட தொகைக்கு Wergild என்று பெயர். அத்தொகை கொலையுண்டவனுடைய அந்தஸ்தைப் பொருத்ததாக இருந்தது. நிலச் சொந்தக்காரன் கொலை முதலிய தீங்கிழைத்தால் அவன் தன் நிலங்களை இழக்கும்படி நேர்ந்தது.

பொதுமக்கள் அநேக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தனர். கொஞ்சம் நில முடையவர்கள் Ceorl என்று அழைக்கப்பட்டனர். நிலமில்லாமலிருந்த ஜனங்கள் மிராசுதார்களின் ஆதரவின்கீழ் இருக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டார்கள். அவர்களுக்கு Theows அல்லது அடிமைகள் என்று பெயர். பஞ்சம் நேர்ந்த காலத்தில் கதியற்ற குற்றவாளிகள் உணவு சம்பாதித்துக்கொள்ள வழியின்றி மிராசுதார்களிடம் தங்களை விற்றுக் கொள்வார்கள். இவ்வாறு குற்றவாளிகளில் அநேகர் அடிமைகளாக ஆயினர். சிறிய மிராசுதார்களில் பலர் அநேக பூமிகளைச் சம்பாதித்துப் பெரிய பிரபுக்கள் ஆயினர். அவர்கள்



அரசனிடமிருந்து அதிக நிலங்களைப் பெற்றுக்கொண்டு அவருக்காகச் சண்டை புரிவதாக வாக்களித்தார்கள். ஆகையால் அவர்களுக்கு Thegns அல்லது அரசரின் வேலையாட்கள் என்று பெயர்.




நாட்டின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள்:—அக்காலத்தில் ஒரு நிலைத்த சைனியம் கிடையாது. ஆபத்து நேர்ந்த காலையில் ஒவ்வொரு மனிதரும் தேசத்திற்காகச் சண்டை செய்யும்படி ராஜாங்கத்தாரால் அழைக்கப்பட்டார். ஆனதுபற்றி சுதந்தரமுள்ள ஒவ்வொருவரும் சிறிது காலம் போர்த் தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. ஆகையால் அக்காலத்துச் சைன்யத்தில் போர்த் தொழில் அறிந்த சுதந்தரம் உள்ளவர்கள் எல்லோரும் போர் வீரர்களாக அமர்ந்து இருந்தார்கள்.

அரசியல் முறை:—அரசர் தேசத்தார்களால் வெகு கண்ணியத்துடன் நடத்தப்பட்டார். ஓர் அரசர் இறந்து போனால் அவருக்குப்பின் அரசராக ஒருவரைப் பிரபுக்கள் தேர்ந்தெடுப்பார்கள்; அநேகமாய்க் காலம் சென்ற மன்னருடைய மகன் ஆளும் திறமை வாய்ந்தவனாக இருந்தால் அவனையே தேர்ந்தெடுப்பார்கள். ஆயினும் சில சமயங்களில் இறந்துபோன அரசருடைய மகன் இளம்பிராய முடையவனாக இருந்தால்

அம்மன்னரின் சகோதரரையே அரசாளும்படி பிரபுக்கள் நியமித்து வந்தார்கள். அக்காலத்தில் அரசர் பிரபுக்களால் நியமிக்கப்பட்டார். மன்னர் ராஜீய விஷயங்களில் Witenagemot என்ற ஒரு சபையின் ஆலோசனையின் பிரகாரம் நடந்தார். அச்சபையில் அறிவிற் சிறந்த பெரியோர்கள் மெம்பர்களாயிருந்தார்கள். மேலும் அச்சபையில் உத்தியோகஸ்தர்களும், ஜில்லாப் பிரபுக்களும், பிஷப்புகளும், அரசருடைய உறவினர்களும், மெம்பர்களாக இருந்தார்கள். அரசர் ராஜீய விஷயங்களைப்பற்றி இச்சபையைக் கலந்து ஆலோசிக்காமல் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. அதிகத் திறமையற்ற அரசர் இச்சபையின் தீர்மானத்தின்படியே நடப்பார்.

ஆளுகை(?) துரைத்தன செளகரியத்தை உத்தேசித்து நாடு அநேக பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவைகள் ஒவ்வொன்றிற்கும் "ஷயர்" (ஜில்லா) என்று பெயர். ஒவ்வொரு ஷயரிலும் ஒரு நியாயஸ்தலம் உண்டு. அது ஜில்லாக் கோர்ட்டு போன்றது. எல்லா வழக்குகளும் இந்த நியாய ஸ்தலத்தில்தான் விசாரிக்கப்பட்டன. ஒவ்வொரு ஷயர் நீதிஸ்தலத்திலும் பட்டணங்களின் பிரதிநிதிகளும் அந்த ஷயரிலுள்ள தனவான்களும், பிரபுக்களும் அதிகாரிகளாக இருந்தார்கள். நூறு பட்டணங்கள் அடங்கியுள்ள பிரிவுக்கு "நூறு" என்று பெயர். இது ஷயரைக் காட்டிலும் சிறியதாகும். டேன்லாவில் இப்பிரிவுக்கு Wapentague என்ற பெயர் வழங்கிவந்தது. இந்த "நூறு" என்ற பிரிவிலும் ஒரு நீதிஸ்தலம் உண்டு. இந்த நீதிஸ்தலத்திலும் அப்பிரிவில் அடங்கியுள்ள பட்டணங்களின் அறிவிற் சிறந்த பெரியோர்கள், நியாயாதிபதிகளாக இருந்தார்கள். மிக சிறிய வழக்குகளே இந்தச் சிறிய நியாய ஸ்தலங்களில் விசாரணை செய்யப்பட்டு வந்தன. அக்காலத்தில் ஜனங்கள்

இங்கிலாந்து
|
ஜில்லா
|
நூறு
|
பட்டணம்



தாங்கள் வசித்துவந்த பிரதேசங்களின் விஷயங்களை மட்டும் கவனித்து வந்தார்களே ஒழிய பரந்த நோக்கத்துடன் தேச நன்மையைக் கருதவில்லை.

கேள்விகள்:—

1. நார்மனியர்கள் இங்கிலாந்தை ஜயித்ததற்குமுன் பொது மக்களின் நிலைமை எவ்வாறு இருந்தது ?

2. அப்பொழுது நாட்டின் பாதுகாப்புக்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனுஷ்டானத்தில் இருந்து வந்தன ?

3. கி. பி. 1066-க்கு முன் வழங்கிவந்த இங்கிலாந்தின் அரசியல் முறையைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

4. ஷயர், நூறு, வாபன்டேக், விட்டனஜமோட் என்பன யாவை ?

* * * *

| முக்கிய நிகழ்ச்சிகள் | வருஷங்கள் |
|---|---|
| அகஸ்டின் இங்கிலாந்தில் இறங்கினது | கி. பி. 597. |
| எட்வின் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல் | ,, 627. |
| விட்பி மகாசபை | ,, 664. |
| ஆபாவின் ஆளுகை | 757—796. |
| டேனர்கள் முதல் முதலில் இங்கிலாந்தின் மீது படையெடுத்தல் | ,, 787. |
| எக்பர்ட் ஏகாதிபத்தியம் அடைதல் | கி. பி. 827. |
| டேனர்கள் வெஸக்ஸின்மீது படையெடுத்தல் | ,, 871. |
| வெட்மோர் உடன்பாடு | ,, 878. |
| ஸெண்ட் ப்ரைஸ் படுகொலை | ,, 1002. |
| டேனர்கள் இங்கிலாந்தை ஜயித்[illegible] | ,, 1013. |
| டேனர்களது ஆட்சியின் முடி[illegible] | ,, 1042. |
| ஹேஸ்டிங்ஸ் சண்டை | ,, 1066. |

# IV. நார்மனிய அரசர்களின் காலம்

(கி. பி. 1066—கி. பி. 1154.)

---

## அத்தியாயம் 1.

### முதலாவது வில்லியம் (1066—1087)

**வில்லியம் இங்கிலாந்தை ஜயித்தல் (1066—1072):—** ஹேஸ்டிங்ஸ் சண்டையில் தாம் அடைந்த வெற்றியால் வில்லியம் இங்கிலாந்தின் தென்பாகத்தை அடைந்தார். வடபாகத்திலும், கிழ்பாகத்திலும் உள்ள ஆங்கிலேயர்கள் வில்லியமை இங்கிலாந்தின் அரசரென்று ஒத்துக்கொள்ளவில்லை. வில்லியம் நார்மண்டிக்குச் சென்றிருக்கும்பொழுது நார்தம்பிரியாவின் பிரபுவாகிய வால்தியாப் (Waltheof) கலகம் செய்தார். இந்தக் கலகத்தை அடக்குவதற்கு வில்லியம் ஒரு சேனையுடன் புறப்பட்டு ஹம்பர் நதியின் முகத்துவாரத்தை அடைந்து யார்க்ஷயர் (Yorkshire) வடபாதியிலுள்ள சமவெளியைப் பாழாக்கினார். அநேக பட்டணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அனேக ஆங்கிலேயர்கள் மாண்டார்கள். இதற்குப் பிறகு வில்லியம் ஈலி (Ely) என்னும் தீவில் ஒடிப் பதுங்கியிருந்து தீங்கு விளைவித்துக்கொண்டிருந்த ஹேரிவர்ட் (Hereward) என்ற ஒரு ஆங்கிலப் பிரபுவைத் தோற்கடித்தார். இவ்வாறு கலகங்களையெல்லாம் அடக்கிவிட்டு, வில்லியம், ஆங்கிலேயர் தமது ஆட்சிக்கு விரோதமாய்க் கலகம் செய்யாதபடி, அனேக கோட்டைகளை இங்கிலாந்தில் கட்டுவித்தார்; ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நார்மனியப் பட்டாளத்தை வைத்தார். இவ்வாறு வில்லியம் தமது ஆட்சியை இங்கிலாந்தில் ஸ்தாபித்தார்.



**உம்பள முறை:—** வில்லியம் தமது ஆட்சியை இங்கிலாந்தில் ஸ்தாபித்த பிறகு தமக்கு விரோதமாகப் போர் செய்த ஆங்கிலேயரின் பூமிகளைப் பிடுங்கி, அவற்றைத் தமக்குப் போரில் உதவி செய்த நார்மனியப் பிரபுக்களுக்குக் கொடுத்தார். அவர்கள் அந்நிலங்களுக்காக அரசர்க்குப் பணமாக வரி கொடுக்கவேண்டுவதில்லை; ஆனால் அவர்கள் யுத்தகாலத்தில் சேனையுடன் சென்று அரசர்க்கு உதவி செய்வதாக வாக்களித்தார்கள். அதனோடு அவர்கள் தங்களது அரசரிடத்தில் விசுவாசத்துடன் கீழ்ப்படிவதாகவும் உறுதிமொழி கொடுத்தார்கள். அரசரும் அவர்களைக் காப்பதாக வாக்களித்தார். இந்தப் பிரபுக்கள் (Barons) தாங்கள் இந்த முறையின்படி அடைந்த நிலங்களை அதே நிபந்தனைகளின்படி தங்களிடம் நடப்பதாக உடன்பட்டவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள். இவர்களுக்கு மிராசுதார்கள் என்று பெயர். இந்த மிராசுதார்கள் தங்களுக்குக் கிடைத்த நிலங்களைச் சிறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் ஒரு பண்ணைக் குடியானவன் இடத்தில் ஒப்படைத்துச் சாகுபடிசெய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். இப்பண்ணைக் குடிகளும் சிறிய மிராசுதார்களுக்குப் போர்க்காலத்தில் உதவிசெய்வதாகப் பிரமாணம் செய்தார்கள். இந்தப் பிரமாணத்திற்கு உம்பளப் பிரமாணம் (Oath of Allegiance) என்றும், இந்த முறைக்கு உம்பள முறை (Feudalism) என்றும் பெயர்.

**உம்பள முறையில் உள்ள சில கெடுதல்கள்:—** எப்பொழுதாவது அரசர் தம்முடைய விரோதிகளுடன் போர்புரியும்படி நேர்ந்தால், அவர் உம்பள முறையின்படி தம்முடைய பிரபுக்களை அழைத்துத் தமது விருப்பத்தை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அப் பிரபுக்கள் சிறிய மிராசுதார்களை அழைத்து அவர்களிடம் தெரிவிப்பார்கள். இந்த மிராசுதார்கள் தங்களுடைய பண்ணைக் குடிகளை அழைத்து யுத்தத்திற்குச்

செல்லத் தயாராகவிருக்கும்படி செய்வார்கள். இம்மாதிரியாகத்தான் அரசர் தம்முடைய பிரபுக்களின் உதவியைப் போர்க்களத்தில் அடைவர். ஒரு சமயம் பிரபுக்களுக்கும் அரசர்க்கும் மனஸ்தாபம் ஏற்பட்டால், அவர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு யுத்தகாலத்தில் அரசர்க்கு உதவி செய்யாது நின்றுவிடுவதும் உண்டு. அத்தகைச் சமயங்களில் அரசர் படையின்றித் தவிக்கும்படி நேரிட்டது. சில சமயங்களில் பிரபுக்களே அரசர்க்கு விரோதமான கலகங்களையும் செய்து வந்தார்கள். இக்கலகங்களை அடக்குவதற்கு அரசர்க்குப் போதுமான சேனையில்லாமல் அவர் தவிப்பதுமுண்டு. இப்பெரிய தீமை உம்பள முறையில் உள்ளதென்பது வில்லியமுக்குத் தெரியும். ஏனென்றால் அவர் பிரான்ஸ் தேசத்தில் ஓர் உம்பளப் பிரபுவாய் இருந்து தமது எஜமானராகிய பிரான்ஸ் அரசர்க்கு உதவிபுரியாமல் அவரை அனேக சமயங்களில் தவிக்கும்படி செய்துவந்தார். மேலும், மிராசுதார்களும் பண்ணைக் குடிகளும் பிரபுக்களின் உத்தரவில்லாமல் அரசர்க்குப் போரில் உதவிசெய்ய உம்பள முறையின்படி கடமைப்பட்டவர்கள் அல்லர். இப்பெரும் தீமையைத் தெரிந்துகொண்ட வில்லியம் அதை ஒழிப்பதற்கு உம்பள முறையில் சில மாறுபாடுகளைச் செய்தார். அவைகளைப்பற்றிக் கீழே சொல்லுவோம்:

**உம்பள முறையின் தீமைகளை ஒழித்தல்:**—உம்பளமுறை பிரபுக்களை அதிகாரம் படைத்தவர்களாகவும், செல்வாக்கு உள்ளவர்களாகவும் செய்தது என்பதை வில்லியம் தெரிந்துகொண்டார். ஆகையால் அவர் ஒவ்வொரு நார்மனியப் பிரபுக்கும் ஒரே தாக்கான பூமியைக் கொடாமல், இங்கு ஒரு பூமியும், அங்கு ஒரு பூமியுமாகப் பிரித்துக்கொடுத்தார். இவ்வாறு செய்ததால் பிரபுக்களின் அதிகாரம் குன்றிவிட்டது. ஏனெனில், ஒரு பிரபு தம்முடைய பண்ணைக்குடிகள் எல்லோரையும் ஒன்றுசேர்த்து அரசர்க்கு விரோதமாகக்



கலகம் செய்ய முடியவில்லை. மேலும் வில்லியம் இங்கிலாந்திலுள்ள மிராசுதார்களையும், குடியானவர்களையும் ஸாலிஸ்பரி (Salsbury) என்னுமிடத்திற்கு (கி. பி. 1086) வரவழைத்து, அவர்களைத் தமக்கு விசுவாச உறுதிமொழி அளிக்கும்படி செய்தார். இதனால் அரசர்க்கு யுத்த காலத்தில் குடியானவர்களுடைய உதவி எளிதில் கிடைத்தது. ஸாலிஸ்பரி பிரமாணத்தின்படி மிராசுதார்களும், குடியானவர்களும் அரசர்க்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்களாகி விட்டார்கள். பிரபுக்களின் உத்தரவில்லாமல் கூட மிராசுதார்களும், பண்ணைக் குடிகளும் அரசர்க்கு உதவிபுரிய முடியும்.

**டூம்ஸ்டே புத்தகம் (1085):**—பின்னர் முதலாவது வில்லியம் ஒரு சிலாக்கியமான சீர்திருத்தத்தைச் செய்தார். இங்கிலாந்தின் பொருள் நிலையை அறியவேண்டியும், குடிகளிடமிருந்து வரிவசூல் செய்வதற்குச் சாதனமாயிருக்கும் பொருட்டும் அவர் சில அதிகாரிகளை நியமனம் செய்தார்; அவர்களை ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பின்வரும் விஷயங்களை ஒரு புத்தகத்தில் பதிவு செய்யுமாறு கட்டளையிட்டார். அவரது உத்தரவின்படி பதிவு செய்யப்பட்ட புத்தகம் டூம்ஸ்டே புத்தகம் (Domesday Book) என வழங்கலாயிற்று. இப்புத்தகத்தில் நிலத்தைப்பற்றிய எல்லா விபரங்களும் (சொந்தக்காரர், பண்ணையாட்கள், பெறுமானம், விஸ்தீரணம்) எழுதப்பட்டுள்ளன. இங்கிலாந்திலுள்ள எருது, பன்றி, கலப்பை முதலியன ஒன்றும் விடாமல் பதிவுசெய்யப்பட்டன. இப்புத்தகம் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன்புள்ள இங்கிலாந்தின் பொருள் நிலையைத் தெரிவிக்கின்றது. இன்னும், ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரிடமிருந்தும் எவ்வளவு வரி ராஜாங்கத்திற்குக் கிடைக்கவேண்டுமென்றும் அரசர் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆகையால் நிலச் சொந்தக்

காரர்கள் எக்காரணத்தைக்கொண்டும் அரசருக்கு வரி கொடாமல் ஏமாற்றுவதற்கு முடியாமற் போயிற்று.

மதசம்பந்தமான சீர்திருத்தங்கள்;—வில்லியம் இங்கிலாந்து மன்னர் ஆனபிறகு அவர் நார்மண்டியிலிருந்து லான்பிராங்க் (Lan franc) என்பவரைத் தருவித்து அவரைகாண்டர்பரி ஆர்ச்பிஷப்பாக நியமனம் செய்தார். அவர் இராஜாங்க விஷயங்களிற்கூட அரசர்க்கு உதவிபுரிந்தார். மேலும், வில்லியம் சர்ச் உத்தியோகங்களை ஆங்கிலேயர்களிடமிருந்து பிடுங்கி நார்மனியருக்குக் கொடுத்தார். குருமார்களிடத்தில் எல்லோரும் கண்ணியம் பாராட்டவேண்டும் என்ற எண்ணத்துடனே வில்லியம் ஒரு சீர்திருத்தத்தைச் செய்தார். வைதீகர்களும், லௌகீகர்களும் ஒரே நியாயஸ்தலத்தில் விசாரணை செய்யப்படுவது தகுதியல்லவென்று எண்ணி, வைதீகர்களை மட்டும் விசாரணை செய்வதற்காக வில்லியம் சில புதிய நியாயஸ்தலங்களை ஏற்படுத்தினார். இந்த ஏற்பாட்டினால் உண்டான தீமைகளைப்பற்றிப் பின்வரும் அத்தியாயத்தில் பார்ப்போம்.

கேள்விகள்:—

1. வில்லியமின் ஆட்சியில் ஆங்கிலேயர்கள் செய்த கலகங்கள் யாவை? அவைகள் எவ்வாறு முடிந்தன?

2. உம்பளமுறை என்றால் என்ன? அதன்படி பிரபுக்கள் அரசர்க்குக் கூறிய உறுதிமொழிகள் யாவை?

3. அந்த முறையில் உள்ள கெடுதிகள் யாவை? அத்தீமைகளை வில்லியம் எவ்வாறு ஒழித்தார்?

4. டூம்ஸ்டே புத்தகத்தில் அடங்கியுள்ளவை யாவை? அதன் முக்கியம் யாது?

5. மத சம்பந்தமாய் முதலாவது வில்லியம் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

---



# அத்தியாயம் 2.

## இரண்டாவது வில்லியம் (1087—1100.)

வில்லியம் சிங்காதனம் ஏறுதல்:—முதலாவது வில்லியம் இறந்த பிறகு, அவருடைய இரண்டாவது குமாரரான வில்லியம் இங்கிலாந்துக்கு மன்னரானார்.

நார்மனிய வம்சாவளி.

வில்லியம் I (1066—1087)
- ராபர்ட்
- வில்லியம் II (1087-1100)
- ஹென்றி I (1100-1135)
  - வில்லியம் (கடலில் மூழ்கி இறந்தவர்.)
  - மாடில்டா = ஜாப்ரே (ஆஞ்ஜு பிரபு)
    - ஹென்றி II (1154-1189.)
- அடிலா
  - ஸ்டீவன் (1135-1154)

அவருடைய மூத்த குமாரரான ராபர்ட் நார்மண்டி மாகாணத் தின் சிற்றரசர் ஆனார். ஏனெனில் முதலாவது வில்லியம் தாம் இறக்குந்தறுவாயில் "வில்லியம்தான் தமக்குப்பின் இங்கிலாந் துக்கு மன்னராகவேண்டும்" என்ற தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். நார்மனியப் பிரபுக்கள் இரண்டாவது வில் லியமின் கொடுமையைக்கண்டு பயந்தவர்களாய், ராபர்ட்டைத் தங்களது மன்னராக்க முயன்றார்கள். அவர்கள் அந்த எண் ணத்துடன் கலகம் செய்யும்பொழுதெல்லாம், ஆங்கிலேயர்கள் நார்மனியப் பிரபுக்களின் கொடூரமான செய்கைகளைக்கண்டு பயந்து வில்லியமுக்கு உதவி புரிந்தார்கள். ஆகையால் அவர் ஆங்கிலேயரின் உதவியால் நார்மனியப் பிரபுக்களை அடக்கி ஆண்டுவந்தார்.

இரண்டாவது வில்லியமின் குணாதிசயங்கள்:—இரண் டாவது வில்லியம் தமது தந்தையைப்போலவே வீரத்தன்மை

யுள்ளவர். பார்வைக்குப் பயங்கரமான உருவம் உள்ளவர்.
அவர் சிகப்பு நிறமுள்ள குஞ்சியை உடையவராதலால் அவ
ரைச்சேந்நிறக்குஞ்சியர் (Rufus) என்றும் சொல்வதுண்டு. அவ
ருக்குத் தமது தந்தையைப்போல் வேட்டையாடுவதில் அதிகப்
பிரியம். அவர் சாமர்த்தியமும், கொடுந்தன்மையும் வாய்ந்தவர்.

இரண்டாவது வில்லியமும் ஆன்ஸேல்மும்:—முதலா
வது வில்லியமின் காலத்தில் ஆர்ச்பிஷப் பதவியை வகித்த
லான்பிராங்க் (1089) இறந்தார். அதற்குப்பிறகு காண்டர்பரி
ஆர்ச்பிஷப் உத்தியோகத்திற்கு இரண்டாவது வில்லியம்
நான்கு வருஷகாலம் வரையில் வேறு ஒருவரையும் நியமனம்
செய்யாமல், அந்த உத்தியோகத்தைக் காலியாகவே வைத்
திருந்தார். அதன் வருமானம் முழுமையையும் அரசர் தாமே
அநுபவிக்க எண்ணி இவ்வாறு செய்தார். இந்த அநீதி
யான காரியத்தைக்கண்டு ஜனங்கள் தங்களது அரசரின்மீது
வெறுப்பு அடைந்தார்கள். அச்சமயத்தில் பண ஆசை
பிடித்த இரண்டாவது வில்லியம் ஒரு கொடிய வியாதியினால்
பிடிக்கப்பட்டுத் தேகம் மெலிந்து இறக்கும் தறுவாயில் இருந்
தார். அப்பொழுது குருமார்களும், அவருடைய சிநேகிதர்
களும் ஆர்ச்பிஷப்பை நியமனம் செய்யாததுதான் அவருடைய
கொடிய நோய்க்குக் காரணம் எனத் தெரிவித்தார்கள். உடனே
அவர் தாம் செய்தது குற்றம் என உணர்ந்து, ஆன்ஸேல்ம்
(Anselm) என்னும் ஒரு பக்திமானை ஆர்ச்பிஷப்பாக நியம
னம் செய்தார். சில நாட்களுக்குப் பின் வியாதியும் இயற்கை
யாகவே அவரைவிட்டு அகன்றது. மறுபடியும் வில்லியம்
அநீதியான காரியங்களைச் செய்யத் தொடங்கினார். ஆனால்
ஆன்ஸெல்ம் தம்முடைய கடமைகளை நன்கு உணர்ந்தவரான
படியால் சர்ச்சினுடைய சொத்துக்களை அரசர் அபகரிக்க
இடங்கொடுக்கவில்லை. ஆகையால் வில்லியமுக்கும், ஆன்ஸெல்
முக்கும் ஒரு பெரிய விவாதம் உண்டாகியது. முடிவில் அரசர்



அவரை இங்கிலாந்தினின்றும் துரத்திவிட்டார். ஆன்
ஸெல்ம் வில்லியமின் ஆட்சி முடியும் வரையில் இங்கிலாந்திற்
குத் திரும்பி வரவில்லை.

இரண்டாவது வில்லியமின் மரணம்:—ஒரு நாள் வில்லி
யம் புதுக்கானகத்திற்குத் தமது தம்பியாகிய ஹென்றியுடன்
வேட்டையாடுவதற்குச் சென்றார். வேட்டையாடுகையில்
எவனோ ஒருவன் எய்த அம்பு அவரது மார்பில் தைத்தது.
அதனால் அவர் இறந்தார்.

கேள்விகள்:—

1. ஏன் நார்மனியப் பிரபுக்கள் ராபர்ட்டை ஆங்கில வேந்த
ராக்க முயன்றார்கள்?

2. இரண்டாவது வில்லியமைச் "செந்நிறக் குஞ்சியர்" என்று
ஏன் எல்லோரும் அழைத்தனர்?

3. வில்லியம் ஆர்ச்பிஷப் பதவியைச் சில வருஷங்கள் ஏன்
காலியாய் வைத்திருந்தார்?

4. வில்லியமுக்கும் ஆன்ஸெல்முக்கும் எக்காரணத்தினால்
விவாதம் ஏற்பட்டது? அஃது எவ்வாறு முடிந்தது?

---

## அத்தியாயம் 3.

---

### முதலாவது ஹென்றி (1100—1135)

முதலாவது ஹென்றி:—இரண்டாவது வில்லியம் இறந்த
பிறகு அவரது இளைய சகோதரரான ஹென்றி பட்டத்திற்கு
வந்தார். அவர் நீதிமான். ஆங்கிலேயரின் அன்பை அடைவதற்
கான பல காரியங்களை அவர் செய்தார். அவர் நார்மனிய வம்
சத்து அரசரானபோதிலும் ஸாக்ஸனிய ராஜவம்சத்தில்
உதித்த மாடில்டா (Matilda) என்ற ஒரு பெண்ணை விவாகம்
செய்துகொண்டார். இக்காரியம் ஆங்கிலேயருக்குச் சந்தோ
ஷத்தை உண்டாக்கியது. மேலும், ஹென்றி சில நியாயாதிபதி
களை நியமனம் செய்து, அவர்களை ஒவ்வொரு இடத்திற்கும்

சென்று வழக்குகளை நீதி தவறாது தீர்மானம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். ஆனதுபற்றி அவருக்கு நியாயச் சிங்கம்(Lion of Justice) என்னும் பெயர் வந்தது. இவ்வாறு ஹென்றி ஆங்கிலேயரின் அன்பைப் பெற்று அவர்களுடைய உதவியைக் கொண்டு நார்மனியப் பிரபுக்களை அடக்கிச் செங்கோல் செலுத்தி வந்தார்.

ஹென்றிக்கும் ஆன்ஸெல்முக்கும் நிகழ்ந்த வாதம்:—இரண்டாவது வில்லியமின் ஆட்சியில் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ஆன்ஸெல்ம் என்னும் குருவை ஹென்றி அழைத்து, கொஞ்சகாலம் ஹென்றியும் ஆன்ஸெல்மும் சிநேகிதர்களாக இருந்தார்கள். ஆனால், பிஷப்களையும் குருமார்களையும் யார் நியமிப்பது என்ற விவாதம் உண்டானவுடன், அரசருக்கும் ஆன்ஸெல்முக்கும் அபிப்பிராயபேதத்தினால் விரோதம் ஏற்பட்டது. கடைசியில் இவ்விவாதம் "மடாதிபதிகளும், பிஷப்களும் கிறிஸ்தவமத அதிபதியாகிய போப்பினால் நியமிக்கப்படவேண்டும்: அவர்களுக்குச் சொந்தமாயுள்ள பொருள்களின் பாதுகாப்புக்காக அரசர்க்கு விசுவாசத்துடன் கீழ்ப்படியவேண்டும்" என்று தீர்மானம்செய்யப்பட்டு முடிவடைந்தது.

இளவரசரின் மரணம் (1120):—ஹென்றியின் அருமைப் புதல்வரான வில்லியம் நார்மண்டிக்குச் சென்று திரும்புகையில், அவர் ஏறிவந்த கப்பல் ஒரு பாறையில் மோதிக் கடலில் மூழ்க ஆரம்பித்தது. உடனே வில்லியம் ஒரு காப்புப் படகில் ஏறிச் சிறிது தூரம் சென்றார். அப்பொழுது அவர் தம்மை யாரோ கூவியழைப்பதைக் கேட்டுத் தமது படகைத் திருப்பிச் செல்லும்படி உத்தரவிட்டார். மூழ்கும் கப்பலின் அருகில் சென்றவுடன், அவர் தமது சகோதரியாகிய மாடில்டா அலைகளின் நடுவில் தவிப்பதைக் கண்டார். இளவரசரான வில்லியம் மனம் உருகி அவளைத் தமது படகில் ஏற்றிக்



கொள்ள முயன்றதில், இப்படகும் மூழ்கியது. ஆகவே வில்லியம் கடலில் மூழ்கி மாண்டார். பிறகு மாடில்டா வேறு ஒரு காப்புப்படகில் ஏறித் தப்பிப் பிழைத்தாள். இந்தத் துக்ககரமான செய்தியைக்கேட்ட ஹென்றி புத்திரசாகரத்தில் மூழ்கினார். இச்சம்பவம் நிகழ்ந்த பிறகு ஹென்றி தமது வாழ்நாள் முடியும் வரையில் புன்னகை செய்யவில்லை எனச் சொல்லுகிறார்கள்.

ஹென்றியின் மரணம் (1135):—வில்லியம் கடலில் மூழ்கி இறந்தபிறகு ஹென்றிக்கு மாடில்டா என்ற ஒரு புதல்விதான் இருந்தாள். அவள் பிரான்ஸ் தேசத்திலுள்ள ஆஞ்ஜூ (Anjou) என்னும் மாகாணத்துச் சிற்றரசராகிய ஜாப்ரே (Geoffrey) என்பவரை மணம் புரிந்து கொண்டிருந்தாள். அவளைத் தமக்குப் பிறகு இங்கிலாந்தின் அரசியாகச் செய்ய எண்ணி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ஹென்றி இறந்தார்.

கேள்விகள்:—

1. ஹென்றியிடம் ஆங்கிலேயருக்கு அன்பு உண்டானதற்குக் காரணங்கள் யாவை?
2. ஹென்றிக்கு 'நியாயச்சிங்கம்' என்ற பெயர் வந்ததற்குக் காரணம் யாது?
3. ஹென்றிக்கும் ஆன்ஸெல்முக்கும் நிகழ்ந்த வாதம் எவ்வாறு முடிவடைந்தது?
4. வில்லியம் இளவரசர் எங்கே எப்படி எதனால் இறந்தார்?

## அத்தியாயம் 4.

### ஸ்டீவன் (1135—1154)

மாடில்டா உரிமை கொண்டாடுதல்:—முதலாவது வில்லியமின் பெண்ணாகிய அடிலா (Adela)வின் புதல்வரான ஸ்டீவன் (Stephen) என்பவரை ஆங்கிலப் பிர

புக்கள் அரசராகச் செய்தார்கள். ஹென்றியின் குமாரத்தியாகிய மாடில்டா இச்செய்தியைக் கேட்டு, "இங்கிலாந்தின் சிம்மாசனம் தனக்குத்தான் பாத்தியமுள்ளது" என்று கூறிக்கொண்டு ஒரு பெரிய சேனையுடன் இங்கிலாந்திற்கு வந்தாள்.

உள் நாட்டுப் போர் (1135—1153):—மாடில்டா ஒரு பெரிய சேனையுடன் இங்கிலாந்திற்கு வந்தவுடன் பிரபுக்களில் சிலர் அவரது கட்சியில் சேர்ந்து கொண்டனர். இன்னும் சில பிரபுக்கள் ஸ்டீவனின் கட்சியில் சேர்ந்து போர் புரிந்தார்கள். வேறு சில பிரபுக்கள் சிறிது காலம் ஒரு கட்சியிலும் சிறிதுகாலம் வேறொரு கட்சியிலும், சேர்ந்து உள் நாட்டுப் போரை மேன் மேலும் பெருக்கி வந்தார்கள். மாடில்டாவின் சார்பாக ஸ்காட்லாந்து அரசர் ஒரு பெரிய சேனையுடன் வட இங்கிலாந்தின் பேரில் படையெடுத்தார். ஆனால் ஸ்டீவன் கட்சியினர் அவரைச் சண்டையில் தோற்கடித்துத் துரத்திவிட்டனர். இச்சமயத்தில் லிங்கன் (Lincoln) என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ஸ்டீவன் தோல்வியடைந்தார். ஆயினும் இந்த உள் நாட்டுப்போர் நிற்காமல் நடந்துகொண்டு இருந்தது. இச்சமயத்தில் மாடில்டாவின் புதல்வரான ஹென்றி ஒரு சேனையுடன் இங்கிலாந்தின் பேரில் படையெடுத்தார். ஆங்கிலப் பிரபுக்கள் ஹென்றியின் கட்சியிற் சேர்ந்து கொண்டார்கள். இதைக் கண்ட ஸ்டீவன், ஹென்றியுடன் வாலிங்பர்ட் (Wallingford) என்னுமிடத்தில் (1153) ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இதன்படி ஸ்டீவன் தமது ஆயுட்கால பரியந்தம் இங்கிலாந்தை ஆண்டு வருவது என்றும், அவருக்குப் பிறகு ஹென்றியே இங்கிலாந்தின் பட்டத்திற்கு உரியவர் என்றும் ஏற்பட்டன. இந்த உடன்படிக்கை நடந்து ஒரு வருஷத்துக்குள் ஸ்டீவன் இறக்கவே, ஹென்றி ஆஞ்ஜு மாகாணத்திலிருந்து வந்து ஆங்கில மகுடத்தைப் பெற்றார்.



குடிகளின் கஷ்டம்:—ஸ்டீவன் சாத்வீகக் குணமுடையவர். அதனால் பிரபுக்கள் அவரது ஆட்சியில் அட்டகாசம் செய்தார்கள். பிரபுக்களை அடக்குவதற்கு வேண்டிய திறமை சிறிதும் அவரிடத்திற் கிடையாது. அதனால் உள்நாட்டுப்போர் நடக்கும் காலங்களில் ஜனங்களுக்குத் தாங்கமுடியாத துயரம் உண்டாயிற்று. ஸ்டீவன் தமது சிங்காதனத்தையே பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தபடியால், அவர் நாட்டின் நன்மையைச் சிறிதும் கவனிக்கக்கூடவில்லை. நார்மனியப்பிரபுக்கள் அரசரின் அனுமதியின்றி நாடெங்கும் மாளிகைகளைக் கட்டிக்கொண்டு ஏழை ஜனங்களை ஹிம்சித்தார்கள். அவர்களின் துயரம் ஸ்டீவன் இறந்த பிறகுதான் முற்றிலும் ஒழிந்தது.

கேள்விகள்:—

1. உள்நாட்டுப்போர் ஏற்படுவதற்குக் காரணம் யாது?

2. இந்தப் போரில் ஆங்கிலப் பிரபுக்கள் எந்த நோக்கத்துடன் கலந்துகொண்டார்கள்?

3. வாலிங்பர்ட் உடன்பாட்டின்படி செய்யப்பட்ட தீர்மானங்கள் யாவை?

4 இரண்டாவது ஹென்றிக்கு ஆங்கில மகுடத்திற்கு உள்ள உரிமையை வம்சாவளியின் மூலமாய்க் காட்டுக.

| முக்கிய நிகழ்ச்சிகள் | வருஷங்கள் |
|---|---|
| வால்தியாப் செய்த கலகம் | கி. பி. 1069 |
| ஹெரிவார்ட் செய்த கலகம் | ,, 1071 |
| டூம்ஸ்டே புத்தகம் | ,, 1085 |
| ஸாலிஸ்பரி பிரதிக்ஞை | ,, 1086 |
| இளவரசர் கடலில் மூழ்கியது | ,, 1120 |
| வாலிங்பர்ட் உடன்பாடு | ,, 1153 |

# V. ப்ளாண்டாஜினட் அரசர்களின் காலம் (1154—1399)

## அத்தியாயம் 1.

### இரண்டாவது ஹென்றி (1154—1189)


ப்ளாண்டாஜினட் வம்சம்:—இரண்டாவது ஹென்றி ஆஞ்ஜு மாகாணத்துச் சிற்றரசராகிய ஜாப்ரே என்பவரின் புதல்வர். ஆகையால் அவர் ஆஞ்ஜு வம்சத்தைச் சேர்ந்தவர். அவ்வம்சத்து அரசர்கள் 'ப்ளாண்டா ஜெனிஸ்டா' என்னும் ஒரு செடியின் கிளையைத் தங்களது வம்சத்துக்கு அறிகுறியாகச் செய்துகொண்டதால் அவ்வம்சத்திற்கு "ப்ளாண்டாஜினட்" (Plantagenot) வம்சம் என்று பெயர் வழங்கலாயிற்று. இங்கிலாந்தை ஆண்ட இவ்வம்சத்து அரசர்களில் இரண்டாவது ஹென்றிதான் முதல்வர்.

உள்நாட்டுப் போரின் தீமையை ஒழித்தல்:—இரண்டாவது ஹென்றி காம் பட்டத்திற்கு வந்தவுடன் நார்மனியப் பிரபுக்களின் கொட்டத்தை அடக்க எண்ணினார். ஏனெனில் 'அவர்கள் தாம் இங்கிலாந்தின் அமைதியைக் கெடுத்தார்கள்' என்பது அவரது அபிப்பிராயம். ஆகையால் ஸ்டீவனின் ஆட்சிக்காலத்தில் அவ்வரசரின் உத்தரவில்லாமல் பிரபுக்களால் கட்டப்பட்ட மாளிகைகளையும், கோட்டைகளையும் இடித்துவிடும்படி ஹென்றி உத்தரவிட்டார். இம்மாதிரி அவர் இங்கிலாந்தில் அமைதியை ஏற்படுத்திச் செங்கோல் புரியத் தொடங்கினார்.

ஹென்றியின் ராஜ்யம்:—ஹென்றி இங்கிலாந்து மன்னராவதற்குமுன் அவர் ஆஞ்ஜு மாகாணத்துச் சிற்றரசராயிருந்தார். அவருக்கு அம்மாகாணம் தமது தகப்பனாரின்



மூலமாய்க் கிடைத்தது. தமது தாயின் வழியாக இங்கிலாந்தும், நார்மண்டியும் கிடைத்தன. மேலும், தாம் அக்விடைன்




(Aquitaine) மாகாணத்துச் சிற்றரசரின் ஒரே குமாரத்தியை மணம்புரிந்தமையால் அவருக்குப் பாய்ட்டு (Poitou), காஸ்கனி (Gascony) என்ற இரண்டு சிறிய மாகாணங்களும் கிடைத்தன. மேலும், அவருடைய மூன்றாவது குமாரனை ஜாப்ரே பிரிட்டானி (Brittany) மாகாணத்துச் சிற்றரசரின் புதல்வியை விவாகம் செய்து கொண்டபடியால், அம்மாகாணத்திலும் ஹென்றியின் செல்வாக்குப் பரவியது. தவிர

ஹென்றி நார்மனியப் பிரபுக்கள் குடியேறின வேல்ஸின் தென் பாகத்தையும் வென்றார். அதற்குப்பிறகு ஹென்றி நார்மனியப் படையெழுச்சிக்குப்பின் அயர்லாந்தின் சில பாகங்களில் குடியேறிச் சர்வதிகாரத்துடன் இருந்துவந்த நார்மனியப் பிரபுக்களுடன் போர் புரிந்து அவர்களைத் தமது ஆட்சியை ஒத்துக்கொள்ளும்படி செய்தார். அதன்பிறகு அவர் அயர்லாந்தின் பிரபு என்ற பட்டத்தைப் பெற்றார். ஆயினும் அவர் தமது அதிகாரத்தை அயர்லாந்தில் செலுத்தக்கூடவில்லை. ஸ்காட்லாந்து அரசர் ஹென்றியிடம் விசுவாசம் பாராட்டி அவருடைய அதிகாரத்திற்குட்பட்டு இருப்பதாக வாக்களித்தார். ஆகவே, இதுவரையிலும் இங்கிலாந்து மன்னரால் ஆளப்பட்ட ராஜ்யங்களுள் ஹென்றியின் ராஜ்யமே மிகப் பெரியது. இக்காரணங்களால் அவர் இங்கிலாந்தை ஆண்ட வேந்தர்களுள் மிக்க அதிகாரம் படைத்தவரா யிருந்தார்.

**தாமஸ் பெக்கேட்**:—ஹென்றி ஆட்சிபுரிவதற்குப் பேருதவி செய்தவர் தாமஸ் பெக்கேட் (Thomas Becket) என்பவர். அவர் லண்டன் நகரத்து வர்த்தகர் ஒருவருடைய குமாரர். அரசருக்கு அவரிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்பட்டமையால் அவர் அவரையே தம் ஆலோசனைத் தலைவர் (Chancellor) எனச் செய்தனர். பிறகு அவரது திறமையைக்கண்டு மனமகிழ்ந்த ஹென்றி அவரை ஆர்ச்பிஷப்பாகவும் நியமனம் செய்தார். அவர் இப்பதவியை அடைந்ததும் தாம் முன் ஜீவித்துவந்த வழியை முற்றிலும் மாற்றிவிட்டு உபவாசத்திலும் ஜபத்திலும் காலத்தைக் கழித்தார். கொஞ்ச காலமான பிறகு ஹென்றிக்கும் பெக்கெட்டுக்கும் ஒரு விவாதம் உண்டாயிற்று.

**விவாதத்தின் காரணம்**:—முதலாவது வில்லியமின் காலத்தில் வைதீகர்கள் குற்றம்செய்தால் அவர்களை விசாரணை செய்வதற்கென்று தனியாக நியாயஸ்தலங்கள் இங்கிலாந்தில்



ஏற்படுத்தப்பட்டன. இது முன்னமேயே கூறப்பட்டுள்ளது.
அந்த நியாயஸ்தலங்களில் நியாயாதிபதிகளாக இருந்தவர்
களும் வைதீகர்களே. வைதீகர்கள் பெரிய குற்றத்தைச்
செய்தபோதிலும் அந்த வைதீக நியாயாதிபதிகள் அவர்களி
டம் இரக்கங்கொண்டு அவர்களுக்குக் கடுமையான தண்டனை
களை விதிப்பதில்லை; ஆனால் அதே குற்றத்தை லௌகீகர்கள்
செய்தால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்
பட்டது. ஆகையால் குற்றவாளிகளில் அநேகர் வைதீகர்கள்
என்று பாசாங்கு செய்துகொண்டு அற்ப தண்டனையைப்
பெற்று வந்தார்கள். இதைக்கண்ட ஹென்றி வைதீகக்
குற்றவாளிகளுக்கும் லௌகிகக்குற்றவாளிகளுக்கும் யாதொரு
விதமான பக்ஷபாதமும் செய்யப்படுதல் கூடாதென்று எண்
ணினார். ஆகவே, அவர் வைதீகக் குற்றவாளிகளைக்கூட லௌ
கிகர்களுடைய நியாயஸ்தலங்களில் கொண்டுவந்து விசாரணை
செய்யவேண்டும் என்றார். பெக்கெட் இதற்கு இணங்கவில்லை.
பிறகு (கி. பி. 1164) அரசர் க்ளாரண்டன் (Clarendon)
என்னுமிடத்தில் சில சட்டங்களைப் பிறப்பித்தார். அவை
களுக்கு "க்ளாரண்டன் சட்டங்கள்" (The Constitutions
of Clarendon) என்று பெயர். அவற்றின்படி வைதீகர்கள்
குற்றம் செய்தால் அவர்களை வைதீககோஷ்டியிலிருந்து
விலக்கிவிட வேண்டும் என்பதும், அப்படி விலக்கியபிறகு
குற்றத்திற்காக அவர்கள் லௌகீக நியாயஸ்தலங்களில் விசா
ரணை செய்யப்படவேண்டும் என்பதும் ஏற்பட்டன. பெக்
கெட் இந்தச் சட்டங்களுக்குச் சம்மதித்துக் கையொப்பமிட்
டார். ஆனால் அவர் வைதீகர்களை லௌகீக நியாயஸ்தலங்
களில் விசாரணை செய்தால் அவர்களுடைய கௌரவம்
குறைந்துபோகும் என்று நினைத்து அச்சட்டங்களின்படி
நடக்க மனமில்லாதவராய் இருந்தார். ஆகவே, பெக்கெட்
டின்மேல் ஹென்றிக்கு அதிக கோபம் உண்டாகியது. ஆகை

யால் அவர் பெக்கெட்டை இங்கிலாந்திலிருந்து (1164) துரத்திவிட்டார்.

**பெக்கெட் கொலை செய்யப்படல்:**—பெக்கெட் ஆறு வருஷகாலம் வெளிநாடுகளிலிருந்து பிறகு (1170) ஹென்றியுடன் சமாதானம்செய்துகொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பினார். திரும்பியவுடன் ஹென்றியின் கட்சியிலிருந்து தமக்குத் தீமையிழைத்த பிஷப்புகளைத் தண்டித்தார். இச்செய்தியைக் கேட்ட அரசர் பெக்கெட்டினிடம் கோபங்கொண்டு, "ராஜ அதிகாரத்தை அவமதித்துக்கொண்டு இருக்கிற இந்த அற்பத் தொண்டனின் கொட்டத்தை யடக்குபவர் எனது அன்னத்தைப் புசிப்பவர்களில் ஒருவரும் இல்லையா?" என்று தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்துக் கூறினார். உடனே மன்னரின் நான்கு போர்வீரர்கள் காண்டர்பரியிலுள்ள சர்ச்சுக்குள் போய் "தாமஸ் பெக்கெட் என்னும் ராஜத்துரோகி எங்கே?" என்று உரத்துக் கூவினார்கள். பெக்கெட் இக்கடுமையான சொற்களைக்கேட்டு மிக்க தைரியத்துடன், "இதோ இருக்கிறேன்; நான்ராஜத்துரோகி அல்ல; கடவுளின்தொண்டன்; ஆண்டவருக்கு ஊழியம் செய்பவன்" என்று பதில் உரைத்தார். நான்கு போர் வீரர்களும் அவர் வார்த்தையைக் கொஞ்சமேனும் மதிக்காமல் கத்தியை உருவி அவரைக் கொன்றுவிட்டார்கள்.

**ஹென்றி பச்சாதாபப்படுதல்:**—இப்படுகொலையைக் கேட்டதும் கிறிஸ்தவ மதத்தினர் ஹென்றியிடத்தில் வெறுப்பும் கோபமும் அடைந்தனர். ஆங்கிலேயரும் அவரை வெறுத்தனர். போப்பும் ஹென்றியைக் கிறிஸ்தவமத விரோதி எனக் கருதி அவரை மதப்பிரஷ்டம்(Excommunication) செய்தார். தாம் கோபத்திற் சொல்லிய வார்த்தைகள் பெக்கெட்டின் கொலைக்குக் காரணமானதை உணர்ந்த



ஹென்றி அந்தத் தோஷத்திற்கு விமோசனம் உண்டாக வேண்டி பெக்கெட்டின் சமாதிக்குச் சென்றார்; அங்கே தமது முதுகின்மேல் சவுக்கினால் அடிக்கும்படி செய்து கொண்டார். தவிர, ஹென்றி வைதீகர்கள் முன் போலவே வைதீக நீதி ஸ்தலங்களில் விசாரணை செய்யப்படுவதற்கு இடங்கொடுத்தார். பெக்கெட் கிறிஸ்தவ மதத்திற்காகத் தமது உயிரைத் துறந்தார் என்று ஆங்கிலேயர் எண்ணி அவரை ஒரு பெரிய மகான் (Saint) என்று கொண்டாடினர். மேலும் அவர்கள் பெக்கெட்டின் சமாதிக்கு யாத்திரை செய்தும் வந்தார்கள்.

**ஹென்றியின் சீர்திருத்தங்கள்:**—ஹென்றி பொது ஜனங்களின் நன்மையை மனதிற் கருதி அநேக சட்டங்களைப் பிறப்பித்தார். அவர் சில நியாயாதிபதிகளை நியமனம் செய்தார்; அவர்கள் இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு இடத்திற்கும் சென்று ஆங்காங்குள்ள வழக்குகளைத் தீர்மானம் செய்யும்படியும் ஏற்பாடு செய்தார். இஃது ஒரு புதிய விஷயமல்ல. ஏனெனில் நியாயசிங்கம் ஆட்சிபுரிகையில் இந்த நீதிமுறை முதலில் அனுஷ்டிக்கப்பட்டதே. அரசரால் நியமனம் செய்யப்பட்ட நியாயாதிபதிகள் ஆங்காங்குச் செல்லும் பொழுது ஜனங்கள் பிரதிநிதிகளை அனுப்பித் தங்களுடைய குறைகளைத் தெரிவித்துத் தீர்த்துக் கொண்டார்கள். அப்பிரதிநிதிகளின் சங்கத்திற்கு ஜூரி (Jury) என்று பெயர். வழக்குகளைத் தீர்மானம் செய்வதில் ஜூரியின் உதவி நியாயாதிபதிகளுக்கு உண்டு. இதைத்தவிர போர்க் காலங்களில் இங்கிலாந்தைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆங்கிலேயரும் ஆயுதப் பயிற்சியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஹென்றி ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார். மேலும், உம்பள முறையின்படி விசுவாச உறுதிமொழி யளித்த பிரபுக்கள் தங்கள் தங்களுடைய சேனைகளுடன் போர்க்காலங்களில் தமக்கு உதவி புரிவார்கள் என்று அரசர் எதிர்பார்க்கவேண்டி யிருந்தது. இத்தீமையை

ஒழிக்க, ஹென்றி உம்பளப் பிரபுக்களைச் சேனைகளின் உதவிக்குப் பதிலாகப் பணம் கொடுத்து விடும்படி உத்தரவிட்டார். இம்மாதிரி உம்பளப் பிரபுக்களினால் அரசருக்குக் கொடுக்கப்பட்ட பணத்திற்கு ஸ்கூட்டேஜ் (Scutage) என்று பெயர். அரசர் இப்பணத்தைக் கொண்டு உம்பளப் பிரபுக்களின் உதவியை எதிர் பாராமலேயே போர் புரியப் போதுமான யுத்த வீரர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டார்.

ஹென்றியின் மரணம்:—ஹென்றியின் நான்கு புதல்வர்களும் அவருக்கு விரோதமாய்க் கிளம்பினார்கள். அதனால் அரசருக்கு விசனம் மேலிட்டது. ஹென்றியின் மூத்த குமாரரான ஹென்றியும் மூன்றாவது புதல்வரான ஜாப்ரேயும், தமது தந்தையார் உயிருடன் இருக்கையிலேயே காலஞ்சென்றார்கள். இரண்டாவது குமாரரான ரிச்சர்ட் (Richard) தமது தந்தைக்கு அநேக இடையூறுகளை உண்டாக்கினார். நாலாவது குமாரரான ஜான் (John) தமது தந்தையையே எதிர்த்தார். ஹென்றி சிலகாலம் இக்கஷ்டங்களுக்கு உள்ளாகி பின்னர் (1189) இறந்தார்.

ப்ளாண்டாஜினட் வம்சாவளி.

ஹென்றி II (1154-1189)
- ஹென்றி
- ரிச்சர்ட் (1189-1199)
- ஜாப்ரே
  - ஆர்தர்
- ஜான் (1199-1216)
  - ஹென்றி III (1216-1272)
    - எட்வர்ட் I (1272-1307)
      - எட்வர்ட் II (1307-1327)
        - எட்வர்ட் III (1327-1377)
          - ரிச்சர்ட் II (1377-1399)



கேள்விகள்:—

1. இரண்டாவது ஹென்றிக்குப் பிரான்ஸில் ஒரு பெரிய ராஜ்யம் எவ்வாறு கிடைத்தது?

2. ஹென்றிக்கும் பெக்கெட்டுக்கும் ஏற்பட்ட விவாதத்திற்குக் காரணம் யாது? அஃது எவ்வாறு முடிந்தது?

3. இரண்டாவது ஹென்றி செய்த முக்கியமான சீர்திருத்தங்கள் யாவை?

4. ஹென்றி பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு அனுஷ்டித்த முறைகள் எவை?

---

## அத்தியாயம் 2.

### முதலாவது ரிச்சர்ட் (1189—1199)

ரிச்சர்டின் குணாதிசயங்கள்:—இரண்டாவது ஹென்றி இறந்தபின், அவரது இரண்டாவது புதல்வரான ரிச்சர்ட் அரசரானார். அவர் ஒரு சிறந்த யுத்த வீரர். போர்க்காலத்தில் சிங்கத்தைப்போல் வெகு தைரியத்துடன் சண்டையிடுவார். ஆகையால் அவரைச் சிங்க நெஞ்சர் (Lion-Heart) என்று அழைப்பது தகுதியாகும்.

சிலுவைப் போர்கள்:—கிறிஸ்தவமதத்தை உண்டாக்கியவர் ஏசு நாதர் (Jesus Christ) என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர் பாலஸ்டின் * (Palestine) மாகாணத்தில் ஜெருசலம் (Jerusalem) என்ற நகரில் பிறந்து வளர்ந்து இறந்தவர். ஏசுநாதர் கிறிஸ்தவமதத்தைப் பாலஸ்டினில் முதலில் பரவும்படி செய்தார். அதனால் அதைப் புண்ணிய பூமி (Holy Land) என்று கிறிஸ்தவர் எண்ணுகின்றனர். கிறிஸ்தவர்கள் இப்புண்ணிய பூமிக்கு அடிக்கடி யாத்திரை செய்வதுண்டு. பதினோராவது நூற்றாண்டில் மேற்கு ஆசியாவில்

* மேற்கு ஆசியாவிலுள்ள ஒரு மாகாணம்.

பெரிதும் அதிகாரம் படைத்தவர்களாய் இருந்த இஸ்லாமியர் † கிறீஸ்தவர்களைப் புண்ணிய பூமிக்கு யாத்திரை செய்யவொட்டாமல் தடுத்து அநேக இடையூறுகளைச் செய்தார்கள். ஆகையால் கிறிஸ்தவர் அனைவரும் கோபங்கொண்டு தங்களது மத அபிமானத்தினால் புண்ணிய பூமியைத் துருக்கியரிடமிருந்து விடுவிக்க ஒன்றுசேர்ந்து அநேகம் போர்களைப் புரிந்தார்கள். இம் மதப் போர்களில் முன்னின்று சண்டை செய்த வீரர்கள் சிலுவை (Cross) யைத் தரித்திருந்ததால் இப்போர்களுக்குச் சிலுவைப் போர்கள் (Crusades) என்று பெயர்.

முதல் சிலுவைப் போர்:—சிலுவைப்போர்கள் பதினோராவது நூற்றாண்டின் முடிவிலிருந்து பதினைன்காவது நூற்றாண்டு வரையில் விட்டு விட்டு நடந்தன. முதல் சிலுவைப்போர் இங்கிலாந்தில் இரண்டாவது வில்லியம் ஆட்சிபுரியும் காலத்தில் நடந்தது. கிறிஸ்தவர்கள் அப்போர் முடிந்தவுடன் ஜெருஸலம் நகரிலிருந்து துருக்கியர்களைத் துரத்தி விட்டார்கள். முடிவில் அவர்கள் பாலஸ்டினில் ஒரு கிறிஸ்தவ ராஜ்யத்தையும் ஏற்படுத்தினார்கள்.

ரிச்சர்டும் மூன்றாவது சிலுவைப்போரும்:—சுமார் நூறு வருஷங்களுக்குப் பிறகு ஸாலடின் (Saladin) என்னும் துருக்கிய மன்னர் கிறிஸ்தவ ராஜ்யத்தை ஜயித்துக்கொண்டு கிறிஸ்தவர்களைத் துரத்திவிட்டார். ஆகையால் மூன்றாவது சிலுவைப்போர் தொடுக்கப்பட்டது. பிரெஞ்சு அரசரான பிலிப் அகஸ்டஸ் (Philip Augustus) என்பவரும் ஆஸ்டிரியா (Austria) இளவரசரான லியப்பால்டு (Leopald) என்பவரும் தங்களுடைய சேனைகளுடன் பாலஸ்டினுக்கு துருக்கியருடன் போர்புரியச் சென்றார்கள். இங்கிலாந்து மன்னரான

† இஸ்லாம் அல்லது முகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்களுக்கு இஸ்லாமியர் என்று பெயர் வழங்குகிறது.



ரிச்சர்ட் என்பவரும் ஒரு சேனையுடன் புறப்பட்டுப் பிரான்ஸின் வழியாகச் சென்று பாலஸ்டினில் வந்திறங்கினார். அவர் ஏக்கர் (Acre) நகரை முற்றுகை செய்து கைப்பற்றிக்கொண்டார்.

இச்செய்தியைக் கேட்ட பிலிப்பும், லியப்பால்டும் இங்கிலாந்து மன்னரிடம் பொறாமை கொண்டு திரும்பிவிட்டனர். பிறகு ரிச்சர்ட் தமது சேனையுடன் ஜெருசலம் நகரைப் பிடிக்க முயன்றார். ஆனால் இக்காரியத்தைச் செய்ய அவரால் முடியவில்லை. பிறகு ரிச்சர்ட் ஸாலடினுடன் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டு திரும்பினார்.

ரிச்சர்ட் சிறையில் அடைபட்டதும் மீட்கப்பட்டதும்:—பிரான்ஸின் வழியாகத் தமது நாட்டிற்குத் திரும்பிச் சென்றால் பிலிப் தம்மைச் சிறையில் அடைத்துவிடுவார் என்று அஞ்சி, ரிச்சர்ட் ஆஸ்டிரியா வழியாய் மாறுவேடம் பூண்டு சென்றார். ஆனால் லியப்பால்டு இதை எப்படியோ அறிந்து அவரைக் கைதியாக்கி ஜர்மனியச் சக்கரவர்த்தியிடம் ஒப்புவித்தார். ஆங்கிலேயர் தமது மன்னர்க்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டு வருந்தலாயினர். பிறகு அவர்கள் லக்ஷம் பவுன்களை ஜர்மனியச் சக்கரவர்த்திக்குக் கொடுத்துத் தமது வேந்தரை மீட்டுக்கொண்டார்கள். இஃது ஆங்கிலேயர் தமது மன்னரிடம் அளவிலா அன்பு பாராட்டியதைக் காட்டுவதற்கு ஓர் அறிகுறியாகும்.

ரிச்சர்டின் மரணம்:—ரிச்சர்ட் (1199) நார்மண்டியிலுள்ள ஷாலூஸ் (Chalus) என்னும் கோட்டையில் புதையல் இருக்கிறதென்று கேள்விப்பட்டார். ஆகையால் அவர் ஒரு பெரிய சேனையுடன் சென்று அக்கோட்டையைத் தாக்கினார். அதைப் பிடிக்க யத்தனிக்கையில் எவனோ ஒருவன் அம்பை எய்து அவரைக் கொன்றுவிட்டான்.

கேள்விகள்:—

1. சிலுவைப்போர் என்றால் என்ன?

2. முதலாவது சிலுவைப்போர் தோன்றக் காரணம் யாது? அது எவ்வாறு முடிந்தது?

3. மூன்றாவது சிலுவைப்போர் எக்காரணத்தை முன்னிட்டு நடந்தது?

4. ரிச்சர்ட் மூன்றாவது சிலுவைப்போரில் செய்த அரிய விஷயங்கள் யாவை?

5. ரிச்சர்ட் எவ்வாறு சிறையில் அடைபட்டார்? அவரை ஆங்கிலேயர்கள் எவ்வாறு விடுவித்தார்கள்?

---

## அத்தியாயம் 3.

## ஜான் (1199-1216)

ஜான் சிங்காதனம் ஏறுதல்:—ரிச்சர்டின் இளைய சகோதரரான ஜான் (1199) பட்டத்திற்கு வந்தார். இங்கிலாந்தை ஆண்ட அரசர்களுள் ஜான் கடைப்பட்டவர். அவர் எப்பொழுதும் சுயநலத்தையே பாராட்டி வந்தார். பேராசையும் மூடத்தனமும் அவரிடம் குடிகொண்டிருந்தன. ஆங்கில மகுடத்திற்கு அவரைக் காட்டிலும் அவரது தமயன் ஜாப்ரேயின் குமாரரான ஆர்தர் (Arthur) என்பவருக்கு அதிக பாத்தியம் உண்டு. ஆகையால் ஜான் ஆர்தரைச் சிறையிலிடும்படி செய்ததோடு அவரைக் கொன்றுவிடும்படிக்கும் ஏற்பாடு செய்தார்.

ஜானும் பிரேஞ்சு மன்னரும்:—இக்கொடிய செய்தியைக் கேட்ட பிரெஞ்சு மன்னரான பிலிப் கோபங்கொண்டார். ஏனெனில் ஆர்தர் பிரிட்டானி மாகாணத்து உம்பளப் பிரபு. பின்னர் பிலிப் ஒரு பெரிய சைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு நார்மண்டி, ஆஞ்ஜூ மாகாணங்களின் மேல் படையெடுத்தார்.



ஜான் தோல்வியுற்று அம்மாகாணங்களை இழந்தார். இதனால் அவருக்கு இகழ்ச்சியுண்டானபோதிலும் இங்கிலாந்திற்கு ஒரு பெரிய நன்மை உண்டாகியது. இதுவரையிலும் நார்மண்டி சிற்றரசராயிருந்த ஆங்கில மன்னர் நார்மண்டியை இழந்தபிறகு, ஆங்கிலேயரின் நன்மையையே கருதி ஆள வேண்டியதாயிற்று.

ஜானுக்கும் போப்புக்கும் நேர்ந்த விவாதம்:—நார்மண்டியை இழந்து சிலகாலஞ் சென்றபின் ஜான் ஒரு சங்கடத்தை உண்டு பண்ணிக் கொண்டார். காண்டர்பரி ஆர்ச்பிஷப் பதவி (1205) காலியானபடியால் வேறு ஒருவரை ஆர்ச் பிஷப்பாக நியமனம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஜான் தமது தோழரான ஜான் டி க்ரே (John de Grey) என்றவரை ஆர்ச்பிஷப்பாக நியமனம் செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தார். ஆனால் காண்டர்பரி சர்ச் தொண்டர்கள், இவரது எண்ணத்திற்கு விரோதமாய்த் தங்களில் ஒருவராகிய ரேஜினால்ட் (Reginald) என்பவரை வழக்கப்படி தேர்ந்தெடுத்தார்கள். இவ்விருவர்களுள் யாரை ஆர்ச்பிஷப்பாக நியமனம் செய்வது என்ற விஷயத்தில் அரசர்க்கும் அத்தொண்டர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஆகையால் அவர்கள் அவ்விரண்டு அபேக்ஷகர்களில் யாரை ஆர்ச்பிஷப்பாகச் செய்வது என்று போப்பைத் தீர்மானம் செய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். இன்னோஸென்ட் (Innocent) என்ற போப் அவ்விரண்டு பேரையும் தள்ளிவிட்டுக் கல்வியில் தேர்ச்சியடைந்த ஸ்டீவன் லாங்டன் (Stephen Langton) என்ற ஓர் ஆங்கிலத் துறவியைக் காண்டர்பரி ஆர்ச்பிஷப்பாக நியமித்தார். அவர் இங்கிலாந்திற்கு வந்தவுடன், ஜான் அவரை ஆர்ச்பிஷப் என்று அங்கீகரிக்க மறுத்தார். ஆகையால் போப்புக்கும் ஜான் மன்னர்க்கும் ஒரு பெரிய விவாதம் உண்டாயிற்று.

போப் தமது நியமனத்தை ஜான் அங்கீகரிக்கவில்லை
என்பதைக் கேள்விப்பட்டுக் கோபமடைந்து, இங்கிலாந்தி
லுள்ள எல்லாக் கிறிஸ்தவக் கோயில்களையும் மூடிவிடவேண்
டும் என்றும், அக்கோயில்களில் பூஜை முதலியவற்றைச்
செய்யக்கூடாதென்றும் ஒரு கொடிய உத்தரவு செய்தார்.
இக்கொடிய உத்தரவிற்கு ஆங்கில பாஷையில் 'இன்டர்டிக்ட்'
(Interdict) என்று பெயர். இது மதாபிமானமுள்ள ஆங்கி
லேயரை விசன சாகரத்தில் மூழ்கும்படி செய்தது. ஆங்கி
லேயர் ஆலயங்களுக்குச் சென்று கடவுளைத் தொழ முடியா
மற் போயிற்று. கிறிஸ்தவப் பிணங்களைக் கோயில்களைச்
சுற்றியுள்ள வெளியில் புதைக்கக் கூடவில்லை. இறந்தவர்களுக்
குச் செய்யவேண்டிய சடங்குகளையும் செய்ய முடியவில்லை.
இக்கொடிய உத்தரவினால் இத்தகைச் சங்கடங்கள் உண்
டானபோதிலும் ஜான் போப்பின் இஷ்டத்திற்கு இணங்க
வில்லை. ஆகையால் போப் ஜான் உண்மைக் கிறிஸ்தவர் அல்லர்
என்பதாகவும், அவரைத் தாம் மதப்பிரஷ்டம் செய்து விட்ட
தாகவும் வெளியிட்டார். ஜான் இதையும் ஒரு பொருட்
டாக மதிக்கவில்லை. ஆகையால் போப் வேறொரு உபாயத்தைக்
கைக்கொண்டார். அவர் பிரெஞ்சு மன்னரை அழைத்து
ஒரு சேனையுடன் இங்கிலாந்திற்குச் சென்று ஜானைச் சிறை
யில் அடைக்கும்படி கட்டளையிட்டார்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்ட ஜான் பயந்து லாங்டன்
என்பவரைக் காண்டர்பரி ஆர்ச்பிஷப்பாக அங்கீகரித்தார்.
மேலும், ஜான் ஓர் உம்பளப் பிரபுவைப்போலவே போப்பின்
அதிகாரத்திற்கு உட்பட்டு இங்கிலாந்தை ஆளுவதாகவும்
வாக்களித்தார். அவர் தமது கிரீடத்தைப் போப்பின் பிரதிநிதி
(Papal Legate)யின் கையில் கொடுத்து, அவர் முன் முழங்
காலிட்டு விசுவாஸ உறுதிமொழியையும் கூறினார்; வருஷா
வருஷம் கப்பம் செலுத்துவதாகவும் வாக்களித்தார். பிறகு




ஜான் தமது கிரீடத்தைப் பெற்றுக்கொண்டார். ஓர் அரச
ருக்கு இதைக் காட்டிலும் அவமானம் விளைவிக்கக்கூடிய காரி
யம் வேறு உண்டோ?

ஆங்கிலேயரின் அதிருப்தி:—ஜான் இங்கிலாந்தின் சிங்கா
தனத்தில் ஏறியது முதல் தம்முடைய குடிகளின் நன்மை
யை உத்தேசித்து ஆட்சி புரியவில்லை. அவர் கொடிய வரி
களை விதித்தும், தமது விரோதிகளை சரியான விசாரணை
யின்றித் தண்டித்தும் வந்தார். பிரபுக்களும், தங்களை
அடிக்கடி யுத்தத்திற்கு வரும்படி அழைத்ததால் அரச
னிடம் வெறுப்பு அடைந்தார்கள். ஜனங்களும் பிரபுக்களும்
நார்மண்டி, ஆஞ்ஜு என்ற மாகாணங்களை இழந்ததைப்பற்றி
விசனித்தார்கள். போப்பிடத்தில் ஜான் சரணம் செய்து
அவருக்குக் கீழ்ப்படிந்து இங்கிலாந்தை அரசுபுரியச் சம்ம
தித்ததால் ஆங்கிலேயர்களுக்கு வெட்கமும் விசனமும் உண்
டாயின. இக்காரணங்களால் பிரபுக்களும், சாமான்னிய ஜனங்
களும், சர்ச்தொண்டர்களும் தங்களது உரிமைகளைப் பெறத்
தீர்மானித்தார்கள்.

மகா சாஸனப் பத்திரம் (1215):—ஆங்கிலேயர் இவ்
வாறு சுதந்தரம் பெறத் தீர்மானித்திருக்கையில், ஜான்
பிரெஞ்சுக்காரர்களுடன் போர்புரிவதற்குச் சென்றிருந்தார்.
அவர் போரில் தோல்வியடைந்து தமது நாட்டுக்குத் திரும்
பினதும், ஆங்கிலேயர் ஒரு கூட்டம் கூடி, ஸ்டீவன் லாங்
டனைத் தங்களுக்குத் தலைவராகச் செய்துகொண்டார்கள்.
பொதுஜனங்கள் தங்களுடைய உரிமைகளை அடைய அரச
ரைச் சம்மதிக்கும்படி செய்யவேண்டும் என லாங்டன்
தீர்மானித்தார். பிறகு அரசர் குடிகளின் எண்ணங்களைத்
தெரிந்து கொண்டு அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்னு
டைய ராஜ்யம் முழுவதையும் உங்களுக்குக் கொடுத்து

விடும்படி ஏன் கேட்கக்கூடாது?" என்று கோபத்துடன் கேட்டார்கள். இதனால் அரசர்க்கும் பொது ஜனங்களின் உரிமைகளைக் கொடுக்க மனமில்லை என்பதை பிரபுக்கள் தெரிந்து கொண்டார். ஆகையால் பிரபுக்களும் சாமான்னிய ஜனங்களும் சர்ச் தொண்டர்களும் ரன்னிமீட் (Runnymede) என்னும் சமவெளியில் ஜான் அரசரை வரும்படி செய்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். ரன்னிமீட் என்பது தேம்ஸ் நதிக்கரையில் ஸ்டேய்ன்ஸ் (Staines), வின்ஸர் (Windsor) என்ற இடங்களுக்கு இடையிலுள்ள புல்தரைச் சமவெளி. இந்தச் சமவெளிதான் ஆங்கிலேயர்கள் எல்லோரும் ஒரே மனதுடன் கட்டுப்பாடாயிருந்து லாங்டன் என்பவரால் தயார் செய்யப்பட்ட ஒரு பத்திரத்தை




ஜானிடம் காட்டி அதில் கையொப்பம் இடும்படி வற்புறுத்தினார்கள். இப்பத்திரத்திற்குத்தான் "மகா சாஸனப் பத்திரம்" (The Great Charter) என்று பெயர். அதன் முக்கிய ஷரத்துகளாவன:—(1) அரசர் சர்ச் விஷயங்களில் பிரவேசித்தல் கூடாது; தொண்டர்களின் உரிமைகளைப் பிடுங்குவது கூடாது. (2) அரசர் பிரபுக்களின் சபையைக் கேட்காமல் நாட்டில் எவ்விதமான புதிய வரியையும் விதித்தல் கூடாது. (3) சுதந்தரம் உள்ளவர் குற்றம் செய்தால் அரசர் தேசச் சட்டங்களின்படி விசாரணை செய்யவேண்டும்; தமது இஷ்டப்படி



சிறைப்படுத்தவாவது தேசப்பிரஷ்டம் செய்யவாவது உரிமைகளைப் பிடுங்கிக்கொள்ளவாவது கூடாது. பிரபுக்கள் ஜான் மன்னரை இப்பத்திரத்திற் கையொப்பம் இடும்படி கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் அவருக்கு அதன் ஷரத்துகளின் பிரகாரம் நடப்பதாக உத்தேசம் இல்லை. இம் மகாசாஸனப் பத்திரம் ஆங்கிலேயரின் உரிமைகளை ஸ்தாபித்தது.

ஜான் சாஸனப் பத்திரத்தை மறுத்தலும் அவரது மரணமும்:—மகா சாஸனப் பத்திரத்தில் ஜான் கையொப்பம் செய்த போதிலும் அவர் அதன் ஷரத்துகளுக்கு விரோதமாக நடந்து வந்தார். ஆகவே பிரபுக்கள் கோபமடைந்து ஜானுடன் போர் புரிய ஒரு பெரிய சேனையைச் சேகரித்தார்கள். மேலும் அவர்கள் பிரான்ஸ் இளவரசராகிய லூயி (Louis)யைத் தங்களுக்கு உதவி செய்ய வரும்படி கேட்டார்கள். லூயியும் இங்கிலாந்திற்கு வந்து பிரபுக்களின் கட்சியில் இருந்து போர் செய்தார். இவ்வாறு இருக்கும் நிலைமையில் ஜான் (1216) மரணமடைந்தார்.

கேள்விகள்:—

1. ஆங்கில மகுடத்தைப் பெற ஜான் செய்த உபாயம் யாது?
2. ஜானுக்கும் பிரெஞ்சு மன்னருக்கும் எக்காரணத்தினால் சண்டை ஏற்பட்டது? அப்போர் எவ்வாறு முடிந்தது?
3. ஜானுக்கும் போப்புக்கும் நிகழ்ந்த விவாதத்தின் காரணம் யாது? அஃது எவ்வாறு முடிந்தது?
4. 'இன்டர்டிக்ட்' என்றால் என்ன?
5. ஜானைத் தமது கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி செய்யப் போப் செய்த உபாயங்கள் யாவை?
6. எக்காரணங்களால் ஆங்கிலேயருக்கு ஜானிடம் விரோதம் ஏற்பட்டது?
7. மகா சாசனப்பத்திரத்தின் ஷரத்துக்கள் யாவை? எதனால் அப்பத்திரத்தை ஆங்கிலேயர்கள் முக்கியமானதாகக் கருதினார்கள்?

8. தாம் கையொப்பமிட்ட பத்திரத்தின் பிரகாரம் ஜான் நடந்து வந்தாரா? இல்லாவிடில், ஏன்?

9. லூயி இங்கிலாந்துக்கு ஏன் ஒரு சைன்யத்துடன் வந்தார்.

---

## அத்தியாயம் 4.

### மூன்றாவது ஹென்றி (1216-1272)

வில்லியம் மார்ஷல்:—ஜான் இறந்தபொழுது, அவருடைய மூத்த குமாரரான ஹென்றிக்கு ஒன்பது வயது. அவருக்குத் தக்க வயது வரும் வரையில் வில்லியம் மார்ஷல் (William Marshall) என்ற ஓர் ஆங்கிலப்பிரபு நாட்டை ஆண்டுவந்தார். அவர் ஆங்கில மகுடத்தைப்பெற நினைத்துப் போர்புரிந்த லூயியை லிங்கன் நகருக்குச் சமீபத்தில் தோற்கடித்தார். பிறகு (1217) லூயி தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

ஹென்றியின் குணாதிசயங்கள் :—மூன்றாவது ஹென்றி மிகப் பேதையாகவும், திறமையற்றவராகவும் இருந்தார். அவர் தமக்கு இதமானவரிடம் பிரீதியை வைத்து, அவர்களது பேச்சைக்கேட்டு நடந்து வந்தார். அவர் பிரான்ஸ் தேசத்திய எலியனோர் (Eleanor) என்ற ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அதனால் அவர் தமது மனைவியின் நாட்டு ஜனங்களை இங்கிலாந்திற்கு வரவழைத்து அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்தார். மேலும் ஹென்றி அநேக வரிகளை விதித்தும், ஜனங்களைச் சிறைப்படுத்தியும், மகா சாஸனத்தின் ஷரத்துகளை மீறியும் நடக்கத் துணிந்தார். இவ்வாறு அவர் பல அக்கிரமங்களைச் செய்ததால் தேசத்தில் அநேக கிளர்ச்சிகள் உண்டாயின.

ஸைமன் டி மான்ட்பர்ட் :—இம்மன்னரின் காலத்தில் பிரான்ஸ் தேசத்திலுள்ள காஸ்கனி (Gascony) மாகாணத்திலிருந்து அனேக பிரபுக்கள் இங்கிலாந்திற்கு வந்து உயர்ந்த



னார்கள். அவர்களுள் ஸைமன் டி மான்ட்பர்ட் (Simon de Montfort) என்பவர் ஒருவர். இங்கிலாந்திற்கு வந்த பிறகு அவர் ஹென்றியின் சகோதரியை மணம் புரிந்தார். பிறகு ஹென்றி அவரை லெஸ்டர்பிரபு (Earl of Leicester)வாகச் செய்தார். ஆகவே, ஸைமன் இங்கிலாந்தில் மிகவும் அதிகாரம் படைத்தவராகிவிட்டார். சிலகாலஞ் சென்றபின் அவருக்கு ஹென்றியிடம் உள்ள அன்பும் மரியாதையும் குறையஆரம்பித்தன. இச்சமயத்தில் தான் ஆங்கிலப் பிரபுக்கள் ஸைமனைத் தங்களது கட்சியின் தலைவராயிருக்கும்படி வேண்டினார்கள். அவர்களது இஷ்டப்படியே ஸைமன் ஆங்கிலப் பிரபுக்களின் கட்சித் தலைவரானார்.

ஆக்ஸ்பர்ட் என்னுமிடத்தில் நடந்த பிரபுக்களின் சபை:- ஸைமன் ஆக்ஸ்பர்ட் (Oxford) என்னும் பட்டணத்தில் ஆங்கிலப் பிரபுக்களின் சபை (1258) ஒன்றைக் கூட்டினார். அங்கே அவர்கள் தங்களுடைய குறைகளை வெளியிட்டதுடன் இங்கிலாந்தில் செம்மையான ஆட்சியை ஏற்படுத்தவேண்டி ஒரு பத்திரத்தையும் எழுதினார்கள். இப்பத்திரத்திற்கு ஆக்ஸ்பர்ட் ஷரத்துக்கள் (Provisions of Oxford) என்று பெயர். அதன்படி ராஜ்ய விஷயங்களைக் கவனிக்கப் பதினைந்து பிரபுக்கள் அடங்கிய ஒரு சபையை அமைத்து அதன் ஆலோசனைப் பிரகாரம் அரசர் நாட்டை ஆளவேண்டும் என்றும், அன்னியர்களை இங்கிலாந்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. முதலில் ஹென்றி ஆக்ஸ்பர்ட் ஷரத்துக்களை ஒப்புக்கொண்டார்.

பிரபுக்களின் போர்:—பிறகு அவர் அவைகளை மீறி நடக்கத் தொடங்கினார். ஆகையால் ஸைமனது தலைமைக்கு உட்பட்ட ஆங்கிலப் பிரபுக்களுக்கும் அரசர்க்கும் ஒரு [illegible]

போர் ஆரம்பித்தது. இதற்குப் பிரபுக்களின் போர் (Barons' War) என்று பெயர். லூவிஸ் (Lewes) என்னுமிடத்தில் ஸைமன் (1264) ஹென்றியைத் தோற்கடித்து அவரையும் அவரது மூத்த குமாரரான எட்வர்ட் இளவரசரையும் கைதிகளாக்கினார். இதற்குப் பிறகு ஸைமன் ராஜாங்கத்தில் முதன்மையானவரானார்.

ஸைமன் கூட்டிய பார்லிமேண்ட் (1265):—அதன் பிறகு ஸைமன் அரசர் பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து ஆட்சிபுரியாததாலும் அவர் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின்படி ஆளவேண்டும் என்று எண்ணியபடியாலும், அரசருக்கு எப்பொழுதும் ராஜ்யவிஷயங்களில் புத்தி கூற அவர் (1265) ஒரு மகா சபையைக் கூட்டினார். இச்சபையில் பிரபுக்களும் குருமார்களும் அங்கத்தினர்களாகும்படிச் செய்தார். மேலும், அவர் அந்த மகா சபைக்கு ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும், ஒவ்வொரு ஜில்லா (Shire) விலிருந்தும் பொதுஜனப் பிரதிநிதிகளாக இரண்டுபேர்களை அனுப்பும்படி செய்தார். இந்த மகாசபைக்குத்தான் பார்லிமேண்ட் (Parliament) என்று பெயர்.

ஸைமனின் மரணம்:—இம்மகா சபையைக்கூட்டியபிறகு சிறையில் அடைபட்ட எட்வர்ட் தப்பியோடி ஒருபெரியசைன்யத்துடன் ஸைமனை எதிர்த்தார். ஈவ்ஷம் (Evesham) என்னுமிடத்தில் ஸைமன் தோல்வியடைந்ததோடு மடிந்தார். உடனே எட்வர்ட் தமது தந்தையைச் சிறையிலிருந்து விடுவித்து ஆட்சிபுரியும்படி செய்தார். பிறகு அவர் சிலுவைப் போர் செய்ய ஒரு சேனையுடன் பாலஸ்டினுக்குச் சென்றார். அவர் இங்கிலாந்திற்குத் திரும்புமுன் ஹென்றி (1272) இறந்தார்.



கேள்விகள் :—

1. மூன்றாவது ஹென்றியின் அநீதியான செயல்கள் யாவை?
2. ஆக்ஸ்பர்ட் ஷரத்துகளின் பிரகாரம் என்ன ஏற்பாடு ஆயிற்று?
3. பிரபுக்களின் போரில் நடந்த இரண்டு முக்கியமான சண்டைகள் யாவை?
4. பார்லிமென்ட் என்பது யாது? ஸைமன் என்ன நோக்கத்துடன் பார்லிமென்ட் சபையைக் கூட்டினார்.
5. அவரது பார்லிமெண்டில் யார் யார் அங்கத்தினர்களாக இருந்தனர்?

---

## அத்தியாயம் 5.

### முதலாவது எட்வர்ட் (1272—1307.)

முதலாவது எட்வர்டின் குணாதிசயங்களும் நோக்கங்களும்:—முதலாவது எட்வர்ட் தமது தந்தை இறந்த செய்தியைக் கேட்டு இங்கிலாந்திற்குத் திரும்பி வந்து சிம்மாஸனமேறினார். இங்கிலாந்தை ஆண்ட ப்ளாண்டாஜினட் வம்சத்து அரசர்களுள் எட்வர்ட் மேன்மை மிக்கவர். தம்முடைய குடிகளின் நன்மையை உத்தேசித்து நன்றாக ஆட்சி புரியவேண்டுமென்பதும், பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள எல்லாப் பாகங்களையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பதும் அவருடைய முக்கிய நோக்கங்கள். மேலும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்ட் மகாசபையின் இஷ்டப்படி அரசர் ஆட்சி புரியவேண்டுமென்பதும் அவருடைய அபிப்பிராயம். தாம் ஒரு காரியத்தைச் செய்வதாக உறுதிமொழி கூறிவிட்டால் அதன்படி அவர் கட்டாயம் நிறைவேற்றுவார்.

மாதிரிப் பார்லிமேண்ட் (1295.):—எட்வர்ட் ராஜ்ய விஷயங்களில் பொது ஜனங்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து

கொள்ள எண்ணிப் பார்லிமென்ட் மகா சபையைக் (1295) கூட்டினார். இந்தப் பொதுஜன சபைக்கு ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகளும் தேர்ந்து எடுக்கப் பட்டு வந்தார்கள். மேலும், பிரபுக்களும், குருமார்களும் இப் பெரிய சபைக்கு அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். இது ஸைமனால் கூட்டிய பார்லிமெண்டைப் போல இருந்தாலும், அதற்கும் எட்வர்டின் பார்லிமெண்டுக் கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. ஸைமன் பார்லி மெண்டில் குருமார்களும், பிரபுக்களும், பொதுஜனப் பிரதி நிதிகளும் உட்கார்ந்தார்கள். ஆனால் எட்வர்டின் பார்லி மென்ட் இரண்டு பிரிவுகளாகச் செய்யப்பட்டது. பிஷப்பு களும், பிரபுக்களும் அடங்கிய பிரிவுக்கு பிரபுக்கள் சபை (House of Lords) என்றும், சாமான்ய ஜனங்களின் பிரதிநிதிகளும், சாதாரணத் தொண்டர்களும் அடங்கிய பிரி வுக்குப் பொது ஜன சபை (House of Commons) என்றும் பெயர்கள் வழங்கலாயின. எட்வர்ட் கூட்டிய பார்லிமென் டை மாதிரிப் பார்லிமேன்ட் (Model Parliament) என்று சொல்வதுண்டு. ஏனென்றால் அப்பார்லிமெண்டின் அமைப் பின் பிரகாரம்தான் இங்கிலாந்தில் பின்னால் கூட்டப்பட்ட பார்லிமென்டுகள் உண்டுபண்ணப்பட்டன.

எட்வர்ட் வேல்ஸ் நாட்டை ஜயித்தல் (1282:—பிரிட் டன் முழுவதையும் தமது ஏகாதிபத்தியத்திற்கு உட்படுத்த வேண்டுமென்பது முதலாவது எட்வர்டின் நோக்கம். ஆகை யால் அவர் லூவேலின் (Llewelyn) என்ற ஒரு வெல்ஷ் சிற்றரசரைத் தமக்கு விசுவாச உறுதிமொழி அளிக்கும்படி பல முறைகளிற் கேட்டார். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. ஆகையால் எட்வர்ட் ஒரு பெரிய படையைச் சேகரித்து வேல்ஸின் வடபாகத்தின்மேல் படையெடுத்தார். லூவெலின்



ஒரு சண்டையிற் தோற்கடிக்கப்பட்டதுடன், போர்க்களத்தி லேயே கொல்லப்பட்டு இறந்தார். இம்மாதிரியாக எட்வர்ட் வேல்ஸைக் கைப்பற்றினார். பிறகு அவர் வேல்ஸில் அனேக மாளிகைகளைக்கட்டி வெல்ஷ் ஜாதியார் கலகம் செய்யாது தடுத்தார். கார்னர்வான் (Carnarvon) என்னும் மாளிகையில் எட்வர்டின் மூத்தகுமாரர் பிறந்தார். ஆகையால் அவருக்கு வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) என்ற பட்டப் பெயர் கொடுக்கப்பட்டது. அது முதல் இதுவரையிலும் இந்தப் பட்டப்பெயரே இங்கிலாந்து மன்னரின் மூத்தகுமா ரருக்கு இடப்பட்டு வருகிறது. நமது மேன்மைமிக்க சக்கர வர்த்தியும் ஆங்கில வேந்தருமான ஐந்தாவது ஜார்ஜின் மூத்த குமாரர் "வேல்ஸ் இளவரசர்" என்ற பட்டப்பெயரை இப் பொழுது வகித்து வருகிறார்.

எட்வர்ட் ஸ்காட்லாந்து விஷயத்தில் பிரவேசித்தல்:— எட்வர்ட் வேல்ஸை ஜயித்தபிறகு, அவர் ஸ்காட்லாந்தைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயன்றார். அத் தேசத்தின் அரசரான அலெக்ஸாண்டர் (Alexander)(1286) இறந்துபோகவே, மார்கரேட் (Margaret) என்னும் ஒரு சிறுமி அப்பட்டத்திற்கு உரிமையுள்ளவளாக இருந்தாள். எட்வர்ட் அவளைத் தமது மூத்தகுமாரருக்கு விவாகம் செய்து வைக்க எண்ணியிருக்கையில் அவள் இறந்தாள். ஆகவே, அவர் ஸ்காட்லாந்தைத் தமது ஆட்சிக்குள் கொண்டுவரச்செய்த பிர யத்தனம் வீணாயிற்று. அவள் இறந்த பிறகு, ஸ்காட்லாந்தின் ராஜவமிசத்தைச்சேர்ந்தவர்களில் அனேகர் அந்நாட்டின்முடிக் குப் பாத்தியம் கொண்டாடினர். அவர்களுள் ஜான்பாலியல் (John Balliol) ராபர்ட் புரூஸ் (Robert Bruce) என்றஇரு வர் முக்கியமானவர். இவ்விருவருக்குள் எவருக்குப் பட்டம் கொடுக்கலாமென்று தீர்மானம் செய்யும்படி ஸ்காட்லாந்தியர் எட்வர்ட் மன்னரை வேண்டிக்கொண்டனர். எட்வர்ட் தமது

அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு முன் அவர்கள் தம்மை ஸ்காட்லாந்தின் உம்பள வேந்தர் என ஒப்புக்கொள்ளும்படிச் சொன்னார். அவர்கள் அதற்குச் சம்மதித்தபின் எட்வர்ட் அவர்களுடைய கட்சிகளைக் கேட்டுப் பாலியனுக்கு அதிகபாத்தியம் உண்டு என்று கூறினார். பாலியல் எட்வர்டுக்கு ராஜபக்திப் பிரமாணம் செய்து பிறகு முடி சூட்டிக்கொண்டார்.

எட்வர்ட் ஸ்காட்லாந்தை ஜயித்தல்:—சிலகாலஞ் சென்ற பிறகு ஸ்காட்லாந்தியர் எட்வர்ட் மன்னரின் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கினர். எட்வர்ட் ஸ்காட்லாந்தின்மேல் படையெடுத்துப் பாலியலைத் தோற்கடித்தார்; தம்மை ஸ்காட்லாந்தின் மன்னரென்று ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டுத் திரும்பினார். இம்மாதிரியாக அவர் ஸ்காட்லாந்தை ஜயித்தார்.

ஸ்காட்லாந்தியர் எட்வர்டின் ஆட்சிக்கு விரோதமாய்க் கிளம்புதல்:-எட்வர்ட் சில ஆங்கிலப் பிரபுக்களை அந்நாட்டுக்கு அனுப்பி அவர்களைத் தம்முடைய பிரதிநிதிகளாக இருந்து ஆண்டுவரும்படி திட்டம் செய்தார். ஸ்காட்லாந்தியர் தமது தேச அபிமானத்தால் அப்பிரபுக்களின் ஆட்சியை வெறுத்தனர். அவர்கள் வில்லியம் வாலஸ் (William Wallace) என்ற தளகர்த்தரைத் தமது தலைவராகச் செய்துகொண்டு கலகம் செய்தார்கள். வாலஸ் ஆங்கில சேனையை ஸ்டார்லிங் பிரிட்ஜ்(Stirling Bridge)என்னுமிடத்தில் தோற்கடித்தார். இதைக்கேட்டு எட்வர்ட் ஒரு பெரிய சேனையுடன் சென்று (1298) வாலஸ்வீரரைப் பால்கர்க் (Falkirk) என்னுமிடத்தில் முறியடித்தார். வாலஸ் போர்க்களத்திலிருந்து தப்பியோடிவிட்டார். பிறகு அவர் பிடிபட்டு ஆங்கிலேயரால் ராஜத்துரோகி என்று கொல்லப்பட்டார். இம்மாதிரியாக ஸ்காட்லாந்து ஆங்கிலமன்னரால் இரண்டாம் தடவை ஜயிக்கப்பட்டது.



ஸ்காட்லாந்தியரின் கலகம்:—சுமார் எட்டுவருஷங்களாக ஸ்காட்லாந்து எட்வர்டின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பிறகு ஸ்காட்லாந்தியர் தங்களது நாட்டின் சுதந்தரத்தைப் பெறுவதற்காக ராபர்ட் புரூஸ் * என்பவரின் தலைமையின் கீழ் இருந்து போர்புரியத் தொடங்கினர். எட்வர்ட் இச்செய்தியைக்கேட்டு ஸ்காட்லாந்தின்மீது படையெடுக்க ஒரு சேனையுடன் புறப்பட்டார். போகும் வழியிலேயே அவர் மூப்பினால் (1307) இறந்தார்.

கேள்விகள்:—

1. முதலாவது எட்வர்டின் முக்கிய நோக்கங்கள் யாவை?

2. மாதிரிப் பார்லிமென்டைப்பற்றித் தெரிந்தவரையில் சுருக்கமாய் எழுதுக.

3. ஸைமனின் பார்லிமென்டுக்கும் எட்வர்டின் பார்லிமென்டுக்கும் உள்ள வித்தியாசம் யாது?

4. எட்வர்ட் ஸ்காட்லாந்தின் விஷயங்களில் பிரவேசித்ததற்குக் காரணங்கள் யாவை?

5. ஸ்காட்லாந்தியர் எட்வர்டின் ஆட்சிக்கு விரோதமாய் ஏன் கலகங்களைச் செய்தார்கள்? அவைகள் எவ்வாறு முடிந்தன?

---

## அத்தியாயம் 6.

### 12, 23-வது நூற்றுண்டுகளில் பொது மக்களின் வாழ்க்கை.

நார்மனியர்கள் இங்கிலாந்தை ஜயித்து ஆளத்தொடங்கினபின் நார்மனியப் பிரபுக்கள் மிக தனவான்களாகவும் செல்வாக்குடையவர்களாகவும் ஆனார்கள். முதலாவது வில்லியம் ஆங்கிலேயருடைய நிலங்களைப் பிடுங்கி நார்மனியர்களுக்குக்

---

* இவர் பாலியலுக்குப் போட்டியாய் நின்ற புரூஸின் பேரர் ஆவர்.

கொடுத்ததால் ஆங்கிலேயர்கள் பலர் நார்மனிய நிலச்சொந்தக்காரர்களின் கீழ் குடியானவர்களாக இருக்க வேண்டியிருந்தது. சிறிது காலம் ஆங்கிலேயர்களுக்கும் நார்மனியர்களுக்கும் மனஸ்தாபத்தினால் சண்டை சச்சரவுகள் நேர்ந்து வந்தன. ஆயினும் காலம் செல்லச் செல்ல அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த விரோதம் ஒழிந்து சிநேகத்தன்மை உண்டாகியது. நார்மனியர்களும் ஆங்கிலேயர்களும் விவாக சம்பந்தத்தினாலும் நெருங்கின பழக்கத்தாலும் ஒரே வகுப்பினராக மாறிவிட்டார்கள்.

நார்மனிய படையெழுச்சிக்குப் பின் பிரெஞ்சு பாஷை இங்கிலாந்தில் துரைத்தன பாஷையாக ஏற்பட்டது. சில ஆங்கில தனவான்கள் பிரெஞ்சு பாஷை பேசுவதைக் கௌரவம் என்று தவறாக எண்ணி அதைப் பேசிவந்தார்கள்.

அநேகமாக ஆங்கிலேயர்களில் பெரும்பான்மையோர் கிராமங்களிலேயே வசித்துவந்தனர். அங்கு அவர்கள் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டுவந்தார்கள். நிலம்தான் அவர்களுடைய முக்கிய செல்வம். சில சிறிய மிராசுதார்கள் குதிரைச் சவாரி செய்வதையும் யுத்தப் பயிற்சியையும் கற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு "Knights" (குதிரை வீரத் தொண்டர்கள்) என்று பெயர். அவர்கள் ஆயுதங்களைப் போட்டுக்கொண்டு குதிரைகளின்மீது சவாரி செய்துகொண்டு பலவிடங்களுக்குச் சென்று பொதுஜனங்களுக்கு உதவி செய்து வந்தார்கள். அரசர்களும், பிரபுக்களும் 'Knights' ஆக ஆவது கண்ணியம் என்று நினைத்தார்கள். பெரிய மிராசுதார்களும் நாட்டில் பல இடங்களில் நிலங்களிருந்ததால் அவைகளைச் சரியாகக் கவனிக்க முடியாமல் சில சிறிய பிரிவுகளாகப் பிரித்தார்கள். ஒரே இடத்தில் உள்ள நிலங்கள் சேர்ந்தது "Manor" என்று பெயர். இந்த நிலப்பிரிவைச் சொந்தக்காரர்களுக்குப் பதிலாக



ஒருவர் இருந்து ஒவ்வொரு நிலப்பிரிவிலும் குடியானவர்கள் பயிர்த்தொழிலைச் சரிவரச் செய்து வருகின்றார்களா என்று கவனித்து வந்தார்கள். மேலும, ஒவ்வொரு நிலப்பிரிவிலும் நிலவிஸ்தீரணம், தான்ய வருமானம், சாகுபடி சம்பந்தமான கணக்குகள் இவைகளைப் பற்றி ஒரு சிறிய உத்தியோகஸ்தர் கவனித்து வந்தார். ஒவ்வொரு பிரபுவின் நிலமும் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பிரிவை அச்சிறிய உத்தியோகஸ்தரே சாகுபடி செய்து தம் எஜமானருக்குத் தானியத்தைக் கொடுத்து வந்தார். இதர நிலங்களை பண்ணையாட்கள் குறிப்பிட்ட காலம் வரையில் ஒப்பந்தச் சீட்டின் பிரகாரம் பிரபுக்களின் ஆதரவின் கீழிருந்து அவர்களுடைய நிலங்களைப் பயிரிட்டு வந்தார்கள்.

சாகுபடி செய்யப்பட்ட ஒவ்வொரு நிலமும் மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை தரிசாக விட்டு விடுவார்கள். நிலங்களில் பயிர்கள் நிற்கும் காலத்தில் அவைகளைச் சுற்றி வேலிகளைக் கட்டி வைப்பார்கள். தான்யம் அறுவடை ஆனபின் வேலிகளை எடுத்துவிட்டு ஆடுமாடுகள் வயல்களில் நின்று மேயும்படி விடுவார்கள். இதைத் தவிர கால் நடைகள் மேய்வதற்கு என்று ஒரு பெரிய சமவெளியும உண்டு. ஒவ்வொரு மிராசுதாரும் தமது குடும்பத்திற்கு வேண்டிய தான்யத்தை மட்டும் சாகுபடி செய்து அடைந்து வந்தார்கள். அக்காலத்தில் ஒரு ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்குத் தான்யங்களை அனுப்பி உள்நாட்டு வியாபாரம் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் இல்லை. நாயணங்கள் மிகக் கொஞ்சம். அரசரும் பெரிய பிரபுக்களும் தங்களுடைய பரிவாரங்களுடன் ஒவ்வொரு நிலப்பிரிவுக்கும் சென்று சிறிது காலம் தங்கிவிட்டு பிறகு வேறு ஒரு நிலத்தாக்குக்குச் செல்வார்கள். அக்காலத்தில் அறுவடையான தான்யங்களை அரசருடைய அல்லது பிரபுக்களுடைய மாளிகைக்கு அனுப்புவது அதிக கஷ்டமான

காரியமானதால் அவர்கள் இவ்வாறு செய்தார்கள். அவர்
கள் ஓரிடத்தில் நிலைத்து வசித்து வராததால்அவர்கள் தங்கள்
மாளிகைகளில் அதிகச் சாமான்களைச் சேகரித்து வைத்துக்
கொள்வதில்லை.

வியாபாரம் மிகக் குறைவு. நார்மானியப் படையெடுப்
புக்குப் பிறகு இங்கிலாந்தில் ஏற்பட்ட அநேக பட்டணங்
களில் வியாபாரம் நடந்து வந்தது. இங்கிலாந்திலுள்ள இடலி
ஜர்மனி தேசத்தார்கள் அயல்நாடுகளுடன் வியாபாரம் செய்து
வந்தார்கள். அக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு வியாபாரத்தில்
அதிக சிரத்தையில்லை. யூதர்கள் அதிக பணக்காரர்கள்; ஏரா
ளமான பணத்தை வட்டி சம்பாதிப்பதற்காக வியாபாரிகளுக்
குக் கடன் கொடுத்து உதவி வந்தார்கள். அவர் அதிக வட்டி
யை வாங்கி வந்ததால் ஜனங்களுக்கு அவர்களிடம் அதிக
பகை ஏற்பட்டது. இந்த யூதர்கள்தான் முதல் முதலில் இங்
கிலாந்தில் கற்களால் வீடுகளைக் கட்டி வசித்து வந்தார்கள்.

பதினோராவது பன்னிரண்டாவது நூற்றாண்டுகளில் கல்வி
யைப் பரவச்செய்ய அநேக சர்வகலாசாலைகள் ஐரோப்பாவில்
ஏற்படுத்தப்பட்டன. இங்கிலாந்திலும் இரண்டாவது ஹென்
றியின் காலத்தில் ஆக்ஸ்பர்ட் நகரில் ஒரு சர்வகலாசாலை ஏற்
பட்டது. தவிர, மூன்றாவது ஹென்றியின் காலத்திற்கு
முன்பே கேம்பிரிட்ஜ் நகரிலும் உயர்தரப் படிப்பைப் பரவச்
செய்ய வேறு ஒரு சர்வகலாசாலையும் ஏற்பட்டது.

---

## அத்தியாயம் 7.

### இரண்டாவது எட்வர்ட் (1307—1327)

**எட்வர்டும் காவ்ஸ்டனும்:**—வேல்ஸ் இளவரசராயிருந்த
எட்வர்ட் (1307) இங்கிலாந்து மன்னரானார். தமது தந்தை
யின் திறமையை ஒத்த திறமை அவருக்குச் சிறிதேனும் இல்லை.



அவர் வெகு சுகமாகக் காலத்தைக் கழித்து வந்தாரேயொழிய
இங்கிலாந்தைச் சரிவர அரசாளுவதில் அவருக்கு நோக்கம்
இல்லை. அவர் காஸ்கனி மாகாணத்துப் பிரபுவாகிய பியர்ஸ்
காவ்ஸ்டன் (Piers Gaveston) மேல் பிரியம் வைத்து அவ
ருடைய துராலோசனைகளைக் கேட்டுச் சில வருஷங்கள் ஆண்
டார். ஆகையால் ஆங்கிலப் பிரபுக்கள் காவ்ஸ்டனிடம் அதிக
பொறாமையையும் வெறுப்பையும் அடைந்து, அவரை இங்
கிலாந்திலிருந்து துரத்திவிடும்படி ஏற்பாடு செய்தார்கள்.

**பானக்பர்ன் சண்டை (1314):**—எட்வர்ட் சிம்மாசனம்
ஏறின பிறகு ராபர்ட் புரூஸ் ஸ்டர்லிங் (stirling) கோட்டை
யைத் தவிர ஸ்காட்லாந்தில் ஆங்கிலேயரின் வசத்திலுள்ள
இதர கோட்டைகள் யாவற்றையும் கைப்பற்றிக்கொண்டார்.
பிறகு (1314) புரூஸ் ஸ்டர்லிங் கோட்டையையும் முற்றுகை
யிட்டார். ஆகையால், அதைக் கைப்பற்றுவதற்கு புரூஸுக்கு
இடங்கொடுத்தல் கூடாது என்று எண்ணி, எட்வர்ட் ஒரு
பெரிய சேனையுடன் ஸ்டர்லிங் கோட்டையை நோக்கிச் சென்
றார். சென்றவர் பானக் (Bannock) என்ற ஓர் அருவி
(Burn) யின் பக்கத்திலே தமது சேனையைப் போருக்குத் தயா
ராயிருக்கும்படி செய்தார். இதற்குள்ளாக புரூஸ், எட்வர்ட்
தம்மைச் சேனையுடன் எதிர்க்க வருவதைக்கேட்டு, பானக்
அருவியின் வடகரையிலுள்ள ஒரு குன்றின் சரிவில் தம்
முடைய போர்வீரர்களை நிற்க வைத்திருந்தார். மேலும், அவர்
தமது சேனைக்கும் அந்த அருவிக்கும் இடையிலே ஆழமான
பல பள்ளங்களைத் தோண்டி அவற்றுள் வெகு கூர்மையான
கழிகளை நட்டு, அவைகள் ஆங்கிலேயருக்குத் தெரியாவண்
ணம் தழைகளையும் உலர்ந்த புற்களையும் மேலே பரப்பி இருந்
தார். இதையறியாத ஆங்கிலக் குதிரை வீரர்கள் வெகு வேக
மாக வந்து அப்படுகுழிகளில் விழுந்து மடிந்தார்கள். இவ்
வாறு ஆங்கிலச்சேனை இச்சண்டையிலே தோற்கடிக்கப்பட்

டது. எட்வர்ட் போர்க்களத்தை விட்டு தமது உயிர்தப்ப எண்ணி ஓட்டமெடுத்தார். ஸ்காட்லாந்தியர் இச்சண்டையில் உண்டான வெற்றியால் சுதந்தர உரிமையை அடைந்தனர்.

எட்வர்ட் சிம்மாஸனத்தினின்று நீக்கப்பட்டது:—எட்வர்ட் பட்டத்துக்கு வந்ததுமுதல் இங்கிலாந்தைச் சரிவர ஆண்டு வராமல் காவ்ஸ்டனின் துராலோசனையைக் கேட்டு ஆண்டு வந்தார். ஸ்காட்லாந்தியருடன் புரிந்த போர் முடிந்தவுடன் எட்வர்ட்ஹூடேஸ்பன்ஸர்கள் (HughDespensers) என்னும் தகப்பனும், மகனுமாகிய இருவர்களின் துராலோசனையின்படி நடந்து வந்தார். இதைக்கண்ட பிரபுக்கள் அனைவரும் கோபமடைந்து அரசரை எதிர்க்க ஆரம்பித்தார்கள் இச்சமயத்தில் பிரான்ஸுக்குச் சென்றிருந்த எட்வர்டின் மனைவியாகிய இஸபெல்லா ஒரு சேனையுடன் இங்கிலாந்திற்கு வந்து புரபுக்களின் கட்சியில் சேர்ந்துகொண்டாள். பிறகு பிரபுக்கள் எட்வர்டைச் சிறைப்படுத்திக் கொலை செய்துவிட்டார்கள்.

கேள்விகள்:—

1. காவ்ஸ்டன் என்பவரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

2. பானக்பர்ன் சண்டையில் ஆங்கிலேயர்கள் தோல்வியடைந்ததற்குக் காரணம் யாது?

3. எட்வர்ட் என் சிங்காதனத்தினின்று நீக்கப்பட்டார்?


---

## அத்தியாயம் 8.

### மூன்றுவது எட்வர்ட் (1327-1377)

எட்வர்டும் ஸ்காட்லாந்தும்:—இரண்டாவது எட்வர்ட் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டவுடன், அவருடைய புதல்வரான எட்வர்ட் பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது அவருக்குப் பதினைன்கு வயது. ஆகையால் அவருடைய தாயாரான இஸபெல்லா ராஜாங்க விஷயத்தைக் கவனித்து வந்தாள்.






அவள் ஸ்காட்லாந்தியருடன் நார்தம்ப்டன் (Northampton) என்ற இடத்தில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டாள். அதன்படி ஸ்காட்லாந்தியரின் சுதந்திரம் ஆங்


கிலேயரால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்குப் பிறகு (1330) எட்வர்ட் தாமே ராஜ்யத்தை ஆளத்தொடங்கினர்.

நூறு வருஷப் போரின் காரணங்கள்:—எட்வர்டின் ஆட்சியில் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் ஒரு கடும்போர் (1337) ஆரம்பித்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு (1453) முடிந்தது. இது நூறு வருஷங்களுக்கு மேற்பட்டு நடந்த போரானதால் இதற்கு "நூறு வருஷப்போர்" (The Hundred Years War) என்று பெயர். இதற்கு அனேக காரணங்கள் உண்டு. அப்பொழுது ராபர்ட்புரூஸ் இறக்கவே, அவருடைய மகனை டேவிட் புரூஸ் (David Bruce) ஸ்காட்லாந்து முடியை அபேக்ஷித்த எட்வர்ட் பாலியஸ் என்பவரால் ஆங்கிலேயரின் உதவியைக் கொண்டு துரத்தப்பட்டார். ஆகவே டேவிட் புரூஸ் பிரெஞ்சுக்காரர்களுடைய உதவியை நாடினர். இவ்வாறு இங்கிலாந்தும், பிரான்ஸும் போர்புரிய நேர்ந்தது. மேலும் இரண்டாவது ஹென்றியின் காலம் முதல் ஆங்கில மன்னர்களின் வசத்தில் பிரான்ஸின் தென்பாகத்திலுள்ள காஸ்கனி மாகாணம் இருந்து வந்தது. அம்மாகாணத்தைப் பிரெஞ்சு மன்னராகிய பிலிப் கைப்பற்றி அதிலிருந்து ஆங்கிலேயரைத் துரத்திவிடவேண்டும் என்று முயன்றார். ஆனால் ஆங்கில மன்னருக்கு அதை இழக்க மனமில்லை.

எட்வர்ட் பிரேஞ்சு மகுடத்திற்கு பாத்தியங் கொண்டாடுதல்:—பிரெஞ்சு மன்னரான நான்காவது சார்ல்ஸ் (Charles IV) சந்ததியின்றி (1328) மரணம் அடைந்தார். அதற்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் அவரது சிறிய தகப்பனாரின் குமாரரான பிலிப் (Philip) என்பவருக்கு முடிசூட்டினர்கள். இதைக்கேட்ட எட்வர்ட் தமது தாய் இஸபெல்லா நான்காவது பிலிப்பின் பெண்ணாகையால் பிரெஞ்சு மகுடத்திற்குத்



எட்வர்ட் பிரேஞ்சு மகுடத்திற்குக் கோண்டாடிய உரிமையைக் காட்டும் வம்சாவளி.




தாமே உரிமைபாளர் என்று கூறினர். அக்காலத்தில் பிரான்ஸில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த ஸாலிக் லா" (Salic Law) என்ற ஒரு சட்டத்தின்படி பிரெஞ்சு மகுடத்திற்கு ஒரு பெண்ணுக்கோ அல்லது பெண்ணின் சந்ததிகளுக்கோ பாத்தியம் கிடையாது. அதனால்தான் எட்வர்ட் தமது தாயின் வழியாக உரிமை பாராட்டியது நியாயமாகாது என்று பிரெஞ்சுக்காரர்கள் எண்ணினர்கள். ஆறுவது பிலிப் பட்டத்திற்கு வந்து சில வருஷங்கள் வரையில் எட்வர்ட் தமக்கும் பிரெஞ்சு முடி பாத்தியம் உண்டு என்பதைத் தெரிவிக்காமல் இருந்த விஷயம் குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சுக்காரர்கள் எட்வர்டின் உரிமையை அங்கீகரிக்க மறுத்தபோதிலும், அவர் போர் புரிந்து தமது உரிமையை ஸ்தாபிக்கத் தீர்மானித்தார்.

க்ரேஸிச்சண்டை (1346):—ஸ்லூயிஸ் (Sluys) என்னும் [illegible]முகத்துக்கு அருகில் ஒரு கடற்சண்டை (1340) நடக்[illegible]. இதில் பிரெஞ்சுக் கப்பற்படை தோற்கடிக்கப்பட்டது. பிறகு எட்வர்ட் ஒரு பெரிய சேனையுடன் பிரான்ஸில் வந்து இறங்கினர். அவருடன் இளவரசராகிய எட்வர்ட் சென்றார்.

அவர் கருமைநிறமுள்ள கவசத்தைப் போட்டுக்கொண்டிருந்ததால் அவர் "கருப்பு இளவரசர்" (Black Prince) என்று அழைக்கப்பட்டார். எட்வர்ட் தமது சேனையோடு கலே (Calais) நகரை நோக்கிச் செல்லும்பொழுது பிரெஞ்சுக்காரர்கள் க்ரேஸி (Crecy) என்னும் ஒரு கிராமத்தின் அருகில் எதிர்த்தார்கள். இச்சண்டையிற் கருங்கவசம் பூண்ட இளவரசர் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்துப் புறங்காட்டி ஓடச் செய்தார். பிறகு எட்வர்ட் தம் சேனையுடன் கலே நகருக்குச் சென்று அதை முற்றுகை செய்தார். சுமார் ஒரு வருஷம் வரையில் முற்றுகை நடந்தது. முடிவில் கலே நகரத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர். இந்நகரம் சில ஆண்டுகள் (1558) வரையில் ஆங்கிலேயரின் வசத்தில் இருந்தது.

பாய்ட்டியர்ஸ் சண்டை:—கலே நகரைக் கைப்பற்றிய பிறகு எட்வர்ட் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். இச்சமயத்தில் இங்கிலாந்தில் கருப்புக் கொள்ளை நோய் (Black Death) தோன்றியது. அதனால் லக்ஷக் கணக்கான ஜனங்கள் மாண்டதால் சுமார் எட்டுவருஷங்கள் வரையில் யாதொரு பெரிய சண்டையும் நடக்கவில்லை. அப்பால் (1356) கருங்கவச இளவரசர் பாரிஸ் (Paris) நகரை நோக்கிச் செல்லுகையில் பாய்ட்டியர்ஸ் (Poitiers) என்னுமிடத்தில் ஒரு பிரெஞ்சு சேனையைத் தோற்கடித்தார். இச்சண்டையில் பிரெஞ்சு மன்னரான ஜான் ஆங்கிலேயரால் சிறைபடுத்தப்பட்டார்.

பிரிடிக்னி உடன்படிக்கை:—பிரிடிக்னி (Bretigny) என்னுமிடத்தில் (1360) ஒரு சமாதான உடன்படிக்கை நடந்தது. அதனால் ஆங்கில மன்னராகிய எட்வர்ட் பிரெஞ்சுச் சிங்காதனத்திற்கு உரிமை கொண்டாடுவதில்லை என்று ஒப்புக்கொண்டார். பிரெஞ்சுக்காரரும் காஸ்கனி, கயன் (Guinne), பாய்ட்டு (Poitou) என்னும் மாகாணங்



கள் அடங்கிய அக்விடயன் (Aqitaine) மாகாணத்திற்கு எட்வர்டைச் சிற்றரசர் என்று ஒப்புக்கொண்டனர். மேலும், கலே நகர் ஆங்கிலேயரின் வசத்தில் இருக்கவேண்டியது என்றும் ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டிற்குப் பிறகு கருங்கவச இளவரசர் அக்விடயன் மாகாணத்தில் சிற்றரசராக ஆண்டுவந்தார். அவர் பிறகு வியாதியினால் பீடிக்கப்பட்டு இங்கிலாந்திற்குத் திரும்பினார். எட்வர்டின் ஆளுகை முடிவதற்குள் ஆங்கிலேயருக்குப் பிரிடிக்னி உடன்பாட்டினால் கிடைத்த மாகாணங்களை பிரெஞ்சு மன்னர் கைப்பற்றிக்கொண்டுவிட்டார். ஆனால் போர்டோ (Bordeaux), கலே என்ற இரண்டு நகரங்கள் மட்டும் ஆங்கிலேயரின் வசத்திலேயே இருந்தன.

கருப்புக் கொள்ளை நோய்:—நூறு வருஷப் போரினால் ஆங்கிலேயருக்குப் பெருங் கஷ்டம் ஏற்பட்டது. அச்சமயத்தில் (1349) இங்கிலாந்தில் ஒரு தொத்து வியாதி ஏற்பட்டது. இதைக் கருப்புக் கொள்ளை நோய் என்று சொல்லுவார்கள். இந்த நோயினால் இங்கிலாந்தில் பத்தாயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டார்கள். ஆகையால் வயல்களில் நின்ற தான்யப் பயிர்களை அறுப்பதற்கும் மற்ற வேலைகளைச் செய்வதற்கும் போதுமான ஜனங்கள் இல்லாமல் போயிற்று. இக் கொள்ளை நோயினின்றும் பிழைத்த கூலியாட்களும் கொடிய பஞ்சத்தினால் கஷ்டப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் கூலியை அதிகமாகக் கேட்டார்கள். மிராசுதார்கள் அதிகக் கூலி கொடுக்க மறுத்து வேலையாட்கள் அனைவரும் வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தக்கூடிய சிலசட்டங்களைப் பார்லிமெண்டில் பிறப்

பிக்கும்படிச் செய்தார்கள். இவைகளுக்கு வேலையாட்களின் சட்டங்கள் (Statutes of Labourers) என்று பெயர். வேலையாட்களோ இச்சட்டங்களையும் மீறி நடக்கத் துணிந்தார்கள்.

**நல்ல பார்லிமென்ட்:**—முதலாவது எட்வர்ட் காலம் முதல் பார்லிமென்டின் அதிகாரம் வளர்ந்து கொண்டே வந்தது. அவரது காலத்தில் பார்லிமென்ட் மகாசபை மகா சாஸனப் பத்திரத்தின் ஷரத்துக்களின் பிரகாரம் அரசர் ராஜாங்க விஷயங்களில் நடக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. இரண்டாவது எட்வர்ட் தம் பிரியத்தோழர்களின் ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு சரிவர ஆட்சி புரியாமலிருந்ததால் பார்லிமென்ட் அரசரிடம் அதிருப்தி அடைந்தது. மூன்றாவது எட்வர்ட் வியாதியஸ்தராகவும் பலஹீனராகவும் ஆனதும், அவர் சில கெட்ட குணங்கள் வாய்ந்த மந்திரிகளின் ஆலோசனையைக் கேட்டு வந்தார். கி. பி. 1376-ல் ஒரு பார்லிமென்ட் சபை கூடி, ஜனங்களின் நன்மைகளுக்காகப் பல காரியங்களைச் செய்தது. ஆகையால் அதற்கு "நல்ல பார்லிமென்ட்" என்று பெயர். அது நாட்டிற்குக் கெடுதல்களைச் செய்து வந்த மந்திரிமார்களை விசாரிப்பதற்கு ஒரு முறையை அனுஷ்டித்தது. அதன்படி பொதுஜன சபையோர்கள் மந்திரிகளின் மீது குற்றம் சாட்டுவார்கள். இத்தகைய வழக்குகளை பிரபுக்கள் சபைவிசாரித்தது. கருங்கவச இளவரசர் இந்தப் பார்லிமென்டின் கட்சியில் நின்று அநேக நல்ல காரியங்களைச் செய்யும்படி தூண்டி வந்தார். பார்லிமென்ட் ராஜாங்க விஷயத்தில் சர்வ அதிகாரத்தையும் வகித்தது. அரசரும் பார்லிமென்ட் சபையின் அபிப்பிராயத்தின்படியே நடந்து வந்தார்.

**தாய்ப்பாஷையின் அபிவிருத்தி:**—நூறு வருஷப் போரினால் ஆங்கிலேயருக்கு பிரெஞ்சுக்காரரிடத்தில் வெறுப்பு



அதிகரித்தது. ஆகையால் ஆங்கிலேயர் தங்களது பாஷையைத் துரைத்தன பாஷையாகச் செய்துகொண்டனர். சாஸர் (Chaucer) என்னும் கவி காண்டர்பரி கதைகளை (Canterbury tales) ஆங்கில பாஷையில் வெகு இனிமையான செய்யுள் நடையில் எழுதினார். ஆகையால் இந்தக் கால முதல்தான் ஆங்கிலேயருக்குத் தேசாபிமானமும் தாய்ப் பாஷையில் அபிமானமும் ஏற்பட்டன.

கேள்விகள் :—

1. நார்தம்ப்டன் உடன்படிக்கையில் முக்கியம் எது?
2. நூறு வருஷப்போரின் காரணங்கள் யாவை?
3. எட்வர்ட் பிரெஞ்சு மகுடத்திற்குக் கொண்டாடிய உரிமையை வம்சாவளியின் மூலமாய்க் காட்டுக.
4. மூன்றாவது எட்வர்டின் காலத்தில் நடந்த நூறு வருஷப் போரின் சண்டைகள் யாவை?
5. பிரிடிக்னி உடன்பாட்டின்படி என்ன ஏற்பாடு ஆயிற்று?
6. கருப்புக் கொள்ளை நோயினால் உண்டான கெடுதிகள் யாவை?
7. ஆங்கிலேயர்களுக்குத் தேசாபிமானமும் தாய்ப் பாஷையில் அபிமானமும் எக்காரணத்தினால் ஏற்பட்டன?

---

## அத்தியாயம் 8.

### இரண்டாவது ரிச்சர்ட் (1377—1399)

**தலைவரி விதிக்கப்பட்டது:**—மூன்றாவது எட்வர்டுக்குப் பிறகு கருங்கவச இளவரசரின் குமாரரான ரிச்சர்ட் பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினொன்று. ஆகையால் அவருடைய சிறிய தகப்பனாரில் ஒருவ[illegible] ஜான் ஆவ்கான்ட் (John of Gaunt) ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்துவந்தார். ஜான் இங்கிலாந்தில் உள்ள பதினோர்

வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் யாவரும் தலைக்குப் பன்னிரண்டு பென்ஸ் வீதம் வரி கொடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டார். இந்த வரிக்கு ஆள்வரி அல்லது தலைவரி (Poll tax) என்று பெயர். இந்த வரி வேலையாட்களுக்கு ராஜாங்கத்தார்மீது கோபம் உண்டாகும்படிச் செய்தது. அதனால் தொழிலாளர்கள் கலகம் செய்யத் தயாராய் இருந்தார்கள்.

**வேலையாட்களின் கலகம்:**—அப்பொழுது கென்ட் மாகாணத்தில் வாட் டைலர் (Wat Tyler) என்னும் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவனுடைய வீட்டுக்குத் தலைவரியை வசூல் செய்பவர்களில் ஒருவர் சென்றார். சென்றவர் வாட் டைலர் வெளியிற் சென்றிருக்கிறான் என்பதைக் கேட்டுச் சரியான காலத்தில் அவன் வரி செலுத்துவதில்லை என்று இழிவான வார்த்தைகளைக் கோபத்துடன் பேசினார். இதைக் கேட்டுக்கொண்டே வீட்டை நோக்கிவந்த வாட் டைலர் வரி வசூலிப்பவரைக் கொலை செய்துவிட்டான். மேலும், அவன் தொழிலாளர்களையும் பண்ணையாட்களையும் கலகம் செய்யும்படி தூண்டினான். அவர்கள் வாட் டைலரைத் தலைவனாகக் கொண்டு லண்டனை நோக்கிச் சென்றார்கள். போகும்வழியில் அவர்கள் செய்த அக்கிரமங்களை எடுத்துரைத்தல் முடியாததாகும். அவர்கள் பயிர்களை அழித்தும், ஜனங்களை ஹிம்சித்தும், வீடுகளை எரித்தும், இன்னும் பல அட்டூழியங்களைச் செய்தும் சென்றார்கள். அவர்கள் காண்ட் பிரபுவாகிய ஜானின் மாளிகையைக் கண்டதும் அதை இடித்துவிட்டார்கள். இக் கலகக்காரர்களை ரிச்சர்ட் சில உத்தியோகஸ்தர்களுடன் ஸ்மித் பீல்ட் (Smithfield) என்னுமிடத்தில் சந்தித்தார். அங்கே வாட் டைலர் தனது அரசரை வணங்க அருகிற் சென்றபோது லண்டன் நகர மேயர் * வாட் டைலரைக் கத்தியாற் குத்திக் கொன்றுவிட்டார். இச்செய்தியைக் கேட்ட கலகக்காரர்கள்

* மேயர் = நகர பரிபாலன சபையின் அக்கிராசனாதிபதி.



வெகு கோபமடைந்து ரிச்சர்டைச் சுற்றி வளைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். இச்சமயத்தில் ரிச்சர்ட் ஒரு சிறுவராயிருந்தபோதிலும் வெகு தைரியத்துடன் அக்கலக்காரர்களைப் பார்த்து, "என்னுடைய அருமைக் குடிகளே, ஏன் கோபங் கொள்ளுகிறீர்கள்? உங்கள் தலைவன் கொல்லப்பட்டானாகையால் நானே உங்களுக்குத் தலைவனாக இருக்கிறேன்" என்று சொன்னார். வேலையாட்கள் இதைக் கேட்டவுடன் திருப்தி அடைந்து, மன்னரைத் தங்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென வேண்டினார்கள். அதற்கு அரசன் அவர்களுடைய வேண்டுகோள்களை அளிப்பதாக உறுதிமொழி கூறினார். இதைக் கேட்டு அவர்கள் தங்களது மாகாணத்திற்குச் சந்தோஷமாய்த் திரும்பிவிட்டார்கள். ஆனால் வேலையாட்களின் குறைகளை நீக்க பார்லிமென்ட் சம்மதிக்கவில்லை. அதனால் பண்ணைக் குடிகள் சுதந்தரம் அடைய முடியவில்லை.

**ரிச்சர்டின் ஆட்சி:**—ரிச்சர்ட் (1388) தேச ஆளுகையை ஒப்புக் கொண்டார். கொஞ்சகாலம் வரையில் அவர் சரிவர ஆண்டுவந்தார். அவர் பிரெஞ்சு அரசரின் குமாரத்தியாகிய இஸ்பெல்லாவை விவாகம் செய்துகொண்டார். பிறகு அவர் இங்கிலாந்தைத் தமது இஷ்டப்படி ஆளத் தொடங்கினார். அதனால் பிரபுக்கள் அனைவரும் ரிச்சர்டைச் சிம்மாஸனத்தினின்று நீக்கிவிடவேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

**ரிச்சர்ட் ஆங்கில மகுடத்தை இழத்தல்:**—அச்சமயத்தில் ரிச்சர்ட் அகாரணமாய்ச் சில ஆங்கிலப் பிரபுக்களைத் தேசப் பிரஷ்டம் செய்தார். அவர்களுள் லங்காஸ்டர் கோமகனார் (Duke of Lancaster) குமாரரான ஹென்றி என்பவர் ஒருவர். அவர் ரிச்சர்டின் சிறிய தகப்பன் மகனாவர். (70-ம் பக்கத்திலுள்ள வம்சாவளியைப் பார்க்க). அவர் இங்கிலாந்திலிருந்து துரத்தப்பட்ட பிறகு அவரது பிதாவான ஜான் இறந்தார். உடனே ரிச்சர்ட் அவருடைய பூமிகளைப் பேராசை

யால் பறிமுதல் செய்துவிட்டார். இதைக் கேள்விப்பட்ட உடனே ஹென்றி ஒரு சிறிய படையுடன் ஹம்பர் நதியின் முகத்துவாரத்திற்கு அருகில் உள்ள ராவன்ஸ்பூர் (Ravenspur) என்னும் இடத்தில் தங்கினார். அவர் தமது தந்தையின் சொத்துக்களை மீட்க வந்தாரே அன்றி ஆங்கில முடியை உத்தேசித்து வரவில்லை. ரிச்சர்டின் அநீதியான செயல்களைக் கண்டு சகியாத பிரபுக்கள் அவரது கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். ரிச்சர்ட் ஒரு சண்டையில் தோற்கடிக்கப்பட்டு எளிதில் சிறையாக்கப்பட்டார். பிறகு பார்லிமெண்ட் மகா சபையார் லாங்காஸ்டர் கோமகனான ஹென்றிக்கே முடி சூட்டி வைத்தனர். இத்துடன் ப்ளாண்டாஜினட் வம்சம் முடிவு பெற்றது. லங்காஸ்டர் வம்சத்து அரசர்கள் (1399) ஆளத்தொடங்கினார்கள். சிறையில் அடைபட்ட ரிச்சர்டும் அவ்வருஷத்திலேயே இறந்தார்.

**ஜான் விக்லிப்பும் லாலார்டுகளும்:**—யார்க்ஷயரைச் சேர்ந்த ஜான் விக்லிப் என்ற ஒரு கலைஞர் ஆக்ஸ்பர்டு நகரில் மதநூல்கள் சம்பந்தமான பல அருமையான உபந்நியாசங்களைச் செய்து பெருங்கியாதி பெற்றார். அவர் குருமார்கள் மதநூல்களில் அதிக ஞானமில்லாதவர்களாயும் ராஜீய விஷயங்களில் கலந்துகொண்டும் பொருளைச் சேகரிப்பதிலேயே அதிக நோக்கமுள்ளவர்களாயும் இருந்து வருவதைக் கண்டார். அதனால் அவர் போப்புக்கும் அவர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டியது அவசியமில்லை என்று பிரசங்கம் செய்துகொண்டு வந்தார். இங்கிலாந்தில் போப்பின் அதிகாரம் செல்லாது என்றும், சர்ச்சுகளுக்கு சொத்துக்கள் தேவையில்லை என்றும், அவைகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்றும் சொன்னார். கடைசியில் அவர் சில மதக்கொள்கைகள் ஒத்துக்கொள்ளக்கூடாதவை என்றும், அவைகளை மாற்றவேண்டும் என்ற நூதன அபிப்பிராயத்தை



வெளியிட்டார். அவரது பிரசங்கங்களைக் கேட்டு சிலர் அவருடைய அபிப்பிராயங்களை ஒத்துக்கொள்ளச் சம்மதிக்கவில்லை தவிர, விக்லிப் ஒவ்வொரு ஆங்கிலேயரும் அறிந்துகொள்ளும்படி ஆங்கில பாஷையிலேயே சில பிரசுரத் துண்டுகளை வெளியிட்டார். அவர் பைபிளை ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்து அதில் கண்டபடிதான் ஆங்கிலேயர்கள் நடக்க வேண்டுமே தவிர போப்பின் உத்தரவின்படி நடக்கவேண்டியதில்லை என்று தெரிவித்தார். அவரது சிஷ்யர்களுக்கு லாலார்டுகள் என்று பெயர். சர்ச் அதிகாரிகள் அவரது அபிப்பிராயங்களைக் கண்டித்தார்கள்; விக்லிப் ஆக்ஸ்பர்டில் பிரசங்கங்கள் செய்யக்கூடாதபடி ஏற்பாடு செய்தார்கள். ஆகையால் விக்லிப் தம் கிராமத்திற்குச் சென்று சில காலம் வசித்து வந்தார். கி. பி. 1384-ம் வருஷத்தில் அவர் இறந்துபோனார்.

கேள்விகள்:—

1. வேலையாட்களின் கலகம் எக்காரணங்களால் ஏற்பட்டது?
2. அக்கலகத்தின் வரலாற்றைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.
3. தொழிலாளர்களைத் திருப்தியுடன் திரும்பும்படி ரிச்சர்ட் எப்படிச் செய்தார்?
4. ரிச்சர்ட் செய்த அநீதியான காரியங்கள் யாவை?
5. லங்காஸ்டர் கோமகனான ஹென்றி இங்கிலாந்திற்கு எதற்காக வந்தார்?
6. ஆங்கிலேயர்கள் ரிச்சர்ட் மன்னரைச் சிங்காதனத்தினின்று ஏன் நீக்கி விட்டார்கள்?

| முக்கிய நிகழ்ச்சிகள். | வருஷங்கள். |
| --- | --- |
| க்ளாரண்டன் சட்டங்கள் | கி. பி. 1164 |
| பெக்கட் கொலையுண்டது | ,, 1170 |
| மகா சாஸனப்பத்திரம் | ,, 1215 |
| ஆக்ஸ்பர்ட் ஷரத்துகள் | ;; 1258 |
| ஸைமன் கூட்டிய பார்லிமெண்ட் | ,, 1265 |
| மாதிரிப் பார்லிமெண்ட் | ,, 1295 |

| | | |
|---|---|---|
| பால்கர்க் சண்டை | ,, | 1298 |
| பானக்பர்ன் சண்டை | ,, | 1314 |
| நார்தம்ப்டன் உடன்பாடு | ,, | 1330 |
| க்ரெஸிச் சண்டை | ,, | 1346 |
| கருப்புக் கொள்ளைநோய் | ,, | 1347 |
| பாய்ட்டியர்ஸ் சண்டை | ,, | 1356 |
| பிரிடிக்னி உடன்படிக்கை | ,, | 1360 |
| வேலையாட்களின் கலகம் | ,, | 1381 |
| ரிச்சர்ட் முடியை இழத்தல் | ,, | 1399 |

# VI. லங்காஸ்டர் யார்க் அரசர்களின் காலம் (1398—1484)

## அத்தியாயம் 1.

### நான்காவது ஹென்றி (1399—1413) யும், ஐந்தாவது ஹென்றி (1413—1422) யும்.

**பார்லிமேன்டின் அதிகாரப் பெருக்கு:**—லங்காஸ்டர் வம்சத்தில் உதித்து இங்கிலாந்தை ஆண்ட அரசர்கள் மூவரில் நான்காவது ஹென்றிதான் முதல் அரசர். அவர் பார்லிமென்டின் சம்மதத்தின் பேரில் பட்டத்துக்கு வந்தார். ஆகையால் அவர் பார்லிமென்டின் அபிப்பிராயத்தை ஒத்து ஆட்சி புரிந்தார். ஆகவே அவரது காலத்தில் பார்லிமெண்டுக்கு அதிக செல்வாக்கும் அதிகாரமும் ஏற்பட்டன.

**ஹென்றி கலகங்களை யடக்குதல்:**—அவரது ஆட்சியில் நாட்டில் அநேக கலகங்கள் உண்டாயின. வேல்ஸ் ஜாதியாரும், நார்தம்பர்லர்ந்து பிரபுவும் சேர்ந்து கொண்டு அநேக கலகங்களைச் செய்தார்கள். இக்கலகங்களை ஹென்றி பார்லி



மென்ட் சபையின் உதவியால் அடக்கிவிட்டார். மேலும் அவர் போப்பின் அதிகாரத்தை இங்கிலாந்தில் வளரும்படி செய்ய எண்ணி விக்லிப் கட்சியைச் சேர்ந்தவர்களை நசுக்குவதற்காகப் பார்லிமென்ட் சபையில் ஒரு கொடிய சட்டத்தைப் பிறப்பிக்கும்படி செய்தார். அதன்படி லாலார்டுகள் சர்ச் கொள்கைகளை ஒத்துக்கொள்ளாததற்கு உயிருடன் வைத்து எரிக்கப்பட்டார்கள். இதற்குப் பின் லாலார்டுகளின் தொந்தரவு அடியோடு அழிந்தது. அப்படி வெகு திறமையுடன் இங்கிலாந்தை ஆண்டுவிட்டு நான்காவது ஹென்றி (1413) இறந்தார்.

**ஐந்தாவது ஹென்றி:**—நான்காவது ஹென்றிக்குப் பிறகு அவருடைய புதல்வரான ஐந்தாவது ஹென்றி பட்டத்துக்கு வந்தார். அவரது காலத்தில் நூறு வருஷப்போர் மறுபடியும் ஆரம்பித்தது. ஐந்தாவது ஹென்றி பிரெஞ்சு மகுடத்தைப் பெறுவதற்குத் தமக்குப் பாத்தியம் உண்டு என்று கூறினார். அவ்வாறு அவர் பாத்தியம் கொண்டாடியது சரியல்ல.

**நூறு வருஷப் போர்:**—ஐந்தாவது ஹென்றி ஒரு பெரிய சேனையுடன் (1415) நார்மண்டியில்ஹார்ப்ளோர் (Harfleur) என்னும் துறைமுகப் பட்டினத்தில் வந்திறங்கினார். அவர் அந்நகரை முற்றுகை செய்து கைப்பற்றினார். பிறகு அவர் நார்மண்டி வழியாய்க் கலே நகரை நோக்கிச் சென்றார். அவ்வாறு செல்லுகையில் ஹென்றி அஜீன்கூர் (Agincourt) என்னுமிடத்தில் ஒரு பிரெஞ்சுப் படையைச் சந்தித்து அதை முறியடித்தார். இவ்வெற்றிக்குப் பிறகு அவர் தமது போர் வீரர்களுடன் இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

**டிராய் உடன்படிக்கை (1420):**—இரண்டு வருஷங்களுக்குப்பிறகு ஹென்றி தமது சேனையோடு நார்மண்டியில் வந்து இறங்கினார்; அங்குள்ள கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாய்ப் பிடித்தார். கடைசியில் ரூவன் (Rouen) என்ற

நார்மண்டியின் பிரதான நகரைப் பிடித்தார். ஆகவே நார்மண்டி மாகாணம் முழுமையும் ஹென்றியின் ஆட்சிக்கு உட்பட்டது. மறு வருஷத்தில் பிரெஞ்சு மன்னர் டிராய் (Troyes) என்ற இடத்தில் ஹென்றியுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி ஹென்றி பிரெஞ்சு மன்னரான சார்லஸின் மகளை மணந்துகொள்வது




என்றும், 'சார்லஸின் ஆயுட்காலம் வரையில் அவருக்கு ஹென்றி உதவி அரசராயிருப்பது என்றும், அவர் இறந்த பிறகு ஹென்றியே பிரெஞ்சு மன்னராக ஆகலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கை நடந்து இரண்டு வருஷங்கள் ஆனதும் ஹென்றி இறந்தார்.

**கேள்விகள்:—**

1. பார்லிமென்டின் அதிகாரம் நான்காவது ஹென்றியின் ஆட்சியில் என் அதிகரித்தது?
2. ஐந்தாவது ஹென்றியின் காலத்தில் நடந்த நூறு வருஷப் போரின் வரலாற்றைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக?
3. ட்ராய் உடன்பாட்டின்படி ஏற்பட்ட நிபந்தனைகள் யாவை?

---




# அத்தியாயம் 2.

**ஆறுவது ஹென்றி (1422—1461) :—** ஐந்தாவது ஹென்றி இறக்கும்பொழுது அவருடைய புதல்வருக்கு வயது ஒன்பதே மாதம் ஆகையால் அவர் தக்க வயது வந்து தாமே ஆளத்தொடங்கும் வரையில் அவருடைய சிறிய தந்தையான பெட்பர்ட் கோமகனார் (Duke of Bedford) ராஜ்யபாரத்தை வகித்தார். பிரான்ஸில் பர்கண்டியர்கள் (Burgundians), ஆர்மஞாக்கள் (Armagnacs) என்ற இரண்டு கக்ஷிகள் இருப்பதைத் தெரிந்துகொண்டு, அவர் பர்கண்டியரின் சிநேகத்தைக் கொண்டாடினார்.

**பிரான்ஸின் நிலைமை:—** பிரான்ஸில் இரண்டு கட்சிகள் இருந்தமையால் சச்சரவுகள் நேர்ந்தன. பிரெஞ்சு மன்னருக்குப் போர்த்திறமையில்லை. ஆகையால் ஆங்கிலேயர்கள் பிரான்ஸின் வடபாதியை வென்று அதைத் தங்களது ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் அத்துடன் நில்லாமல் பிரான்ஸின் தென்பாதியையும் ஜயிக்க முயன்றார்கள். ஆகையால் பிரான்ஸ் அரசரும், அவருடைய குடிகளும் மிகவும் கஷ்டம் அடைந்தார்கள். பிரான்ஸ் சுதந்தரத்தை இழக்க வேண்டிய ஆபத்தான நிலைமையில் இருந்தது.

**ஜோன் ஆவ் ஆர்க்:—** அச்சமயத்தில் டாம்ரெமி (Domremi) என்னும் கிராமத்தில் யாதவகுலத்தில் உதித்த ஒரு சிறுமியாகிய ஜோன் (Joan) ஒருநாள் இரவில் ஓர் கனவைக் கண்டாள். அவளது கனவில் ஒரு தெய்வீக புருஷர் தோன்றி "நீ அஞ்சாமல் இரு; படையுடன் சென்று, ஆங்கிலேயருடன் போர்புரிந்து, அவர்களைப் பிரான்ஸிலிருந்து துரத்திவிடு. உனது நாட்டு இளவரசருக்கு முடி சூட்டிவைக்கிற பாக்கியம் உன்னுடையது ஆகும்" எனச் சொன்னார். அவள் உடனே

இளவரசரின் அனுமதியைப்பெற்று ஆண்வேடம் பூண்டு, தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக ஒரு பெரிய சேனையுடன் ஆங்கிலேயரைச் சந்திக்கச் சென்றாள். அவள் ஆர்லியன்ஸ் (Orleans) என்னும் பட்டணத்தை ஆங்கிலேயர்




முற்றுகை செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டாள். அவள் அப்பட்டணத்துக்கு அருகில் நடந்த சண்டையில் அவர்களைத் தோற்கடித்து முற்றுகையை (கி. பி. 1428)




விடுவித்தாள். அதனால் அவளுக்கு ஆர்லியன்ஸ் கன்னி (Maid of Orleans) என்ற பெயர் வந்தது. இதற்குப் பிறகு அவள் ரீம்ஸ் (Reims) நகரிலுள்ள ஆலயத்தில் பிரான்ஸ் இளவரசராகிய சார்ல்ஸுக்கு மகுடாபிஷேகம் நடத்தி வைத்தாள். பிறகு அவள் ஆங்கிலேயர்களது கையில் அகப்பட்டுக்கொண்டாள். அவர்கள் அவளைப் பிடித்து ஒரு சூன்யக்காரி என நினைத்து ரூவன் கடைத்தெருவில் (1431) உயிருடன் எரித்துவிட்டார்கள்.

நூறு வருஷப் போரின் முடிவு:-சிலகாலம் சென்ற பிறகு ஆங்கிலேயர் நூறு வருஷப் போரில் தோல்வியடைய ஆரம்பித்தனர். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பெட்பர்டைப்போல வெகு தைரியமுள்ள தளகர்த்தர்கள் இங்கிலாந்தில் இல்லையென்பது ஒன்று. பர்கண்டியக் கட்சியினருக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்டிருந்த சிநேகத்தன்மை அறுந்துவிட்டது மற்றொன்று. இவற்றால் ஆங்கிலேயர் தாம் ஜெயித்திருந்த மாகாணங்கள் எல்லாவற்றையும் இழந்தனர். நூறு வருஷப் போர் (1451) முடியுங் காலத்தில் ஆங்கிலேயருக்குக் கலே நகரம் ஒன்றுதான் இருந்தது.

ரோஜாப்பூப் போர்களின் காரணங்கள்:—ஹென்றி சாத்வீக குணமுடையவர். இவருக்கு இங்கிலாந்தை ஆட்சி புரியத் தகுந்த தேக வலிமையும், மனோதிடமும் கிடையா. இவரது மனைவியாகிய மார்கரெட் ஆங்கிலேயரின் மனதில் வெறுப்பு உண்டாகும்படியான காரியங்களைச் செய்தாள். மேலும், நூறு வருஷப்போரில் ஆங்கிலேயர் தோல்வியடைந்த செய்தி எங்கும் பரவியது. இக்காரணங்களால் ஆங்கிலேயர் ஹென்றியைச் சிம்மாசனத்தினின்று நீக்குவதற்கு இஷ்டப்பட்டனர். இவ்வாறு இருக்கையில் (1453) ஹென்றிக்குச் சித்தப்பிரமை உண்டாகியது. ஆகவே ஜனங்கள் யார்க் கோமகனான ரிச்சர்ட் (Richard, Duke of York) என்பவரை

### லங்காஸ்டர் யார்க் அரசர்களின் வம்சாவளி.







அரசருக்குப் பதிலாக இங்கிலாந்தை ஆட்சிபுரியும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் மூன்ருவது எட்வர்டின் இரண்டாவது குமாரரான லயோனல் (Lionel) சந்ததியில் உதித்த ஆன் (Anne) என்ற பெண்ணின் புதல்வர் ஆவர். மேலும், அவர் எட்வர்டின் ஐந்தாவது குமாரரும், யார்க் கோமகனுருமான எட்மண்ட் என்பவருடைய பேரன். ஆகையால் அவர் லயோனல் சந்ததியையும், எட்மண்ட் சந்ததியையும் சேர்ந்தவர். அக்காலத்திலுள்ள ஆங்கிலப் பிரபுக்களில் செல்வத்திலும், செல்வாக்கிலும் சிறந்தவர் ரிச்சர்ட். அவரிடத்தில் ஜனங்களுக்கு வெகு பிரியமும், நம்பிக்கையும் உண்டு. ஆகையால்தான் ஆங்கிலப் பிரபுக்கள் அவரை தேசரக்ஷகராக (Protector) இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். சில காலம் சென்றபின் ஹென்றிக்குச் சித்தப்பிரமை தெளிந்தது. உடனே ஹென்றி ரிச்சர்டை நீக்கிவிட்டுத் தாமே ஆளத் தொடங்கினுர். ரிச்சர்டுக்கு இப்பொழுது கொஞ்சம் மனத்தாங்கல் ஏற்பட்டது. பிறகு அவர் தமக்குத் தான் ஆருவது ஹென்றியைக் காட்டிலும் இங்கிலாந்து சிம்மாசனத்திற்கு அதிக பாத்தியம் உண்டு எனக் கூறினுர். அவர் கொண்டாடிய பாத்தியம் நியாயமானது எனத் தோன்றுகிறது. ஏனெனில் ரிச்சர்ட் மூன்ருவது எட்வர்டின் இரண்டாவது குமாரரான லயோனல் வம்சத்தைச் சேர்ந்தவர். ஆனுல் ஹென்றியோ மூன்ருவது எட்வர்டின் மூன்ருவது புதல்வரான ஜான் வம்சத்தில் உதித்தவர்.

**ரோஜாப்பூப் போர்கள் (1455—1485.)** ரிச்சர்ட் ஆங்கில மகுடம் தமக்கு உரியதென்று கொண்டாடிக்கொண்டு (1455) ஒரு சேனையைக் கூட்டினுர். ஹென்றியும் ஒரு படையைச் சேர்த்து ரிச்சர்டுடன் போர்புரியத் தயாராய் இருந்தார். ஆங்கிலப் பிரபுக்களிற் சிலர் லங்காஸ்டர் வம்சத்து ஹென்றியையும், சிலர் யார்க் வம்சத்து ரிச்சர்டையும் சார்ந்து நின்றனர்.

இந்த உள்நாட்டுப் போரிலும் பிரபுக்கள் கலந்து கொண்டார்கள். யார்க் கட்சியார் வெள்ளை ரோஜாப்பூ (White Rose)




வைத் தங்களது அறிகுறியாக அணிந்து கொண்டனர். லங்காஸ்டர் கட்சியார் சிவப்பு ரோஜாப்பூ (Red Rose) வைத்



தங்களது அறிகுறியாக அணிந்து கொண்டனர். இக்காரணத்தினால் இந்த உள்ளநாட்டுப் போரை ரோஜாப்பூப் போர்கள் (The Wars of the Roses) என்று ஜனங்கள் பிற்காலத்தில் அழைத்தார்கள். இந்த யுத்தம் லங்காஸ்டர் வம்சத்தாருக்கும் யார்க் வம்சத்தாருக்கும் நடந்தது.

**ஹென்றி முடியை இழத்தல்:—**ஸேன்ட் ஆல்பன்ஸ் (St Albans) என்ற விடத்தில் (1455) ஒரு சண்டை நடந்தது. இதில் யார்க் வம்சத்து ரிச்சர்டுக்கு வெற்றி ஏற்பட்டது. இதற்குப் பிறகு அவர் ஆங்கில மகுடத்தைப் பெற முயற்சி செய்தார். ஹென்றியின் மனைவியாகிய மார்கரெட் வட இங்கிலாந்தில் ஒரு பெரிய படையைச் சேகரித்து (1460) போர்செய்யத் தயாராய் இருந்தார்கள். ரிச்சர்ட், இச்செய்தியைக் கேட்டு, தமது சேனையை வடக்கே நடத்திச் சென்றார். வேக்பீல்டு (Wakefield) என்ற இடத்தில் (1460) ஒரு பெரிய சண்டை நடந்தது. இதில் யார்க் கட்சியார் தோல்வியடைந்தனர். ரிச்சர்ட் போர்க் களத்தில் மடிந்தார். ஆனால் அவருடைய மூத்த குமாரரான எட்வர்ட், ஒரு சேனையுடன் வெகு வேகமாய் வந்து டௌடன் (Towton) என்ற இடத்தில் லங்காஸ்டர் கட்சியாரைத் தோற்கடித்தார். இச்சண்டையில் தோல்வியடைந்த மார்கரெட் பிரான்ஸுக்கு ஓடிவிட்டாள்; ஹென்றியும் சிறையில் இடப்பட்டார். இத்துடன் லங்காஸ்டர் வம்சத்தினரின் ஆட்சி முடிவடைந்தது. யார்க் வம்சத்தினர் (1461) இங்கிலாந்தை ஆள ஆரம்பித்தனர்.

**கேள்விகள்:—**

1. ஜோன் ஆவ் ஆர்க் கண்ட கனவு யாது? அவள் எவ்வாறு தனது தேசத்தைக் காப்பாற்றினாள்?

2. நூறு வருஷப் போரில் ஆங்கிலேயர் தோல்வி யடைந்ததற்குக் காரணங்கள் யாவை?

3. நூறு வருஷப்போர் முடியும் காலத்தில் ஆங்கிலேயர்களின் வசம் மீதியிருந்தது யாது ?

4. 'ரோஜாப்பூப் போர்கள்' என்ற பெயர் என் வழங்கலாயிற்று ?

5. அப்போர் எக்காரணங்களால் ஏற்பட்டது ?

6. 'யார்க்'கோமகனுரான ரிச்சர்ட் ஆங்கில மகுடத்தை அடைவதற்கு உள்ள உரிமையை வம்சாவளியின் மூலமாய்க் காட்டுக.

7. ஆருவது ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் நடந்த ரோஜாப்பூப் போர்களின் முக்கிய சண்டைகள் யாவை ? அவைகள் எவ்வாறு முடிந்தன ?

---

## அத்தியாயம் 3.

### நான்காவது எட்வர்ட் (1461—1483)

**எட்வர்டும், வார்விக் பிரபுவும்:**—டௌடன் சண்டையில் வெற்றியடைந்த யார்க் வம்சத்து எட்வர்ட் இங்கிலாந்துக்கு மன்னரானுர். இவருக்குச் சிங்காதனம் கிடைக்குமாறு பேருதவி புரிந்தவர் நேவில் (Neville) குடும்பத் தலைவரும் வார்விக் பிரபு (Earl of Warwick) வுமான ரிச்சர்ட் என்பவர். அவர் எட்வர்டின் ஆட்சியில் சர்வ அதிகாரங்களையும் பெற்றிருந்தார். சிலகாலஞ் சென்ற பின் எட்வர்டிக்கும் வார்விக் பிரபுவுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. ஆகையால் வார்விக் பிரபு பிரான்ஸுக்குச் சென்று ஹென்றியின் மனைவியாகிய மார்கரெட்டுடன் சமாதானம் செய்து கொண்டார்.

**வார்விக் பிரபு லங்காஸ்டர் கட்சியைச் சேருதல்:**—இவ்வாறு வார்விக் பிரபு லங்காஸ்டர் கட்சியில் சேர்ந்துவிட்டார். பிறகு அவர் இங்கிலாந்திற்கு ஒரு பெரிய சேனையுடன் வந்து, ஆருவது ஹென்றியை விடுவித்து, அவரை மறுபடியும் ஆங்கில வேந்தராகச் செய்து வைத்தார். எட்வர்டை (1461) ஆங்கில மன்னராகச் செய்தவரும் இந்த வார்விக் பிரபுவே. ஆனதுபற்றி வார்விக் பிரபுவுக்கு அரசராக்குவோர் (King-Maker) என்ற பெயர் வழங்கலாயிற்று.



**லங்காஸ்டர் கட்சியின் தோல்வி:**—வார்விக் பிரபு தமக்கிழைத்த தீமையை நினைக்க நினைக்க எட்வர்ட் வருத்தத்தையும் கோபத்தையும் அடைந்தார். அவர் ஒரு பெரிய சேனையுடன் சென்று, வார்விக் பிரபுவின் தலைமையில் இருந்த படையை பார்னட் (Barnet) என்ற இடத்தில் தாக்கினுர். இச்சண்டையில் வார்விக் மடிந்தார். பிறகு மார்கரெட் மற்றொரு படையுடன் ட்யூக்ஸ்பேரி (Tewkesbury) என்னுமிடத்தில் எட்வர்டை எதிர்த்தாள். இப்போரில் மார்கரெட் தோல்வியடைந்து, பிரான்ஸுக்குத் திரும்பிச் சென்றுள். உடனே வயதுசென்ற ஹென்றி அரசரின் கட்டளைப்படி கொல்லப்பட்டார்.

**எட்வர்டின் ஆட்சி:**—நான்காவது எட்வர்ட் பத்து வருஷங்கள் லங்காஸ்டர் கட்சியினரோடு போர்புரிந்தார். பிறகு அவர் இங்கிலாந்தைத் தமது இஷ்டப்படி பன்னிரண்டு ஆண்டுகள் வரையில் ஆட்சி புரிந்தார். அவர் பார்லிமென்டைத் தமக்கு அடங்கியிருக்கும்படி செய்தார்; பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்தும் வந்தார். மேலும், அவர் பெருந் தொகையைத் தமக்குக் கடனுகக் கொடுத்து உதவி செய்யும்படி பொது ஜனங்களைக் கட்டாயப் படுத்தினுர். இதற்குக் கட்டாயக் கடன்கள் (Forced Loans) என்று பெயர். இ[illegible] தவிர, அவர் பொதுஜனங்களிடமிருந்து ஏராளமான [illegible]கையை அவர்களுடைய நன்மைக்கே உபயோகப்படுத்துவதாகக் கூறி வசூல் செய்தார். இவ்வாறு அவர் தம்மிஷ்டப்படி ஆட்சிபுரிந்துவிட்டு (1483) இறந்தார்.

**கேள்விகள்:—**

1. வார்விக் பிரபுவுக்கு 'அரசராக்குவோர்' என்ற பட்டம் எப்படித் தகுதியுள்ளதாகும்?

2. நான்காவது எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் நடந்த ரோஜாப்பூப் போரின் முக்கிய சண்டைகள் யாவை?

---

## அத்தியாயம் 4.

### மூன்றாவது ரிச்சர்ட் (1483—1485)

**இரண்டு இளவரசர்கள் சிறையில் அடைபட்டது:—** நான்காவது எட்வர்ட் இறந்தவுடன் அவருடைய பதின்மூன்று வயதுள்ள மூத்த புதல்வர் ஐந்தாவது எட்வர்ட் என முடி சூட்டப்பட்டார். ஆனால் அவருடைய சிறிய தகப்பனான ரிச்சர்ட் நாட்டை ஆண்டுவந்தார். அவர் ஐந்தாவது எட்வர்டையும், அவரது இளைய சகோதரரையும் சிறையிலிடும்படி செய்தார். கொஞ்ச காலத்திற்கெல்லாம் அவ்விருவர்களும் இரகசியமாகக் கொல்லப்பட்டார்கள். ரிச்சர்ட் இதில் சம்பந்தப்பட்டவர் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் அவரது உத்தரவின் பேரில்தான் இளவரசர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அக்காலத்தில் எல்லோரும் நினைத்தார்கள். பிறகு ரிச்சர்ட் ஆங்கில மன்னராக இரண்டு வருஷங்கள் வரையில் ஆண்டார். அவரது ஆட்சிக்காலத்தில் ஜனங்களுக்கு அனேக சங்கடங்கள் ஏற்பட்டன. ஜனங்கள் இரண்டு இளவரசர்களும் கொலை செய்யப்பட்டதற்கு அவரே காரண புருஷர் என்று எண்ணி வெறுத்தார்கள்.

**பாஸ்வர்த் சண்டை (1485):—** ரிச்சர்ட் அக்காலத்தில் ஆங்கில மகுடத்திற்கு உரிமையாளர் ஒருவருமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ரிச்மண்ட் பிரபு (**Earl of Richmond**) வாகிய ஹென்றி தம்மை லங்காஸ்டர் வம்சத்தினர் என்று சொல்லிக்கொண்டு ஆங்கில மகுடத்திற்குப் பாத்தியம் கொண்டாடினார். அவருடைய தாயாரான மார்கரெட் காண்ட் பிரபுவான ஜானின் இரண்டாவது குமாருடைய பேத்தி. ஆகையால்தான் ஹென்றி தம்மை



லங்காஸ்டர் வம்சத்தினர் என்று சொல்லிக்கொண்டார். (110-ம் பக்கத்திலுள்ள வம்சாவளியைப் பார்க்க.) ரிச்மண்ட் பிரபுவான ஹென்றி ஒரு பெரிய சேனையுடன் பாஸ்வர்த் (**Bosworth**) என்னுமிடத்தில் (1485) ரிச்சர்டை எதிர்த் தார். ரிச்சர்ட் இச்சண்டையில் தோல்வியடைந்து இறந்தார். ரோஜாப்பூப் போர்களும் முடிந்தன. இத்துடன் யார்க் வம்சத்தின் ஆட்சியும் முடிந்தது. லங்காஸ்டர் வம்சத்தைச் சேர்ந்த ரிச்மண்ட் பிரபு ஏழாவது ஹென்றியென இங்கிலாந்தின் மன்னரானார்.

கேள்விகள்:—

1. மூன்றாவது ரிச்சர்டின் ஆட்சியைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

2. ரிச்மண்ட் பிரபு எவ்வாறு ஆங்கில மகுடத்தைப் பெற்றார்

---

## அத்தியாயம் 5.

### நவீனகாலத் தொடக்கம்

பதினைந்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் ரோஜாப்பூப் போரினாலும், நூறாண்டுப் போரினாலும் அமைதிகெட்டுப் போய்விட்டது. பிரபுக்கள் சுயநலம் பாராட்டி வந்தார்கள். பிரபுக்கள் ரோஜாப்பூப் போர்களில் கலந்து ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு வந்தார்கள். சர்ச்சின் நிலைமை சீர்குலைந்து இருந்தது. சித்திரவேலை, கல்வி, முதலானவைகள் அதிக ஆதரவைப் பெறவில்லை.

ஏழாவது ஹென்றி சிங்காதன மேறினதும் நாட்டில் ஒரு பலம் பொருந்திய ராஜாங்கத்தை ஏற்படுத்தினார். அதனால் நாட்டின் வியாபாரம் பெருகிற்று. பிரசுதார்கள் ரோமபிளாண்டர்ஸ் (**Flanders**) முதலான நாடுகளுடன் ரோம வியாபாரம் (**Woollen Trade**) செய்து அதிக லாபத்தை

அடைந்தார்கள். பட்டினங்களின் வியாபாரம் அதிகரிக்கவே, ஜனங்கள் மிகவும் நேர்த்தியான வீடுகளைக் கட்டிக்கொண்டு வெகு சுகமாய் வாழலானார்கள்.

இக்காலத்தில் (1453) துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபில் (Constantinople) என்னும் நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆகையால், அங்கு வசித்துவந்த அனேக கிறிஸ்தவக் கலைஞர்கள் தம்மிடமிருந்து கிரீக், லத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டுள்ள ஏட்டுச் சுவடிகளை எடுத்துக்கொண்டு மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். பிறகு அவர்கள் மதநூற்களை அநேகருக்குக் கற்பிக்கத் தொடங்கினார்கள். ஆதலால் ஐரோப்பியர்களுக்குக் கல்வியில் அதிக ஊக்கம் உண்டாயிற்று. இதனையே கல்வியின் புதுப் பிறப்பு (Renaissance) என்று எல்லாரும் அழைக்கின்றனர்

இதே காலத்தில் அச்சுயந்திரங்கள் நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டன. நான்காவது எட்வர்டின் ஆட்சிக் காலத்தில் வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) என்ற ஓர் ஆங்கிலேயர் ஜர்மனியரிடமிருந்து அச்சிடுமுறையைக் கற்றுக் கொண்டு இங்கிலாந்தில் ஒரு அச்சுயந்திரசாலையை ஏற்படுத்தினார். இதற்குப் பிறகு பல நூற்களும் வெகு எளிதிலும் விரைவிலும் அச்சடிக்கப்பட்டன. ஆகையால் வெகு அருமையான நூற்கள் சொற்ப விலைக்குக் கிடைக்கலாயிற்று. ஆனது பற்றி ஏழை ஜனங்கள் கூட இனிமையான நடையில் எழுதப் பட்டுள்ள பல அருமையான நூற்களை வாங்கி வாசிப்பதற்கு வேண்டிய சௌகரியம் ஏற்பட்டது. இவ்வாறு கல்வி பரவிய படியால் ஜனங்களுக்கு ஞானமும் புத்திசாலித்தனமும் உண்டாயின.

பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் கொலம்பஸ் (Columbus) என்ற இடலி தேசத்து மாலுமி ஒருவர் ஸ்பெயின் அரசர்க்காகப் புதிய உலக (New World)த்தைக் கண்டு பிடித்தார். வாஸ்கோ டி காமா (Vasco de Gama)



என்ற போர்த்துகல் தேசத்து மாலுமி ஒருவர் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல ஒரு சமுத்திர மார்க்கத்தைப் புதிதாகக் கண்டுபிடித்தார். தவிர, கப்பலோட்டிகளுக்கு உதவக்கூடிய திசை யறியும் கருவியும் இக்காலத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது. இம்மாதிரி புதிதாகக் கண்டு பிடிக் கப்பட்டவைகள் விசாலமான நோக்கங்களையும் புத்திக் கூர் மையையும் உண்டாக்கின.

இதே காலத்தில் யுத்த முறையிலும்கூடச் சில மாறுதல்
கள் உண்டாயின. துப்பாக்கி மருந்து முதல் முதலில் கண்டு
பிடிக்கப்பட்டமையால், வில், அம்பு முதலிய போர்க் கருவி
கள் அதிகமாய் உபயோகிக்கப்படவில்லை; 'பிரபுக்கள் வெடி
மருந்தை உபயோகப்படுத்துதல் கூடாது' என்று அரசர் கட்
டளையிட்டார். ஆனதுபற்றி பிரபுக்களின் கையாட்கள் தம்மு
டைய போர்க்கருவிகளை வைத்துக்கொண்டு வெற்றியடைய
முடியாமற் போயிற்று. இக்காரணத்தினால் பதினைந்தாவது
நூற்றாண்டுக்குப் பிறகு பிரபுக்களின் பலம் குன்றிவிட்டது.

கேள்விகள்:—

1. கல்வியின் புதுப்பிறப்பு ஐரோப்பாவில் எவ்வாறு ஏற்பட்டது? அதன் பயன்கள் யாவை?

2. பதினைந்தாவது நூற்றாண்டில் யுத்த முறையில் ஏற்பட்ட மாறுதல் யாது?

| முக்கிய நிகழ்ச்சிகள். | | வருஷங்கள். |
|---|---|---|
| அஜின்கூர் சண்டை | இ.பி. | 1415 |
| ட்ராய் உடன்பாடு | ,, | 1420 |
| ஆர்லியன்ஸ் முற்றுகை விடுவிக்கப்பட்டது | ,, | 1428 |
| கான்ஸ்டான்டிநோபில் பிடிபட்டது | ,, | 1453 |
| ரோஜாப்பூப் போர்கள் | ,, | 1455–1485 |
| ஸெண்ட் ஆல்பன்ஸ் சண்டை | ,, | 1455 |
| வேக்பீல்டு சண்டை | ,, | 1460 |
| டௌடன் ,, | ,, | 1461 |
| ட்யூக்ஸ்பரி சண்டை | ,, | 1471 |
| பார்னட் ,, | ,, | 1471 |
| பாஸ்வர்த் ,, | ,, | 1485 |

# VII. ட்யூடர் அரசர்களின் காலம்

(கி. பி. 1485—கி. பி. 1603)

———

## அத்தியாயம் 1.

### ஏழாவது ஹென்றி (1485—1509)

ஏழாவது ஹென்றி சிங்காதனம் ஏறியது:—பாஸ்வர்த் சண்டையில் வெற்றி அடைந்த ரிச்மண்ட் பிரபு ஏழாவது ஹென்றி என இங்கிலாந்து அரசரானார். சண்டையில் வெற்றி அடைந்ததால் ஆங்கில மகுடம் அவருக்குக் கிடைத்தது என்று சொல்லலாம். மேலும், அவர் லங்காஸ்டர் வம்சத்தைச் சேர்ந்தவரானதாலும் அவரை ஆங்கில மகுடத்திற்குப் பாத்தியஸ்தர் எனச் சொல்லலாம். ஹென்றி சிங்காதனம் ஏறிய பிறகு, யார்க் கட்சியினர் அவரை லங்காஸ்டர் வம்சத்தலைவர் எனப் பாவித்து இங்கிலாந்து மன்னரென்று அங்கீகரிக்க மறுத்தனர். ஹென்றி, நான்காவது எட்வர்டின் புதல்வியும் யார்க் வம்சத்தைச் சேர்ந்தவருமான எலிஸபெத்தை விவாகம் செய்துகொண்டால், யார்க் கட்சியினர்க்குத் திருப்தி உண்டாகும் என எண்ணினார். ஆகையால்தான் அவர் பட்டத்திற்கு வந்த பிறகு எலிஸபெத்தை மணம் புரிந்தார்.

யார்க் கட்சியினர் செய்த கலகங்கள்:—ஹென்றி எலிஸபெத்தை மணந்துங்கூட யார்க் கட்சியார் திருப்தி அடையாமல் அநேக கலகங்களைச் செய்தனர். லாம்பர்ட் ஸிம்னல் (Lambert Simnel) என்ற ஒரு சிறுவனை யார்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏவிவிட்டு, அவனை நான்காவது எட்வர்டின் சகோதரரும், க்ளாரன்ஸ் கோமகனும் ஆகிய ஜார்ஜின் புதல்வரான வார்விக் பிரபு என நடிக்கும்படி செய்தார்கள். இச்சிறுவன்தான் வார்விக் பிரபு என்று சொல்லிக்கொண்டு



திரிந்தான். இதை ஆங்கிலேயரில் அநேகர் உண்மையென நம்பினர். ஆனால் ஹென்றி உண்மையான வார்விக் பிரபுவைச் சிறையிலிருந்து வெளியே கொண்டுவந்து ஜனங்களுக்குக் காண்பித்தார். உடனே ஆங்கிலேயர் ஸிம்னல் ஒரு பாசாங்கு செய்பவர் (Pretender or Imposter) எனத் தெரிந்து கொண்டனர். ஆகையால் ஸிம்னலுக்கு ஆங்கிலேயரிடமிருந்து கிடைத்த உதவி இல்லாமற் போயிற்று. பிறகு ஹென்றி ஒரு பெரிய சேனையுடன் ஸிம்னலையும் அவன் சார்பில் நின்றவர்களையும் ஸ்டோக் (Stoke) என்றவிடத்தில் தோற்கடித்து அவரைச் சிறையிலிட்டார்.

இது நிற்க, யார்க் கட்சியினர் பேர்க்கின் வார்பெக் (Perkin Warbeck) என்ற மற்றொருசிறுவனைநான்காவது எட்வர்டின் இரண்டாவது குமாரரும் சிறையில் அடைபட்டவருமான ரிச்சர்ட் எனப் பாசாங்கு செய்யும்படி ஏற்பாடுசெய்தனர். ஆகையால் அச்சிறுவன், சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட இளவரசர்களில் இளையவராகிய ரிச்சர்ட் தப்பித்து ஓடிவிட்டதாகவும், அவர் தாமே என்றும் பாசாங்கு செய்தான். ஆங்கிலேயர்கள் இதை உண்மையெனக் கொஞ்சகாலம் நம்பினார்கள். பிறகு ஹென்றி வார்பெக்கைத் தோற்கடித்துச் சிறைப்படுத்தினார். சிலகாலம் ஆனபிறகு ஸிம்னல், வார்பெக் என்ற இருவரையும் சிரசாக்கினை செய்யும்படி ஹென்றி உத்தரவிட்டார். இவ்வாறு ஹென்றி, யார்க் கட்சியினரால் மூட்டப்பட்ட இரண்டு கலகங்களையும் வெகு திறமையுடன் அடக்கிவிட்டார்.

பிரபுக்களை அடக்குதல்:—ரோஜாப்பூப் போர்களில் அநேகபிரபுக்கள்போர்செய்து மாண்டார்கள். ஆயினும் எஞ்சியிருந்த பிரபுக்கள்மிகவும் அதிகாரம் படைத்தவர்களாயிருந்ததால் அரசர்க்குக் கீழ்ப்படியாமல் இருந்தார்கள். பிரபுக்களின் பலம் அவர்களுடைய கையாட்களது உதவியைப் பொறுத்த

இருந்தது. ஆகையால் இப்பிரபுக்களை அடக்குவதற்கு ஏழாவது ஹென்றி சிலசட்டங்களைச் செய்தார். அச்சட்டங்களின்படி பிரபுக்கள் தங்களுக்கு உதவிசெய்யும்பொருட்டு கையாட்களை (Retainers) வைத்துக்கொள்ளக்கூடாது என்றும், கையாட்கள் பிரபுக்களிடமிருந்து எவ்வித அறிகுறி (Livery)யையும் பெறக்கூடாது என்றும் ஏற்பட்டன. ஆனால் பிரபுக்கள் இச்சட்டங்களையும் மீறி நடக்கத் துணிந்தார்கள். ஆகையால்இச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத பிரபுக்களைத் தண்டிப்பதற்கு என்றே ஹென்றி ஒரு புதிய நியாயஸ்தலத்தை ஏற்படுத்தினார். அதன் மேற் கூரையின் உட்புறம் நட்சத்திரங்கள் போன்ற சித்திரங்களினால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதன்பொருட்டு இந்த நியாயஸ்தலத்திற்கு **நட்சத்திர அறை** (Star Chamber) நீதிஸ்தலம் என்று பெயர். இந்த நியாயஸ்தலத்தில் சட்டங்களை மீறி நடந்த பிரபுக்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

**ஹென்றி பணம் சேர்க்கும் விதம்:**—ஓர் அரசர் பலமுள்ளவராக வேண்டும் என்றால் அவருக்கு ஏராளமான திரவியம் வேண்டும் என்பதை ஹென்றி கண்டுகொண்டு பொருளைத் திரட்டத் தீர்மானித்தார். அவர் ஜனங்களிடமிருந்து கட்டாயக் கடன்களையும் தர்மப்பணத்தையும் வசூல் செய்தார். பணம் சேகரிக்கும் விஷயத்தில் அவருக்கு உதவி செய்தவர் மார்ட்டன் (Morton) என்ற ஓர் ஆர்ச்பிஷப் ஆவர். அவர் கைப்பற்றிய முறை அவருடைய சாமர்த்தியத்தை வெளிக் காட்டுகிறது. அவர் தனவான்களிடத்திற் சென்று, "நீங்கள் அரசருக்குப் பண உதவி செய்யக்கூடிய இயல்பில் உள்ளவர்கள்" என்றும், ஏழைகளிடத்திற் சென்று "நீங்கள் வெகு செட்டாக ஜீவனம் செய்வதால் பணம் சேர்த்து வைத்திருப்பீர்கள். அம்மாதிரிசேர்த்து வைத்த பணத்தை அரசருக்குக் கொடுத்து உதவி செய்ய முடியும்" என்றும் சொன்னார்.



இவ்விதமாக அவர் தனவான்களிடமிருந்து பணம் வாங்க ஒரு முறையையும், ஏழைகளிடமிருந்து பணம் வாங்க மற்றொரு முறையையும் அனுஷ்டித்தார். இக்காரணம் பற்றி மார்ட்டன் அனுஷ்டித்த இந்த உபாயத்திற்கு "மார்ட்டன் கவர்முட் கருவி (Morton's Fork) என்று பெயர்.

**விவாக சம்பந்தங்கள்:**—இவ்வாறு இங்கிலாந்தில் பிரபுக்களை அடக்கியும் பணம் சேகரித்தும் தமது ஆட்சியைப் பலப்படுத்திக்கொண்ட பிறகு ஹென்றி தமது செல்வாக்கும் பலமும் அதிகரிக்கும் பொருட்டு ஐரோப்பாவிலுள்ள சில அரசர்களின் நட்பை நாடினார். இச்சிநேகம் நீடித்து இருக்கும் பொருட்டு அவர் இதர தேசங்களில் அரசர்களுடன் விவாக சம்பந்தங்களையும் செய்துகொண்டார். ஸ்காட்லாந்து அரசரான நான்காவது ஜேம்ஸ் (James IV) என்பவருக்கு அவர் தம்முடைய மூத்த குமாரத்தியான மார்கரெட்டை விவாகம் செய்துகொடுத்தார். இந்த விவாக சம்பந்தம் இரண்டு காரணங்களால் முக்கியமானது. முதலாவது எட்வர்ட் காலம் முதல் ஸ்காட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள விரோதம் நீங்கிச் சிநேகத்தன்மை இதனால் ஏற்பட்டது. இரண்டாவது, மார்கரெட்டுக்கும் நான்காவது ஜேம்ஸுக்கும் பிறந்த குழந்தையின் பேரப் பிள்ளையாகிய ஜேம்ஸ் (1603) இங்கிலாந்து மன்னரானார். அக்காலத்தில் ஐரோப்பாவில் மிகச் செல்வாக்கு உள்ள அரசர்களுள் ஸ்பெயின் அரசரான பர்டினண்ட் (Ferdinand) ஒருவர். ஹென்றி, தமது பலத்தையும் செல்வாக்கையும் பெருக்க நினைத்து, அவருடைய புதல்வியான காதரின் (Catherine) என்பவளைத் தமது மூத்த புதல்வரான ஆர்தருக்கு விவாகம் செய்துகொண்டார். ஆர்தர் கொஞ்ச காலத்திற்குப் பிறகு இறந்துபோகவே, ஹென்றி அந்த சம்பந்தம் அற்றுப்போகாமல் இருக்கும்பொருட்டு

அவளைத் தமது இரண்டாவது புதல்வராகிய ஹென்றிக்கு போப்பின் உத்தரவைப் பெற்று மணம் புரிவித்தார்.

**ட்யூடர் ஆட்சி முறை:**—ட்யூடர் வம்சத்து அரசர்கள் பேராசையுள்ளவர்கள். பொருள் சேகரித்துப் பிரபுக்களை அடக்கித் தங்களது பலத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்வதிலேயே அவர்களுக்கு நோக்கம் அதிகம். அவர்கள் அதிகமாகப் பணத்தைச் செலவிடாமலிருந்ததாலும், அநேக வழிகளிற் பொருளைச் சம்பாதித்ததாலும் அவர்களுக்குப் பண முடை என்பது தெரியாததாயிற்று. ஆகையால் தான் அவர்கள் பண உதவியைப் பெறப் பார்லிமெண்ட் மகா சபையை அழைப்பது இல்லை. எப்பொழுதாவது பார்லிமெண்ட் கூடினால், அது ட்யூடர் வம்சத்து அரசர்களின் வார்த்தையை மீறி நடக்கிறதில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. உள்நாட்டுப் போரினால் வெகுகாலம் கஷ்டத்தை அனுபவித்த பொது ஜனங்கள் இங்கிலாந்தில் குழப்பத்தை நீக்கி அமைதியைப் பரவச்செய்த ஏழாவது ஹென்றியிடம் அன்பு பாராட்டி வந்தார்கள்; மேலும், ட்யூடர் வம்சத்து அரசர்கள் தங்களால் முடிந்த வரையில் பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து ஆண்டுவந்தார்கள். ஆகையால் ஆங்கிலேயர்கள் ட்யூடர் வம்சத்து அரசர்களின் இஷ்டப்படி ஆட்சி புரியச் சம்மதித்து இருந்தனர். இம்மாதிரியாக இங்கிலாந்தில் வல்லரசு (Despotism) ஏற்படுத்தப்பட்டது.

கேள்விகள் :—

1. ஏழாவது ஹென்றிக்கு ஆங்கில மகுடம் எவ்வாறு கிடைத்தது?

2. ஹென்றி எக்காரணத்தினால் எலிஸபெத்தை விவாகம் செய்து கொண்டார்?

3. ஏழாவது ஹென்றியின் ஆட்சியில் 'யார்க்' கட்சியினர் செய்த கலகங்களைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.



4. ஹென்றி பிரபுக்களின் அதிகாரத்தை எவ்வாறு குறைத்தார்?

5. பொருளைச் சேர்ப்பதற்கு ஹென்றியினால் அனுஷ்டிக்கப்பட்ட முறைகள் யாவை?

6. ஹென்றி ஸ்காட்லாந்து வேந்தருக்குத் தமது மூத்த குமாரியை விவாகம் செய்து கொடுத்ததால் உண்டான நன்மைகள் யாவை?

7. ஹென்றி எந்த எண்ணத்துடன் ஸ்பெயின் ராஜ குடும்பத்தோடு விவாக சம்பந்தம் செய்துகொண்டார்?

8. வல்லரசு என்றால் என்ன? இங்கிலாந்தில் ஏழாவது ஹென்றி எப்படி வல்லரசு ஏற்படுத்தினார்?

9. ட்யூடர் வம்சத்து அரசர்களின் பலத்திற்குக் காரணங்கள் யாவை?

---

## அத்தியாயம் 2.

### எட்டாவது ஹென்றி (1509—1547)

**பயனற்ற சண்டைகள்:**—ஏழாவது ஹென்றி இறக்கவே, அவருடைய இரண்டாவது புதல்வராகிய ஹென்றி சிங்காதனமேறினர். இவர் பார்வைக்கு வெகு அழகாகவும், கல்வியிற் பிரியமுள்ளவராயும் இருந்தார். இவருக்குத் தேகவலிமையும் மனோதைரியமும் உண்டு. இவர் பட்டத்திற்கு வந்து சில காலமான பிறகு, ஆங்கிலேயர் பிரான்ஸின்மேல் படையெடுத்துப் பிரெஞ்சு சேனையை கைன்கேட் (Guinegatte) என்ற விடத்தில தோற்கடித்தனர். இச் சண்டைக்குக் குதிமுள் சண்டை (Battle of the Spurs) என்று சொல்வதுண்டு. ஏனென்றால் போருக்கு அஞ்சிய பிரெஞ்சுப் போர்வீரர்கள் போர்க்களத்தினின்றும் தங்களுடைய குதிரைகளை வேகமாய் ஓடும்படியாகத் தங்கள் தங்களுடைய குதிகால்களில் அணிந்து கொண்டிருந்த முட்களால் குத்தினார்கள். ஸ்காட்லாந்து அர

சரான நான்காவது ஜேம்ஸ் பிரெஞ்சுக்காரர்களால் தூண்டப்பட்டு ஒரு பெரிய படையுடன் இங்கிலாந்தின்மேல் படையெடுத்தார். ப்ளாடன் (Flodden) என்னும் இடத்தில் ஒரு சண்டை நடந்தது. இதில் ஜேம்ஸ் கொல்லப்பட்டார்.

**தாமஸ் உல்ஸி:**—ஹென்றியின் ஆட்சி ஆரம்பித்தவுடன் அவரது மனதிற்கு ஏற்ற ஒரு மந்திரி அமைந்தார். அவரது பெயர் **தாமஸ் உல்ஸி** என்பது அவர் **இப்ஸ்விச் (Ipswich)**



பட்டணத்திலுள்ள ஒரு வியாபாரியின் குமாரர். அவர் பதினைந்து வயதிலேயே பி.எ. பரீக்ஷையில் தேறினார். அவர் டார்ஸட் பிரபுவின் புதல்வருக்கும் படிப்பு சொல்லிக் கொடுத்து வந்ததால் அவருடைய சிபார்சின் பேரில் உல்ஸி அரசாங்கத்தில் ஒரு உத்தியோகத்தை அடைந்தார். பிறகு தாமஸ் உல்



ஸிக்குத் தமது அதிகாரத்தை பெருக்கிக் கொள்ளவேண்டும் என்பதும் தமது எஜமானரான இங்கிலாந்து வேந்தருக்கு அதிக கௌரவமும் அதிகாரமும் உண்டாகும்படி செய்ய வேண்டும் என்பதும் இங்கிலாந்தை இதர ஐரோப்பிய தேசங்கள் மதிக்கும்படி செய்யவேண்டும் என்பதும் எண்ணங்கள். தவிர, தாமே போப் பதவியை அடையவேண்டும் என்றும் அவருக்கு நோக்கம் உண்டு. தமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் அதிக பிரயாசைப்பட்டார். அரசர் அவரது புத்தி கூர்மையைக் கண்டு அவரை யார்க் ஆர்ச்பிஷப்பாகவும், ராஜ்ய விஷயங்களில் தமது மந்திரியாகவும் செய்து கொண்டார். மறுவருஷத்தில் உல்ஸி ஆர்ச்பிஷப் பதவியைக் காட்டிலும் மேலான கார்டினல் (Cardinal) என்னும் ஒரு பெரும் பதவியை அடைந்தார். பிறகு அவர் இங்கிலாந்தில் போப்பின் பிரதிநிதியாகவும் செய்யப்பட்டார். ஆகவே உல்ஸி ராஜ்ய விஷயங்களிலும், மத விஷயங்களிலும் பெரிய அதிகார பதவியை வகிப்பவரானார். அவர் வெகு கௌரவமாக தம்முடைய பரிவாரங்களுடன் வாழ்ந்துவந்தார். அவர் ஹாம்ப்டன்கோர்ட் (Hampton Court) என்னும் ஒரு பெரிய மாளிகையைக் கட்டுவித்து அதில் வசித்து வந்தார். அவர் அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி கல்வி விருத்தியடைவதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்தார். அவர் பிரபுக்களிடத்தில் கர்வம் பாராட்டினபோதிலும், அவருக்கு ஏழைகளிடத்தில் அதிக பிரியமும் கருணையும் உண்டு.

**உல்ஸி அயல் நாட்டு விஷயங்களில் பிரவேசித்தல்:**— ஐரோப்பாவில் பிரான்ஸ் அரசரான பிரான்ஸிஸ் (Francis) என்பவருக்கும், ஸ்பெயின், ஆஸ்டிரியா இத் தேசங்களுக்கு அரசரான சார்ல்ஸ் (Charles) என்பவருக்கும் ஒரு பெரிய போர் உண்டாயிற்று. இவர்களுள் யார் ஐரோப்பாவில் முதன்மையை அடைவது என்பதுதான் அதற்கு முக்கிய காரணம்.

பிறகு சார்ல்ஸ் ஜர்மனிச் சக்கரவர்த்தியாகவும் தேர்ந்தெடுக்கப்
பட்டார். அவருக்குப் புதிய உலகத்தில் சுரங்கங்கள் நிறைந்த
பெரிய மாகாணங்கள் சொந்தமாக இருந்தன. ஆகையால்
பிரான்ஸிஸ் சார்ல்ஸின் செல்வத்தையும் அதிகாரத்தையும்
கண்டு பொறாமை கொண்டு அவரை வெறுத்தார். அவ்விரண்டு
அரசர்களும் இங்கிலாந்தில் முதன்மையான அதிகாரம் வகித்த
உல்ஸியின் உதவியை நாடினர்கள். பிரான்ஸிஸ் (1520) கலே
நகருக்குச் சமீபத்திலிருந்த ஒரு சமவெளியில் ஹென்றியைச்
சந்தித்தார். பிரான்ஸிஸ் வேந்தரின் முக்கியநோக்கம் ஹென்றி
யின் நேசத்தைச் சம்பாதித்து அவரைத் தமது கட்சியில்
இருக்கும்படி செய்யவேண்டும் என்பதுதான். அவ்விரு அர
சர்களும் சந்தித்த இடம் வெகு நன்றாக அலங்கரிக்கப்பட்
டிருந்ததால் அவ்விடத்திற்குப் பொன்னுடைச் சமவெளி
(The Field of the Cloth of Gold) என்று பெயர் வழங்
கப்பட்டது. இதற்குப் பிறகு சார்ல்ஸ் ஹென்றியைச்
சந்தித்து அவரைத் தமது கட்சியில் சேர்ந்து கொள்ள
வேண்டும் எனக் கேட்டார். ஆகையால் ஹென்றி அவரது
கட்சியைத் தழுவினர்.

இங்கிலாந்து மன்னர் ஒரு சைன்யத்தைச் சேகரித்து
சார்ல்ஸின் கட்சியில் நின்று போர்புரிய அனுப்பினர். பிரான்
ஸிஸ் வேந்தரும் ஒரு பெரிய சைன்யத்தைச் சேகரித்து வைத்
திருந்தார். பிறகு இந்த இரண்டு ஐரோப்பிய மன்னர்களுக்கும்
ஐரோப்பாவில் அநேக சண்டைகள் நடந்தன. அவைகளில்
பேவியா (Pavia) என்ற இடத்தில் நடந்த சண்டை முக்கிய
மானது. அதில் சார்ல்ஸ் பிரெஞ்சு சைன்யத்தைத் தோற்கடித்
ததோடுகூட பிரான்ஸிஸ் வேந்தரையும் கைதியாக்கிவிட்டார்.
பிறகு பிரான்ஸிஸ் விடுவிக்கப்பட்டார். ஆயினும் அவரது அதி
காரம் முற்றிலும் அழிந்துபோகும்படியான நிலைமைக்கு வந்து
விட்டது. இச்சமயத்தில் உல்ஸியின் ஆலோசனையின் பேரில்
ஹென்றி சார்ல்ஸின் கட்சியைவிட்டு விலகி பிரான்ஸிஸ் வேந்



தரின் கட்சியில் சேர்ந்துகொண்டார். இவ்வாறு அவர் செய்த
தற்கு 'ஐரோப்பாவில் யாராவது ஓர் அரசர் மற்ற அரசர்
களைக்காட்டிலும் அமைதியைக் கெடுக்க வலிமை உள்ளவராய்
இருக்கக்கூடாது' என்ற கொள்கையை அனுஷ்டித்தது கார
ணம் ஆகும். இக்கொள்கைக்கு அதிகாரத்தராசு (Balance of
power) என்று பெயர். இவ்வாறு உல்ஸியும் ஹென்றியும்
ஐரோப்பிய விஷயங்களில் பிரவேசித்து இங்கிலாந்து முதன்
மையை அடையும்படி செய்தனர்.

ஹென்றி காதரினைத் தள்ளிவிட எத்தனித்தல்:—ஹென்றி
இறந்துபோன தமது தமயனின் மனைவியாகிய காதரினைப்
போப்பின் அனுமதியின் பேரில் விவாகம் செய்துகொண்
டார் என்பது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்
களுக்கு மேரி என்ற பெண் குழந்தையும் பிறந்தது. ஹென்றி
ஆன் போலீன் (Anne Boleyn) என்னும் ஓர் அழகிய
பெண்ணின்மீது காதல்கொண்டு அவளை மணப்புரிய விரும்
பினர். ஆகையால் அவருக்குத் தமது மனைவியாகிய காத
ரினை எக்காரணத்தைக் கொண்டாவது தள்ளிவிட வேண்
டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே அவர், தாம்
தமது சகோதரரின் மனைவி மணம் செய்துகொண்டது கிறிஸ்
தவமதத்தின்படி ஒரு தகாத காரியம் ஆகும் என்றும், தாம்
செய்த அடாத காரியம் தமது மனத்தை உறுத்துகின்றது
என்றும் கூறினர். காதரினை விலக்குவது ஹென்றிக்கு ஒரு
சுலபமான காரியமல்ல. போப்பின் அனுமதியைப் பெறுமல்
அவளை விலக்குவதற்கு ஹென்றியால் முடியாது. ஆகையால்
அவர் காதரினை விலக்க போப்பை அனுமதி தரும்படி வேண்
டினர். ஹென்றியின் வேண்டுகோளுக்கு இணங்க போப்
புக்கு இஷ்டமில்லை. ஆகையால் அவர் தமது கருத்தை வெளி
யிடாமல் காலதாமதம் செய்துவந்தார். கடைசியில் போப், கம்
பேக்கியோ (Compeggio) என்னும் கார்டினலை இங்கிலாந்

திற்கு அனுப்பி, அவரையும் உல்ஸியையும் ஹென்றியின் வழக்கைத் தீர விசாரிக்கும்படி உத்தரவிட்டார். தமது பிரதான மந்திரியாகிய உல்ஸி கம்பெக்கியோவுடன் சேர்ந்து தமக்குச் சாதகமாய்த் தீர்மானம் செய்வார் என்று ஹென்றி எண்ணி இருந்தார். ஆனால் அவ் வழக்கைத் தீர்மானம் செய்யுமுன், போப் விசாரணை செய்வதை நிறுத்தும்படி உத்தரவிட்டு கம்பெக்கியோவை ரோமாபுரிக்குத் திருப்பி அழைத்தார். காலதாமதம் ஹென்றியின் கோபத்தை வளர்த்தது. ஆகவே, ஹென்றி தமது கோபத்தை உல்ஸியின்மீது காட்டி அவரைச் சான்ஸலர் பதவியினின்று நீக்கினார். ஆகையால் உல்ஸி லண்டன் நகரைவிட்டுச் சென்றார்.

உல்ஸியின் மரணம்:—கொஞ்சகாலமானபின், ஹென்றியின் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து தண்டனை பெறுவதற்கு லண்டன் நகரை நோக்கி வருகையில், கிழப்பருவத்தால் பலஹீனம் அடைந்த உல்ஸி மரித்தார். அவர் தாம் சாவதற்கு முன் கூறிய வார்த்தைகள் நமது மனதிற் பதிந்து இருத்தல் வேண்டும். அவர் "நான் எனது அரசரிடத்தில் வைத்த அன்பைக் கடவுளிடத்தில் காட்டி யிருந்தால் அக்கடவுள் என்னை இக் கிழப்பருவத்தில் இங்ஙனம் கஷ்டப்பட விட்டிருக்கமாட்டார்" என்று கூறினார்.

மதச் சீர்திருத்தம்:—ஹென்றி இங்கிலாந்தில் ஆட்சி புரிகையில் ஜர்மனியில் கிறிஸ்தவமத விஷயத்தில் பற்றுள்ளவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் மார்டின் லூதர் (Martin Luther) என்பது. அவர் கிறிஸ்தவமதக்கொள்கைகளை நன்றாய் அறிந்தவர். அக்காலத்தில் குருமார்கள், தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யாமல், உலக வாழ்க்கையில் பற்றுதல் வைத்துப் பணம், பூமி முதலியவைகளைச் சம்பாதிப்பதில் அதிக நோக்க முள்ளவர்களாய் இருந்தார்கள். மேலும் அவர்கள் போப்பின் உத்தரவுக்குக் குருட்டுத்தன



மாய்க் கீழ்ப்படிந்து பைபிளில் கண்டபடி நடவாமல் இருந்தார்கள். இதைக்கண்ட லூதர் மதசம்பந்தமாக சில சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றார். கிறிஸ்தவமத விஷயத்தில் சீர்திருத்தம் செய்வதற்காக ஏற்பட்ட இயக்கத்திற்குக் "கிறிஸ்தவ மதச் சீர்திருத்த இயக்கம்" (Reformation) என்று பெயர். லூதர் போப்பின் அதிகாரத்தை மறுத்தார். இன்னும் பலரையும் மறுக்கும்படி செய்தார். ஆகையால் அவருடைய கட்சியார்களுக்குப் பிராடெஸ்டன்ட்கள்* (Protestants) என்றும், போப்பின் அதிகாரத்தை முன்போல ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கு ரோமன் கதோலிக்குகள் (Roman Catholics) என்றும் பெயர்கள் வழங்கி வருகின்றன. இம்மாதிரியாகக் கிறிஸ்தவர்கள் இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரிந்தார்கள்.

ஹென்றி இங்கிலாந்தில் போப்பின் அதிகாரத்தை ஒழித்தல்:—லூதரின் மதக் கொள்கைகளை ஹென்றி கண்டனம் செய்தார். அதனால் போப் அவரிடத்தில் அன்பு பாராட்டிக் 'கதோலிக் மதக்காவலன்' (The Defender of the Faith) என்ற பட்டத்தை அவருக்கு அளித்தார். இருந்தபோதிலும், ஹென்றிக்குக் காதரினை விலக்க போப் அனுமதி அளிக்கவில்லை என்ற மனவருத்தம் இருந்தது. மேலும், அவர் எப்படியாவது அவளை விலக்கிவிட்டு ஆன் பொலினை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஒரே பிடிவாதத்துடன் இருந்தார். ஆகையால் அவர் இங்கிலாந்தில் போப்பின் அதிகாரத்தை ஒழித்தால்தான் தாம் தமது மனைவியை விலக்க முடியும் என்று நினைத்தார். ஆகையால் ஹென்றி போப்பின் அதிகாரத்தைத் தொலைக்கப் பார்லிமென்டைக் கூட்டி சில சட்டங்களைப் பிறப்பிக்கும்படி செய்தார். இப்பார்லிமென்

* இதற்குப் போப்பின் அதிகாரத்தை மறுப்பவர்கள் என்பது பொருள்.

டுக்கு "சீர்திருத்தப் பார்லிமேன்ட்" (Reformation Parliament) என்று பெயர். இந்த மகாசபை அப்பீல்கள், வரிகள் முதலியவற்றைப் போப்பிற்கு இங்கிலாந்திலிருந்து அனுப்பக்கூடாது என்றும், இங்கிலாந்தில் போப்பின் அதிகாரம் செல்லாது என்றும் உத்தரவிட்டது. மேலும், அது (1534) "சர்ச் தலைமைச் சட்டம்" (The Act of Supremacy) என்ற சட்டத்தையும் பிறப்பித்து, இங்கிலாந்திலுள்ள சர்ச்களுக்கு ஹென்றியே தலைவர் என்று கூறிற்று. இவ்வாறு இங்கிலாந்தில் போப்பின் அதிகாரம் அழிக்கப்பட்டது.

ஸர் தாமஸ் மோர்:—இதற்குப் பிறகு இங்கிலாந்தில் சர்ச் தலைமைச் சட்டத்திற்கு மீறி நடந்தவர்கள் ராஜதுரோகிகள் என்று எண்ணப்பட்டார்கள். அதனால் சர்ச் தலைமைச் சட்டத்திற்கு மீறி நடந்தவர்கள் அநேக கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. அவ்வாறு கஷ்டப்பட்டவர்களில் தாமஸ் உல்ஸியின் வீழ்ச்சிக்குப் பிறகு சான்ஸலர் பதவியில் சில வருஷங்கள் வேலைபார்த்த தாமஸ் மோர் (Thomas More) என்ற ஆங்கிலேயர் ஒருவர். அவர் ஒரு பெரிய கலைஞர்; மகா புத்திமான். மனச்சாக்ஷிக்கு விரோதமாக எப்பொழுதும் அவர் நடக்கச் சம்மதியார். ராஜ விசுவாசம் அவருக்கு உண்டு. ஆனால் அவர் சர்ச் தலைமைச் சட்டத்தை ஒப்புக்கொள்ளாததால் ஹென்றி ராஜ துரோகி என்று அவர்மீது குற்றஞ்சாட்டி அவரைச் சான்ஸலர் பதவியிலிருந்து தள்ளிவிட்டார். மேலும், ஹென்றி அவரைச் சிரசாக்கினை செய்யும்படிக்கும் உத்தரவிட்டார். அவரது கட்டளையின்படி ஸர் தாமஸ் மோர் கொல்லப்பட்டார்.

தாமஸ் க்ராம்வெல்:—ஸர் தாமஸ் மோருக்குப் பிறகு தாமஸ் க்ராம்வெல் அரசாங்கத்தில் ஆலோசனைத் தலைவர் ஆனார். அவருக்கு பிராடெஸ்டன்ட் கட்சியில் அபிமானம் உண்டு. ரோமன் கதோலிக்குகள் கஷ்டப்பட நேர்ந்தகாலத்தில் ஹென்றி அவரது ஆலோசனையைக் கேட்டு, பிராடெஸ்டன்ட்களுக்குச் சார்பாக சில காரியங்களைச் செய்தார். அவர் சந்நியாசிகளுடைய மடங்கள் (Monasteries) எல்லாவற்றையும் அழிக்கும்படி உத்தரவிட்டது அவைகளுள் முக்கியமானதாகும். ஹென்றி இம்மடங்களை அழிப்பதற்கு முக்கிய காரணம் அவர் அவைகளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்று எண்ணியதுதான். இதைத்தவிர, ஹென்றி க்ராம்வெல்லின் பேச்சைக்கேட்டு ஜர்மனிய பிராடெஸ்டன்ட்களுடன் சிநேகத்தன்மையை வைத்துக்கொண்டதோடு, அவரது தூண்டுதலினால் ஒரு ஜர்மனிய பிராடெஸ்டன்ட் ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டார். ஆயினும் அவரைப் பிராடெஸ்டன்ட் கட்சியிற் சேர்ந்தவர் என்று எண்ணுதல் பிசகு. ஏனென்றால் ஹென்றிக்குக் கிறிஸ்தவமதக் கொள்கைகளை மாற்றுதற்கும் மீறி நடப்பதற்கும் சற்றேனும் சம்மதமில்லை.



ஹென்றியின் விவாகங்கள்:—ஹென்றி இங்கிலாந்தில் போப்பின் அதிகாரத்தை நீக்கிய பிறகு, தாமஸ் க்ரான்மர் (Thomas Cranmar) என்பவரை காண்டர்பரி ஆர்ச்பிஷப்பாக நியமித்தார். பிறகு அவர் தமது மனைவியாகிய காதரினைத் தள்ளிவிட காண்டர்பரி ஆர்ச்பிஷப்பின் கோர்ட்டில் ஒரு வழக்கு செய்தார். க்ரான்மர் அந்த வழக்கை விசாரணை செய்து காதரின் சட்டப்படி ஹென்றியின் மனைவியில்லையென்று தீர்ப்பு அளித்தார். ஆகையால் ஹென்றி காதரினை விலக்கிவிட்டு ஆன்பொலீனை விவாகம் செய்துகொண்டார். சில வருடங்கள் கடந்தபின், ஹென்றி ஆன்பொலீனின் நடத்தை பிடிக்காமல் அவளைச் சிரசாக்கினை செய்துவிட்டார்; பிறகு ஜேன் ஸிமோர் (Jane Seymour) என்னும் ஒரு பெண்ணை மணந்தார். அவள் ஒரு ஆண்குழந்தையைப்பெற்றுவிட்டு இறந்து போனாள். இக்குழந்தைக்கு எட்வர்ட் என்ற பெயரிடப்பட்டது.

பிறகு க்ராம்வெல் ஹென்றிக்கு ஆன் என்னும் ஒரு ஜர்மனியப் பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்தார். அவள் வெகு அவலக்ஷணமாயிருந்ததால் ஹென்றி அவளைத் தள்ளிவைத்தார். கொஞ்சகாலம் மனைவியில்லாமல் இருந்து, பிறகு காதரின் ஹோவர்ட் என்பவளை அவர் விவாகம் செய்துகொண்டார். சிலகாலம் சென்றபின் அவளையும் கற்பின்மைக்காகச் சிரசாக்கினை செய்துவிட்டு அவர் காதரின்பார் என்ற ஓர் அழகிய விதவையை மணம் புரிந்துகொண்டார். இவள் தனது அதிர்ஷ்ட பாக்கியத்தால் ஹென்றி இறந்தபிறகு கூட உயிர் பிழைத்து இருந்தாள்.

ஹென்றியின் ஆட்சி முடிவு:—ஹென்றி வெகு திறமையுடன் முப்பத்தெட்டு வருஷங்கள் இங்கிலாந்தை ஆண்டுவிட்டு (1547) இறந்தார். பிறகு அவருடைய ஒரே புதல்வரான எட்வர்ட் இங்கிலாந்து அரசர் என முடி சூட்டப்பட்டார்.

கேள்விகள்:—

1. கைன்கேட் என்னும் இடத்தில் நடந்த சண்டைக்கு எக்காரணத்தினால் குதிமுள் சண்டை என்ற பெயர் வந்தது?

2. தாமஸ் உல்ஸியின் நோக்கங்கள் யாவை? அவர் எவ்வாறு உயர்ந்த பதவிகளைப் பெற்றார்?

3. உல்ஸி அன்னிய நாடுகளின் விஷயங்களில் பிரவேசித்ததைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

4. ஹென்றி காதரினை விலக்கச்செய்த பிரயத்தனங்களைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

5. உல்ஸியின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது?

6. 'மதச்சீர்திருத்த இயக்கம்' என்பது யாது? அதற்குக் காரணங்கள் யாவை?

7. மார்ட்டின் லூதர் என்பவரைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.



8. இங்கிலாந்தில் போப்பின் அதிகாரத்தை ஹென்றி எக்காரணத்தினால் ஒழித்தார்? எவ்வாறு?

9. தாமஸ் மோர், தாமஸ் க்ராம்வெல் இவர்களைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

10. தாமஸ் க்ரான்மர் என்பவர் யார்? அவர் ஹென்றிக்கு எவ்வாறு உதவி செய்தார்?

---

## அத்தியாயம் 3.

### ஆறுவது எட்வர்ட் (1547—1553)

ஸாமர்ஸட் பிரபு (1547—1553):—எட்வர்ட் சிங்காதனம் ஏறும்பொழுது அவருக்குப் பத்து வயது. ஆகையால் அவருடைய மாமனை ஸாமர்ஸட் கோமகனார் (Duke of Somerset) தேச பரிபாலகராக (Lord Protector) நியமிக்கப்பட்டு ஆட்சி புரிந்துவந்தார். அவர் ஸ்காட்லாந்து அரசியான மேரியை எட்வர்டுக்கு விவாகம் செய்துவைத்து இரண்டு தேசங்களையும் ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயன்றார். ஸ்காட்லாந்தியருக்கு இவ்வாறு செய்வதில் இஷ்டமில்லை. இதையறிந்த ஸாமர்ஸட் ஒரு பெரிய சேனையுடன் ஸ்காட்லாந்தின்மீது படையெடுத்தார். எடின்பர்க் (Edinburgh) நகருக்கு அருகிலுள்ள பிங்கி (Pinkie) என்னும் இடத்தில் ஒரு சண்டை நடந்தது. இதில் ஸ்காட்லாந்தியர் தோல்வியடைந்தனர். ஆயினும் அவர்கள் வெகு கோபம் அடைந்து தங்களது அரசியைப் பிரான்ஸுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே அவள் பிரெஞ்சு இளவரசரை விவாகம் செய்துகொண்டாள். இவ்வாறு ஸாமர்ஸட் கோமகனாரின் எண்ணம் வீணாகப் போயிற்று.

மதச் சீர்திருத்தங்கள்:—ஸாமர்ஸட் கோமகனார் பிராடெஸ்டன்ட் மதவகுப்பைச் சேர்ந்தவர். ஆகையால் அவர்

ஆர்ச்பிஷப் க்ரான்மருடைய உதவியைக் கொண்டு இங்கிலாந்தை ஒரு பிராடெஸ்டன்ட் நாடாகச் செய்ய விரும்பினார். அவர் லத்தீன் பாஷையில் தெய்வ ஆராதனை செய்யவேண்டியதில்லை என்றும், ஆங்கில பாஷையில் கடவுளைத் தொழலாம் என்றும் உத்தரவிட்டார். க்ரான்மர் ஆங்கில பாஷையில் வெளியிட்ட ஜபப்புத்தகம் (Prayer-Book) ஒன்றை அவர் ஒவ்வொரு சர்ச்சிலும் உபயோகிக்கும்படி செய்தார். அவரது காலத்தில் தான் பிராடெஸ்டன்ட்களுக்குச் செல்வாக்கும் அதிகாரமும் உண்டாயின.


நார்தம்பர்லாந்து பிரபு (1549—1553):—ஸாமர்ஸட் கோமகனார் செய்த மதச் சீர்திருத்தங்கள் ஆங்கிலேயருக்கு அதிருப்தியை உண்டாக்கின. ஆகையால் அவர்கள் அநேக இடங்களிற் கிளர்ச்சிகளைச் செய்தார்கள். ஸாமர்ஸட் அவைகளை அடக்க முடியாமையால், ராஜாங்க பரிபாலகர் என்ற பதவியிலிருந்து (1549) விலக்கப்பட்டார். பிறகு நார்தம்பர்லாந்து பிரபுவாகிய ஜான் டட்லி (John Dudley) ராஜாங்க பரிபாலகராய் நியமனம் செய்யப்பட்டார். இவரும் ஸாமர்ஸட் கோமகனாரைப்போல பிராடெஸ்டன்ட் மத வகுப்பைச் சேர்ந்தவர். ஆகையால் இவர் கதோலிக்குகளைச் சர்ச் உத்தியோகங்களிலிருந்து நீக்கி பிராடெஸ்டன்ட்களை நியமனம் செய்தார். இவரது உத்தரவின்பேரில் இரண்டாவது ஜபப் புத்தகம் வெளியிடப்பட்டது.

ஜேன் க்ரே சீமாட்டி:—நார்தம்பர்லாந்து பிரபுவின் பேராசையையும் கர்வத்தையும் கண்டு, ஜனங்கள் அவரை வெறுத்தார்கள். அவருடைய அதிகாரம் வரவரக் குறைய ஆரம்பித்தது. இச்சமயத்தில் எட்வர்ட் ஒரு கொடிய நோயால் பீடிக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்தார் நார்தம்பர்லாந்து பிரபு அவருக்குப் பிறகு காதரினின் புதல்வியாகிய மேரியே பட்டத்திற்கு வருவாள் என்றும், அவள்



கதோலிக் மத அபிமானியானதால் தமது அதிகாரம் குன்றிவிடும் என்றும் அஞ்சினார். ஆகையால் அவர் மேரியை பட்டத்திற்கு வரவொட்டாமல் தடுப்பதற்கு ஒரு கபடமான ஏற்பாட்டைச் செய்தார். அவர் தமது புதல்வரின் மனைவியும், எட்வர்டின் சிறிய அத்தையின் பேத்தியும் ஆகிய ஜேன் க்ரே (Jane Cray) என்னும்சீமாட்டிக்கு முடிசூட்ட எண்ணினார். ஆகையால் அவர் எட்வர்டைத் தமது காலத்திற்குப் பிறகு ஜேன் க்ரேதான் இங்கிலாந்துக்கு அரசியாக வேண்டும் எனக் கண்டு ஒரு பத்திரம் எழுதிவைக்கும்படி செய்தார். பிறகு எட்வர்ட் இறந்துவிட்டார். ஜேன் க்ரே சீமாட்டி நார்தம்பர்லாந்து பிரபுவினால் ஆங்கில அரசி என முடி சூட்டப்பட்டார். கதோலிக்குகள் இதைக் கேட்டுக் கலகங்கள் செய்யத் தொடங்கினார்கள். ஒன்பது நாட்களுக்குப் பிறகு ஜேன் தமது பதவியை இழக்கும்படி நேர்ந்தது. ஹென்றியின் குமாரத்தியான மேரி சிங்காதனம் ஏறினார்.

## ட்யூடர் அரசர்களின் வம்சாவளி.




கேள்விகள்:—

1. ஸாமர்ஸட் கோமகனார் ஏன் ஸ்காட்லாந்தின்மீது போர் புரிந்தார்? அஃது எவ்வாறு முடிந்தது?

2. ஜேன் க்ரே சீமாட்டி ட்யூடர் வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதை வம்சாவளியின் மூலமாய்க் காட்டுக.

3. ஸாமர்ஸட் கோமகனார் பிராடெஸ்டன்ட்களுக்குச் சார்பாகச் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

4. ஸாமர்ஸட் கோமகனாரின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது?

5. நார்தம்பர்லாந்துப் பிரபு தமது அதிகாரம் நிலைத்திருக்கச் செய்த உபாயம் யாது? அது எவ்வாறு முடிந்தது?

6. ஜேன் க்ரே என்பவரைப் பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.

---

## அத்தியாயம் 4.

### மேரி (1553-1558)

மத மாறுபாடுகள்:—மேரி, தாம் பட்டத்திற்கு வந்ததும், நார்தம்பர்லாந்து பிரபு, அவருடைய புதல்வரான கில்பர்ட் டட்லி (Guildford Dudley), ஜேன் க்ரே இம்மூவரையும் சிறையிலடைத்தார். அவர் பிராடெஸ்டன்ட்களைச் சர்ச் உத்தியோகங்களிலிருந்து விலக்கிவிட்டு கதோலிக்குகளை நியமனம் செய்தார். அவர் எட்வர்ட் காலத்தில் வெளியிடப்பட்ட ஜபப் புத்தகத்தைத் தள்ளிவிட்டு, லத்தீன் பாஷையில் எல்லாரும் கடவுளைத் தொழலாம் என்றார். இவ்வாறு அவர் எட்வர்ட் செய்த மத மாறுபாடுகளை அழித்துவிட்டதோடு தமது தந்தையின் காலத்தில் ஏற்பட்ட சர்ச் தலைமைச் சட்டத்தையும் ரத்து செய்தார்; போப்பின் அதிகாரத்தை மறுபடியும் இங்கிலாந்தில் ஸ்தாபித்தார். மேரி செய்த மத மாறுபாடுகள் இங்கிலாந்தை ஒரு கதோலிக் நாடாகச் செய்தன.

பிராடெஸ்டன்ட்களின் துயரம்:—மேரி ஸ்பெயின் தேசத்து அரசரான பிலிப் என்ற கதோலிக் வீரரை மணம்புரிய விரும்பினார். இந்தச் சம்பந்தம் ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்க



வில்லை. இந்த விவாக சம்பந்தம் ஏற்பட்டால் இங்கிலாந்து பிலிப்பின் ஆட்சியின்கிழ் வந்துவிடும் என்றும், பிராடெஸ்டன்ட் மதம் இங்கிலாந்தில் முற்றிலும் அழிந்துவிடும் என்றும் ஆங்கிலேயர்கள் அஞ்சினார்கள். என்றாலும், மேரி பிலிப்பையே விவாகம் செய்து கொண்டுவிட்டார். உடனே நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டன. மேரி இக்கலகங்களுக்குப் பிராடெஸ்டன்ட் மதத்தலைவர்களே காரணம் என்று எண்ணினார். மேலும், மேரியின் மதமாறுபாடுகளை எல்லாம் பிராடெஸ்டன்ட்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால்தான் சில பிராடெஸ்டன்ட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிலர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர். இன்னும் சிலர் உயிருடன் எரிக்கப்பட்டனர். இவ்வாறு பிராடெஸ்டன்ட் மதத்திற்காக உயிருடன் எரிக்கப்பட்டவர்களுள் லாட்டிமார் (Latimer), ரிட்லி (Ridley) என்ற இரண்டு பிஷப்புகள் முக்கியமானவர்கள். அவர்கள் ஒரே காலத்தில் ஆகஸ்பர்ட் நகரில் எரிக்கப்பட்டார்கள். அவர்களை எரிப்பதற்குத் தீமுட்டப்பட்டபோது, லாட்டிமர் ரிட்லியைப் பார்த்து, "ஹே, ரிட்லி, தைரியமாய் இரு. இன்றைக்கு நாம் இங்கிலாந்தில் ஏற்றும் தீபம் எப்பொழுதும் அணைக்கப்படப் போவதில்லை" என்று தைரியத்துடன் சொன்னார். பிறகு மேரி தமது தாயாகிய காதரினை விலக்குவதற்கு அனுமதியளித்த க்ரான்மரையும் உயிருடன் எரிக்கும்படி செய்தார். இம்மாதிரி (1555-1558) சுமார் முந்நூறு பிராடெஸ்டன்ட்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள். தங்களது மதத்திற்காக வெகு ஆண்மையுடன் உயிர் துறந்தவர்களை மகாத்மாக்கள் என்று சொல்லலாம். மேரி பிராடெஸ்டன்ட்களை வெகு கொடூரமாக நடத்தினதால் அவர்களுக்கு மதவைராக்கியம் அதிகரித்தது. ஆகையால் அவர்கள் அவரை மேன்மேலும் வெறுத்தார்கள்.

கலே நகரை இழத்தல்:—மேரிக்குத் தமது கணவரால் சில துன்பங்கள் ஏற்பட்டன. ஸ்பெயினுக்கும் பிரான்ஸுக்

கும் ஒரு போர் (1558) தொடங்கியது. மேரி தமது கணவருக்கு உதவிசெய்ய எண்ணி ஒரு சேனையுடன் பிரான்ஸின் வடபாகத்தின்மேல் படையெடுத்தார். முடிவில் வெகு நாளாக ஆங்கிலேயர் வசம் இருந்த கலே நகரைப் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். தாம் கலே நகரை இழந்ததில் மேரிக்குத் தாங்கமுடியாத துயரம் உண்டாகியது. "கலே நகரை இழந்ததனால் உண்டான துயரம் எப்பொழுதும் எனது மனதைவிட்டு அகலாது" என்று அவர் கூறினார். ஆயினும் ஆங்கிலேயர்க்கு அவரிடத்தில் வெறுப்பு அடைந்து அவரைச் சிங்காதனத்திலிருந்து நீக்க எண்ணம் கொண்டார்கள். இந்த நிலைமையில் மேரி மரணம் அடைந்தார்.

கேள்விகள்:—

1. மேரி அரசியார் செய்த மத மாறுபாடுகள் யாவை?
2. மேரியின் ஆட்சிக்காலத்தில் எந்த மத வகுப்பினருக்குக் கஷ்டங்கள் நேர்ந்தன? ஏன்?
3. மேரியின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் எவ்வாறு கலே நகரை இழந்தனர்?

---

## அத்தியாயம் 5.

### எலிஸபெத் மகாராணியார் (1558—1603)

எலிஸபெத்தின் குணாதிசயங்கள்:—மேரி சந்ததியின்றி இறந்தபின், ஆன்பொலீனது புதல்வியாகிய எலிஸபெத் இங்கிலாந்து அரசியானார். அவர் அழகு வாய்ந்தவர். அவருக்கு ராஜ்யத்தை ஆளும் திறமை உண்டு. அவர் சுயநலம் பாராட்டுபவர்; வெகு கர்வம் படைத்தவர்; ஸ்தோத்திரப் பிரியர்; அதிகாரமும் செல்வாக்கும் தமக்கு நீடித்து இருக்கவேண்டும்




என்ற நோக்கம் உள்ளவர். அவருக்கு டாம்பீகத்தில் அதிகப் பிரியம். விவாகம் செய்துகொண்டால் அதிகாரத்தைக் கணவருடன் பங்கிடவேண்டிவருமே என நினைத்து அவர் விவாகமே செய்துகொள்ளவில்லை. ஆகையால் அவருக்கு கன்னி ராணியார் (Virgin Queen) என்ற பெயர் வந்தது.

எலிஸபெத் மத நிர்ணயம் செய்தல்:—அவர் பட்டத்திற்கு வந்ததும் தமது சகோதரியான மேரி செய்த எல்லா மத மாறுபாடுகளையும் ரத்து செய்தார். அஃதாவது, அவர் இங்கிலாந்தில் போப்பின் அதிகாரத்தை ஒழித்ததோடுகூட லத்தீன் பாஷையில் ஆராதனை செய்யக்கூடாது என்றும் உத்தரவிட்டார். எலிஸபெத் சர்ச் தலைமைச் சட்டத்தையும் (1559) பிறப்பித்தார். இச்சட்டம் அவரையே மத விஷயங்களில் தலைமை அதிகாரியாகச் செய்தது. மேலும் அவர் ஓர் ஒற்றுமைச் சட்ட(Act of Uniformity)த்தைப் பிறப்பித்து, இங்கிலாந்திலுள்ள எல்லா சர்ச்சுகளிலும் ஒரேவிதமான ஜபப்புத்தகம் உபயோகிக்கப் படுத்தவேண்டியது என்றும் ஏற்பாடு செய்தார்.

இப்படி அவர் மதநிர்ணயம் செய்தபிறகு இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்ட சர்ச்சுக்கு ஆங்கிலிகன் சர்ச் (Anglican Church) என்று பெயர். எலிஸபெத் எல்லா ஆங்கிலேயரையும், அவர் எந்த மதவகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தபோதிலும், தாம் ஏற்படுத்திய ஆங்கிலிகன் சர்ச்சுக்குச் சென்று அங்கேயுள்ள ஜபப்புத்தகத்தை உபயோகிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். இந்தப் புதிய ஏற்பாடு சில பிராடெஸ்டன்ட்களுக்கும் கதோலிக்குகளுக்கும் திருப்தியை உண்டாக்கவில்லை. எலிஸபெத் போப்பின் அதிகாரத்தை இங்கிலாந்தில் நீக்கியதால் மனவருத்தம் கொண்ட கதோலிக்குகள், ஆங்கிலிகன் சர்ச்சுக்குச் சென்று ஜபப்புத்தகத்தை உப

யோசிக்கும்படி சொல்லப்பட்டவுடன், ராணியாரின் மத நிர்ணய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். சில பிராடெஸ்டண்ட்களோ எலிஸபெத் செய்த மதமாறுபாடுகள் போதுமானவை அல்ல என்று கருதினார்கள். இவர்களுக்கு பரிசுத்தகர்கள் (Puritans) என்றும், மத நிர்ணயத்திற்குச் சம்மதித்த பிராடெஸ்டண்ட்களுக்கு ஆங்கிலிகன்கள் (Anglicans) அல்லது எபிஸ்கோபலியன்கள் (Eipscopalians) என்றும் பெயர் வைத்தனர். ஆகையால் எலிஸபெத்




தின் காலத்தில் கதோலிக்குகள், ப்யூரிட்டன்கள் ஆங்கிலிகன்கள் என்ற மூன்று மத வகுப்பினர்கள் இருந்தார்கள். ஆங்கிலிகன்களைத் தவிர, மற்ற இரண்டு மத வகுப்பினர்களுக்கும் பெரிய துன்பங்கள் நேர்ந்தன.

எதிர் மதச் சீர்திருத்த இயக்கமும், கதோலிக் மதக் கட்சியினர்களில் கலகங்களும்:—இங்கிலாந்தில் பிராடெஸ்டன்ட் மதக்கட்சி மேன்மேலும் ஓங்கி வருவதைக் கண்டு கதோலிக் கட்சியினர்கள் பிராடெஸ்டண்ட் மதத்தைத் தலையெடுக்க வொட்டாமல் சில ஏற்பாடுகள் செய்ய எண்ணினார்கள். தவிர, லூதர் முதலானவர்கள் கதோலிக் குருமார்களுடைய துர்நடத்தையாலும் அறிவின்மையாலும் செல்வத்தில் உள்ள ஆசையினாலும் கதோலிக் மதத்தை இழிவாய்ப் பேசியும், அதன் குருமார்களைப் பழித்தும் வந்தார்கள். ஆனது



பற்றி கதோலிக் மத அபிமானிகள் சர்ச்சை நல்ல நிலைமையில் வைக்க சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று எண்ணினார்கள். மதச் சீர்திருத்த இயக்கத்திற்கு விரோதமாகத் தோன்றின இந்த இயக்கத்திற்கு Counter Reformation அல்லது Catholic Reaction என்று பெயர். போப்கள் தங்களுடைய நடத்தைகளைத் திருத்திக்கொண்டார்கள்; அரசியலில் தலையிட்டுக்கொள்ளாமல் மத விஷயங்களிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தலானார்கள்.

கதோலிக் மதத்தை ஜனங்களுக்கு உபதேசம் செய்து அதன் பெருமையை அவர்களுக்குத் தெரிவித்து அதில் நம்பிக்கையும் அபிமானமும் ஏற்படும்படி செய்ய இக்னேஷியஸ் லயோலா என்ற ஒரு ஸ்பானிஷ் பாதிரியாரால் "ஜீஸஸ் சபை" ஒன்று கி.பி. 1540-ல் ஏற்படுத்தப்பட்டது. இச்சபையைச் சேர்ந்தவர்கள் சிறந்த கதோலிக் மத அபிமானிகளே. அவர்கள் கதோலிக் மதத்திற்காக தங்கள் உடல் ஆவியைக் கூட தியாகம் செய்யத் தயாரா யிருந்தார்கள்.

ஸ்காட்லாந்து அரிசியான மேரி:—கதோலிக்குகள் எலிஸபெத் செய்த மத ஏற்பாட்டினால் அதிருப்தி கொண்டவர்களாகி அநேக கலகங்கள் செய்யத் தலைப்பட்டார்கள். அவர்கள் எலிஸபெத்தைச் சிங்காதனத்திலிருந்து விலக்கிவிட்டு, ஸ்காட்லாந்து அரசியான மேரியை ஆங்கில அரசியாராகச் செய்ய எண்ணினார்கள். மேரி ஸ்காட்லாந்தியரால் பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டு இங்கே பிரெஞ்சு இளவரசரை விவாகம் செய்துகொண்டாள் என்று அறிந்தோம். தனது கணவன் இறக்கவே, அவள் தனது தாய் நாடான ஸ்காட்லாந்துக்குத் திரும்பினாள். பிரான்ஸிலேயே அநேக வருஷங்கள் வசித்ததால் அவள் ஒரு கதோலிக்காகவே இருந்தாள். ஸ்காட்லாந்துக்கு அவள் திரும்பி வருவதற்குச் சில

வருஷங்களுக்கு முன்புதான் பிராடெஸ்டன்ட் * மதம் அந் நாட்டிலேயே பரவிற்று. ஆகையால் மேரி ஸ்காட்லாந்துக்குத் திரும்பினபோது ஸ்காட்லாந்தியரில் பலர் பிராடெஸ்டன்ட் மதத்தைத் தழுவி இருந்தனர். ஆனதுபற்றி அவர்கள் மேரியை வெறுத்தார்கள்.

இப்படி யிருக்கையில், மேரி தனது அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள எண்ணி டார்ன்லி (Darnly) என்ற ஒரு பிரபுவை விவாகம் செய்துகொண்டாள். அவர்களுக்கு ஜேம்ஸ் என்ற ஒரு பிள்ளை பிறந்தது. இப்பொழுது அவள் வெகு கர்வம் அடைந்து எலிஸபெத்திற்கு ஆங்கில மகுடம் பாத்தியமில்லை என்று வெளியிட்டாள். சில வருஷங்களுக்குப் பிறகு அவளது இரண்டாவது கணவரான டார்ன்லி கொலைசெய்யப்பட்டார். ஸ்காட்லாந்தியர் பாத்வெல் பிரபு (Earal of Bothwell)வின உதவியைக்கொண்டு மேரியே டார்ன்லியைக் கொலை செய்வித்தாள் எனச் சந்தேகித்தனர். அதற்கு ஏற்றபடி மேரியும் சில நாட்களுக்குப் பிறகு பாத்வெல் பிரபுவை விவாகம் செய்துகொண்டாள். ஆகையால் ஸ்காட்லாந்தியர் மேரியை வெறுத்துச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டனர். அவள் அதினின்றும் தப்பி வெளியே வந்து ஒரு சேனையைத் திரட்டித் தன்னுடைய குடிகளுடன் போர்செய்தாள். அச்சண்டையில் ஸ்காட்லாந்தியர் அவளைத் தோற்கடித்தனர்.

எலிஸபெத் மேரியைச் சிறைப்படுத்தல்:—பிறகு மேரி இங்கிலாந்திற்கு (1568) ஓடிவந்து எலிஸபெத்தின் உதவியை நாடினாள். எலிஸபெத், மேரி வெகு கர்வத்துடன் ஆங்கில மகுடத்திற்குப் பாத்தியம் கொண்டாடியதை மறக்கவில்லை. ஆகையால் அவர் மேரியைச் சிறையிலிடும்படி செய்தார். இச்

* ஸ்காட்லாந்தில் பரவிய பிராடெஸ்டன்ட் மதத்திற்கு "பிரெஸ்பிடீரிய மதம்" (Presbyterianism) என்று பெயர்.



செய்தி இங்கிலாந்து முழுவதும் பரவியது. ஆங்கில கதோலிக்குகள் விசனத்தையும் கோபத்தையும் அடைந்தார்கள். அவர்கள் மேரியை விடுவித்து இங்கிலாந்தின் அரசியாகச் செய்ய எண்ணி அநேக கலகங்களைச் செய்தார்கள்.

கதோலிக் கலகங்கள்:—கி. பி. 1569-ல் வட இங்கிலாந்துப் பிரபுக்கள் நார்தம்பர்லாந்து பிரபுவையும் வெஸ்ட்மோர்லாந்து பிரபுவையும் தலைவர்களாகக்கொண்டு ஒரு பெரிய கலகத்தை மூட்டினார்கள். அவர்கள் ஸ்காட்லாந்து அரசியாரைச் சிறையினின்றும் விடுவிக்க ஒரு பயனற்ற முயற்சியைச் செய்தார்கள். ஆனால் ஸஸெக்ஸ் பிரபு இக்கலகத்தை வெகு திறமையுடன் அடக்கிவிட்டு கலகக்காரர்களின் இரண்டு தலைவர்களையும் நாட்டைவிட்டு ஓடும்படி செய்தார். இரண்டு வருஷங்களுக்குப் பின் ரிடால்பி என்பவரின் தூண்டுதலின் பேரில் நார்பக் பிரபு எலிஸபெத்தின் ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் செய்தார். இக்கலகத்தை ராஜாங்கத்தார் வெகு திறமையுடன் அடக்கிவிட்டனர். நார்பக் பிரபு குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு மரணதண்டனையை அடைந்தார். இதற்குப் பிறகு (1586) அந்தோனி பாபிங்டன் என்ற ஒரு அகம்பாவம் நிறைந்த கதோலிக் மதத்தினர் எலிஸபெத்தைக் கொல்ல ஒரு சூழ்ச்சியைச் செய்தார். அவர் அசட்டுத்தனமான தைரியம் உள்ளவராதலால் தான் செய்யப்போகும் காரியத்தை வெகு கர்வத்துடன் தெரிவித்தார். ஆகையால் எலிஸபெத்தின் மந்திரியால் துப்பறிய அனுப்பப்பட்டவர்கள் அச்சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டார்கள். எலிஸபெத்தைக் கொன்றுவிடுவதில் தமக்கு இஷ்டம் என்று மேரி அரசியாரால் பாபிங்டனுக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்று கிடைத்தது. இதை ஆதாரமாய்க்கொண்டு ராஜாங்கத்தார் பாபிங்டனையும் அவரைச் சேர்ந்தவர்களையும் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார்கள். ஆங்கில கதோலிக்கு

களைக் கலகம் செய்யும்படி ஸ்பெயின் அரசரான பிலிப்பும் போப்பும் தூண்டி வந்தார்கள். ஆனால் எலிஸபெத் இக்கலகங்களை எல்லாம் வெகு திறமையுடன் அடக்கினார். கடைசியில் அவர், மேரி சிறையில் இருக்கும் வரையில் அவள் சார்பாகக் கலகங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்குமென்று எண்ணி, மேரியின் தலையை வெட்டிவிடும்படி உத்தரவிட்டார். ஆகவே மேரி (1587) சிரச்சேதம் செய்யப்பட்டாள்.

எலிஸபெத்தும் பிலிப்பும்:—எலிஸபெத் இங்கிலாந்தை ஆண்டுவரும்பொழுது ஸ்பெயின் தேசத்தவர்கள் ஆங்கிலேயரின் முக்கிய விரோதிகளாய் இருந்தார்கள். இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இப்பகை ஏற்படுவதற்கு அநேக காரணங்கள் உண்டு. ஸ்பெயின் மன்னரான பிலிப் கதோலிக் மதவீரர்; எலிஸபெத்தோ பிராடெஸ்டன்ட் மதக் கட்சியின் தலைவி. இங்கிலாந்தில் பிராடெஸ்டன்ட் மதத்தை அழித்து, கதோலிக் மதத்தைப் பரவச்செய்யவேண்டுமென்று பிலிப் விரும்பினார். மேலும், அவர் எலிஸபெத்தின் ஆட்சிக்கு விரோதமாய் ஆங்கில கதோலிக்குகளைக் கலகத்தைச் செய்யும்படித் தூண்டினார். ஆகவே ராணியாருக்குப் பிலிப்பிடம் விரோதம் ஏற்பட்டது ஆச்சரியமாகுமோ? ஆனதுபற்றி எலிஸபெத் பிலிப்பின் ஆட்சிக்கு உட்பட்ட நெதர்லாந்துகள் * (Netherlands) என்னும் மாகாணங்களின் பிராடெஸ்டன்ட்களைக் கலகங்களைச் செய்துவரும்படி இரகசியமாய்த் தூண்டிக்கொண்டிருந்தார். அவர் நெதர்லாந்தியருக்கு உதவிசெய்ய எண்ணி ஒரு சேனையை அனுப்பினார். அச்சேனையின் தலைவர் ஸர் பிலிப் ஸிட்னி (Sir Philip Sidney) என்ற ஒரு சுத்தவீரர். ஸட்பன் (Zutphen) என்னுமிடத்தில் நிகழ்ந்த சண்டையில்

* இக்காலத்திய பெல்ஜியம், ஹாலந்து இவ்விரண்டு தேசங்களுக்கு 'நெதர்லாந்துகள்' என்ற பெயர் வழங்கி வந்தது.



ஆங்கிலக் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டபோதிலும், அவர் தமது ஆவியைத் துறந்தார்.

ஆங்கில மாலுமிகளுக்கும் ஸ்பெயின் மாலுமிகளுக்கும் சண்டை:—மேற்கூறிய காரணங்களைத் தவிர, ஸ்பெயினுக்கும் இங்கிலாந்திற்கும் பகை உண்டாவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அக்காரணம் வியாபாரப் போட்டியால் உண்டானதாகும். ஸ்பெயின் மன்னர்க்காக கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது முதல் ஸ்பெயின் தேசத்தவர்கள் அந்நாட்டினருடன் வியாபாரத்தைச் செய்து வந்தார்கள். அவர்கள் அந்நாட்டிற்குச் சென்று வியாபாரம் செய்ய மற்ற நாட்டினர்க்குப் பாத்தியம் இல்லையென்றும் சொன்னார்கள். ஆனால் எலிஸபெத்தின் காலத்தில் ஆங்கிலவர்த்தகர்கள் வியாபாரம் செய்வதற்காக அமெரிக்காவுக்குச் செல்ல முயன்றார்கள். அதற்கு ஸ்பெயின் வர்த்தகர்கள் இடங்கொடாமையால் ஆங்கில மாலுமிகளுக்கும் ஸ்பானிஷ் (ஸ்பெயின் தேசத்து) மாலுமிகளுக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் அநேக சண்டைகள் உண்டாயின. ஆங்கில மாலுமிகள், அமெரிக்காவிலிருந்து தங்கம், வெள்ளி முதலியவைகளை ஸ்பெயினுக்குக் கொண்டுவரும்பொக்கிஷக் கப்பல்களை நடுசமுத்திரத்தில் வழிமறித்துக்கொள்ளையடித்து வந்தார்கள். ஸ்பெயினுக்கும் இங்கிலாந்திற்கும் உள்ள பகைக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

ஜான் ஹாகின்ஸ்:—எலிஸபெத் மகாராணியாரின் காலத்தில் வசித்த கடற் கொள்ளைக்காரர்களில் ஜான் ஹாகின்ஸ் ஒருவர். அவர் தம் தாயைப் போலவே அடிமை வியாபாரம் செய்து திரவியம் தேட எண்ணினார். அவர் மேற்கு ஆப்பிரிக்காவில் வசித்த கருப்பு நிறமுள்ள மனிதர்களை (நீக்ரோ ஜாதியாரை) விலைக்கு வாங்கி அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் இவைகளிலுள்ள ஸ்பானிஷ்காரர்களிடம் விற்று ஏராளமான பணத்தைச் சம்பாதித்

தார். ஹாகின்ஸ் கினியா கடற்கரைக்கு அடிமை வியாபாரம் செய்யப் பல தடவைகள் கடற்பிரயாணம் செய்தார். அடிமை வியாபாரத்தினால் அவர் ஒரு பெரிய தனவான் ஆனார். அடிமை வியாபாரத்தினால் லாபமடைந்த ஹாகின்ஸ் கி. பி. 1567-ல் மூன்றாவது தடவை அமெரிக்காவிற்கு அடிமைகள் நிறைந்த கப்பலுடன் சென்றார். மெக்ஸிகோவிலுள்ள ஒரு துறைமுகப் பட்டணத்தில் தம் அடிமைகளைக் கப்பலினின்று இறங்கும்படிச் செய்த காலத்தில் ஸ்பானிஷ் அதிகாரிகள் அவருடன் சண்டைசெய்து சில கப்பல்களை மூழ்கும்படிச்செய்தார்கள். அதோடு நில்லாமல் அவர்கள் எல்லாப் பொருள்களையும் அபகரித்துக்கொண்டார்கள். ஆனால் ஹாகின்ஸ் ஜாக்கிரதையாக ஒரு கப்பலில் ஏறி இங்கிலாந்துக்குத் திரும்பிவிட்டார். அவர் தான் அடிமை வியாபாரம் செய்யத் தொடங்கினவர்களில் முதல் மாலுமியாவர். ஹாகின்ஸ் அடிமைகளை அமெரிக்காவிலுள்ள ஸ்பானிஷ் தோட்டக்காரர்களுக்கு விற்றதால் அமெரிக்காவில் ஸ்பெயின் தேசத்தவர்கள் குடியேறி அநேக தோட்டங்களை வைத்துப் பயிராக்குவதற்கு முடிந்தது.

பிரான்ஸிஸ் ட்ரேக்:—இவ்வாறு ஸ்பானிஷ் பொக்கிஷக் கப்பல்களைக் கொள்ளையடித்து பெருந்தீமை இழைத்து வந்த கடற் கொள்ளைக்காரர்களில் ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக் (Sir Francis Drake) என்ற டெவன்ஷயர் ஆங்கில மாலுமி முக்கியமானவர். அவர் (1572) பனாமா (Panama) விற்குச் சென்று, அங்கேயுள்ள ஒரு குன்றின்மீது ஏறி பஸிபிக் மகா சமுத்திரத்தைப் பார்த்தார். அப்பொழுது அப்பெரிய சமுத்திரத்தில் தாம் கப்பற்பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஓர் ஆசை அவரது மனதில் உண்டாகியது. ஆகையால் அவர் அப்பெரிய சமுத்திரத்தில் கப்பற்பிரயாணம் செய்வதாக ஒரு சபதம் செய்துகொண்டுத் திரும்பினார். பிறகு (1577) அவர் பெலிகன் (Pelican) என்ற ஒரு கப்பலில் ஏறி உலகச் சுற்




றுப் பிரயாணத்தைச் செய்தார். அதற்குப் பிறகு ட்ரேக் மகாராணியாரால் ஆதரிக்கப்பட்டு வந்தார். அவர், (1587) பிலிப் இங்கிலாந்தைக் கைப்பற்ற நினைத்து ஒரு பெரிய கப்பற்படையைக் காடிஸ் (Cadiz) துறைமுகத்தில் வைத்திருக்கிறார் என்ற சமாச்சாரத்தைக் கேள்விப்பட்டார். உடனே அவர் சில படகுகளுடன் அத்துறையினுள் வெகு தைரியமாகச் சென்று சில கப்பல்களை எரித்தும், சில கப்பல்களை மூழ்கும்படியாகவும் செய்தார். இவ்வாறு செய்துவிட்டு அவர் இங்கிலாந்திற்குத் திரும்பிவந்து, "ஸ்பெயின் அரசரின் தாடியைப் பொசுக்கிவிட்டேன் பார்த்தீர்களா?" என்று கர்வத்துடன் கூறினார்.

ஸ்பானிஷ் ஆர்மடா:—அப்பால் (1588) பிலிப் இங்கிலாந்தை ஜயிக்க எண்ணி 132 கப்பல்கள் அடங்கிய வேறு ஒரு பெரிய கப்பற்படையைச் சேகரித்து அனுப்பினார். இப்பெரிய கப்பற்படையை எவராலும் வெல்ல முடியாது என்று எண்ணி, பிலிப் அதை வெல்ல முடியாத ஆர்மடா (Invincible Armada) என்று அழைத்தார். இக்கப்பற்படை நெதர்லாந்துக்குச் சென்று அங்கு பர்மா கோமகனாரின் தலைமையின் கீழிருந்த ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு இங்கிலாந்தின்பேரில் படையெடுக்க வேண்டும் என்பது பிலிப்பின் ஏற்பாடு.

ஆர்மடா தோல்வி யடைதல்:—பிலிப் செய்த ஏற்பாடுகளைக்கேட்டு ஆங்கிலேயர் தமது நாட்டைக் காப்பாற்ற ஒரு கப்பற்படையைச் சேகரித்து பிளிமத் (Plymouth) துறையில் வைத்திருந்தார். இக் கப்பற்படைக்குத் தலைவராய் இருந்தவர் ஹோவர்ட் பிரபு (Lord Howard) அவருக்குக் கீழிருந்து உதவிசெய்த மாலுமிகளில் ட்ரேக் ஒருவர். இப்படி ஆங்கிலேயர் போர்க்குத் தயார் செய்துகொண்டிருக்கையில், 1588-ஞு மே மாதத்தில் லிஸ்பன் (Lisbon) துறையிலிருந்து ஆர்மடா கிளம்பி, கரையோரமாக வடக்கே சென்று,

ஜூன் மாதத்தில் கோரன்னு (Corunna) துறையில் வந்து சேர்ந்தது. பிறகு அது இங்கிலீஷ் கால்வாயை நோக்கிச் சென்றது. ஹோவர்ட் பிரபு பிளிமத் துறையிலேயே தமது




படையுடன் காத்திருந்து, ஆர்மடா முன் சென்றதும் தாம் அதைப் பின்தொடர்ந்தார்.

ஆங்கில மாலுமிகள் ஆர்மடாவை எதிர்க்க ஆரம்பித்தவுடன் ஒரு பெருங்காற்று வடக்கு நோக்கி வீசிற்று. ஆகை



யால் ஸ்பானிஷ் மாலுமிகள் தங்களுடைய போர்க்கப்பல்களைத் திருப்பி எதிர்க்க முடியவில்லை. மேலும், ஆங்கிலக் கப்பல்கள் ஸ்பானிஷ் போர்க் கப்பல்களைக் காட்டிலும் சிறியவைகளானதால், ஆங்கில மாலுமிகள் தாங்கள் எதிர்க்கப்பட்ட காலத்தில் தங்களுடைய கப்பல்களை வெகு வேகமாய்ச் செலுத்தித் தப்பித்துக்கொண்டார்கள். ஆனால் இங்கிலீஷ் மாலுமிகள் ஸ்பானிஷ் போர்க் கப்பல்களில் சிலவற்றை மூழ்கும் படிக்கும், இன்னும் சில கப்பல்களை எரித்தும் தீமைகளைச் செய்தார்கள். பிறகு ஆர்மடா கலே நகரின் அருகில் சற்றுநேரம் தங்கினபோது ஒரு பெரிய கடற்சண்டை நடந்தது. அதில் ஸ்பெயின் தேசத்தவர்களுக்கு வெகு சேதம் ஏற்பட்டது. இதற்குப் பிறகு ஆர்மடா இங்கிலீஷ் கால்வாயின் வழியாகச் செல்ல முடியாமல் பிரிட்டிஷ் தீவுகளைச் சுற்றிக்கொண்டு ஸ்பெயினுக்குத் திரும்பிச் சென்றது.

பிலிப் தமது கப்பற்படை சின்னபின்னமானதை நினைத்து வருந்தினர். ஆங்கிலேயருக்கோ அளவிலா ஆனந்தம் உண்டாகியது. ஆங்கிலேயர்கள் ஆர்மடாவைத் தோற்கடித்ததால் தங்களது மதம், சுதந்தரம், நாடு இவைகளைக் காப்பாற்றிக்கொண்டார்கள். இதற்குப் பிறகு ஆங்கில மாலுமிகள் வெகு தைரியத்துடன் சமுத்திரமார்க்கமாய் அந்நிய நாடுகளுக்குச் சென்று, வியாபாரங்களைச் செய்யவும் குடியேறவும் ஆரம்பித்தார்கள்.

எலிஸபெத் அயர்லாந்தை ஜயித்தல்:—எலிஸபெத்தின் காலத்தில் அயர்லாந்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதை அடக்க எலிஸபெத், எஸக்ஸ் பிரபு (Earl of Essex) வை அயர்லாந்துக்கு ஒரு படையுடன் அனுப்பினர். அவர் சமாதானம் செய்துகொண்டு திரும்பிவிட்டார். ஆகையால், ராணியார் மௌண்ட்ஜாய் பிரபு (Lord Mountjoy) வின் கீழ் ஒரு சைன்யத்தை அயர்லாந்துக்கு அனுப்பினர். அவர் [illegible]

கலகங்களையும் அடக்கி அயர்லாந்தை ஜயித்தார். இவ்வாறு
அயர்லாந்து எலிஸபெத்தின் காலத்தில் ஜயிக்கப்பட்டது.

கேள்விகள்:—

1. எலிஸபெத்தின் குணதிசயங்களைப் பற்றிச் சுருக்கமாய்
எழுதுக.

2. எலிஸபெத் ராணியார் செய்த மத நிர்ணயம் யாது ?

3. எலிஸபெத் காலத்தில் உண்டான மூன்று மதப்பிரிவுகள்
யாவை ? அவர் எந்த மத வகுப்பைச் சேர்ந்தவர் ?

4. மேரி ராணியார் என் இங்கிலாந்துக்கு ஓட்டம் எடுத்தார்?

5. எலிஸபெத் என் மேரிக்கு உதவி செய்யவில்லை?

6. எலிஸபெத் மேரியைச் சிறையிலிட்டதால் உண்டான
கஷ்டங்கள் யாவை ?

7. ஸ்பெயினுக்கும் இங்கிலாந்துக்கும் எக்காரணங்களால்
விரோதம் ஏற்பட்டது ?

8. ஸர் பிலிப் ஸிட்னி, ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக், ஜான்
ஹாகின்ஸ் இவர்களைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

9. எக்காரணத்தினல் ஆங்கில மாலுமிகளுக்கும், ஸ்பானிஷ்
மாலுமிகளுக்கும் கடற்சண்டைகள் உண்டாயின ?

10. இரண்டாவது பிலிப் இங்கிலாந்தின்மீது படையெடுக்
கச் செய்த ஏற்பாடுகள் யாவை ?

11. ஸ்பானிஷ் ஆர்மடா சென்ற வழியைக் காட்ட ஒரு
படம் வரைக.

12. ஆர்மடாவின் தோல்விக்குக் காரணங்கள் யாவை ?

---

## அத்தியாயம் 6.

ட்யூடர் மன்னர்களின் காலத்து மக்கட்களின் நிலைமை:-
ட்யூடர் வம்சத்து மன்னர்கள் இங்கிலாந்தில் அமைதியை
பரவச்செய்து நல்ல அரசாட்சியை ஏற்படுத்தினர்கள். முதல்
இரண்டு ட்யூடர் மன்னர்களும் பிரபுக்களின் கொட்டத்தை



அடக்கித் தங்கள் அதிகாரத்தை மேன்மேலும் வளரும்படி
செய்துகொண்டார்கள். பிரபுக்களின் கொடுஞ்செயல்களைக்
கண்டு அஞ்சின சாமான்ய ஜனங்களும் ட்யூடர் மன்னர்களி
டம் அன்பும் நம்பிக்கையும் வைத்து அவர்களுக்குக் கீழ்ப்
படிந்து நடந்து வந்தார்கள். ட்யூடர் மன்னர்கள் தங்கள்
இஷ்டப்படி நாட்டை ஆண்டபோதிலும் அவர்கள் பொது
ஜனங்களின் நன்மையைக்கருதியே பலகாரியங்களைச் செய்தார்
கள். இக்காரணத்தினலும் பொது ஜனங்கள் ட்யூடர் மன்னர்
களின்மீது ஒரு குறையும் சொல்லிக்கொள்வதற்கு இடமில்லா
மல் இருந்தது. பார்லிமெண்ட் ட்யூடர் அரசர்களின் காலத்
தில் வரிகளை விதித்தும், சட்டங்களை இயற்றியும், அரசாட்சி
யில் உள்ள குறைகளை அரசர்க்கு அடிக்கடி எடுத்துக் காட்டி
யும் வந்தது. ட்யூடர் அரசர்கள் வசூலான பணத்தைச் செல
விட்டும், தேசச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்தும்
ஆட்சி புரிந்து வந்தார்கள். அநேகமாய் பார்லிமெண்ட் மகா
சபை ட்யூடர் மன்னர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்கியே
நடந்து வந்தது. ஆனல் அரசர் பார்லிமென்டின் அபிப்பிரா
யம் தமது இஷ்டத்திற்கு மாறாக இருப்பதாகத் தெரிந்து
கொண்டால் அதன் அபிப்பிராயத்தின்படி நடப்பார்.

அரசர்க்கு ராஜீய விஷயங்களில் ஆலோசனை கூறுவதற்கு
மந்திரிகள் இருந்தார்கள். ஆனல் அவருடைய இரண்டு
காரியதரிசிகளுந்தான் சகல காரியங்களையும் நடத்தி வந்தார்
கள். மேலும் ட்யூடர் மன்னர்களுக்கு ராஜீய காரியங்களில்
ஆலோசனை கூறுவதற்காக ஒரு மந்திரி சபையும் உண்டு. இச்
சபையில் ஏறக்குறைய இருபது மெம்பர்கள் இருந்தார்கள்.
அரசர்கள் அடிக்கடி இச்சபையைக்கலந்து ஆலோசனைகேட்ட
போதிலும் அவர்கள் தங்கள் இஷ்டப்படியே காரியங்களைச்
செய்து வந்தார்கள். இச்சபையோர்களும் அரசர்களின்
அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஒன்றும் செய்வதில்லை.

ட்யூடர் மன்னர்கள் ஒரு நிலைத்த சைன்யமும் வைத்துக் கொள்ளவில்லை. சேனையின் உதவியின்றி அவர்கள் நாட்டில் அமைதியை நிலவச் செய்தார்கள். நாட்டின் பாதுகாப்பிற்காக சேனையின் உதவி வேண்டிய காலங்களில் அவர்கள் போர்த் தொழிலை அறிந்த குடிகள் போர்வீரர்களாக சேனையில் அமர்ந்து போர் புரியும்படி செய்துவந்தார்கள். சேனையைத் தவிர இங்கிலாந்தின் பாதுகாப்பிற்கு ஒரு கப்பற்படையும் அவசியம் வேண்டும் என்பதை ட்யூடர் மன்னர்கள் தங்களது அதிபுத்தி நுட்பத்தினால் உணர்ந்தார்கள். எட்டாவது ஹென்றியின் காலத்தில் 'Great Harry' என்ற ஒரு பெரும் போர்க் கப்பல் கட்டப்பட்டது. இங்கிலாந்தில் கடற்கரை நாடுகளில் கப்பல் கட்டும் தொழில் மேன்மேலும் விருத்தி அடைந்து வந்தது. எலிஸபெத் மகாராணியாரின் காலத்தில் இங்கிலாந்திற்குச் சொந்தமாய் அநேக போர்க்கப்பல்கள் இருந்தன. ஹாகின்ஸ், ட்ரேக் முதலான சிறந்த மாலுமிகள் இருந்தார்கள். ஆகையால்தான் ஸ்பானிஷ் ஆர்மடாவினால் இங்கிலாந்திற்கு ஆபத்து நேர்ந்த காலையில் ஆங்கிலேயர்கள் தங்களது கப்பற்படையின் உதவியால் தங்களுடைய நாட்டையும், பிராடெஸ்டன்ட் மதத்தையும் பாதுகாத்துக் கொண்டார்கள்.

வர்த்தகம்:—ஆர்மடாப் போரில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றி உண்டானதால் இங்கிலாந்திற்கு கடல் ஏகாதிபத்தியம் ஏற்பட்டது. கடல் வலிமை உண்டானவுடன் ஆங்கில மாலுமிகள் கடல் மார்க்கமாய் அயல் நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்யவும், குடியேறவும் தொடங்கினார்கள். கி. பி. 1600-ல் லண்டன் நகரத்து வியாபாரிகளில் சிலர் இந்தியாவுடன் வியாபாரம் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு வர்த்தகச் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டனர். அதற்குக் கிழக்கு இந்தியக் கம்பெனி என்று பெயர். இக்கம்பெனி வியாபாரிகள் பெரிய கப்பல்களைக் கட்டிக்கொண்டும் சிறந்த மாலுமி



களின் உதவியைக் கொண்டும், இந்தியாவின் மேற்குக் கரையிலும், கிழக்கு இந்தியத் தீவுகளிலும் வியாபாரம் செய்து வந்தார்கள். தவிர ரஷ்யாவுடன் வியாபாரம் செய்வதற்கு ஆங்கிலேயர்கள் ஒரு வர்த்தகச் சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். ரஷ்யாவிற்கு அக்காலத்தில் மஸ்கோவி தலைநகராய் இருந்த காரணத்தினால் அதற்கு 'மஸ்கோவி' கம்பெனி என்று பெயர்.

கல்வி:—எட்டாவது ஹென்றியின் காலத்தில் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் கிரீக், லத்தீன் பாஷைகளில் அதிக தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் இருந்தார்கள். அவர்களுள் இராஸ்மஸ், மோர், ஜான் காலட் முக்கியமானவர்கள். பதினைந்தாவது நூற்றாண்டிலேயே புத்தகங்கள் அச்சிடும் முறை கண்டுபிடிக்கப்பட்டதால் அநேக புத்தகங்கள் சொற்பகாலத்தில் வெளியிடுவதற்கு முடிந்தன. ஸர் தாமஸ் மோர், 'யுடோபியா' என்ற ஒரு புத்தகத்தை எழுதினார். பிறகு பைபிள், ஜபப் புத்தகம் ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்து எழுதப்பட்டன. எலிஸபெத் மகாராணியாரின் காலத்தில்தான் ஆங்கில கலைஞர்கள் அநேக புத்தகங்களைச் செய்யுள் நடையில் இயற்றினார்கள். எட்மெண்ட் ஸ்பென்ஸர் என்ற ஆங்கிலேயர் 'Fairy Queen' என்ற புத்தகத்தை செய்யுள் நடையில் வெளியிட்டார். அப்புத்தகத்தால் அவருக்கு என்றும் அழியாக் கீர்த்தி உண்டாகியது. எலிஸபெத்தின் காலத்தில் மார்லோ, வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற இரண்டு கவிகளும் அநேக நாடகங்களை இயற்றினார்கள். அநேக நாடகசாலைகளும் இங்கிலாந்தில் பல இடங்களில் கட்டப்பட்டன. டாமர்லேன் என்பவரைப்பற்றி கிரிஸ்டபர் மார்லோ கி. பி. 1587-ல் ஒரு நாடகம் எழுதியுள்ளார். ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர்கள் நாடகக் கவிகளுள் முதன்மையானவர் (கவிச் சக்கரவர்த்தி) என்று கருதுகின்றனர். அவரால் ஆங்கில பாஷையில் எழுதப்பட்

டுள்ள நாடகங்கள் உயர்தரக் கலாசாலைகளில் பாடமாக வைக்கப்பட்டு வருகின்றன. அதே காலத்தில் ஸர் பிரான்ஸிஸ் பேகன் என்ற ஒரு ஆங்கிலேயர் அநேக அருமையான வியாசங்களை இனிமையாகவும், தெளிவாகவும் உள்ள நடையில் எழுதியிருக்கின்றார். அவ்வியாசங்களை ஆங்கிலேயர்கள் மிக அருமையானவை என்று கருதுகின்றார்கள். ராணியாரின் காலத்தில் எழுதப்பட்டுள்ள புத்தகங்கள் எல்லாம் வசன நடையில் இருந்தாலும் சரி செய்யுள் நடையில் இருந்தாலும் சரி அவைகள் ஆங்கிலேயர்களுடைய தைரியத்தையும் விடா முயற்சியையும் தேச அபிமானத்தையும் தெரிவிக்கின்றன.

| முக்கிய நிகழ்ச்சிகள். | | வருஷங்கள். |
|---|---|---|
| நட்சத்திர அறை நியாயஸ்தலம் | ,, | 1487 |
| உல்ஸி சான்ஸலர் பதவியை அடைந்தது | ,, | 1514 |
| பொன்னுடைச் சமவெளிச் சந்திப்பு | ,, | 1620 |
| உல்ஸியின் மரணம் | ,, | 1529 |
| சர்ச் தலைமைச் சட்டம் | ,, | 1534 |
| கலே நகர் இழக்கப்பட்டது | ,, | 1558 |
| சர்ச் தலைமைச் சட்டம் இரண்டாம் முறை பிறப்பிக்கப்பட்டது | ,, | 1559 |
| மேரியின் சரணம் | ,, | 1568 |
| மேரியின் மரணம் | ,, | 1587 |
| ட்ரேக் ஸ்பானிஷ் போர்க் கப்பல்களை காடிஸ் துறைமுகத்தில் எரித்து விடுதல் | ,, | 1588 |
| ஆர்மடா தோல்வி யடைந்தது | ,, | 1588 |

கேள்விகள்:—

1. ட்யூடர் மன்னர்களின் ஆட்சி முறையைப் பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.

2. இங்கிலாந்தின் வாணிபம் எலிஸபெத்தின் காலத்தில் மேன்மேலும் பெருகினதற்கு என்ன காரணம்?

3. எலிஸபெத் மகாராணியாரின் காலத்தில் சிறப்புடன் விளங்கின கவிகளும் கலைஞர்களும் யாவர்?

---

# VIII. ஸ்டூவர்ட் அரசர்களின் காலம்.

(கி. பி. 1603—கி. பி. 1714)

## அத்தியாயம் 1.

### முதலாவது ஜேம்ஸ் (1603—1625)

**ஜேம்ஸ் இங்கிலாந்தின் மன்னர் ஆனது:**—எலிஸபெத்துக்குப் பிறகு ஸ்காட்லாந்து அரசியான மேரியின் புதல்வரான ஜேம்ஸ் ஆங்கில மகுடத்திற்கு நெருங்கின பாத்தியஸ்தரானதால் அவரே ஆங்கில வேந்தரானார். அவர் ஸ்டூவர்ட் வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் ஏற்கனவே ஸ்காட்லாந்தை ஆட்சி புரிந்து வந்தார். இவ்வாறு ஸ்காட்லாந்தும் இங்கிலாந்தும் ஒரே அரசரின் ஆட்சிக்கு உட்பட்டன. ஆனால் இத்தேசங்களின் பார்லிமெண்ட்களும், சர்ச்களும், சட்டங்களும் வெவ்வேறாக இருந்து வந்தன. அவர் ஸ்காட்லாந்தில் ஆறாவது ஜேம்ஸ் என்றும், இங்கிலாந்தில் முதலாவது ஜேம்ஸ் என்றும் அழைக்கப்பட்டார்.

**ஜேம்ஸின் குணாதிசயங்கள்:**—ஜேம்ஸ் கல்வியில் மிகத் தேர்ச்சியுள்ளவராயினும் விவேகி அல்லர். அவர் தமது இஷ்டப்படி ஆள விரும்பினார். ஆனால் அவருக்கு நாட்டை ஆளும் திறமை கொஞ்சமேனும் இல்லை. அவருக்கு மூர்க்கத்தனமும் பிடிவாதமும் அதிகம். மேலும் அவர் சுயநலம் பாராட்டுபவர். இத்தகைய குணங்கள் வாய்ந்த ஜேம்ஸ் பொது ஜனங்களின் அன்பை எவ்வாறு அடைய முடியும்?

**வெடிமருந்துச் சதி (1605):**—ஜேம்ஸ் கதோலிக் மதத் தலைவியான மேரியின் புதல்வரானதால் தமக்கு சாதகமாக மத மாறுபாடுகளைச் செய்வாரென்று ஆங்கில கதோலிக்குகள்

எண்ணியிருந்தார்கள். ஆனால் அவர் எலிஸபெத்தின் மத நிர்ணய ஏற்பாட்டையே அனுஷ்டிப்பது என்று தீர்மானம் செய்துவிட்டார். ஆகையால் சில கதோலிக்குகள் அதிருப்தியினால் ஒரு சதியைச்செய்ய எண்ணினார்கள். அவர்கள் பிரபுக்களின் சபைகூடும் மாளிகையின்கீழ் உள்ள அறைகளை வாடகைக்கு வாங்கி, அவைகளில் வெடிமருந்து நிறைந்த பீப்பாய்களைக் கொண்டுபோய் நிறப்பினார்கள். பார்லிமெண்ட் கூடும் சமயத்தில் வெடிமருந்துக்குத் தீ வைத்து ஜேம்ஸையும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களையும் ஒழிக்க கதோலிக்குகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். கை பாக்ஸ் (Guy Fawkes) என்ற ஒரு போர்வீரன் வெடிமருந்துக்குத் தீவைப்பது என்றும் ஏற்பாடு ஆயிருந்தது. இச்சதியில் சம்பந்தப்பட்ட ஒரு கதோலிக் தன் உறவினரும் பிரபுக்கள் சபை மெம்பருமான மாண்டீகல் பிரபுக்கு பார்லிமெண்ட் சபைக்குப் போகவேண்டாம் என்று ஒரு கடிதம் எழுதினான். அதனால் பார்லிமெண்ட் கூடும் தினத்தில் வெடி மருந்துச்சதி (Gunpowder plot) வெளியாகிவிட்டது. கைபாக்ஸ் வெடிமருந்துக்குத் தீ வைக்கப் போகும் சமயத்தில் பிடிக்கப்பட்டான். அதில் சம்பந்தப்பட்ட எல்லா கதோலிக்குகளும் தண்டிக்கப்பட்டார்கள். இதற்குப் பிறகு ஜேம்ஸ் கதோலிக்குகளுக்கு விரோதமாய் அநேக கடினமான சட்டங்களைப் பிறப்பித்தார்.

அல்ஸ்டர் மாகாணத்தில் ஆங்கிலேயர்கள் குடியேறுதல்:— முதலாவது ஜேம்ஸ் சிங்காதனம் ஏறினபொழுது அயர்லாந்து ஆங்கில வேந்தரின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. ஆயினும் அயர்லாந்தியர்கள் ஆங்கில அரசாட்சியிடம் விரோதம் பாராட்டி வந்தார்கள். ஆகையால் இங்கிலாந்து மன்னர் தமது சேனையின் பலத்தினால் அயர்லாந்தியர்களை அடக்கி ஆண்டு வந்தார். கி. பி. 1609-ல் டைரோன் பிரபு அயர்லாந்தில் ஒரு கலகம் செய்தார். அது ஆங்கிலேயர்களால் அடக்



கப்பட்டவுடன் அப்பிரபு அயர்லாந்திலிருந்து ஓடிவிட்டார். அரசாங்கத்தார் உடனே அவருடைய நிலங்களைப் பிடுங்கி அயர்லாந்தில் குடியேற விரும்பின இங்கிலீஷ் பிராடெஸ்டன்ட்களுக்குக் கொடுத்தார். ஆனதால் அநேக இங்கிலீஷ் பிராடெஸ்டன்ட்கள் அயர்லாந்தின் வடபாகத்திற்குச் சென்று கி. பி. 1611-ல் குடியேறத் தொடங்கினார்கள். அயர்லாந்தின் இதர பாகங்களில் உள்ளவர்கள் கதோலிக் மதத்தினர்கள் ஆகையால் அவர்களுக்கும் வட அயர்லாந்தில் குடியேறின இங்கிலீஷ் பிராடெஸ்டன்ட்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நேரிட்டுக் கொண்டே வந்தன.

ப்யூரிட்டன் யாத்திரிகள்:-இம்மாதிரி கதோலிக்குகள் கஷ்டப்படுகையில், ப்யூரிட்டன்கள் "ஜேம்ஸ் பிராடெஸ்டன்ட் நாடான ஸ்காட்லாந்திலிருந்து வந்தபடியால் அவர் ப்யூரிட்டன் கட்சிக்குச் சாதகமாய்ச் சில மதமாறுபாடுகளைச் செய்வார்" என்று எண்ணினார்கள். ஆனால் ஜேம்ஸ் ஆங்கிலிகன் கட்சியிற் சேர்ந்துகொண்டார். இதைக்கண்ட ஆங்கில ப்யூரிட்டன்களின் அநேகர் தம்மிஷ்டப்படி தெய்வ ஆராதனை செய்யச் சுதந்தரம் கிடைக்காது என்று எண்ணி இங்கிலாந்தை விட்டு வேறு நாடுகளுக்குச் செல்வது என்று தீர்மானித்தனர். ஆகையால் சில ப்யூரிட்டன்கள் ஹாலந்துக்குப் போய் சிறிது காலம் தங்கி, பிறகு அங்கிருந்து மேப்ளவர் (Mayflower) என்ற ஒரு கப்பலில் ஏறிக்கொண்டு அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து வட அமெரிக்காவின் கீழ்கரையில் குடியேறினார்கள். இம்மாதிரி அமெரிக்காவிற்குச் சென்று குடியேறினவர்களே ப்யூரிட்டன் யாத்திரிகள் (Pilgrim Fathers) என்று பெயர் பெற்றார்கள்.

ஜேம்ஸூம் பார்லிமென்டுகளும்:—ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்ததுமுதல், அவருக்கும் அவரது பார்லிமென்டுகளுக்கும்

அநேக விவாதங்கள் நேரிட்டுக்கொண்டே யிருந்தன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஜேம்ஸ் பார்லிமெண்டின் அனுமதியின்றித் தமது இஷ்டப்படி வரிகளைப் போட்டும், தம்முடைய விரோதிகளைச் சிறையிலிட்டும் வந்தார். மேலும், அவர் தமக்கு இதமாகப் பேசுவோரின் சொற்களைக் கேட்டு ஆண்டுவரலானார். அவர்களுள் முக்கியமானவர் பக்கிங்கம் பிரபு (Duke of Buckingham) வாகிய ஜார்ஜ் வில்லியர்ஸ் (Georgo Villiers) என்பவர். மேலும், ஜேம்ஸ் 'கடவுள் உரிமை' என்ற ஒரு விநோதமான கொள்கையைப் பின்பற்றி வந்தார்; அஃது "அரசர் தெய்வத்தன்மை வாய்ந்தவர்; அவர் தமது இஷ்டப்படியே ஆட்சியை நடத்தலாம்; அவரது அதிகாரத்தை ஒருவரும் மறுக்கக்கூடாது' என்பது. இக்கொள்கையை பார்லிமெண்ட் சபையோர் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனது பற்றி ஆங்கிலேயர்கள் ஜேம்ஸ் மன்னரை வெறுததார்கள்.

ஜேம்ஸும் முப்பது வருஷப் போரும்:—பின்னர் (1618) ஜர்மனியில் கதோலிக்குகளுக்கும் பிராடெஸ்டண்ட்களுக்கும் முப்பது வருஷப் போர் (Thirty Years War) ஆரம்பித்தது. ஜர்மனியக் கதோலிக்குகள் ஜேம்ஸின் மாப்பிள்ளையான பிரெடரிக் (Frederick) என்பவரை பாலடிநேட் (Palatinate) என்ற அவரது மாகாணத்தை விட்டுத் துரத்தி விட்டார்கள். ஆனதுபற்றி அவர் ஜேம்ஸைத் தமக்கு உதவி புரியும்படி வேண்டினார். ஆனால் ஜேம்ஸ் "ஜர்மனியக் கதோலிக்குகளுக்கு விரோதமாய்த் தமது மாப்பிள்ளைக்கு உதவி செய்தால் ஸ்பெயின் அரசரின் கோபம் ஏற்படும்' என்று எண்ணிச் சும்மாயிருந்து விட்டார். இதைக் கண்ட ஆங்கிலப் பார்லிமெண்ட் கோபமடைந்தது. இது இவ்வாறு இருக்கையில், ஜேம்ஸ் ஸ்பெயின் மன்னரின் நேசத்தை அடைய விரும்பி தமது மூத்தப் புதல்வரான சார்ல்ஸுக்கு ஸ்பெயின் ராஜகுமாரத்தியை விவாகம் செய்து



கொள்வதற்கு முயற்சிகள் செய்தார். ஆனால் அம் முயற்சிகளெல்லாம் வீணாயின.

கேள்விகள்:—

1. முதலாவது ஜேம்ஸுக்கு ஆங்கில மகுடத்திற்கு உள்ள உரிமையை வம்சாவளியின் மூலமாய்க் காட்டுக.
2. ப்யூரிட்டன் யாத்திரிகள், பக்கிங்காம் பிரபு இவர்களைப் பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.
3. வெடி மருந்துச் சதி எக்காரணத்தினால் உண்டாகியது? அஃது எவ்வாறு முடிந்தது?
4. ஜேம்ஸுக்கும் பார்லிமெண்டுகளுக்கும் எக்காரணங்களினால் விவாதங்கள் உண்டாயின?

## அத்தியாயம் 2.

### முதலாவது சார்ல்ஸ் (1625—1649)

சார்ல்ஸும் பக்கிங்காம் பிரபுவும்:—முதலாவது ஜேம்ஸ் (1625) இறக்கவே, அவருடைய புதல்வரான சார்ல்ஸ் பட்டத்திற்கு வந்தார். அவர் தமது தோழரான பக்கிங்காம் பிரபுவின் சொற்களைக் கேட்டே ஆண்டு வந்ததால் பார்லிமெண்டுக்கு அவரிடத்தில் வெறுப்பு உண்டாகியது. ஆனால் சார்ல்ஸ் தாம் ஸ்பெயினுடன் தொடுத்த போரின் செலவிற்குப் பணம் வேண்டியிருந்ததால் பார்லிமெண்டைக் கூட்டினார். அது சொற்பப் பணத்தைச் செலவு செய்ய அனுமதி கொடுத்தது. பிறகு சார்ல்ஸ் பார்லிமெண்டின் அனுமதியின்றித் தமது இஷ்டப்படி குடிகளின் மேல் வரி விதித்து பணத்தை வசூல் செய்தார். பார்லிமெண்டார் வெகு கோபமடைந்து, மறு முறை சார்ல்ஸ் பணம் கேட்கும்போது "பக்கிங்காம் பிரபு[illegible] நேசத்தை ஒழித்தால் வேண்டிய அளவு பணம் கொ[illegible]

கூடும்'' என்று சொன்னார்கள். சார்லஸ் இதற்கு உடன்படவில்லை. ஆனதுபற்றி அவர் வெகு கோபத்துடன் பார்லிமென்டைக் கலைத்துவிட்டார்.

உரிமை விண்ணப்பம் (1628):—அதற்குப் பிறகு சார்லஸ் பிரான்ஸுடன் போர் புரிய வேண்டியிருந்தது. இதற்கு வேண்டிய பணத்தைப் பெறும்பொருட்டு சார்லஸ் (1628) மூன்றும் தடவை பார்லிமென்டைக் கூட்டினார். அச்சபை, அரசர் தமது இஷ்டப்படி குடிகளின்மேல் வரி விதித்ததைக் கண்டு கோபம் அடைந்து, உரிமை விண்ணப்பம் (Petition of Right) ஒன்றை எழுதி அவரிடம் கொடுத்து அதை அங்கீகரிக்கும்படி செய்தது. அதில் கண்ட நிபந்தனைகளாவன:—"(1) பார்லிமென்டின் அனுமதியின்றி எவ்வித வரியையும் அரசர் தமது இஷ்டப்படி குடிகளின்மீது விதித்தல் கூடாது. (2) அரசர் சரியான விசாரணையின்றி எவரையும் தமது இஷ்டப்படி சிறையிலிடுவது கூடாது. (3) அரசர் போர்வீரர்களைக் குடிகளின் வீடுகளில் பலவந்தமாய் வைத்தல் கூடாது.'' சார்லஸ் இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு அப்பத்திரத்திலே தமது கையொப்பத்தைச் செய்தார்.

கப்பற் பணம்:—மறுவருஷமே சார்லஸ் உரிமை விண்ணப்பத்தின் நிபந்தனைகளை மீறி நடக்கத் தொடங்கினார். அவர் பார்லிமென்டைக் கூட்டாமலே பதினொரு (1629—1640) ஆண்டுகள் தமது இஷ்டப்படி ஆட்சிபுரிந்தார். அவர் 'இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு குடியும் தமக்குக் கப்பற் பணம் (Ship Money) கொடுக்கவேண்டும்'' என்று உத்தரவிட்டார். இந்த வரி பார்லிமென்டின் அனுமதியைப் பெறாமல் அரசரால் விதிக்கப்பட்டது. ஆகையால் ஜனங்களில் அநேகர் 'இவ்வரியை விதித்தது நியாயமானதல்ல' என்று கருதி வெகு



தைரியத்துடன் அதைக் கொடுக்க மறுத்தனர். அவ்வாறு ஆண்மையுடன் மறுத்தவர்களில் ஜான் ஹாம்ப்டன் (John Hampden) என்பவர் ஒருவர். ஆனதுபற்றி சார்லஸ் அவரை வரி கொடாததற்குச் சிறையிலிடும்படி செய்தார்.

சார்லஸின் துன்மந்திரிகள்:—சார்லஸ் பார்லிமென்டின் உதவியின்றிப் பதினொரு வருஷகாலம் தமது இஷ்டப்படி அரசாளுவதற்கு உதவி புரிந்தவர்கள் இரண்டு மந்திரிமார்கள். அவர்களில் ஒருவரான வென்ட்வர்த் (Wentworth) ராஜ்ய விஷயங்களிலும், மற்றொருவரான வில்லியம் லாட் (William Laud) என்னும் காண்டர் பரி ஆர்ச்பிஷப் மதவிஷயங்களிலும் அநீதியான காரியங்களைச் செய்துவந்தார்கள். வென்ட்வர்த் சேனையின் உதவியால் குடிகளைப் பயமுறுத்தி அரசரின் அதிகாரத்தை அதிகப்படுத்தினார். ஸ்காட்டிஷ் (ஸ்காட்லாந்திய) சர்ச்சுகளில் பிஷப்கள் நியமனம் செய்யப்படவேண்டுமென்றும், அவர்களை மத விஷயங்களில் அதிகாரிகள் ஆக்கவேண்டுமென்றும் லாட் முயன்றார். அதனால் அந்நாட்டினர் சார்லஸின்மீது போர் செய்யத் தொடங்கினர். இந்தப் போருக்கு "பிஷப்கள் போர்" (Bishops War) என்று பெயர். இதில் சார்லஸ் தோல்வியடைந்தார்.

நீடித்த பார்லிமென்ட் (1640):-இப்போருக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு சார்லஸ் (1640) பார்லிமென்டைக் கூட்டினார். இச்சபைக்கு நீடித்த பார்லிமென்ட் (Long Parliament) என்று பெயர். ஏனென்றால் இச்சபை இருபது வருஷகாலம் (1640—1660) அதிகாரம் பெற்று இருந்தது. இந்தப் பார்லிமென்டை விட அதிகப் புகழ் பெற்ற பார்லிமென்ட் இதுவரையில் கூடினதேயில்லை. அச்சபை "அரசர் குடிகளிடமிருந்து கப்பற்பணம் வாங்கினது தேசச் சட்டத்திற்கு விரோதமானது'' என்று தீர்மானம் செய்தது. அது வென்ட்வர்த், லாட் என்ற இரண்டு [illegible]

மந்திரிகளையும் முதலில் சிறையிலிட்டு, பிறகு அவர்களைக் கொலை செய்துவிடும்படி செய்தது. மேலும், அது நட்சத்திர அறை நீதிஸ்தலத்தை ஸ்டூவர்ட் அரசர்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டமையால் அதையும் அழித்துவிட்டது. சார்ல்ஸ் மறுபடியும் பார்லிமென்டைக் கூட்டாமல் தமது இஷ்டப்படி ஆளமுடியாமற் செய்ய எண்ணி மூன்று வருஷத்திற்கு ஒருதரம் பார்லிமென்ட் தவறாமல் கூட்டப்பட வேண்டும் என்ற ஒரு சட்டத்தையும் பிறப்பித்தது.

மகா எச்சரிக்கைப் பத்திரமும் பார்லிமேன்டின் ஐந்து மெம்பர்களை அரசர் சிறையிலிட முயன்றதும்:—மேற்கூறியவைகளைத் தவிர, சார்ல்ஸ் பட்டத்திற்கு வந்தது முதல் அவர் செய்த அடாத செயல்களையெல்லாம் நீடித்த பார்லிமென்ட் கண்டனம் செய்தது. சார்ல்ஸின் அடாத செய்கைகள் எழுதப்பட்டுள்ள பத்திரத்திற்கு "மகா எச்சரிக்கைப் பத்திரம் (The Grand Remonstrance) என்று பெயர். சார்ல்ஸ் இதைக்கேட்டு வெகு கோபம் அடைந்து, அப்பத்திரத்தை எழுதும்படி செய்தவர்களில் ஐந்து பேர்களைச் சிறையிலிட உத்தேசித்து ஒரு பெரிய படையுடன் பார்லிமென்ட் கூடும் இடத்திற்கு வந்தார். இதையறிந்த ஐவர்களும் அரசற்குப் பயந்து ஓடிவிட்டனர். சார்ல்ஸ் [illegible]ம், அவர்களைக் காணாது திகைத்து நின்று, "அப்பட்சிகள் பறந்துவிட்டனவோ? என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றார். இச்செய்தியைக் கேட்ட லண்டன் நகரவாசிகள் அரசரை வெறுத்தார்கள். உடனே பார்லிமென்ட் கூடி, 'தேசத்தின் சேனைகளெல்லாம் தனது அதிகாரத்திற்கு உட்பட்டது' என்று ஒரு சட்டத்தைப் பிறப்பித்தது. இதற்குப்பிறகு சார்ல்ஸ் லண்டனை விட்டு ஓடிவிட்டார்.

உள்நாட்டுப் பெரும்போர் (1642—1649):—இங்கிலாந்தின் வடபாகத்திலும் மேற்குப் பாகத்திலும் உள்ள ஜனங்கள்



அரசரின் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். ஆனால் இங்கிலாந்தின் தென்பாகத்திலும் கீழ்ப்பாகத்திலும் உள்ள ஜனங்கள் பார்லிமென்டின் கட்சியிற் சேர்ந்தார்கள். பிரபுக்களில் அநேகர் அரசரது கட்சியில் சேர்ந்தனர். ஆனால் பட்டணங்களில் வசித்துவந்த சாமானிய ஜனங்களும், கிராமவாசிகளும் பார்லிமென்டின் கட்சியிற் சேர்ந்துகொண்டார்கள். ஆங்கிலிகன்கள் அரசரின் கட்சியிலும் ப்யூரிட்டன்கள் பார்லிமென்டின் கட்சியிலும் சேர்ந்துகொண்டார்கள். இம்மாதிரி இங்கிலாந்தில் அரசரின் கட்சியென்றும், பார்லிமென்டின் கட்சியென்றும் இரண்டு பெரிய கட்சிகள் ஏற்பட்டு இவ்விரு கட்சியினருக்கும் போர் நடந்தது. இதைத்தான் உள்நாட்டுப் பெரும்போர் (Civil War) என்று சொல்லுகிறோம். இந்தப் போர் "ராஜீய விஷயங்களில் அரசர்க்கு அதிகாரம் அதிகமா? பார்லிமென்டுக்கு அதிகாரம் அதிகமா?" என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியிருந்தது. அரசர் கட்சியினர் குதிரை வீரர் (Cavalier) என்றும், பார்லிமென்ட் கட்சியினர் உருண்டைத் தலைவர் (Roundhead) என்றும் அழைக்கப்பட்டனர்.

எட்ஜ்ஹில் சால்க்ரோவ் சண்டைகள்:—சார்ல்ஸ் (1642) ஆக்ஸ்பர்டு நகரில் கொஞ்சகாலம் இருந்து ஒரு சேனையுடன் லண்டன் நகரைக் கைப்பற்றிவந்தார். அப்பொழுது எட்ஜ்ஹில் (Edgehill) என்னும் இடத்தில் அரசரின் சேனையும் பார்லிமென்டின் படையும் சந்தித்துப் போர் புரிந்தன. அதில் எந்தக்கட்சி ஜயம் பெற்றது என்பது நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. மறுவருஷத்தில் சால்க்ரோவ் (Chalgrove) என்னும் இடத்தில் ஒரு பெரிய சண்டை நடந்தது. இச்சண்டையில் பார்லிமென்டின் சேனைத் தலைவரான ஹாம்ப்டன் * வெகு ஆண்மையுடன் போர் புரிந்து இறந்தார். ஆனால்

* இவர்தான் கப்பற்பணம் கொடுக்க மறுத்தவர்.


இச்சண்டையில் எந்தக் கட்சியினர் வெற்றியடைந்தார் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை.

**பார்லிமெண்டார் ஸ்காட்லாந்தியருடன் உடன்பாடு செய்து கொள்ளுதல்:**—பார்லிமெண்ட் ஸ்காட்லாந்துடன் (1644) ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டது. அதன்படி ஸ்காட்லாந்தியர் பார்லிமெண்டின் கட்சிக்கு உதவிபுரிவது என்றும், அதற்குப் பதிலாக ஆங்கிலேயர் தங்களுடைய சர்ச்சை ஸ்காட்லாந்திலுள்ள பிரெஸ்பிடீரியன் சர்ச்சைப்போலச் செய்வது என்றும் ஏற்பட்டது. இதற்குப் பிறகு ஸ்காட்லாந்தியர்கள் ஒரு பெரிய சேனையை இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள்.

**ஆலிவர் க்ராம்வெல்லும் புதுமாதிரிப் படையும்:**—இச்சமயத்தில் நீடித்த பார்லிமெண்டில் கேம்பிரிட்ஜ் நகரின் பிரதிநிதியாக ஆலிவர் க்ராம்வெல் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எட்டாவது ஹென்றியின் காலத்திலிருந்த தாமஸ் க்ராம்வெல் என்பவருடைய வெல்ஷ் மருமகனின் சந்ததியைச் சேர்ந்தவர். அவர் இங்கிலாந்தின் கிழக்குப்பாகத்திலுள்ள ஜில்லாக்களில் 'கீழ் நாட்டார்களின் சங்கம்' ஒன்றை ஸ்தாபித்து நடத்தி வந்தார். அவர் ப்யூரிட்டன் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஒரு சிறந்த தளகர்த்தர். அவர் தேக வலிமையுள்ளவர்களைப் பொறுக்கி அவர்களுக்கு நல்ல யுத்தப் பயிற்சி கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். க்ராம்வெல்லின் சேனையிலுள்ள போர்வீரர்கள் சிகப்புக்கவசம் பூண்டார்கள். இச்சைன்யத்தையே "புதுமாதிரிப் படை (New Model Army) என்று சொல்லுகிறோம். இங்கிலாந்தின் கீழ்த்திசை மாகாணங்களிலிருந்து தமது புதுமாதிரிப் படையுடன் க்ராம்வெல் வடதிசையை நோக்கிச் சென்றார். க்ராம்வெல்லின் சேனையும் ஸ்காட்லாந்தியரின் படையும் சேர்ந்து அரசரின் சைன்யத்துடன் போர்புரியத் தயாராயிருந்தன.



**மார்ஸ்டன்மூர் நேஸ்பி சண்டைகள்:**-பின்னர் (1614) யார்க். நகருக்கு அருகிலுள்ள மார்ஸ்டன்மூர் (Marston Moor) என்னுமிடத்தில் ஒரு சண்டை நடந்தது. இதில் க்ராம்வெல்




ஸ்காட்லாந்தியரின் உதவியாலும் தம்முடைய சேனையின் திறமையாலும் அரசரின் கட்சியாரைத் தோற்கடித்தார். மறு வருஷத்தில் க்ராம்வெல்லின் புதுமாதிரிப் படை அரசரின் சேனையை நேஸ்பி (Naseby) என்னுமிடத்தில் சந்தித்

து தோற்கடித்தது. பிறகு சார்லஸ் வேறொரு சேனையைக் கூட்ட முடியாததால் ஸ்காட்லாந்தியரிடத்தில் தஞ்சம் புகுந்தார்.

**சார்லஸ் கொலை செய்யப்படல் (1649):**—பிறகு ஸ்காட்லாந்தியர் சார்லஸ் மன்னரை ஆங்கில ப்யூரிட்டன்களிடம் ஒப்படைத்தனர். இச்சமயத்தில் பார்லிமெண்டில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. ஒரு கட்சியாருக்கு இண்டிபெண்டன்ட்கள் (Independents) என்று பெயர். இக்கட்சியின் தலைவர் க்ராம்வெல். மறு கட்சியாருக்கு பிரெஸ்பிடீரியன்கள் என்று பெயர். சார்லஸ் இவ்விரு கட்சிகளுக்கும் உள்ள பகையை அதிகப்படுத்த முயன்றார். இதை யறிந்த இண்டிபெண்டன்ட்கள் அரசரைக் கொன்றுவிடத் தீர்மானித்தார்கள். ஆகையால் அரசர் செய்த குற்றங்களை விசாரிக்க ஒரு நியாயசபை ஏற்படுத்தப்பட்டது. சார்லஸ் அச்சபையோரின் கேள்விகளுக்கு சரியான விடை கொடாததால் அவரது தலையை வெட்டிவிடும்படி அச்சபை உத்தரவிட்டது. அதன்படி சார்லஸ் தமது சொந்த அரண்மனைக்கு வெளியில் (1649) சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**கேள்விகள்:—**

1. உரிமை விண்ணப்பத்தை என் ஆங்கிலேயர் முக்கியமானதாகக் கருதுகின்றனர்? அதன் ஷரத்துகள் யாவை?

2. ஜான் ஹாம்ப்டன், வில்லியம் லாட், வென்ட்வர்த் இவர்களைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

3. நீடித்த பார்லிமெண்டின் செய்கைகள் யாவை?

4. உள்நாட்டுப் பெரும்போர் எக்காரணங்களால் ஏற்பட்டது? அப்போரில் நிகழ்ந்த முக்கிய சண்டைகள் யாவை?

5. உள்நாட்டுப் பெரும்போரில் யாருக்கு வெற்றி ஏற்பட்டது? என்?

---



## அத்தியாயம் 3.

---

### இங்கிலாந்தில் குடியரசு ஏற்பட்டது. (1649—1660)

**ரம்ப் குடியரசை ஸ்தாபித்தல்:**—உள் நாட்டுப் போர்
முடிந்தவுடன், நீடித்த பார்லிமெண்டின் அங்கத்தினர்களின்
சங்கியை குறைந்துகொண்டே வந்தது. எஞ்சிய நபர்கள் அடங்
கிய பார்லிமெண்ட் ரம்ப் (Rump) பார்லிமெண்ட் என்று
அழைக்கப்பட்டது. அது பிரபுக்கள் சபையை ஒழித்து
விட்டு, க்ராம்வெல்லின் உதவியினால் இங்கிலாந்தில் குடியரசை
(Commonwealth) ஸ்தாபித்தது. பிறகு ரம்ப் இங்கி
லாந்தை நான்கு வருஷங்கள் (1649-1653) ஆண்டு வந்தது.

**அயர்லாந்தியர் குடியரசை ஒப்புக்கொள்ளல்:**—இங்கி
லாந்தில் ஏற்படுத்தப்பட்ட குடியரசை அயர்லாந்தியர் ஒப்புக்
கொள்ளாததால், க்ராம்வெல் ஒரு பெரிய சேனையுடன் அயர்
லாந்தில் வந்திறங்கினர். அவர் கதோலிக்குகளையும் அரசர்
கட்சியினரையும் தோற்கடித்து ட்ரோகீடா (Drogheda),
வெக்ஸ்பர்ட் (Wexford) என்ற இரண்டு இடங்களையும்
முற்றுகை செய்து கைப்பற்றிக்கொண்டார். அதனால் அயர்
லாந்தியர் குடியரசை ஒப்புக்கொண்டனர். இதற்குப் பிறகு
அயர்லாந்தில் கதோலிக்குகளுக்குக் கஷ்டம் அதிகரிக்கவே
அநேகர் தமது நாட்டை விட்டு அன்னிய தேசங்களுக்குச்
சென்றனர். க்ராம்வெல் கதோலிக்குகளுடைய நிலங்களைப்
பிடுங்கி அவைகளைப் ப்ரிட்டன்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்
தார். அதனால் அவர்கள் வெகு காலம் வரையில் ஆங்கிலேயர்
களை வெறுத்தார்கள்.


**ஸ்காட்லாந்தியர் குடியரசை ஒப்புக்கொள்ளல்:**—க்ராம்
வெல் அயர்லாந்திலிருந்து திரும்பிவந்தவுடன், அவர் ஒரு
பெரிய சேனையோடு ஸ்காட்லாந்தின்மீது படையெடுத்தார்.
ஏனெனில் அவர்கள் சார்லஸ் இளவரசரை வரவழைத்து

இரண்டாவது சார்ல்ஸ் என முடிசூட்டினார்கள். க்ராம்வெல் ஸ்காட்லாந்திய சேனையைச் சந்தித்து டன்பார் (Dunbar) என்னும் இடத்தில் (1650) முறியடித்தார். ஆனால் சார்ல்ஸ் இளவரசர் ஒரு சேனையுடன் வட இங்கிலாந்தின்மீது படையெடுத்தார். அவர் குடியரசை வெறுத்த ஆங்கிலேயர்கள் தமது கட்சியில் சேர்த்துக்கொள்வார்கள் என்று எண்ணினார். அவர் நினைத்தபடி ஆங்கிலேயர்கள் அவரது கட்சியில் சேரவில்லை. க்ராம்வெல் ஊர்ஸ்டர் (Worcester) என்னுமிடத்தில் (1651) இளவரசரது சேனையைச் சந்தித்துத் தோற்கடித்தார். இதன் பின் சார்ல்ஸ் மாறுவேஷம் பூண்டு ஐரோப்பாவிற்கு ஓடிப்போய் விட்டார். க்ராம்வெல் இச்சண்டையில் அடைந்த வெற்றிக்காக வருஷா வருஷம் 4000 பவுனையும், அவர் ஆயுட்காலம் வரையில் வசிக்கும்படி ஹாம்ப்டன் கோர்ட் மாளிகையையும் பார்லிமென்ட் அவருக்கு அளித்தது. க்ராம்வெல் போர்க்களத்தில் மடிந்த போர்வீரர்களைப் பார்த்தவுடன் பச்சாத்தாபம் அடைந்து, தாம் இனிமேல் போர் புரிவதில்லை என்ற ஒரு சபதம் செய்தார்.

க்ராம்வெல் டச்சுக்காரருடன் போர்புரிதல்:—இவ்வாறு ஸ்காட்லாந்தும் அயர்லாந்தும் குடியரசை ஏற்றுக்கொண்ட பிறகு, இங்கிலாந்துக்கும் ஹாலந்துக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. பதினேழாவது நூற்றாண்டின் முன் பாதியில் டச்சுக்காரர்கள் அன்னிய தேசங்களோடு வியாபாரம் செய்து அதிக லாபத்தை அடைந்து வந்தார்கள். மேலும் அவர்கள் பிறநாட்டுச் சாமான்களை சமுத்திர மார்க்கமாய் எடுத்துச் சென்று அதற்காகக் கூலியையும் அடைந்தார்கள். இதைக்கண்ட ஆங்கில வீரரான க்ராம்வெல் ஆங்கில வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டும் என்றும் ஆங்கில கப்பற்படைக்குச் சிறப்பும் வலிமையும் உண்டாக்கவேண்டுமென்றும் எண்ணினார். டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் பிராடெஸ்டன்ட்



களாய் இருந்தபோதிலுங்கூட வியாபாரப் போட்டியினால் தான் இப்போர் ஏற்பட்டது. ஆகையால் க்ராம்வெல், டச் வியாபாரத்தை அழிக்க எண்ணி (1651) ரம்ப் பார்லிமென்டை ஒரு சட்டத்தைப் பிறப்பிக்கும்படி செய்தார். இச்சட்டத்திற்குக் 'கப்பற் போக்குவரத்துச் சட்டம்' (Navigation Act) என்பது பெயர். அதன்படி ஆங்கிலேயர்கள் தங்கள் கப்பல்களிலாவது அல்லது எந்த நாடுகளிலிருந்து சாமான்கள்



இங்கிலாந்துக்கு வருகின்றனவோ அந்நாடுகளின் கப்பல்களிலாவது சாமான்களைப் பிறநாடுகளுக்கு அனுப்பவேண்டுமென்றும் அந்நாடுகளிலிருந்து அடையவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இதற்குப் பிறகு டச் வியாபாரம் குறைய ஆரம்பித்தது. டச்சுக் கப்பலுக்குச் சமுத்திர மார்க்கமாய் எடுத்துச்

செல்ல சாமான்கள் இல்லாமற்போயின. ஆகையால் டச்சுக்காரர்கள் வியாபாரத்தினால் ஏற்படும் லாபத்தையும், சாமான்களைக் கடல் மார்க்கமாய் எடுத்துச் செல்வதனால் கிடைக்கும் கூலியையும் இழந்தார்கள். இதனால் அவர்களின் கடல்வலிமையும் தொலைந்துவிடும்போல் தோன்றியது. இக்காரணங்களினால் டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் (1652) போர் ஆரம்பித்தது. க்ராம்வெல், பிளேக் (Blake) என்ற மாலுமியை ஆங்கில கப்பற்படைத் தலைவராக (Admiral) நியமனம் செய்தார். ப்ளேக் டச் அட்மிரலான வான் ட்ராம்ப் (Van Tromp) என்பவரை ஒரு கடற்சண்டையில் தோற்கடித்தார். இந்தப் போரினால் இங்கிலாந்துக்குக் கடல் வலிமை ஏற்பட்டது.

**க்ராம்வெல்லும் இதர நாடுகளும்:**—பிறகு க்ராம்வெல் ஸ்பெயின் நாட்டாருடன் போர் செய்தார். ஸ்பெயின் ஒரு கத்தோலிக் நாடானபடியால், பிராடெஸ்டண்ட் மத வீரரான க்ராம்வெல் போர் செய்து மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றாகிய ஜமைக்கா (Jamaica) வை ஜயித்தார். மேலும், அவர் பிரான்ஸ் அரசரான பதினான்காவது லூயியுடன் போர்புரிந்து டங்கர்க் (Dunkirk) நகரையும் அடைந்தார். இங்கிலாந்து பிரான்ஸுடன் போர் புரிவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, பதினான்காவது லூயி ஒரு கத்தோலிக் அரசராகையால் அவர் பிராடெஸ்டண்ட்களைக் கொடூரமாய் நடத்தி வந்தார் என்பது. இரண்டாவது, லூயி சார்லஸ் இளவரசர்க்கு உதவி செய்து அவரை ஆங்கில மன்னராக்க முயன்றார் என்பது. க்ராம்வெல் தமது விரோதிகளைச் சண்டையில் தோற்கடித்தும் கலகங்களை அடக்கியும் இங்கிலாந்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவந்தார்.

**ரம்ப் பார்லிமேண்ட் கலைக்கப்பட்டது:**—க்ராம்வெல் ரம்ப் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு ஒரு புதிய பார்லிமெண்டைக் கூட்ட விரும்பினார். ஒரு நாள் அவர் சில போர் வீரர்களுடன்



சபாமண்டபத்துக்குள் சென்று ரம்ப் பார்லிமெண்டின் அங்கத்தினர்களைப் பார்த்து, 'வெளியிற் செல்லுங்கள் உங்களைக் காட்டிலும் தகுதியுள்ளவர்களுக்கு நீங்கள் இடம் கொடுக்க வேண்டும்' என்று வெகு கோபத்துடன் சொன்னார். பிறகு அவர் பார்லிமெண்டின் அக்கிராசனாதிபதி (Speaker) யைச் சுட்டிக்காட்டி 'அவரைக் கீழே இறங்கி வரும்படி செய்யுங்கள். அவர் கையிலுள்ள செங்கோலைப் பிடுங்கி எறியுங்கள்'' என்று தம் போர்வீரர்களிடம் கோபத்துடன் கூறவே, அச்சபையார் நடுநடுங்கி ஒருவர்பின் ஒருவராக வெளியே சென்றனர். பிறகு க்ராம்வெல் கதவைப் பூட்டித் தமது சட்டைப் பையில் சாவியைப் போட்டுக்கொண்டார். இச்செய்தியைக் கேட்ட ஒரு பிரெஞ்சுக்காரர், "ஒரு நாய் கூடக் குரைக்கவில்லை. இச்சபாமண்டபத்தைச் சாமான்கள் அன்னியில் வாடகைக்கு விட்டுவிடலாம்'' என்று பிரெஞ்சுக்காரர்கள் பரிகசித்தாராம்.

**க்ராம்வெல் தேச ரக்ஷகப் பிரபுவாதல்:**—இவ்வாறு 'ரம்ப்' பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு, க்ராம்வெல் பார்லிமெண்டின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார். இப்புதிய பார்லிமெண்டில் 460 அங்கத்தினர்கள் இருந்தார்கள். இச்சபைக்கு அயர்லாந்திலிருந்து முப்பது பிரதிநிதிகள் அனுப்பப்பட்டார்கள். இம்மாதிரியாக க்ராம்வெல் பிரிட்டிஷ்த் தீவுகள் முழுவதுக்கும் ஒரே பார்லிமெண்ட் இருக்கும்படி செய்தார். இச்சபை, க்ராம்வெல்லைத் 'தேச ரக்ஷகப் பிரபு' என்ற பட்டத்துடன் இங்கிலாந்தைச் சர்வ அதிகாரத்தோடு ஆண்டுவரும்படி செய்தது. ஆனால் சிலகாலஞ் சென்றபின், அவர் பார்லிமெண்டு சபையுடன் சண்டைபோட்டு அதையும் கலைத்துவிட்டார். இதற்குப் பிறகு க்ராம்வெல் பார்லிமெண்டைக் கூட்டாமல் தமது இஷ்டப்படி சேனையின் பலத்தினாலேயே இங்கிலாந்தை ஆண்டுவந்தார். முதலாவது சார்லஸ் பார்லிமெண்டின் இஷ்டப்படி நடக்காததால் அவரைச் சிரச்சேதம் செய்ய

ஏற்பாடு செய்த அந்த க்ராம்வெல் என்பவரே பார்லிமென்டின் இஷ்டப்படி நடக்கச் சம்மதியாமல் அதைக் கலைத்துவிட்டுச் சேனையின் உதவியால் ஆண்டுவரலானார் என்ற விஷயம் இங்கு குறிப்பிடத்தக்கது!

க்ராம்வெல்லின் ஆட்சி:—க்ராம்வெல் இங்கிலாந்தைப் பத்து ஜில்லாக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் மேஜர் ஜெனரல் (Major-General) என்னும் இராணுவ அதிகாரியை ஏற்படுத்தி ஆண்டுவரும்படி செய்தார். ஆனதுபற்றி இந்த ஆட்சியை ஒருவகையில் இராணுவ ஆட்சி என்று கூறலாம். அவர் ப்யூரிட்டன் ஆகையால் கதோலிக்குகளுக்கும் ஆங்கிலிகன்களுக்கும் அவர் அவர்களது இஷ்டப்படி கடவுளைத் துதிக்க இடங்கொடுக்கவில்லை. ஆனால் ப்யூரிட்டன்கள் மட்டும் எல்லா விஷயங்களிலும் சுதந்தரம் பெற்றார்கள்.

க்ராம்வெல்லின் மரணம்:—இவ்வாறு க்ராம்வெல் பிரிட்டிஷ்த் தீவுகளைச் சர்வ அதிகாரத்துடன் ஆண்டுவிட்டு (1658) இறந்தார். பிறகு அவரது புதல்வரான ரிச்சர்ட் தேசரக்ஷகப் பிரபுவானார். அவருக்குச் சிறிதும் திறமையில்லாததால் ப்யூரிட்டன் சேனை அவருக்கு அடங்காமல் இருந்தது. பிறகு அது ரிச்சர்டை நீக்கிவிட்டு ரம்ப் பார்லிமென்டைக் கூட்டி அதற்குச் சர்வ அதிகாரத்தையும் கொடுத்தது. கொஞ்சகாலத்திற்குப் பிறகு சேனைக்கும் ரம்ப் பார்லிமென்டுக்கும் சண்டை உண்டாயிற்று. இவ்வாறு இங்கிலாந்தில் ஓர் அரசரில்லாமல் குழப்பம் ஏற்பட்டு, "இங்கிலாந்தை ரம்ப் பார்லிமென்ட் அரசாளுவதா? அல்லது இராணுவச்சேனை அரசாளுவதா? என்று ஒரு வழியும் புலப்படாமல் ஆங்கிலேயர் தவித்துக் கொண்டிருந்தனர்.

மீட்சி:—இச்சமயத்தில் க்ராம்வெல்லினால் ஸ்காட்லாந்தில் முன்பு வைக்கப்பட்டிருந்த ஒரு சேனையின் தலைவராகிய மங்க் (Monk) தமது சேனையுடன் லண்டன் நகருக்கு வந்



தார். பிறகு அவர் நீடித்த பார்லிமென்டைக் கூடும்படி
செய்து அதைத் தாமே கலைந்துகொள்ளும்படி செய்தார்.
பிறகு மங்க் கன்வென்ஷன் (Convention) * என்ற ஒரு
சபையைக் கூட்டி, அதன் அபிப்பிராயத்தைத் தெரிந்து
கொண்டு சார்ல்ஸ் இளவரசரை ஆங்கில மன்னராகவேண்டு
மென வேண்டிக்கொண்டார். சார்ல்ஸ் ஆங்கிலேயரின் வேண்டு
கோளுக்கு இணங்கி (1660) டோவர் (Dover) நகரில் தம்மு
டைய பரிவாரங்களுடன் வந்து இறங்கினார். இம்மாதிரி குடி
யரசு ஒழிந்தது. ஸ்டூவர்ட் வம்சத்தைச் சேர்ந்த சார்ல்ஸும்
ஆங்கில மன்னரானார். இவ்வாறு குடியரசு ஒழிந்து ஸ்டூவர்ட்
வம்சத்தவர்கள் இங்கிலாந்தில் மீண்டும் அதிகாரம் பெற்றதை
மீட்சி (Restoration) என ஆங்கிலேயர் கூறுவர்.

குடியரசு மீட்சிக்காலத்திய கல்வி:—முதலாவது சார்ல்ஸ்
தம் சிரசை இழந்தபின் இங்கிலாந்தில் அரச குடும்பத்தாரி
டம் ஆங்கிலேயர்களுக்கு இரக்கம் உண்டாயிற்று. ரம்ப் பார்லி
மென்ட் இங்கிலாந்தில் ஆளத்தொடங்கினதும் ஜான்மில்டன்
என்ற ஒருவர் ராஜாங்க சபைக்குக் காரியதரிசியாக இருந்தார்.
அவர் லண்டன் நகரத்து ஒரு வியாபாரியின் புதல்வர். அவர்
ஒரு பெரிய கவி; ப்யூரிட்ட மதத்தில் அபிமானம் உள்ள
வர். அவர் Paradise Lost, Paradise Regained,
Samson Agonistes முதலிய செய்யுட்களை இயற்றியவர்!
ராஜாங்க முறையைப் பற்றி அவர் அநேக துண்டுப் பிரசுரங்
களை வெளியிட்டார். ஸ்டூவர்ட் வம்சத்து அரசர்கள் கி. பி.
1660 - ல் மீண்டும் இங்கிலாந்தை ஆளத்தொடங்கினதும்
ஜான்மில்டன் தம் கண் பார்வையை இழந்ததாலும் குடும்

* கன்வென்ஷன்—பொது ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை.

பார்லிமென்ட்—அரசரால் கூட்டப்படும் பிரதிநிதிகளின் சபை.

பத் தொந்தரவுகளாலும் பொதுஜன வாழ்க்கையில் கலக்க
வில்லை. ஆனல் அவர் இப்பொழுதுதான் Paradise
Lost என்ற ஒரு பெரிய காவ்யத்தை எழுதினர்.

இரண்டாவது சார்லஸின் காலத்தில் இங்கிலாந்தில் ட்ரைடன் (Dryden) என்ற ஒரு கவி சிறப்புற்று விளங்கினர். அதே காலத்தில் பாப்டிஸ்ட் வகுப்பைச் சேர்ந்த ஒரு மதப்பிரசங்கி ராஜாங்க முறையைக் கண்டித்து கிளர்ச்சியை உண்டாக்கியதால் பெட்பர்ட் சிறையில் 12 வருஷங்கள் அடைக்கப்பட்டார். அவர் பெயர் ஜான் பன்யன். அவர் சிறைச்சாலையில் தாம் கைதியாக இருக்கும் காலத்தில் தேசாந்திரியின் யாத்திரை (Pilgrim's Progress) என்ற பிரசித்தி பெற்ற ஒரு புத்தகத்தை எழுதினர்.

கேள்விகள்:—

1. 'ரம்ப்' குடியரசை இங்கிலாந்தில் எவ்வாறு ஸ்தாபித்தது?

2. க்ராம்வெல் அயர்லாந்தியரையும் ஸ்காட்லாந்தியரையும் குடியரசை ஒப்புக்கொள்ளும்படி எவ்வாறு செய்தார்?

3. ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் எக்காரணத்தினல் போர் உண்டாயிற்று? அஃது எவ்வாறு முடிந்தது?

4. க்ராம்வெல்லின் காலத்தில் ஆங்கிலேயருக்கும் இதர நாட்டார்களுக்கும் உள்ள சப்பந்தம் எப்படி?

5. க்ராம்வெல் 'ரம்ப்' பார்லிமெண்டை எவ்வாறு கலைத்தார்?

6. க்ராம்வெல் ரக்ஷகப்பிரபுவாக எவ்வாறு இங்கிலாந்தை ஆட்சி புரிந்தார்?

7. இங்கிலாந்தில் 'மீட்சி' எக்காரணத்தினல் ஏற்பட்டது? எவ்வாறு?

8. குடியரசு மீட்சிக் காலங்களில் சிறப்புடன் விளங்கின கவிகள் யார்?

---

## அத்தியாயம் 4.

### இரண்டாவது சார்லஸ் (1660—1685)

சார்லஸின் குணாதிசயங்கள்:—சார்லஸ் ஆங்கிலேயரின்
வேண்டுகோளுக்கு இணங்கி (1660) ஆங்கில பட்டத்திற்கு
வந்தார். அவர் ஸ்டூவர்ட் வம்சத்து அரசர்களுள் மிகவும்
கெட்டிக்காரர். ஆனல் அவர் சுயநலம் பாராட்டிக் கொண்டும்
சிற்றின்பங்களிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டும்
வந்தாரே தவிர இங்கிலாந்தை நன்றாக அரசாளவில்லை.

மீட்சியின் பயன்கள்:—தாம் பட்டத்திற்கு வந்தவுடன்,
சார்லஸ் தமது தந்தைக்கு விரோதமாய்ப் போர் செய்தவர்க
ளில் அனேகரை மன்னித்தார். பிறகு அவர் க்ராம்வெல்லி
னல் ஏற்படுத்தப்பட்ட சேனையைக் கலைத்துவிட்டார்; ஆனல்
இரண்டொரு படைகளை மட்டும் இங்கிலாந்தின் பாதுகாப்
புக்காக இருக்கும்படி செய்தார். இது முதலாகத்தான் இங்
கிலாந்தில் நிலையான ராணுவம் (Standing Army) ஏற்பட்
டது. இன்னும், சார்லஸ் ஸ்காட்லாந்தும் அயர்லாந்தும்
தனித்தனியே பார்லிமெண்ட் சபையை வைத்துக்கொள்ள
உத்தரவிட்டார். ஆகவே, க்ராம்வெல் செய்த காரியங்க
ளெல்லாம் ரத்து செய்யப்பட்டன. மேலும், சார்லஸ் சர்ச்
களில் பிஷப்களை நியமனம் செய்து எலிஸபெத் காலத்தில்
இங்கிலாந்தில் சர்ச் எந்த நிலைமையில் இருந்ததோ அந்த
நிலைமையிலேயே இருக்கும்படி செய்தார்.

ப்யூரிட்டன்களின் சங்கடம்:—இந்த மத ஏற்பாடுகள்
ப்யூரிட்டன்களுக்கு அதிருப்தியையும், கோபத்தையும் உண்
டாக்கின. ஆகையால் அவர்கள் ஆங்கிலிகன் சர்ச்சிலிருந்து
விலகிக்கொண்டு, தாங்கள் ஆராதனை செய்வதற்காகச் சிறிய
கோவில்களைக் கட்டிக்கொண்டார்கள். இவர்களுக்கு டிஸ்

ஸெண்டர்கள் (Dissenters) இணங்காதவர்கள்—என்பது பெயர். சார்ல்ஸ் அவர்களைத் தண்டிக்க எண்ணி சில கொடிய சட்டங்களைப் பிறப்பித்தார். இவைகளுக்கு மீறி நடந்த ப்யூரிட்டன்களில் அநேகர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் 'தேசாந்தரியின் தீர்த்த யாத்திரை' என்ற மிகப் பிரசித்தி பெற்ற புத்தகத்தை எழுதின ஜான் பன்யன் (John Bunyan) என்பவர் ஒருவர். ஆயிரக்கணக்கான ப்யூரிட்டன்கள் இங்கிலாந்தில் தமது இஷ்டப்படி தெய்வ ஆராதனை செய்ய முடியாமையால் அமெரிக்காவிற்குக் குடியேறச் சென்றூர்கள்.

**சார்ல்ஸும் பதினான்காவது லூயியும்:**—சார்ல்ஸ் இளம் பிராயத்தில் பிரான்ஸில் வளர்ந்து வந்ததால் அவர் பிரெஞ்சு மன்னரின் சிநேகத்தை அடைந்திருந்தார். பதினான்காம் லூயி ஐரோப்பா முழுவதையும் ஜயித்து ஆளவேண்டுமென்ற பேராசையுள்ளவர். இவர் கதோலிக் மத வீராகையால் டச்சுக்காரர்கள்பேரில் போர் புரிந்தார். இச்சமயத்தில் லூயியின் அதிகாரத்தை ஒடுக்க ஆங்கிலேயர் மற்ற பிராடெஸ்டன்ட் நாடுகளுடன் சிநேக உடன்பாடுகளைச் செய்துகொண்டனர். ஆனால், சார்ல்ஸ் பார்லிமென்டுக்குத் தெரியாமல் லூயியுடன் இரகசியமாக டோவர் நகரில் ஒரு சிநேக உடன்பாடு (Secret Treaty of Dover) செய்து கொண்டனர். இதன்படி சார்ல்ஸ் தாம் கதோலிக் மதத்தைத் தழுவுவதாயும், அம்மதம் இங்கிலாந்தில் ஓங்கி வளர இடங்கொடுப்பதாயும் வாக்களித்தார். க்ராம்வெல்லினால் கைப்பற்றப்பட்ட டங்கர்க் நகரை லூயியிடம் சொற்பப் பணத்தைப் பெற்றுக் கொண்டு விற்றுவிட்டார். இவ்விஷயங்களை அறிந்த ஆங்கிலேயர் தமது அரசரை வெறுத்தனர்.

**சார்ல்ஸும் டச்சுக்காரர்களும்:**—க்ராம்வெல் காலம் முதல் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயரின் முக்கிய விரோதிகளா



யிருந்து வந்தார்கள். கப்பற் போக்குவரத்துச் சட்டத்தினால் டச்சுக்காரர்களின் வியாபாரம், செல்வாக்கு, அதிகாரம் எல்லாம் குறைந்துகொண்டே வந்தன. சார்ல்ஸ் பட்டத்திற்கு வந்ததும் அவர்கள் (1665) இங்கிலாந்தின்பேரில் படையெடுக்கலாயினர். பார்லிமென்ட் சார்ல்ஸுக்கு அவர்களுடன் போர்புரிய ஏராளமான பணத்தைக் கொடுத்தது. டச்சுக்காரர்கள் தங்களுடைய கப்பல்களில் தேம்ஸ் நதியின் வழியாகச் சென்று, மூன்று பெரிய ஆங்கிலப் போர்க் கப்பல்களை எரித்தார்கள்.

**சோதனைச் சட்டம் (1673):**—டோவர் இரகசிய உடன்பாட்டுக்குப் பிறகு சார்ல்ஸ் ஆங்கில கதோலிக்குகளிடம் அன்பு பாராட்டி வருவதைக்கண்டு, பார்லிமென்ட் சோதனைச் சட்டம் (Test Act) ஒன்றைப் பிறப்பித்துச் சார்ல்ஸ் மன்னரை அதற்குச் சம்மதிக்கும்படி செய்தது. அதன்படி கதோலிக்குகளுக்குத் துரைத்தன உத்தியோகங்கள் இல்லையென்று ஏற்பட்டது. சார்ல்ஸின் இளைய சகோதரரும் யார்க் கோமகனுமான ஜேம்ஸ் இச்சட்டத்திற்குச் சம்மதிக்காததால் அட்மிரல் பதவியை ராஜிநாமா செய்து விட்டார். அவரைப்போல் இன்னும் மற்ற கதோலிக்குகளும் தங்களுடைய உத்தியோகங்களை ராஜிநாமாக் கொடுத்தார்கள்.

**ஹேபியஸ் கார்பஸ் ஆக்ட்:**—மந்திரிப் பதவியில் இருந்து வந்த டான்பி பிரபுவின் அதிகாரம் கி. பி. 1678-ல் ஒழிந்தது. மறுவருஷத்தில் (கி. பி. 1679-ல்) கூடின பொதுஜன சபையில் ஷாப்ட்ஸ்பரி பிரபு முதன்மை பெற்று விளங்கினர். அவர் பொதுஜன சபையில் குற்றங்கள் செய்த ஆங்கிலேயர்களை அரசர் தமது இஷ்டப்படி சிறையில் அடைக்கவும் இதர தண்டனைகளை விதிக்கவும் கூடாமற் செய்ய நினைத்து ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதற்கு ஆங்கில பாஷையில் ஹேபியஸ் கார்பஸ் ஆக்ட்

(Habeas Corpus Act) என்று பெயர். அதில் தீமைகள் இழைத்து வந்த ஆங்கிலேயர்கள் நியாயஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டு விசாரணை செய்யப்படவேண்டும் என்று காணப்பட்டது. இந்த மசோதாவை பொது ஜன சபையும் பிரபுக்கள் சபையும் அங்கீகரித்துவிட்டது. அரசரும் அதில் கையொப்பமிட்டார். இவ்வாறு அந்த மசோதா சட்டமாகி விட்டது. இது முதற்கொண்டு ஆங்கில வேந்தர், தமது விரோதிகளை நீதிஸ்தலங்களில் சரியான விசாரணை செய்யப்படாமலும் அவர்கள்மீது உள்ள வழக்கு விசாரிக்கப்படுகையில் அவர்கள் நீதிஸ்தலத்துக்குக் கொண்டுவரப்படாமலும், தம் இஷ்டப்படி தண்டனை விதிப்பதற்கு முடியாமற் போயிற்று. பொது ஜனங்களின் சுயேச்சையை வளர்க்கக் கூடிய ஒரு சட்டமானதால், இது ஆங்கில பார்லிமெண்டாரால் இயற்றப்பட்டுள்ள மிக முக்கியமான சட்டங்களுக்குள் ஒன்று ஆகும்.

விலக்குமசோதாவும்,ராஜியக்கட்சிகள் பிறந்ததும் (1683):- சார்ல்ஸுக்குப் புதல்வரில்லையாதலால் அவருடைய தம்பியான ஜேம்ஸ்தான் பட்டத்திற்கு உரியவராய் இருந்தார். இதையறிந்த ஆங்கில பிராடெஸ்டன்ட்கள் அவர் கதோலிக் ஆனதால் ஆங்கிலிகன் மதத்தை ஒழித்துவிடுவார் என்று அஞ்சினார்கள். ஆனதுபற்றி அவர்கள் ஜேம்ஸை ஆங்கிலப் பட்டத்துக்கு வரவொட்டாமல் தடுக்க, ஷாப்ட்ஸ்பரி பிரபுவைப் பார்லிமெண்டில் ஒரு மசோதாவைக் கொண்டு வரும்படி செய்தார்கள். அதற்கு விலக்கு மசோதா (Exclusion Bill) என்று பெயர். சார்ல்ஸ் தம்மால் இயன்ற வரையில் அம்மசோதா சட்டமாகாதபடி முயற்சி செய்தார். பொது ஜன சபை அம்மசோதாவை அங்கீகரித்தபோதிலும் பிரபுக்கள் சபை அதைத் தள்ளிவிட்டது. ஆயினும் அம்மசோதாவைப் பார்லிமெண்டில் கொண்டுவந்த பிறகுதான் அச்சபை



யில் இரண்டு ராஜியக் கட்சிகள் ஏற்பட்டன. அந்த மசோதாவை ஆதரித்த கட்சிக்கு விக் (Whig) என்றும், அதை எதிர்த்த கட்சிக்கு டோரி (Tory) என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன.

கொடிய ப்ளேக் நோயும் பயங்கரமான தீயும்:—சார்ல்ஸின் ஆட்சியில் இரண்டு துக்ககரமான செய்திகள் நடந்தன. அவைகள் ப்ளேக் நோயும் பயங்கரமான தீயும் ஆகும்.



ப்ளேக் நோய் லண்டன் நகரில் (1665) பரவிற்று. அதனால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாண்டார்கள். மறு வருஷத்தில் ஒரு கொடிய தீ அந்நகரில் எங்கும் பரவி ஆயிரக்கணக்கான வீடுகளையும் அநேக தேவாலயங்களையும் எரித்துவிட்டது. இவ்வாறு எரிக்கப்பட்ட கோவில்களில் ஸெண்ட் பால்ஸ் கோவில் (St. Paul's Cathedral) ஒன்றாகும். இத்தீயினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்திற்கும் பொருள் சேதத்திற்கும் ஓர் எல்லை கிடையாது. ஆயினும்,

இப்பயங்கரமான தீயினால் ப்ளேக் பூச்சிகள் மடிந்ததால் ப்ளேக் நோய் முற்றிலும் ஒழிந்தது. பழய மரவீடுகள் இருந்த இடங்களில் அழகான செங்கற்கட்டடங்கள் கட்டப்பட்டன.

கேள்விகள்:—

1. மீட்டியின் பயன்கள் யாவை?

2. எக்காரணங்களால் ஹாயிடம் ஆங்கிலேயர்களுக்கு விரோதம் உண்டாயிற்று?

3. சோதனைச் சட்டம் ஏன் பிறப்பிக்கப்பட்டது? அதன்படி என்ன ஏற்பட்டது?

4. ராஜ்யக் கட்சிகள் இங்கிலாந்தில் எவ்வாறு பிறந்தன? அவைகளின் பெயர்கள் என்ன?

5. பயங்கரமான தீயினால் உண்டான நன்மைகள் யாவை?

6. ஹாபியஸ் கார்பஸ் ஆக்ட் எக்காரணத்தினால் ஒரு முக்கியமான சட்டம் ஆகும்?

---

## அத்தியாயம் 5.

### இரண்டாவது ஜேம்ஸ். (1685—1688.)

**ஜேம்ஸ் சிங்காதனம் ஏறுதல்:**—சார்ல்ஸுக்குப் பிறகு அவரது தம்பியான ஜேம்ஸ் சிங்காதனம் ஏறினார். அவர் கதோலிக் மதப்பிரியர். டோரிக்கட்சியார்கள் இவ்வரசரின் பட்சத்தில் இருந்தார்கள். அக்கட்சியினர் பார்லிமெண்டில் வலிமையுள்ளவராதலால் அச்சபை ஜேம்ஸுக்கு வாழ்நாள் முழுவதும் செலவிற்கு வைத்துக் கொள்ளும்படி ஏராளமான பணத்தைக் கொடுத்தது. அதற்குப் பதிலாக ஜேம்ஸ் சர்ச் உரிமைகளைப் பாதுகாப்பதாக வாக்களித்தார். அதனால் அவர் தமது இஷ்டப்படி கதோலிக் மதத்தைத் தழுவ அனுமதி பெற்றார்.



**மான்மத் கலகம்:**—ஜேம்ஸ் சிங்காதனம் ஏறின வருடத்திலேயே இரண்டாவது சார்ல்ஸின் கள்ள மனைவியின் புதல்வரான மான்மத் கோமகனார் ஆங்கில மகுடத்துக்கு உரிமை கொண்டாடிக்கொண்டு ஒரு சைன்யத்துடன் வந்து இறங்கினார். அச்சேனை பிரிஸ்டல் நகரை நோக்கிச் சென்றது. பிறகு ஆங்கில வேந்தரின் சைன்யம் அதை ஸெட்ஜ்மோர் என்ற விடத்தில் தோற்கடித்தது. மான்மத் கோமகனார் பயத்தினால் ஓடி ஒளிந்துக்கொண்டார். பிறகு அவர் தமது விரோதிகளினால் பிடிக்கப்பட்டு சிரசாக்கினை செய்யப்பட்டார். இக்கலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ராஜதுரோகிகள் எனக் கருதப்பட்டு அதிகக் கொடுமையான தண்டனைகளைப் பெற்றார்கள். இக்கொடிய தண்டனைகளை கலகக்காரர்களின் மீது விதித்தவர் ஜேப்ரீஸ் (Jeffreys) என்ற ஒரு நியாயாதிபதி. அவர் அரசாங்க விரோதிகளின்மீது கொடிய தண்டனைகளை விதித்ததால் அரசருடைய அன்பை அடைந்ததோடு பிரபுப் பட்டத்தையும் பெற்றார்.

**ஜேம்ஸ் கதோலிக்குகளை ஆதரித்தல்:**—ஜேம்ஸ் கதோலிக் மதத்தில் அபிமானம் உள்ளவராதலால் அவர் சோதனைச் சட்டத்தை ரத்து செய்து கதோலிக்குகளுக்கு உயர்ந்த பதவிகளை அளிக்க முயன்றார். ஆனால் பார்லிமெண்ட் அச்சட்டத்தை ரத்து செய்யச் சம்மதிக்கவில்லை. ஆகையால் ஜேம்ஸ் கதோலிக்குகளுக்கு உத்தியோகங்கள் கொடுக்க வேறு வழி தேடினார். அவர் பார்லிமெண்டினால் பிறப்பிக்கப்பட்ட எந்தச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வராதபடி செய்யவும், சில காலத்திற்கு ரத்து செய்யவும் தமக்கு அதிகாரமுண்டு என்று கூறினார். இவைகளை ஆங்கில பாஷையில் Suspending and Dispensing Powers என்பார்கள். பார்லிமெண்டார் இதைக்கேட்டு வியந்தார்கள். இவ்வதிகாரங்களின்படி ஜேம்ஸ் சோதனைச் சட்டத்திற்கு விரோதமாய்க் கதோலிக்குகளை உயர்ந்த பதவிகளுக்கு நியமனம் செய்தார். அவர் பிராடெஸ்டண்ட்

சர்ச்சுகளிலும் சர்வ கலாசாலைகளிலும் கதோலிக்குகளுக்கு உயர்ந்த பதவிகளைக் கொடுத்தார்.

போறுமை விளம்பரமும் ஏழு பிஷப்களும்:—இவ்வாறு ஜேம்ஸ் கதோலிக்குகளை ஆதரித்த பிறகு, அவர் டிஸ்ஸெண்டர்கள் தங்களது இஷ்டப்படி தெய்வ ஆராதனை செய்தால் அதைத் தாம் பொறுத்துக்கொள்வதாக ஒரு விளம்பரம் செய்தார். இதற்குப் "போறுமை விளம்பரம்", (Declaration of Indulgence) என்பது பெயர். டிஸ்ஸெண்டர்களின் அன்பை அடையவேண்டும் என்பது ஜேம்ஸின் நோக்கம். இந்த விளம்பரம் பிராடெஸ்டன்ட்களுக்கு அநுகூலமாய் இருந்தபோதிலும், அவர்கள் அதைப் பார்லிமென்டினல் பிறப்பிக்கப்படாதது என்று கூறி அங்கீகரிக்க மறுத்தார்கள். என்றாலும், ஜேம்ஸ் 'இந்த அறிக்கை எல்லா ஆலயங்களிலும் ஆராதனை நடக்கும்பொழுது வாசிக்கப்பட வேண்டும்" என்று ஆக்ஞாபித்தார். ஸான்க்ராப்ட் (Sancroft) என்னும் காண்டர்பரி ஆர்ச்பிஷப்பும், இன்னும் ஆறு பிஷப்புகளும் இதற்குச் சம்மதிக்கவில்லை. அரசர் உடனே கோபமடைந்து அவர்களைச் சிறைச்சாலையில் அடைக்கும்படி செய்தார். பிறகு ஜேம்ஸ் அவர்களை ராஜத்துரோகிகள் என்று விசாரணை செய்யும்படி ஏற்பாடு செய்தார். நான்கு நியாயாதிபதிகள் இவ்வழக்கை விசாரணை செய்து 'இந்த ஏழு பிஷப்புகளும் குற்றவாளிகள் அல்லர்' என்று தீர்ப்பு அளித்தார்கள். அதனால் ஆங்கிலேயர்களுக்கு அளவிலா மகிழ்ச்சி உண்டாகியது.

ஜேம்ஸ் இங்கிலாந்தைவிட்டு ஓடுதல்:-ஜேம்ஸ் அநீதியான காரியங்களைச் செய்ததால் பிராடெஸ்டன்ட் குடிகள் அவரை வெறுத்தார்கள். ஆனால் அவர்கள் 'ஜேம்ஸுக்குப் பிறகு அவருடைய முதற் புதல்வியும் பிராடெஸ்டன்ட் மதத்தைச் சார்ந்தவளும் ஆன மேரியே பட்டத்திற்கு உரியவள் என்று நினைத்து



கலகம் செய்யாது சும்மாயிருந்தார்கள். இச்சமயத்தில் ஜேம்ஸுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இச்செய்தியைக் கேட்டவுடன் பிராடெஸ்டன்ட்கள், ஜேம்ஸைப்போலவே அவரது குழந்தையும் கதோலிக்காகவிருந்து இங்கிலாந்தை ஆண்டால் தங்களது கஷ்டத்திற்கு முடிவில்லாமற் போய்விடும் என்று எண்ணினார்கள். ஆகையால் பார்லிமென்டார் மேரியின் கணவரும் ஹாலந்து மன்னரும் ஆன வில்லியம் என்பவரை இங்கிலாந்திற்கு வந்து ஆங்கில மகுடத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்கள். அவர் பார்லிமென்டின் விருப்பத்திற்கு இணங்கி இங்கிலாந்தில் ஒரு சேனையுடன் வந்திறங்கினார். இதையறிந்த ஜேம்ஸ் லண்டன் நகரைவிட்டு பிரான்ஸுக்குச் சென்றார்.

புகழ்பெற்ற புரட்சி:—பிறகு பார்லிமென்ட் கூடி 'ஜேம்ஸ் பிரான்ஸுக்கு ஓடிவிட்டதால் சிம்மாசனம் காலியாய்விட்டது என்றுகூறி ஆங்கிலேயரின் மதத்தையும், உரிமைகளையும் பாதுகாப்பேன் என்று வில்லியம் வாக்களித்ததன்பேரில் அவரும் அவரது மனைவியாகிய மேரியும் சேர்ந்து இங்கிலாந்தை அரசாளும்படி அவர்களை வேண்டிக்கொண்டது. அவர்கள் அதற்கு இணங்கி இங்கிலாந்தை ஆளத்தொடங்கினார்கள். இவ்வாறு பார்லிமென்ட் தனது ஆணையைமீறி நடந்த ஜேம்ஸைச் சிம்மாசனத்தினின்று நீக்கி அவரது மாப்பிள்ளையும் ஹாலந்து வேந்தருமான வில்லியம் என்பவரை ஆங்கில வேந்தராகச் செய்த சம்பவத்தைப் "புகழ்பெற்ற புரட்சி" (Glorious Revolution) என்று சரித்திரக்காரர் அழைக்கின்றனர்.

கேள்விகள்:—

1. ஜேம்ஸ் எவ்வாறு கதோலிக்குகளை ஆதரித்தார்?

2. பொறுமை விளம்பரத்தை ஜேம்ஸ் எந்த நோக்கத்துடன் வெளியிட்டார்? அதில் அடங்கியது யாது?

3. ஏழு பிஷப்கள் ஏன் விசாரணை செய்யப்பட்டார்கள்? அஃது எவ்வாறு முடிந்தது?

4. இரண்டாவது ஜேம்ஸ் தமது மகுடத்தை இழந்ததற்குக் காரணங்கள் யாவை?

5. 'புகழ்பெற்ற புரட்சி' என்பது யாது? அது இங்கிலாந்தில் எவ்வாறு ஏற்பட்டது?

---

## அத்தியாயம் 6.

### மூன்றாவது வில்லியமும் மேரியும். (1689—1702)

**உரிமைகள் மசோதா (1689):**—வில்லியமும் மேரியும் இங்கிலாந்தை ஆளத்தொடங்கியதும், பார்லிமெண்ட், மன்னர் பொதுஜனங்களின் நன்மையைக் கவனியாமல் தமது இஷ்டப்படி அரசாளுவதைத் தடுக்கக்கூடிய சில சீர்திருத்தங்களைச் செய்தது. அவைகளில் உரிமைகள் மசோதா (Bill of Rights) என்பது ஒன்று ஆகும். அது மன்னரின் உரிமைகளைக் குறைத்ததுமன்றி குடிகளின் உரிமைகளையும் ஸ்தாபித்தது. அதிற் கண்டிருந்தவைகளாவன:—1. பார்லிமெண்டைக் கூட்டாமல் தமது இஷ்டப்படி அரசர் அரசாளக் கூடாது. 2. பார்லிமெண்டின் சம்மதமின்றி அரசர் புதிய வரிகளை விதித்தல் கூடாது. 3. சரியான விசாரணையின்றி எவரையும் அரசர் சிறையிலிடக் கூடாது. 4. கதோலிக்குகளும் அம்மதத்தைத் தழுவின பெண்களை மணம் புரிந்தவர்களும் பட்டத்திற்கு வரலாகாது. 5. அமைதிக் காலத்தில் நிலைத்த சேனையை வைத்துக்கொண்டு அரசர் குடிகளைப் பயமுறுத்தக்கூடாது. இதிற்கண்ட சில ஷரத்துக்கள் மகாசாஸனப் பத்திரத்தில் இருக்கின்றன என்பதும் அறியத்தக்கது.



**இதர சீர்திருத்தங்கள்:**—இதைத்தவிர, பார்லிமெண்ட் 'பிராடெஸ்டன்ட்களில் எந்த வகுப்பைச் சேர்ந்தவராய் இருந்தபோதிலும் அவர்கள் தம்மிஷ்டப்படி ஆராதனை செய்யலாம்' என்று ஒரு சட்டத்தைப் பிறப்பித்தது. மேலும், அச்சபை (1695) மூன்று வருஷத்திற்கு ஒரு முறை பார்லிமெண்ட் தேர்தல் நடைபெறவேண்டும் என்ற ஒரு சட்டத்தையும் செய்தது.

**கட்சித் துரைத்தனத்தின் ஆரம்பம்:**—இரண்டாவது சார்லஸின் காலத்தில் பார்லிமெண்டில் இரண்டு ராஜீயக்கட்சிகள் ஏற்பட்டன என்பது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் 'விக்' கட்சி வலிமையுள்ளதாயும், இன்னும் சில சமயத்தில் டோரிக் கட்சியினர் பார்லிமெண்டில் பெரும்பான்மையோராகவும் இருந்தனர். வில்லியம் பட்டத்திற்கு வந்ததும், 'விக்' கட்சி பார்லிமெண்டில் அதிகாரம் பெற்றது. வில்லியம் பார்லிமெண்டின் இஷ்டப்படி ஆளவேண்டியிருந்தது. இல்லாவிடில், பார்லிமெண்ட் அவருக்கு அளித்து வந்த பொருளுதவியை நிறுத்திவிடும். மேலும், அவருக்குப் பார்லிமெண்டில் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தம்முடைய மந்திரிகளை நியமித்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றேல், அரசாட்சி தடைப்படும். ஆகையால், பெரும்பான்மைக் கட்சியிலிருந்து அரசர் தமது மந்திரிகளை நியமித்துக் கொள்ளவேண்டும் என்ற வழக்கம் வில்லியமின் காலத்தில் முதல் முதலில் ஏற்பட்டது. இவ்வழக்கம் இன்றைக்கும் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றது. இத்தகைய கொள்கைகளுடன் கூடிய ஆட்சியைக் கட்சித் துரைத்தனம் (Party Government) என்று சொல்லுகிறோம்.

**வில்லியம் கலகங்களை அடக்குதல்:**—அயர்லாந்திலுள்ள கதோலிக்குகள் வில்லியமின் ஆட்சியை அங்கீகரிக்காமல் இரண்டாவது ஜேம்ஸை இன்னும் தங்களது அரசராகப்

பாவித்து வந்தார்கள். ஜேம்ஸ் அயர்லாந்துக்குச் சென்று கொஞ்சகாலம் தங்கியிருந்தார். வில்லியம் ஒரு பெரிய சைன்யத்துடன் (1690) அந்நாட்டுக்குச் சென்று பாய்ன் (Boyne) நதிக்கரையில் ஜேம்ஸைத் தோற்கடித்தார். ஜெம்ஸ் பிரான்ஸுக்குச் சென்று விட்டார். இவ்வாறு வில்லியம் ஐரிஷ் கலகத்தை அடக்கினர்.

தென் ஸ்காட்லாந்திலுள்ள பிராடெஸ்டன்ட்கள் வில்லியமின் ஆட்சியை ஏற்றுக்கொண்டார்கள். ஆயினும், வட ஸ்காட்லாந்திலுள்ள ஜனங்கள் (ஹைலாந்தியர்கள்) வில்லியமின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளாமல் ஜேம்ஸின் சார்பாகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். ஆகையால் வில்லியம் ஒரு பெரிய சேனையுடன் ஸ்காட்லாந்திற்குச் சென்று, கில்லிகிராங்கி (Killie-crankie) என்னுமிடத்தில் கலகக்காரர்களைத் தோற்கடித்துத் தமது ஆட்சியை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்.


பிரெஞ்சுக்காரருடன் நடந்த போர்:—வில்லியம் இங்கிலாந்து மன்னராவதற்கு முன்னமேயே பிரெஞ்சு மன்னரான பதினன்காவது லூயிக்கும் அவருக்கும் தீராப்பகை உண்டு. ஏனெனில் லூயி பிராடெஸ்டன்ட் நாடாகிய ஹாலந்தை ஜயித்து தமது ஆட்சிக்கு உட்படுத்த முயன்றார். வில்லியம் ஆங்கில சிங்காதனத்தில் ஏறினவுடன் லூயியின் பகை அதிகரித்தது. ஆகையால் லூயி தம்மிடம் அடைக்கலம் புகுந்த ஜேம்ஸை ஆங்கில மன்னராக்க முயன்றார். இக்காரணங்களினால் வில்லியமுக்கும் லூயிக்கும் (1689) ஒரு யுத்தம் ஆரம்பித்தது. சண்டைகள் நீரிலும் நிலத்திலும் நடந்தன. ஆங்கிலக் கப்பற்படை லா ஹோக் (La Hogue) என்ற இடத்திற்கு அருகில் நடந்த ஒரு கடற்சண்டையில் (1692) வெற்றியடைந்தது. கடைசியில் (1697) ரைஸ்விக் (Ryswick) என்னும் இடத்தில் லூயி சமாதானம் செய்துகொண்டார். அதன்படி லூயி வில்லியமை ஆங்கில வேந்தரென ஒப்புக்



கொண்டதோடுகூட ஜேம்ஸுக்கு எவ்விதத்திலும் உதவிபுரிவதில்லை என்று வாக்களித்தார்.

வார்ஸ் நிர்ணயச் சட்டம்.—பார்லிமென்ட் (1701) வார்ஸ் நிர்ணயச் சட்டம் (Act of Succession) என்பதைப் பிறப்பித்தது. அதன்படி வில்லியம் சந்ததியின்றி இறந்தால், ஜேம்ஸின் இரண்டாவது புதல்வியான ஆன் (Anne) ஆங்கில அரசியாக வேண்டியது என்றும், ஆனும் சந்ததியின்றி இறந்தால் முதலாவது ஜேம்ஸின் பேத்தியாகிய ஸோபயா (Sophia) வும் அவளுடைய குழந்தைகளும், பிராடெஸ்டன்ட் மதத்தினர்களாயிருந்தால், பட்டத்திற்கு உரியவர்கள் என்றும் ஏற்பட்டது.

ஸ்டூவர்ட் வம்சாவளி.




வில்லியமின் மரணம்:—லூயியுடன் மறுபடியும் (1702) போர் தொடங்கவேண்டியிருந்தது. கதோலிக்குகளும் ஜேம்ஸை ஆங்கில மன்னராக்க முயன்றார்கள். வில்லியம் எல்லாக் கலகங்களையும் அடக்கி விட்டு லூயியுடன் போர் புரிய எத்தனித்துக் கொண்டிருக்கையில் (1702) திடீரென மரணமடைந்தார்.

கேள்விகள்:—

1. பார்லிமென்ட் உரிமைகள் மசோதாவை ஏன் பிறப்பித்தது? அதன் ஷரத்துக்கள் யாவை? அதை எக்காரணத்தினால் ஆங்கிலேயர்கள் முக்கியமானது எனக் கருதுகிறார்கள்?

2. வில்லியமின் ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட இதர சட்டங்கள் யாவை?

3. 'கட்சித் துரைத்தனம்' என்பது யாது?

4. வில்லியம் ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும் உண்டான கிளர்ச்சிகளை ஏன் அடக்கினார்?

5. வில்லியமுக்கும் லூயிக்கும் எக்காரணங்களினால் போர் நடந்தது? அது எவ்வாறு முடிந்தது?

---


## அத்தியாயம் 7.

### ஆன் அரசியார் (1702—1714)

**மார்ல்பரோ பிரபு:**—வில்லியம் சந்ததியின்றி இறந்தவுடன், வார்ஸ் நிர்ணயச் சட்டப்படி ஜேம்ஸின் இரண்டாவது புதல்வியாகிய ஆன் ஆங்கில அரசியானார். அவர் வெகு நல்ல சுபாவமுள்ளவர். அவருக்கு ராஜீயவிஷயங்களில் ஆலோசனை கூறி உதவி செய்தவர் மார்ல்பரோ பிரபு (Duke of Marlborough). அவர் ஆன் அரசியாரின் அருமைத் தோழியாகிய ஸாரா ஜென்னிங்ஸ் (Sarah Jennings) என்பவளின் கணவர். ஆனதுபற்றி அவருக்கு மிக்க செல்வாக்கும் அதிகாரமும் ஆன் அரசியாரின் ஆட்சியில் ஏற்பட்டது. மேலும், அவருக்குப் போர்த்திறமை அதிகமானதால் அவர் சைன்யத்தின் தலைவராக இருந்து போர்களை நடத்தினார்.

**ஸ்பெயின் வார்ஸ் போர் (1702—1713):**—ஸ்பெயின் மன்னரான இரண்டாவது சார்ல்ஸ் சந்ததியின்றி இருந்தார். ஆகையால் அவருக்குப் பிறகு ஸ்பெயின் முடியை யார் அடைவது என்ற கேள்வியைத் தீர்மானம் செய்யவேண்டியிருந்தது. அவருடைய ஒரு சகோதரி பிரெஞ்சு மன்னரான லூயியையும் மற்றொரு சகோதரி ஆஸ்டிரியா வேந்தரான லியப்பால்டு என்பவரையும் விவாகம் செய்துகொண்டிருந்தார்கள். ஆகையால் ஸ்பெயின் மகுடத்திற்கு அதிக உரிமையுள்ளவர்கள் லூயியின் பௌத்திரனை பிலிப் (Philip)பும் லியப்பால்டின் பௌத்திரனை ஜோசப் (Joseph)பும் ஆவர். லூயி தமது பேரனை ஸ்பெயின் மன்னராக்கி ஸ்பெயினையும், பிரான்ஸையும் ஓர் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர யத்தனித்தார். 'இப்படிச் செய்தால் பிரெஞ்சுமன்னரின் பலமும்கௌரவமும் அதிகரித்து






விடும் என்றெண்ணி இங்கிலாந்து, ஆஸ்டிரியா, ஹாலந்து ஒன்றுகூட லூயியின் எண்ணத்தை நிறைவேறவிடாமல் தடுக்கக்கூடிய முயற்சிகளைச் செய்தனர். இந்த நிலைமையில் ஜோஸப் (1699) மரணமடைந்தார். ஆகவே, லூயியின் பேரனை பிலிப்தான் ஸ்பெயின் மகுடத்திற்கு உரியவராயிருந்தார். மேலும், சார்ல்ஸ் தமது மரணத் தருவாயில் லூயியின் பேரனை பிலிப்தான் தமக்கு வார்ஸ் என்று கூறிவிட்டு (1700) இறந்தார். ஆகையால் லூயி தமது பேரனை ஸ்பெயின் மன்னராக்க அனுப்பினார். ஸ்பெயின் நாட்டினர் பிலிப்பைத் தங்களது மன்னரென ஏற்றுக்கொண்டார்கள். இம்மாதிரியாக ஸ்பெயின் வார்ஸ் போர் (1708) ஆரம்பித்தது.

மார்ல்பரோவின் வெற்றிகள்:—இந்தப் போரில் இங்கிலாந்து, ஹாலந்து, ஆஸ்டிரியா ஆகிய மூன்று தேசங்களும் ஒரு கட்சி; ஸ்பெயினும், பிரான்ஸும் மற்றொரு கட்சி; ஆங்கில தளகர்த்தரான மார்ல்பரோ பெல்ஜியத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தடுத்துக்கொண்டிருக்கையில், ஒரு பிரெஞ்சுப் படை ஆஸ்டிரியாவின் தலைநகராகிய வியன்னு (Vienna) வைப் பிடிக்கச் செல்வதைக் கேட்டார். ஆகையால அவர் உடனே தமது சேனையை வெகு வேகமாய் நடத்திச்சென்று ப்ளேன்ஹீம் (Blenheim) என்னும் கிராமத்திற்கு அருகில் பிரெஞ்சுப் படையை (1704) முறியடித்தார். இதுதான் மார்லபரோவின் முதல் வெற்றி. இவ்வெற்றி அவருக்குப் பெருங்கீர்த்தியை உண்டாக்கியது. அதே வருஷத்தில் ஆங்கில கப்பற்படைத் தலைவர் ஒருவர் ஜிப்ரால்டர் (Gibralter) என்ற கோட்டையைப் பிடித்தார். இதற்குப் பிறகு நெதர்லாந்தில் ராமில்லீஸ், ஊடனூர்ட், மால்பளகட் என்ற விடங்களில் மார்ல்பரோ பிரெஞ்சுக்காரருடன் போர் புரிந்து வெற்றியடைந்தார்.

யூட்ரேகட் உடன்படிக்கை (1713):—இந்தப் போர் (1713) வரைக்கும் நடந்து பிறகு யூட்ரேக்ட் (Utrechet) என்னுமிடத்தில் நிகழ்ந்த உடன்பாட்டினுல் முடிவடைந்தது. இதன்படி பிலிப் ஸ்பெயின் வேந்தரென ஒப்புக்கொள்ளப் பட்டபோதிலும் அவர் பிரான்ஸின் முடிக்கு உரிமையுடையவர் அல்லர் என்பது ஏற்பட்டது. மேலும், மைனுர்க்கா (Minorca), ஜிப்ரால்டர் (Gibralter), நியூபவுண்ட்லந்து (Newfoundland) முதலியன ஆங்கிலேயரின் ஆதீனத்தில் வந்தன.

கட்சித் துரைத்தனம்:—ஆன் அரசியார் சிங்காதனம் ஏறினவுடன் டோரிக்கட்சியினர் அரசியலில் அதிக அதிகாரம் பெற்றிருந்தனர். அக்கட்சியைச் சேர்ந்த மார்ல்பரோ பிரபுவும் கொடால்பின் பிரபுவும் சேர்ந்து ராஜீய காரியங்களைக்



கவனித்து வந்தார்கள். அக்காலத்தில் ஸ்பானிஷ் வார்ஸப் போர் நடந்ததால் மார்ல்பரோ இங்கிலாந்தின் போர்களை நடத்துவது என்றும் கொடால்பின் அதற்கு வேண்டிய பணத்தைச் சேகரித்துக் கொடுப்பது என்றும் ஒரு ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது. இம்மாதிரியாக இந்த இரண்டு டோரிக் கட்சித் தலைவர்களும் ஆறு வருஷகாலம் சர்வதிகாரத்துடன் இருந்து வந்தார்கள். பிறகு மார்ல்பரோ போரை நடத்த இஷ்டப்பட்டதால் விக் கட்சியின் உதவியைக்கொண்டு அவரே இரண்டு வருடங்கள் மந்திரியாய் இருந்து வந்தார். கி. பி. 1710-ல் மார்ல்பரோ மந்திரிப் பதவியிலிருந்து தள்ளப்பட்டதும் டோரிக்கட்சியார்கள் மூன்று வருடகாலம் ராஜாங்க விஷயங்களில் அதிகாரம் பெற்று இருந்தார்கள். அவர்கள் கி. பி. 1713-ல் ஸ்பானிஷ்காரர்களுடன் யூட்ரேக்ட் என்னுமிடத்தில் சமாதான உடன்பாடு செய்துகொண்டார்கள்.

ஸ்காட்லாந்தும் இங்கிலாந்தும் ஐக்கியமாதல்:-(1707) ஆன் அரசியாரின் ஆட்சியில் நடந்த மற்றொரு பெரிய சம்பவம் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஐக்கியமானது ஆகும். முதலாவது ஜேம்ஸின் காலம் முதல் இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் ஒரே அரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோதிலும் தனித் தனி பார்லிமெண்டுகள் அவ்விரண்டு நாடுகளிலும் இருந்து வந்தன. மேலும், இரண்டாவது ஜேம்ஸ் இங்கிலாந்தை விட்டு ஓடினது முதல் வியாபார விஷயமாக அனேக மனஸ்தாபங்கள் நேரிட்டு வந்தன. ஆங்கிலேயர்கள் ஸ்காட்லாந்தியரைத் தமக்குச் சமமாகப் பாவிக்கவில்லை; குடியேறின நாடுகளுடன் வியாபாரம் செய்வதற்கும் அவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. ஆனல் அவர்கள் ஆங்கிலேயருடன் சமமாயிருந்து வாழ விரும்பினர்கள். அக்காலத்தில் மந்திரியாய் இருந்த கோடால்பின் (Godolphin) வெகு சாமர்த்தியமாக ஓர் ஐக்கியச் சட்ட (Act of Union) த்தைப் பிறப்பித்து, அதை இரண்டு நாடு

களின் பார்லிமென்டுகளும் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தார். அதன்படி "(1) இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் பெரிய பிரிட்டன் என்னும் ஏகராஜ்யமாய் இணைக்கப்படவேண்டும். (2) ஐக்கியப் பார்லிமென்டின் பொதுஜன சபைக்கு ஸ்காட்லாந்தியர்கள் 45 அங்கத்தினர்களையும், பிரபுக்கள் சபைக்கு 16 அங்கத்தினர்களையும் தங்களது பிரதிநிதிகளாக அனுப்ப வேண்டும். (3) வர்த்தக விஷயங்களில் இரண்டு தேசத்தவர்களும் சகல சுதந்தரங்களையும் சமமாய் அனுபவிக்கவேண்டும். (4) ஸ்காட்லாந்தியர்கள் தங்களது மதம், சட்டங்கள் இவற்றை யாதொரு இடையூறின்றி அனுஷ்டித்து வரலாம்" என்பன ஆங்கிலேயர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மார்ல்பரோவின் வீழ்ச்சி:—டோரிக் கட்சியார் 'யுத்தங்களை ஒழித்து உள் நாட்டில் சமாதானத்தைப் பரவச் செய்ய வேண்டும்" என்ற கொள்கையை யுடையவர்கள். 'விக்' கட்சியினரோ 'யுத்தம் செய்து வியாபாரத்தைப் பெருகச் செய்து இங்கிலாந்துக்கு ஒரு புகழை உண்டாக்க வேண்டும், என்ற கொள்கையை யுடையவர்கள். மார்ல்பரோ ஒரு டோரியான போதிலும், அவர் 'விக்' கட்சியில் சேர்ந்து கொண்டு ஸ்பெயின் வார்ஸப் போரை அகாரணமாகப் பெருக்கிவந்தார் என்ற ஓர் அபவாதம் உண்டாயிற்று. மேலும், அவரது மனைவி ஆன் அரசியாரின் நேசத்தை இச்சமயத்தில் இழந்தாள். இக்காரணங்களினால் மார்ல்பரோ தமது பதவியை இழந்துவிட்டார்.

ஜோஸப் அடிஸனும் ஸ்டீலும்:—மூன்றாவது வில்லியமின் காலத்துக்குப் பிறகு அநேக கலைஞர்கள் வசன நடையில் புத்தகங்களை எழுதினார்கள்; ஆனின் ஆட்சிக்காலத்தில் சில மாதாந்தப்பத்திரிகைகளில் அநேக அருமையான வியாசங்களை எழுதி வெளியிட்டார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் ஜோஸப் டிஸன் (Joseph Addison), ஸ்டீல் (Steele) முக்கிய



மானவர்கள். டேனியல் டீபோ என்ற கலைஞரும் வசித்த காலம் இதுதான். அவர் 'ராபின்ஸன் குருஸோ'வின் ஜீவியசரித்திரமும் செயல்களும், என்பதைப்பற்றி ஒரு புத்தகத்தை மிகத் தெளிவான நடையில் எழுதியிருக்கின்றார். இந்தப் புத்தகத்தினால் டேனியல் டீபோவுக்கு அதிகக் கியாதி ஏற்பட்டது. ஸ்டீல் 'டாட்லர் (Tatler) என்ற ஒரு பத்திரிகையையும், அடிஸன், ஸ்டீல் இருவரும் சேர்ந்து ஸ்பெக்டேடர் (Spectator) என்ற ஒரு பத்திரிகையையும் பிரசுரம் செய்தார்கள். பொது ஜனங்கள் இப்பத்திரிகைகளை வாங்கி வாசித்துத் தங்களுடைய அறிவை விருத்தி செய்துகொண்டார்கள். இக்காலத்தில் நாடகங்களும் காவ்யங்களும் ஆங்கில கலைஞர்களால் எழுதப் படவில்லை.

ஆன் ராணியாரின் மரணம்:—டோரிக் கட்சியின் தலைவரான ஜான் பாலிங் ப்ரோக் (Duke of Bolingbroke) ஆனின் குழந்தைகள் எல்லாம் சிறு வயதிலேயே இறந்துவிட்டதால் அவரது தம்பியும் கதோலிக் மதத்தினரும் ஆன ஜேம்ஸ் எட்வர்டை ஆங்கில வேந்தராகச் செய்ய முயன்றார். ஆனால், (1714) ஆன் திடீரென இறந்தவுடன், 'விக்' கட்சியினர் வார்ஸ் நிர்ணயச் சட்டத்தின்படி ஸோபயாவின் புதல்வரான ஜார்ஜ் (George) என்பவரை ஆங்கில வேந்தரென விளம்பரம் செய்தனர். உடனே பாலிங்ப்ரோக் பிரபு நாட்டைவிட்டு ஓடினார். ஆன் அரசியுடன் ஸ்டூவர்ட் வம்சத்து அரசர்களின் ஆட்சி முடிவு பெற்றது. ஆனுக்குப் பிறகு அரசராக வந்த ஜார்ஜ் ஜர்மனியில் ஹனோவர் (Hanover) மாகாணச் சிற்றரசரானதால், இப்புதிய வம்சத்திற்கு ஹனோவீரியன் வம்சம் என்ற பெயர் வந்தது.

கேள்விகள்:—

1. ஆனின் ஆட்சிக்காலத்தில் மார்ல்பரோ பிரபுவுக்கு அதிக அதிகாரம் ஏற்படுவதற்குக் காரணம் யாது?

2. ஸ்பெயின் வார்ஸ்ப் போரின் காரணங்கள் யாவை? அப் போரில் நிகழ்ந்த முக்கிய சண்டைகள் யாவை?

3. யூட்ரெக்ட் உடன்படிக்கையின் பிரகாரம் என்ன ஏற்பாடுகள் ஆயின?

4. எக்காரணங்களினால் ஐக்கியச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது? அந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள ஷரத்துகள் யாவை?

5. மார்ல்பரோவின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை?

| முக்கிய நிகழ்ச்சிகள். | வருஷங்கள். | |
|---|---|---|
| வெடிமருந்துச்சதி | கி. பி. | 1600 |
| உரிமை விண்ணப்பம் | ,, | 1628 |
| ஹாம்ப்டன் கப்பற்பணத்தைக் கொடுக்க மறுத்தல் | | 1637 |
| நீடித்த பார்லிமெண்ட் | ,, | 1640 |
| உள்நாட்டுப் பெரும்போர் ஆரம்பித்தது | ,, | 1642 |
| சார்லஸ் சிரச்சேதம் பண்ணப்பட்டது | ,, | 1649 |
| கப்பற் போக்கு வரத்துச் சட்டம் | ,, | 1651 |
| 'ரம்ப்' பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது | ,, | 1653 |
| சோதனைச் சட்டம் | ,, | 1678 |
| விலக்கு மசோதா | கி. பி. | 1638 |
| ஏழு பிஷப்கள் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது | | 1679 |
| உரிமைகள் மசோதா | ,, | 1686 |
| ஐக்கியச் சட்டம் | ,, | 1783 |
| யூட்ரெக்ட் உடன்படிக்கை | ,, | 1713 |

# IX. ஹனோவீரியன் அரசர்களின் காலம்

(கி. பி. 1714—கி. பி. 1910)

## அத்தியாயம் 1.

### முதலாவது ஜார்ஜ் (1714—1727)

'விக்' கட்சியின் நீடித்த ஆட்சி:—ஜார்ஜ் ஆங்கில மகுடத்தைப் பெறுவதற்கு 'விக்' கட்சியார் உதவிபுரிந்தனர். ஆனது பற்றி அவர் அக்கட்சியார்களுக்குச் சர்வ அதிகாரத்தையும் கொடுத்தார். மேலும், ஜார்ஜுக்கு ஆங்கில பாஷையும், ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களும் தெரியாததால், அவர் 'விக்' கட்சியினரை அரசுபுரியும்படி விட்டார். இவ்வாறு 'விக்' கட்சியினர் பார்லிமெண்டில் பெரும்பான்மையோராயிருந்து ஐம்பது வருஷகாலம் ஆட்சி புரிந்தனர். அவர்கள் பார்லிமெண்டின் அங்கத்தினர்கள் ஏழு வருஷங்களுக்கு ஒரு தரம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று ஒரு புதிய சட்டத்தைப் பிறப்பித்தார்கள்.

பதினைந்து என்னும் கலகம் (1715):—ஜார்ஜ் பட்டத்துக்கு வந்ததும் வட இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் ஜேம்ஸ் எட்வர்டின் சார்பாக (1714) ஒரு பெரிய கிளர்ச்சி* உண்டாயிற்று. அதற்குப் 'பதினைந்து' (The Fifteen) என்று பெயர். ஹைலாந்தியர்கள் மார் பிரபு (Earl of Mar) வைத் தலைவராகக்கொண்டு தெற்கு நோக்கி வந்தார்கள். ஆர்கைல் கோமகனாரின் தலைமையின் கீழிருந்த ஒரு சைன்

*ஸ்டேவர்ட் மன்னர்களின் சார்பாகக் கிளர்ச்சி செய்தவர்களுக்கு 'ஜாகோபைட்கள்' (Jacobites) என்று பெயர்.

யம் ஷெரிப்மூர் (Sheriffmuir) என்னுமிடத்தில் அவர்களைச் சந்தித்துப் போர் புரிந்தது. இச்சண்டையில் வெற்றி யாருடையது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதற்குப்பிறகு ஜேம்ஸ் எட்வர்டு ஸ்காட்லாந்தில் வந்திறங்கினர். அவருக்கு வீரத்தன்மையும் மனோ உற்சாகமும் இல்லாமையால் அவரது கட்சியினரே அவரைக் கைவிட்டனர். மேலும், பதினான்காவது லூயி இச்சமயத்தில் இறந்ததால், ஜேம்ஸ் எட்வர்டுக்குப் பிரெஞ்சு அரசாங்கத்தாரின் உதவியும் இல்லாமற் போயிற்று. ஆகையால் மார் பிரபுவும் ஜேம்ஸ் எட்வர்டும் பிரான்ஸுக்கு ஓடிவிட்டார்கள். ஹைலாந்தியரின் சேனையும் சின்னாபின்னமாக்கப்பட்டது. இவ்வாறு இக்கலகம் பயனற்றதாக ஆயிற்று. இதிற் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கொடிய தண்டனைக்கு ஆளாயினர்.

காபினெட் ஏற்பாடு:—மூன்றாவது வில்லியமின் ஆட்சியில் கட்சித் துரைத்தனம் முதல் முதலில் ஏற்பட்டது என்பதும் பார்லிமெண்டில் அதிகாரம்பெற்ற கட்சியிலிருந்து அரசர் தம்முடைய மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதும் ஏற்கனவே சொல்லப்பட்டுள. பார்லிமெண்டில் அதிகாரம் பெற்ற கட்சியினர்கள் ராஜீய விஷயங்களை இரகசியமாக ஆலோசனை செய்வதற்குத் தனித்து ஓரிடத்திலே கூடினார்கள். மந்திரிமார்கள் அடங்கிய இந்த இரகசிய சபையே காபினெட் (Cabinet) என்று சொல்லப்படுவது. இச்சபையில் அரசரே அக்கிராசனம் வகிப்பது வழக்கமாய் இருந்துவந்தது. முதல் இரண்டு ஜார்ஜுகளுக்கும் ராஜீய விஷயங்களில் அதிக சிரத்தை இல்லாதபடியாலும், அவர்களுக்கு ஆங்கில பாஷை தெரியாதபடியாலும், அவர்கள் காபினெட் சபைக்கு அனேகமாய் வருவதேயில்லை. ஆனதுபற்றி, மந்திரிமார்கள் தமக்குள் ஒருவரை அக்ராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அநேக



மாய் அதிகாரத்திலுள்ள கட்சியின் தலைவர்தான் காபினெட் சபையின் அக்ராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். காலம் செல்லச் செல்ல, அவர் ராஜ்ய பாரம் தாங்குவதில் தமக்கு உதவி செய்யக்கூடியவர்களையே காபினெட் சபையினராகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாய்விட்டது. மந்திரிகளில் எவர் எந்தக் காரியத்தைச் செய்தபோதிலும் காபினெட் சபையிலுள்ள எல்லா மந்திரிகளும் பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரிகள் (Joint responsibility) என்பதும் ஏற்பட்டது. ஆகவே, மந்திரிகளைத் தள்ளுவதற்கும், நியமனம் செய்வதற்கும் அரசர்களுக்கு அதிகாரமில்லாமற் போயிற்று. இவ்வாறு பார்லிமெண்ட் அரசியலில் சர்வ அதிகாரங்களையும் வகிக்கத் தொடங்கியது.

தென்கடற் கம்பெனி (1720):—யூட்ரெக்ட் உடன்பாட்டிற்குப் பிறகு ஆங்கில வியாபாரம் அதிகரித்தது. அதனால் ஆங்கில வர்த்தகர்களுக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. ஆனதுபற்றி வர்த்தகர்களில் அநேகர் தனவான்களாக ஆயினர். சில தனவான்கள் தமது செல்வத்தைப் பெருக்கப் பல தொழில்களிலும் போட்டார்கள். அநேக தனவான்கள் செல்வம் நிறைந்துள்ள தென் அமெரிக்காவுடன் வியாபாரம் செய்ய ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதற்குத் தென் கடற் கம்பெனி (South Sea Company) என்று பெயர். இது கி. பி. 1711-ல் ஹார்லி என்பவரது முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது. இக்கம்பெனிக்கு வியாபாரத்தினால் அதிகலாபம் கிடைத்தது. ஆனதுபற்றி பங்குகளின் விலை அதிகமாயிற்று. பல தனவான்கள் அக்கம்பெனியின் பங்குகளை அதிக விலை கொடுத்துக் கூட வாங்கத் தொடங்கினார்கள். இப்படியிருக்கையில் இக்கம்பெனியைப்போல வேறு அநேக புதிய கம்பெனிகளும் அதே நோக்கத்துடன் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அப்புதிய கம்பெனிகளுக்கு

அதிக லாபம் வரவில்லை. அவைகளில் வேலைக்கு அமர்ந்துள்ளவர்களும் பணத்தைச் சுருட்டிக் கொண்டு திக்குக்கு ஒருவராய் ஓடிப்போய்விட்டார்கள். ஆகையால் அக்கம்பெனிகளின் பங்குக்காரர்களெல்லாம் பெரும் நஷ்டத்தை அடைந்தார்கள். தென்கடற் கம்பெனியின் பங்குக்காரர்களில்கூட அநேகர் தங்களது பங்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி ஏககாலத்தில் கேட்கலாயினர். ஆகவே இக்கம்பெனியும் மற்ற கம்பெனிகளைப் போல் (1720) அழிந்து போய் விட்டது.

ராபர்ட் வால்போல் பிரதான மந்திரியாதல்:—தென்கடற் கம்பெனி முறிந்து போனதால் நஷ்டம் அடைந்தவர்கள், "விக் மந்திரிகள் அக்கம்பெனியின் அதிகாரிகளிடமிருந்து லஞ்சம் வாங்கினார்கள்" என்று சந்தேகங் கொண்டு அவர்களை நீக்கிவிடுவதற்காகப் பெருங்கிளர்ச்சியைச் செய்தார்கள். ஆனால் அவர்களுக்கு 'விக்' கட்சியைச் சேர்ந்த ராபர்ட் வால்போல் (Robert Walpole) என்பவரிடம் அதிக நம்பிக்கை இருந்தது. ஆகையால் ஆங்கிலேயர்கள் அனைவரும் அவரைப் பிரதான மந்திரியாக இருந்து நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சில சீர்திருத்தங்களைச் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். அவர்களது இஷ்டப்படியே (1721) வால்போல் பிரதான மந்திரி (Prime Minister) யானார். அவர் வெகு திறமையுடன் இருபது வருஷகாலம் அப்பதவியிலிருந்து வேலை பார்த்தார்.

கேள்விகள்:—

1. 'விக்' கட்சியினர் ஜார்ஜின் காலத்தில் அதிகாரம் பெற்றதற்குக் காரணங்கள் யாவை?
2. காபினெட் எற்பாட்டைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. பதினைந்து என்னும் கலகத்தைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.
4. தென்கடற் கம்பெனி எக்காரணங்களினால் அழிந்தது?

---



## அத்தியாயம் 2.

### இரண்டாவது ஜார்ஜ் (1727—1760)

ஜார்ஜின் குணாதிசயங்கள்:—முதலாவது ஜார்ஜ் ஹனோவர் மாகாணத்தில் கி. பி. 1727-ல் இறந்துபோனார். அவருடைய புதல்வர் இரண்டாவது ஜார்ஜ் என பட்டத்திற்கு வந்தார். அவர் ஒரு சிறந்த போர்வீரர்; உலக விஷயங்களை அறிந்தவர்; ஆனால் அவர் வெகு இழிவான தன்மையுடையவர் கர்வம்படைத்தவர். பண ஆசை பிடித்தவர். அவருக்கு வால்போலிடத்தில் அதிக அன்பும் நம்பிக்கையும் இல்லாவிட்டாலுங்கூட அவர் தமது மனையாளின் சொற்கேட்டு அவரைத்தமது பிரதான மந்திரியாகவே வைத்துக்கொண்டார்.

வால்போல் மந்திரியின் ஆளுகை:—வால்போல் ஒரு சிறந்த ராஜ தந்திரி. அவர் வெகு சமர்த்தர். அவர் ராஜீய விஷயங்களைத் திறமையுடன் நடத்தி வந்தார். அதிக இனிமையாய்ப் பேசும் திறமை யில்லாவிடினும், அவர் பார்லிமெண்டின் அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு தவக்கமின்றி சமயத்திற்கேற்றபடி சாமர்த்தியமாய் பதில் சொல்லுவார். இது அவரது புத்தி நுட்பத்தைத் தெரிவிக்கின்றது. வரவு செலவு திட்ட (Budget) கணக்குத் தயாரிப்பதில் அவருக்கு ஈடு அக்காலத்தில் எவரும் இல்லை. அவர் தம்முடன் ராஜீய வேலைகளில் அபிப்பிராய பேதம் இல்லாமல் ஒத்துழைக்கக் கூடியவர்களை மட்டும் காபினெட்டில் இதர மந்திரிகளாகச் செய்து கொண்டார். அரசர் காபினெட் சபையில் அக்ராசனம் வகிப்பதை விட்டுவிட்டதால் வால்போல் தான் காபினெட்டுக்கும் தலைவராயிருந்து அதிகாரத்தைச் செலுத்தினார்.

வால்போல் பார்லிமெண்டின் அங்கத்தினர்களில் அநேகர் தமக்குச் சாதகமாய் இருக்கும்பொருட்டு அவர்களுக்குப் பணத்தையும் பதவியையும் அளித்தார். மேலும் அவர் இலெக்ஷன் நடைபெறும் விஷயத்தில் மிகவும் தேர்ச்சியுள்ளவ

ரானதால் தமக்கு இஷ்டப்பட்டவர்களையே பார்லிமென்டின்
அங்கத்தினராக்க எந்த வழியையும் பின்பற்றி வந்தார். இவ்வித
உபாயங்களினால் அவர் பார்லிமென்டைத் தமது அதிகாரத்
துக்கு உட்படுத்திக் கொண்டார். மேலும், அவர் பொது ஜனங்



களின் நன்மைக்காக உணவுப்பொருள்மீது விதிக்கப்பட்
டிருந்த வரிகளைக் குறைத்தார்; நாட்டில் அமைதியை நிலை
நிறுத்தியும், ஏற்றுமதி, இறக்குமதி வரிகளைக் குறைத்தும்
வியாபாரத்தை விருத்தி செய்தார். தேசியக் கடனைத் தீர்ப்ப
தற்காக ஒரு நிதியை (Sinking Fund) ஏற்படுத்தினார்.
வால்போலுக்குப் புதிய சட்டங்களையும் பெரிய திட்டங்களை
யும் செய்வதில் பிரியமில்லை.



வால்போலும் அன்னிய நாடுகளும்:—அமைதியே அவ
ருடைய முக்கிய நோக்கமானதால், ஐரோப்பியப் போர்களில்
வால்போல் தலையிடுவதில்லை. அவர் ஒரு சமயத்தில் "பதினா
யிரம் போர்வீரர்கள் இச்சண்டையில் மடிந்திருக்கிறார்கள்
என்றாலும் அவர்களுள் ஒரு ஆங்கிலேயர்கூட இல்லை" என்று
வெகு கர்வத்துடன் கூறினாராம். ஜெங்கின்ஸ் (Jenkins)
என்ற ஓர் ஆங்கில வியாபாரி ஸ்பானிஷ் அமெரிக்காவுடன்
திருட்டுத்தனமாக வியாபாரம் செய்ததற்கு ஸ்பெயின் தேசத்
தவர்கள் அவருடைய காதுகளை அறுத்துவிட்டார்கள். இந்த
அவமானமான சங்கதியைக் கேட்டு பார்லிமென்ட் கோப
மடைந்து, வால்போலை ஸ்பெயின் நாட்டாருடன் போர் புரிய
வேண்டுமென்று (1739) நிர்ப்பந்தம் செய்தது. வால்போ
லுக்கு அதில் இஷ்டமில்லாததால், அவர் அப்போரை அதிக
சிரத்தையோடு நடத்தவில்லை. இதை யறிந்த பார்லிமென்ட்
அவரை மந்திரி பதவியிலிருந்து (1742) நீக்கிவிட்டது.


ஆஸ்ட்ரியா வார்ஸ்ப் போர்:—(1740—1748):—வால்
போல் தமது பதவியை இழப்பதற்கு முன்னமேயே ஐரோப்
பாவில் ஒரு பெரிய யுத்தம் தொடங்க இருந்தது. ஆறா
வது சார்ல்ஸ் என்ற ஜர்மனிச் சக்கரவர்த்தி பிள்ளையின்றி
இறந்தார். அவர் இறப்பதற்கு முன்னமேயே 'தமது ஓரே
புதல்வியாகிய மேரியா தரிஸா (Maria Theresa) என்
பவளே தமக்குப்பின் அரசியாக்கப்படவேண்டும்' என்று தெரி
வித்திருந்தார். அவர் காலஞ்சென்றபின் மேரியா தரிஸா
அவரது இஷ்டப்படியே ஆஸ்டிரியா அரசியானாள். பிறகு
பிரஷியா (Prussia) மன்னரான பிரெடரிக் ஆஸ்டிரியாவுக்
குள் அடங்கிய ஸைலீஷியா (Silesia)வை அக்கிரமமாகக்
கைப்பற்றிக் கொண்டார். ஸ்பெயினும் பிரான்ஸும் பிரஷி
யாவின் கட்சியில் சேர்ந்துகொண்டன. ஆகையால் இங்கி
லாந்து மேரியா தரிஸாவின் கட்சியில் சேர்ந்துகொண்டது.
ஜார்ஜ் தாமே ஒரு சைன்யத்தை ஜர்மனிக்குள் நடத்திச்

சென்று டெட்டிஞ்ஜன் (Dettingen) என்ற விடத்தில் (1743) போர் புரிந்தார். இச்சண்டையில் அவர் வெற்றி அடைந்தார். ஆங்கில வேந்தர் போர்க்களத்தில் நின்று செய்த சண்டைகளில் இதுதான் கடைசிச் சண்டை. மேலும், பாண்டினாய் (Fontenoy) என்றவிடத்தில் (1745) நடந்த சண்டையில் ஜார்ஜின் இரண்டாவது புதல்வரான கம்பர்லாந்து கோமகனார் (Duke of Cumberland) பிரெஞ்சுக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டார். இதற்குப் பிறகு ஒரு பெரிய சண்டையும் நடக்கவில்லை. ஏகன் (Aachen) என்னுமிடத்தில் (1748) சமாதானம் ஏற்பட்டது. அதன்படி ஸைலீஷியாவைப் பிரஷியா வைத்துக்கொள்வது என்றும் மேரியா தரிஸா ஆஸ்டிரியாவின் அரசியெனவும் ஏற்பட்டன.

'நாற்பத்தைந்து' என்னும் கிளர்ச்சி (1745):—ஆஸ்டிரியா வார்ஸப்போர் நடக்கும்பொழுது ஜேம்ஸ் எட்வர்டின் புதல்வரான சார்ல்ஸ் எட்வர்ட் (Charles Edward) என்பவரை ஆங்கில வேந்தராக்க (1745) ஒரு கிளர்ச்சி உண்டாகியது. இக்கிளர்ச்சி 'நாற்பத்தைந்து' என்று முடிகிற ஆண்டில் தோன்றியதனால் இதற்கு நாற்பத்தைந்து (Forty-five) என்ற பெயர் வந்தது. சார்ல்ஸ் எட்வர்ட் பிரெஞ்சுக்காரரின் தூண்டுதலினால் சில தோழர்களுடன் ஸ்காட்லாந்தின் வடபாகத்தில் வந்திறங்கினார். ஹைலாந்தியர்கள் அவருடைய கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். அவர் ஒரு ஹைலாந்திய சேனையுடன் பிரேஸ்டன்பான்ஸ் (Prestonpans) என்ற விடத்தில் ஜார்ஜின் சேனையைத் தோற்கடித்தார். பிறகு அவர் 'ஆங்கில ஜாகோபைட்கள் தமது கட்சியில் சேர்ந்துகொள்வார்கள்' என்று எண்ணி இங்கிலாந்தின்மேல் படையெடுத்தார். டர்பி (Derby) நகர் வரைக்கும் வந்தவுடன், அவர் ஆங்கில ஜாகோபைட்கள் தமக்கு உதவி புரியாததைக்கண்டு அதைரியம் அடைந்து திரும்பலானார்.



இதற்குப் பிறகு கம்பர்லாந்து கோமகனார் ஒரு சேனையுடன் சென்று சார்ல்ஸை கல்லடன் மூர் (Culloden Moor) என்றவிடத்தில் (1746) தோற்கடித்தார். பிறகு சார்ல்ஸ் எட்வர்ட் அநேக கஷ்டங்களினின்று தப்பி பிரான்ஸுக்கு ஓடிப் போய்விட்டார். கம்பர்லாந்து கோமகனார் இக்கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர் எல்லாரையும் வெகு கொடுமையாக நடத்




தினதால் அவரைக் கசாப்புக்கடைக்காரர் (Butcher) என்று ஹைலாந்தியர் இழிவாக அழைத்தனர். இக்கிளர்ச்சிக்குப் பிறகு ஸ்டுவர்ட் மன்னர்களின் சார்பாக வேறு கிளர்ச்சிகள் தோன்றவில்லை.


வில்லியம் பிட்:—வால்போல் முதன் மந்திரியாயிருக்கையில் வில்லியம் பிட் (William Pitt) என்ற ஒரு தேசாபிமானி எதிர்க் கட்சியில் இருந்தார். பிறகு பெல்ஹாம் சகோதரர்கள் (Henry Pelham and Thomas Pelham) முக்கிய மந்திரிகளானவுடன் அவர் அவர்களின்கீழ் ஒரு பதவியை அடைந்தார். அவர் பிறருடைய மனதைக் கவரும்படியாகப் பேசும் திறமை வாய்ந்தவர். அவர் வெகு பரிசுத்தமுள்ள மனதும், மேலான தன்மையும் உடையவர். அவர் பொது ஜனங்களுக்காக உழைப்பவராதலால் ஜனங்களுக்கு அவரிடத்தில் மிக்க அன்பு ஏற்பட்டது. ஆனால் பார்லிமெண்டில் அவருக்கு அதிகச் செல்வாக்கு கிடையாது. அவர் (1754) தாமஸ் பெல்ஹாம் என்பவருடன் சண்டையிட்டுக் கொண்டு, ராஜீயக் கட்சியைவிட்டு விலகி எதிர்க் கட்சியில் மூன்று வருஷ காலம் இருந்து, முதன் மந்திரியின் அநீதியான முறைகளைக் கண்டித்தார். பிறகு (1757) பிட் என்பவரும் தாமஸ் பெல்ஹாம் என்பவரும் மந்திரிகளாய் இருப்பதென்றும் பெல்ஹாம் ராஜ்யக்காரியங்களை நடத்துவது என்றும், பிட் யுத்த இலாகா மந்திரியாயிருந்து போரை நடத்துவது என்றும் ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது.

ஏழு வருஷப்போரின் காரணங்கள்:—ஸ்டூவர்ட் அரசர்களின் காலத்தில் ஆங்கிலேயர்கள் தமது இஷ்டப்படி தெய்வ ஆராதனை செய்ய எண்ணி அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினார்கள் என்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில் வட அமெரிக்காவின் கீழ் கரையில் ஆங்கிலேயருக்குப் பதின்மூன்று மாகாணங்கள்* இருந்தன. ஆங்கிலேயர்கள் குடி-

(* 1. ஜார்ஜியா, 2. தென் கரோலினா, 3. வட கரோலினா, 4. வர்ஜீனியா, 5. மேரிலந்து, 6. பென்ஸில்வேனியா, 7. நியூ யார்க், 8. நியூ ஹாம்ஷயர், 9. மெய்ன், 10. மாஸச் சூஸட்ஸ், 11. ரோட் தீவு, 12. கனெக்டிகட், 13. நியூ ஜர்ஸி.



யேறின பிரதேசத்திற்குத் தெற்கில் ஸ்பெயின் நாட்டினரும், மேற்கிலும் வடமேற்கிலும் பிரெஞ்சுக்காரரும் குடியேறிஇருந்




தார்கள். ப்ளாரிடா (Florida) என்ற ஒரு சிறிய தீபகற்பம்

ஸ்பெயின் நாட்டினருக்குச் சொந்தமாய் இருந்தது. மிஸிஸிபி
(Missisipi) பாயும் சமவெளியில் லூஷியானு (Louisiana)
என்ற ராஜ்யமும், ஸேன்ட் லாரன்ஸ் (St. Lawrence) நதி
யின் முகத்துவாரத்தின் அருகில் கானடா (Canada) என்ற
ராஜ்யமும் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமாய் இருந்தன.
பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே அலிகனி
(Alleghany) மலைத்தொடர் இயற்கை எல்லையாயிருந்தது.
பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய இரண்டு ராஜ்யங்களையும்
சேர்த்துவிட எண்ணி, அம்மலைத்தொடருக்கு அருகில் சில
கோட்டைகளைக் கட்டினார்கள். இதனால் ஆங்கிலேயர் உள்
நாட்டில் பரவமுடியாமற் போனதோடும்கூட அலிகனிமலைக்
கும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திற்கும் இடையிலே அடை
பட்டவர்கள் போலவும் ஆயினர். ஆகையால்தான் பிரெஞ்சுக்
காரர்கள் டுகேயின் (Duquesne) என்ற கோட்டையைக்
கட்ட ஆரம்பித்தவுடன் ஆங்கிலேயர்கள் தடுத்தார்கள்.

இச்சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியச் சிற்றரசர்
களுடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து
துரத்திவிட முயற்சிகள் செய்தார்கள். மேலும், ஐரோப்பாவில்
மேரியா தரிஸா, ஆங்கிலேயர்கள் தம்மிடமிருந்து ஸைலீஷியா
வைப் பிடுங்கி பிரஷியர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்
பதை நினைத்துப் பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்துகொண்டாள்.

ஏழு வருஷப் போர் (1756—1763):—மேற்கூறிய கார
ணங்களால் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் ஒரு
பெரிய யுத்தம் (1756) ஆரம்பித்தது. அஃது ஏழு வருஷ
காலம் நடந்ததால் அதற்கு ஏழு வருஷப் போர் (Seven
Years' War) என்று பெயர். இந்தப்போரில் இங்கிலாந்
தும் பிரஷியாவும் ஒரு கட்சி; பிரான்ஸும் ஆஸ்டிரியாவும்
மற்றொரு கட்சி. ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் கட்சி எல்லா
விடங்களிலும் தோல்வியடைந்தது. மத்தியத்தரைக் கடலில்



உள்ள மைனார்க்கா என்னும் தீவைப் பாதுகாக்க பிங்
(Byng) என்னும் ஆங்கில அட்மிரல் அனுப்பப்பட்டார்.
அவர் பிரெஞ்சுக்காரரிடம் பயந்துகொண்டு போர் புரியாமல்
ஓடிவிட்டார். அதனால் ஆங்கில ராஜாங்கத்தார் அவரைச்
சுட்டுவிடும்படி உத்தரவிட்டனர்.

பிறகு ஆங்கிலேயர்கள் பிட் என்பவரை ராணுவ
இலாகா மந்திரியாகச் செய்தார்கள். வில்லியம் பிட் யுத்தம்
நடத்த ஆரம்பித்தது முதல் ஆங்கிலேயருக்கு அநேக வெற்
றிகள் ஏற்பட்டன. அவர் வீரத்தன்மை வாய்ந்த போர்வீரர்
களைக் கப்பற்படைத் தலைவர்களாகவும் சேனைத் தலைவர்க
ளாகவும் செய்தார். பிட் நியமனம் செய்த போர்வீரர்களில்
உல்ப் (Wolfe) என்பவர் ஒருவர். மேலும் பிட் பிரஷியா
வேந்தரான பிரெடெரிக் என்பவருக்கு ஏராளமான பொரு
ளுதவி செய்து பிரெஞ்சுக்காரருடன் போர்புரியும்படிச் செய்
தார். பிரெஞ்சுக்காரர் ஹனோவர் மாகாணத்தின்மேல் படை
யெடுக்க வருகையில், பிரெடெரிக் (1759) மிண்டன்
(Minden) என்னுமிடத்தில் பிரெஞ்சுப் படையைத் தோற்
கடித்தார். இதற்கு முன்னமேயே ராபர்ட் கிளைவ் (Robert
Clive) இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் முக்கிய நண்பரா
யிருந்த வங்காள நவாப்பை பிளாஸி (Plassey) என்னும்
கிராமத்துக்கு அருகில் (1757) தோற்கடித்தார். இவ்வெற்றி
யின் செய்தி கனடாவிலும் ஐரோப்பாவிலும் போர் செய்த
ஆங்கில வீரர்களுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும்
உண்டுபண்ணியது. கனடாவிற்கு அனுப்பப்பட்ட உல்ப்,
க்யூபெக் (Quebec) என்னும் கனடாவின் தலைநகரை வெகு
சிரமப்பட்டு முற்றுகை செய்து பிடித்தார். ஆனால் அவர்
போர்க்களத்திலேயே ஒரு குண்டுக்கு இரையானார். இவ்வாறு
ஆங்கிலேயருக்கு வெற்றிகள் கிடைத்துவரும் நிலைமையில்,
இரண்டாவது ஜார்ஜ் (1760) இறந்தார்.

**கேள்விகள்:—**

1. வால்போலின் குணாதிசயங்களைப்பற்றியும் அவர் பார்லிமென்டை எவ்வளவு தமது அதிகாரத்துக்கு உட்படுத்தினர் என்பதைப்பற்றியும் சுருக்கமாய் எழுதுக.

2. பொது நன்மையைக் கருதி வால்போல் செய்த சீர் திருத்தங்கள் யாவை?

3. வால்போல் எக்காரணங்களினால் தமது பதவியை இழந்தார்?

4. ஆஸ்டிரியா வார்ஸ்ப்போரின் காரணங்கள் யாவை? அதில் நிகழ்ந்த முக்கிய சண்டைகள் யாவை? அஃது எவ்வாறு முடிந்தது?

5. "நாற்பத்தைந்து" கிளர்ச்சியைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

6. வில்லியம் பிட் என்பவரைப்பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.

7. வட அமெரிக்காவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் எக்காரணத்தினால் மனஸ்தாபம் ஏற்பட்டது.

8. ஏழு வருஷப்போரில் நிகழ்ந்த சண்டைகள் யாவை?

---

## அத்தியாயம் 3.

---

### மூன்றாவது ஜார்ஜ் (1760—1820)

### பாகம் 1. பாரிஸ் சமாதானமும் அமெரிக்கன் சுதந்தரப்போரும். (1760—1783)

**ஜார்ஜின் குணாதிசயங்களும் விக் கட்சியின் வீழ்ச்சியும்:—** இரண்டாவது ஜார்ஜ் இறந்தவுடன் அவருடைய பேரனை ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தொன்று. அவருக்குப் பிடிவாதமும், சுயேச்சையும் அதிகம். அவர் அரசர்க்குரிய சர்வ அதிகாரங்களையும் வகிக்கவேண்டுமென்று விரும்பினர். அவருடைய தாயார்



அவருக்குப் பல தடவைகளில் "குழந்தாய், நீ உன்னுடைய
முன்னோர்களைப்போல் பேருக்குமாத்திரம் மன்னராயிராமல்
உண்மையாய்ச் சர்வ அதிகாரங்களையும் பெற்ற அரசனாய்
இரு" என்று அடிக்கடி சொல்லி வந்தாள். அனைப்பற்றி அவர்
சுமார் ஐம்பது வருஷகாலமாய் அதிகாரம் வகித்துவந்த விக்
கட்சியினரைத் தொலைக்க எண்ணினர். வெகு காலம் அதிகா
ரத்தில் இருந்துவந்த விக்கட்சியார்கள் அரசரின் அபிப்பிரா
யத்தை ஒத்து துரைத்தனத்தை நடத்துவதற்கு இஷ்டப்பட
வில்லை. தவிர, மூன்றாவது ஜார்ஜ் கட்சித்துரைத்தனம் தேச
நன்மைக்கு ஏற்றது அல்லவென்று நினைத்தார். அவர் தமது
இஷ்டப்பிரகாரம் துரைத்தனம் நடத்த உத்தேசித்து டோரிக்
கட்சியார்களின் உதவியைக் கொண்டு பிட் என்பவரை கி. பி.
1761-ல் உத்தியோகத்தை ராஜிநாமா செய்யும்படிச்செய்தார்.
ஆனால் அவருக்கு டோரிக் கட்சியின் தலைவர்களை தமது மந்
திரிகளாக நியமித்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம்
கிடையாது. தமது இஷ்டப்படி மந்திரிகளை நியமித்துக்
கொண்டு இங்கிலாந்தின் அரசியலை சர்வதிகாரத்துடன் நடத்த
வேண்டும் என்பது ஜார்ஜின் அபிப்பிராயம்.

விக் கட்சியின் பலம் குன்றியதற்கு, வேறு காரணங்
களும் உண்டு. விக் கட்சியில் வால்போலைப்போல அதிகத்
திறமை வாய்ந்த தலைவர்கள் இல்லை. மேலும் அக்கட்சியார்
களுக்குள் பல மனஸ்தாபங்கள் ஏற்பட்டதால் அக்கட்சி
அநேக பிரிவுகளாகப் பிரிந்து போயிற்று. மேற்கூரிய காரணங்
களால் கி. பி. 1763-ல் விக் கட்சியின் அதிகாரம் இங்கிலாந்
தில் அழிந்துபோயிற்று. அதன்பிறகு மூன்றாவது ஜார்ஜின்
ஆட்சிக்காலத்தில் விக் கட்சியார்கள் அரசியலில் அதிகாரம்
பெற முடியவில்லை. இம்மாதிரியாக 'விக்' கட்சியின் ஆட்சி
முடிவடைந்தது.

**பாரிஸ் சமாதானம் (1763):**—ஜார்ஜ் பாரிஸ் நகரில் பிரெஞ்சுக்காரர்களுடன் ஒரு உடன்படிக்கையை அவசரமாகச் செய்து ஏழு வருஷ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதன்படி பிரெஞ்சுக்காரர் இங்கிலாந்திற்குக் கனடாவையும் கேப்பிரிட்டன் தீவையும் கொடுத்துவிடுவது என்றாஏற்பட்டது. ஆனால் நியூபவுண்ட்லந்து கடற்கரையில் மீன் பிடிப்பதற்குள்ள பாத்தியதை பிரான்ஸ் வைத்துக் கொள்வதற்கு இங்கிலாந்து சம்மதித்தது. வட அமெரிக்காவில் பிரிட்டிஷ்காரர்கள் குடியேறின பிரதேசத்துக்கும் லூஷியானாவிற்கும் மிஸிஸிபி நதி எல்லையென ஒரு ஏற்பாடும் செய்துகொள்ளப்பட்டது. மேலும் பிரான்ஸ் மைனார்க்கா தீவை இங்கிலாந்திற்குக் கொடுத்தது; ஆனால் போரில் ஜயிக்கப்பட்ட புதுச்சேரி முதலான சில பட்டணங்கள் பிரெஞ்சுக்காரர்களுக்குத் திரும்பவும் கொடுக்கப்பட்டன. ஸ்பெயின் இச்சமாதானத்தின்படி பிளாரிடா தீபகற்பத்தை இங்கிலாந்திற்குக் கொடுத்தது. ஆனால் இங்கிலாந்து அதற்குப் பதிலாக ஹாவன்னா, மானில்லா இரண்டையும் ஸ்பெயினுக்குத் திருப்பிக்கொடுத்துவிட்டது. இச்சமாதானத்தில் ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்தபடி அதிக பயனை இங்கிலாந்து அடையவில்லை. அவசரப்பட்டுச் சமாதானம் செய்து கொள்ளாமலிருந்தால் இங்கிலாந்து இன்னும் அதிக லாபங்களை அடைந்து இருக்கலாம்.

**அமெரிக்கன் சுவாதீனப் போரின் காரணங்கள்:**—ஏழு வருஷப்போர் முடிந்தபின், அமெரிக்காவில் குடியேறின ஆங்கிலேயருக்கும், தாய் நாட்டில் உள்ளவர்களுக்கும் ஒரு பெரிய போர் ஏற்பட்டது. அதற்கு **அமெரிக்கன் சுவாதீனப்போர்** என்று பெயர். ஏழு வருஷ யுத்தம் நடக்கும்பொழுது அமெரிக்காவில் குடியேறின ஆங்கிலேயர்கள் தமது தாய் நாட்டாருக்கு உதவி செய்தார்கள். போர் முடிந்ததும், அதனால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பொருட்செலவின் ஒரு



பங்கை அமெரிக்கர்கள் கொடுக்கவேண்டுமென்று ஆங்கிலேயர்கள் கேட்டார்கள். அக்காலத்தில் முதன் மந்திரியாயிருந்த க்ரேவின்வில் (Grenville) அமெரிக்கர்களிடமிருந்து பொருளுதவியைப் பெற வரி விதித்தலே ஒரு சிறந்த வழி யென்று நினைத்து முத்திரைக் காகிதச்சட்ட (Stamp Act)த்தைப் பிறப்பித்தார். அதன்படி அமெரிக்கர்கள் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் முத்திரைக் காகிதங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்பது விதிக்கப்பட்டது. முத்திரைக் காகிதங்களின் விற்பனையினால் வரும் பணம் இங்கிலாந்தைச் சேர்ந்தது. ஆனது பற்றி அமெரிக்கர்கள் தங்களுடைய பிரதிநிதிகள் இல்லாத ஆங்கிலப் பார்லிமென்டுக்குத் தம்மேல் வரிபோட அதிகாரமில்லை என்று சொல்லி முத்திரைக்காகித வரியைக் கொடுக்க மறுத்தார்கள். அவர்கள் 'பிரதிநிதிகள் இல்லாவிடில் வரியும் இல்லை' (No taxation, no representation) என்று சொன்னார்கள். ஆகையால் ஆங்கிலேயர் முத்திரைக் காகிதச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, தேயிலை, காகிதம் முதலிய சாமான்களின்மீது இறக்குமதி வரியை விதித்தனர். அமெரிக்கர்கள் இவ்வரியையும் கொடுக்க மறுத்ததைக்கண்டு பார்லிமென்ட் தேயிலை வரியைத் தவிர மற்ற எல்லா வரிகளையும் நீக்கிவிட்டது. ஆயினும் அமெரிக்கர்கள் தேயிலை வரியைக் கூடக் கொடுக்க மறுத்தார்கள்.

இந்த நிலைமையில் போஸ்டன் (Boston) துறைமுகத்தில் சில இங்கிலீஷ்க்கப்பல்கள் தேயிலைச் சுமையை (1773) ஏற்றிவந்து நின்றன. அப்போது அந்த நகரவாசிகள் அமெரிக்காவின் ஆதிக்குடிகளை*ப் போல் மாறுவேஷம் பூண்டு ஆங்கிலக் கப்பல்களில் ஏறித் தேயிலைப் பெட்டிகளை யெல்லாம்

* அமெரிக்காவின் ஆதிக்குடிகளுக்கு 'ரெட் இந்தியர்' (Red Indians) என்று பெயர்.

எடுத்துக் கடலில் எறிந்துவிட்டார்கள். இந்த அடாத செய்கையைக்கேட்ட ஆங்கிலப் பார்லிமெண்ட் கோபமடைந்து அமெரிக்கர்கள்மீது போர் புரியவேண்டுமெனத் தீர்மானம் செய்தது.

அமெரிக்கன் சுவாதீனப்போரின் வரலாறு (1774—1783) இதற்குப்பிறகு ஆங்கிலேயர் குடியேறின பதின்மூன்று நாடுகளும் பிலடெல்பியா (Philadelphia) என்ற நகரில் ஒன்றுக்ச் சேர்ந்து ஒரு மகாசபை (Congress) யைக் கூட்டிற்று. அச்சபை 'இந்த நாடுகள் ஆங்கில வேந்தராகிய ஜார்ஜின் ஆட்சியிலிருந்து விலகிச் சுதந்தரம் அடைந்தவை' என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதற்குச் சுவாதீன அறிக்கை (Declaration of Independence) என்று பெயர். பிறகு அமெரிக்கர்கள் பல படைகளைச் சேகரித்து ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) என்ற ஒரு சிறந்த போர் வீரரைத்தங்களது சேனைத்தலைவராகச்செய்துகொண்டார்கள். பர்காயன் (Burgoyne) என்ற தளகர்த்தரால் நடத்தப்பட்ட ஒரு ஆங்கிலச் சைன்யம் அமெரிக்கர்களால் ஸரடோகா (Saratoga) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டு, ஓட வழியின்றி அவர்களிடம் சரணம் அடைந்தது. ஆங்கிலேயர் இச் செய்தியைக் கேட்டவுடன் திகில் அடைந்தனர்.

இதற்குப் பிறகு பிரான்ஸும், ஸ்பெயினும் ஏழு வருஷ யுத்தத்தில் தாம் இழந்த நாடுகளை மீட்டுக்கொள்ள நினைத்து அமெரிக்கர்களின் கட்சியிற்சேர்ந்துகொண்டன. இக்காரணத்தினல் அக்காலத்தில் பிரதான மந்திரியாயிருந்த நார்த் பிரபு (Lord North) அமெரிக்கர்களோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். ஆனல் பிட் * மரணத் தருவாயில் இருந்தபோதிலும், தட்டுத் தடுமாறி பார்லிமெண்ட் மண்ட

* இவர் 'சாதம் பிரபு' (Earl of Chatham) என்ற பட்டம் பெற்றிருந்தார்.



பத்திற்குச் சென்று, "நீடித்த காலமாய் நமக்கு முக்கிய விரோதிகளான பிரெஞ்சுக்காரருடன் நாம் சிநேகம் செய்துகொள்வதா? நாம் அமெரிக்கர்களை சுவாதீனம் அடைய




விடுவதா?' என்று உரத்துப் பேசினர். ஆகையால் பார்லிமெண்ட் அமெரிக்கர்களுடன் சமாதானம் செய்துகொள்ளச் சம்மதிக்கவில்லை. பிறகு ஹாலந்தும் அமெரிக்கர்களின்

கட்சியில் சேர்ந்துகொண்டது. ஆகவே, ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்களுடனும், ஸ்பெயின், பிரான்ஸ், ஹாலந்து தேசத்தவர்களுடனும் போர் புரியலானார்கள். இச்சமயத்தில் ஆங்கிலேயர் மிகவும் ஆபத்தான நிலைமையில் இருந்தனர்.

ஆங்கில அட்மிரலான ராட்னி (Rodney) மேற்கு இந்தியத் தீவுகளின் அருகில் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார். ஸ்பெயின் நாட்டினர்கள் ஜிப்ரால்டர் கோட்டையை முற்றுகை செய்து அதை ஆங்கிலேயரிடமிருந்து பிடுங்க முயன்றார்கள். ஆனால் ஆங்கிலத் தலைவரான எலியட் (Elliot) அக்கோட்டையை வெகு தைரியத்தோடு காத்து, விரோதிகளைத் தோற்கடித்துத் துரத்தினார். பிறகு அமெரிக்காவில் யார்க்டவுன் (Yorktown) என்னுமிடத்தில் கார்ன்வாலிஸ் என்ற ஒரு ஆங்கில தளகர்த்தரின் கீழ் இருந்த ஒரு சைன்யம் (1781) அமெரிக்கர்களிடம் தஞ்சம் அடைந்தது.

இதற்குப் பிறகு (1783) ஆங்கிலேயர்கள் வெர்ஸேய்ல்ஸ் (Versailles) என்னுமிடத்தில் அமெரிக்கர்களுடன் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டார்கள். அதன்படி அவர்கள் ஆங்கிலேயர் குடியேறின நாடுகளின் சுவாதீனத்தை ஒப்புக்கொண்டார்கள். இதை அமெரிக்கன் ஐக்கிய நாடுகள் (The United States of America) என இக்காலத்தில் அழைக்கப்படுகின்றன. மேலும் ஆங்கிலேயர்கள் அலிகெனி மலைத்தொடருக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தின்மேல் தங்களுக்குள்ள பாத்தியத்தைக் கொடுத்துவிட்டார்கள். ஆகையால் அப்பிரதேசம் குடியேற்ற நாடுகளின் ஆதீனத்தின்கீழ் வந்துவிட்டன. ஸ்பெயின் தேசத்தவர்களுக்கு மைனார்க்கா தீவும் பிளாரிடா தீபகற்பமும் ஆங்கிலேயர்களால் கொடுக்கப்பட்டன. பிரெஞ்சுக்காரர்களும் டொபாகோ, செனகல் முதலான நாடுகளை அடைந்தார்கள்.



கேள்விகள்:—

1. பாரிஸ் சமாதானத்தினால் ஆங்கிலேயர்கள் அடைந்த லாபம் யாது?

2. அமெரிக்கன் சுவாதீனப்போர் எக்காரணங்களால் ஏற்பட்டது? அப்போரில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் யாவை? அது எவ்வாறு முடிந்தது?

## பாகம் 2. பிரெஞ்சுப் புரட்சி. (1783—1815)

சிறிய பிட் முதன் மந்திரியாதல்:—அமெரிக்கன் சுவாதீனப்போர் முடிந்த வருஷத்திலேயே (1783) ஜார்ஜ் டோரிக் கட்சியைச் சேர்ந்தவரும் சாதம் பிரபுவின் இளைய புதல்



வருமான வில்லியம் பிட் என்பவரைத் தமது பிரதான மந்திரியாகச் செய்துகொண்டார். அப்பொழுது அவருக்கு இருபத்து ஐந்து வயதுதான். ஆகிலும் அவர் பேசும்

திறமை வாய்ந்தவராதலால் பார்லிமெண்டில் மிகச் செல்
வாக்கு உள்ளவராஞர். அரசர் தமது மந்திரிகளை இஷ்டம்
போல நியமனம் செய்துகொள்ளவேண்டும் என்பது அவரது
எண்ணம். பொது ஜனங்களுக்கும் ஜார்ஜுக்கும் அவரிடத்
தில் விசுவாசமும் நம்பிக்கையும் உண்டு. அவர் பண விஷயங்
களில் கருத்தும், ராஜீய விஷயங்களில் விசாலமான நோக்கமும்
உள்ளவர். அவர் தேசத்தின் முன்னேற்றத்தைக் கருதி பல
காரியங்களைச் செய்தார். அவர் பார்லிமெண்டுக்கு அங்கத்
தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் சில சீர்திருத்தங்
களைச் செய்ய முயன்ருர். மேலும், ஆங்கில வியாபாரத்தைப்
பெருக்க அவர் பிரான்ஸுடன் ஒரு வர்த்தக உடன்படிக்கை
யைச் செய்துகொண்டார். நாட்டில் கி. பி. 1793 வரையில்
அமைதி நிலவி இருந்ததால் வியாபாரம் விருத்தியாயிற்று.
ஆனதுபற்றி ஆங்கிலேயரின் பொருள்நிலை மேன்மேலும் ஓங்கி
து இ வையனைத்திற்கெல்லாம் பிட்டின் முயற்சிதான் காரணம்.

பிரான்ஸில் நிகழ்ந்த ஒரு பெருங்கலகம்:—பிட் இங்கி
லாந்தில் பிரதான மந்திரியாய் இருக்கையில் பிரான்ஸில் ஒரு
பெரும் கலகம் ஏற்பட்டது. பதினைந்தாவது லூயியின் காலம்
முதல் பிரெஞ்சுக்காரர்கள் கொடுங்கோன்மையால் இம்சை
அடைந்து வந்தார்கள். பிரபுக்களும், குருமார்களும் பொது
ஜனங்களை வருத்தி வந்தார்கள். ஏழை ஜனங்கள் ராஜாங்கத்
திற்கு அதிக வரிகளைக் கொடுத்து வந்தார்கள். பணக்காரர்
கள் சொற்ப வரியையே ராஜாங்கத்திற்குச் செலுத்தி வந்தார்
கள்; ஆயினும் சர்வ அதிகாரங்களையும் அவர்களே வகித்தார்
கள். இக்காரணங்களினுல் சாமானிய ஜனங்கள் தமது அரச
ராகிய பதினருவது லூயியின் ஆட்சிக்கு விரோதமாய்க் கலகம்
செய்யத் தலைப்பட்டார்கள். அவர்கள் இது வரையிலும்
அதிகாரம் செலுத்தி வந்த பிரபுக்களையும் குருமார்களையும்
கொலை செய்தும், தமது அரசரான பதினருவது லூயியையும்



மகாராணியாரையும் சிரசாக்கினை செய்தும் இன்னும் இம்
மாதிரியான கொடிய செய்கைகளைச் செய்தும் வந்தார்கள்.
இவ்வாறு அவர்கள் முடியரசை (Monarchy) ஒழித்துக்
குடியரசை (Republic) ஏற்படுத்திக் கொண்டார்கள். இத்
தகைய ராஜீய மாறுபாடுகளையே பிரெஞ்சுப் புரட்சி (French
Revolution) என்று சொல்லுகிறோம்.

ஆங்கிலேயரும் பிரெஞ்சுப் புரட்சியும்:—பிரான்ஸில்
அரசுமுறை தலைகீழாக மாறிவிட்டதைக் கேட்ட ஆங்கிலே
யர்கள் முதல் முதலில் அந்த ராஜீய மாறுபாடுகளைப் பொது
ஜன நன்மைக்கு உண்டானவை என்று நினைத்தார்கள்.
ஆனல் பிரெஞ்சுக் கலகக்காரர்கள் தங்களது மன்னரைக்
கொன்றுவிட்டு ஐரோப்பாவிலுள்ள இதர தேசத்தவர்களையும்
முடியரசை ஒழிக்கக் கலகம் செய்யும்படி தூண்டியதைக்
கண்டு, ஆங்கிலேயர்கள் பிரான்ஸின்மேல் (1793) போர்
புரிந்தார்கள். இதற்கு முன்னமேயே ஆஸ்டிரியாவும் பிரஷி
யாவும் பிரான்ஸின்மீது போர் தொடுத்துவிட்டன.

நெபோலியன் போனபார்ட்:—இச்சமயத்தில் பிரான்ஸ்
தேசத்தில் போர்த்திறமையில் ஒப்பில்லாத நெபோலியன்
போனபார்ட் (Napoleon Bonaparte) என்ற தளகர்த்தர்
ஒருவர் இருந்தார். அவர் மத்தியதரைக் கடலிலுள்ள
கார்ஸிகா (Corsica) என்ற தீவிற் பிறந்தவர். அவர் பெருந்
தன்மை வாய்ந்தவர்; போர்த்திறமை யுள்ளவர்; பொது ஜனங்
களின் மனதைக் கவரும்படியான ஓர் அபூர்வ சக்தி அவ
ரிடம் இருந்தது. அவர் முதல் முதலில் ஒரு பிரெஞ்சு பீரங்
கிப் பட்டாளத்துக்குத் தலைவராயிருந்தார்.

கி. பி. 1793-ல் வில்லியம் பிட்டினுல் பிரெஞ்சுப் புரட்
டர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்ய அனுப்பப்பட்ட
ஒரு சைன்யத்தை, அவர் டூலன் நகரை வெகு திறமையுடன்
முற்றுகை செய்து கைப்பற்றிக் கொண்டபின் தாக்கிவிட்

டார். அதன் பிறகு கி. பி. 1796-ல் போனபார்ட் இடலி தேசத்தில் வைக்கப்பட்ட பிரெஞ்சுச் சைன்யத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் ஆஸ்டிரியர்களை இடலி தேசத்திலிருந்து தோற்கடித்துத் துரத்திவிட்டார்; அவர்களை இடலியை பிரெஞ்சுக்காரர்களிடம் கொடுத்துவிடும்படி செய்தார். இதே காலத்தில் பிரெஞ்சுக்காரர்களின் கட்சியில் சேர்ந்து கொண்ட ஸ்பெயின் ஹாலந்து தேசங்களின் கப்பற்படைகள் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் தயார் செய்தன. இதைத் தடுக்க நினைத்து ஆங்கில அட்மிரலான ஜேர்விஸ் ஸ்பானிஷ் போர்க் கப்பல்களை கி. பி. 1797-ல் ஸெண்ட் வின்ஸெண்ட் முனைக்கு அருகில் சந்தித்துப் போர் புரிந்தார். கம்மடோர் நெல்ஸன் என்ற ஆங்கில அட்மிரலின் போர்த்திறமையினால் இக்கடற்சண்டையில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றி யேற்பட்டது. அதே வருஷத்தில் ஆங்கில அட்மிரலான டங்கன் டச்சுக்காரர்களை காம்பர்டௌன் என்னுமிடத்துக்கு அருகில் நடந்த கடற் சண்டையில் தோற்கடித்தார். இவ்வாறு ஆங்கிலேயர்கள் கடற் சண்டைகளில் வெற்றியடைந்து வருகையில் அவருடைய மனோ தைரியத்தையும், போர்த்திறமையையும் கண்ட பிரெஞ்சுக்காரர்கள் அவரைக் குடியரசு முதற் பரிபாலகர் (First Consul) என ஏற்றுக் கொண்டார்கள். அவர் ஒரு பெரிய பிரெஞ்சு ஸாம்ராஜ்யத்தை ஐரோப்பாவில் ஏற்படுத்தித் தாமே அதன் சக்கரவர்த்தியாக விளங்க வேண்டுமென்று விரும்பினார்.

**நைல்நதிச் சண்டை (1798)** :—நெபோலியன் இந்தியாவில் ஆங்கிலேயரின் அதிகாரத்தை அழிக்க எண்ணி, ஒரு பெரிய கப்பற்படையுடன் மத்தியதரைக் கடல் வழியாக இரகசியமாய்ச் சென்றார். அவர் போகும் வழியில் மால்டா தீவைக் கைப்பற்றிக்கொண்டார். பிறகு அவர் எகிப்து (Egypt) நாட்டை ஜயித்து, நைல் (Nile) நதியின் முகத்துவாரத்தில் அபுகிர்



குடாவில் தமது போர்க்கப்பல்களை வைத்திருந்தார். இதை யறிந்த ஓர் ஆங்கில அட்மிரலான ஸர் ஹொரோஷியோ நெல்ஸன் (Nelson) சில கப்பல்களுடன் வெகு வேகமாய்ச் சென்று பிரெஞ்சுக் கப்பல்களைத் தாக்கி அழித்துவிட்டார். மத்தியதரைக் கடலில் ஆங்கிலேயரின் கடல் ஆதிக்கியத்தை இந்த வெற்றி ஸ்தாபித்தது; மேலும் கீழ் நாடுகளை ஜயிக்க வேண்டும் என்ற போனபார்ட்டின் கனவையும் தொலைத்தது.

பிறகு எகிப்து நாட்டினர் பிரெஞ்சுப் போர்வீரர்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டனர். இச்சமயத்தில் நெப்போலியன் ஒரு கப்பலில் ஏறி பிரான்ஸுக்கு இரகசியமாகச் சென்று விட்டார்.

நெபோலியன் பிரான்ஸுக்குத் திரும்பி வந்ததும் பிரெஞ்சுக்காரர்கள் அவரைக் குடியரசின் முதற் பரிபாலகராகச் செய்து ...க்காரர்த்துடன் பிரான்ஸை ஆண்டுவரும்படி ஏற்பாடு செய்தார்கள். இவ்வாறு ஸீஸா, க்ராம்வெல் இத்தளகர்த்தர்களைப்போல நெப்போலியன் பிரெஞ்சுச் சேனையின் பலத்தைக்கொண்டு முதன்மையைப் பெற்று ஆளு வரலானார்.

இச்சமயத்தில் ஆஸ்டிரியா, ரஷியா, இங்கிலாந்து இந்த மூன்று தேசங்களும் ஒன்று சேர்ந்து பிரான்ஸுடன் போர் புரிய ஏற்பாடுகள் செய்தன. போனபார்ட் ரஷியா வேந்தரை அந்த சிநேக ஏற்பாட்டினின்று விலகிக்கொள்ளும்படி செய் தார். பிறகு அவர் ஆல்ப்ஸ் மலைத்தொடரைக் கடந்து மாரங்கோ என்னுமிடத்தில் ஆஸ்டிரியர்களைத் தோற்கடித்துப் பிரெஞ்சுக் காரர்களின் அதிகாரத்தை இடலியில் ஸ்தாபித்தார்.

கி. பி. 1801-ல் இருதரத்தார்களும் போரை நிறுத்த வேண்டுமென்று விரும்பினார்கள். இச்சமயத்தில் வில்லியம் பிட் பிரதான மந்திரிப்பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவருக்குப்பின் பிரதான மந்திரியாய் வந்த அடிங்டன்

கி. பி. **1802**-ல் பிரெஞ்சுக்காரர்களுடன் **அமீன்ஸ்** என்ற விடத்தில் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். ஆங்கிலேயர்கள் அதன்படி தாங்கள் ஜயித்த நாடுகளைப் பிரெஞ்சுக்காரர்




களுக்குத் திரும்பவும் கொடுத்து விட்டார்கள். ஸ்பெயின் ட்ரினிடாட் தீவையும், ஹாலந்து ஸிலோன் தீவையும் ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தது.

ட்ரேபால்கர் சண்டை (1805):—அமீன்ஸ் உடன்படிக்கைக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் குடியரசை ஒழித்துவிட்டு, நெப்போலியனைச் சக்கரவர்த்தியாகச் செய்து கொண்டார்கள். அவர் க்ராம்வெல்லைப்போல் மனோ தைரியமும், விடாமுயற்சியும், பிடிவாதமும் உள்ளவர். அவர் பிரிட்டிஷ்த் தீவுகளின்மேல் படையெடுத்து அவைகளைக் கைப்பற்றவேண்டும் எனத் தீர்மானித்தார். ஆகையால் அவர் ஒரு



கப்பற் படையைச் சேகரித்து வில்நேவ் (**Villeneuve**) என்பவரை அதன் அட்மிரலாக நியமித்தார். இங்கிலீஷ் கால்வாயில்



ஓர் ஆங்கில கப்பற்படை இங்கிலாந்தின் பாதுகாப்புக்காக இருந்தபடியால், நெப்போலியன், வில்நேவ் அட்மிரலைத் தமது படை

யுடன் மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்வதுபோல பாசாங்கு செய்யும்படி உத்தரவிட்டார். ஆங்கிலேயர் தமது கப்பற்படையை இங்கிலீஷ் கால்வாயிலிருந்து எடுத்துச் செல்வார்கள் என்றும், அச்சமயத்தில் தாம் இங்கிலாந்தைக் கைப்பற்றி விடலாமென்றும் நெப்போலியன் எண்ணியிருந்தார். ஆனால் அவர் நெல்ஸனை ஏமாற்ற முடியவில்லை. வீல்நேவ் தமது கப்பற்படையுடன் ஸ்பெயினுக்கு அருகிற்சென்று இருப்பதாகக் கேள்விப்பட்டு, நெல்ஸன் தமது படையுடன் ஸ்பெயினுக்குச் சென்றார். ட்ரேபால்கர் (Trafalgar) என்ற முனைக்கு அருகில் ஒரு கடற்சண்டை நடந்தது. இதில் ஆங்கிலேயர் வெற்றி யடைந்தனர். ஆயினும் இக் கடற்சண்டையில் நெல்ஸன் ஒரு குண்டுக்கு இரையானார். இவ்வெற்றி இங்கிலாந்தை ஓர் ஆபத்தான நிலைமையிலிருந்து காப்பாற்றியதோடுகூட இங்கிலாந்தின் கடல் வலிமையையும் நிலைநாட்டியது.

ட்ரேபால்கர் சண்டைக்குப் பிறகு, இங்கிலாந்து பிரான்ஸுக்கு விரோதமாய் ஆஸ்டிரியா, ரஷியா, ஸ்வீடன் தேசங்களுடன் சிநேக உடன்பாடுகள் செய்துகொண்டது. இதை யறிந்த நெப்போலியன் கி. பி. 1805-ல் ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்து ஆஸ்டிரியர்களை ஆஸ்டர்லிட்ஸ் என்ற விடத்தில் நடந்த சண்டையில் தோற்கடித்துத் துரத்திவிட்டார். ஆஸ்டிரியர்கள் பிரெஸ்பர்க் என்னுமிடத்தில் ஓர் உடன்பாடு செய்துகொண்டார்கள். இதன் பிறகு நெப்போலியன் பிரான்ஸுக்குக் கிழக்கேயுள்ள நாடுகளை ஜயித்து அவைகளைத் தம் சகோதரர்களைக் கொண்டு ஆண்டு வரும்படி செய்தார்.

இச்சமயத்தில் (கி. பி. 1806-ல்) வில்லியம் பிட் இறந்து போனார். டோரிக்கட்சியார்கள் அரசியல் அதிகாரம் பெற்று கி. பி. 1807 முதல் கி. பி. 1830 வரையில் அரசருக்கு உதவி புரிந்து வந்தார்கள். இக்காலத்தில் நெப்போலியன் ரஷியாவுடன் போர் தொடுத்தார். ரஷியர்களை ஜீனு என்ற விடத்தில்



நடந்த சண்டையில் தோற்கடித்துவிட்டு தம்முடன் சமாதானம் செய்துகொள்ளும்படி செய்தார். பிறகு அவர் டில்ஸிட் என்னுமிடத்தில் ரஷியாவுடன் கி. பி. 1807-ல் உடன்பாடு செய்து கொண்டார்.

தீபகற்பப் போர் (1808—1814):—இச் சமாதானம் கி. பி. 1813 வரையில் நீடித்து இருந்தது. மற்ற ஐரோப்பிய தேசங்கள் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை வெறுத்த போதிலும் அவைகள் நெப்போலியனுக்கு அஞ்சிக் கலகம் செய்யாது சும்மாவிருந்தன.

நெப்போலியன் தமது இளைய சகோதரரான ஜோஸப் (Joseph) என்பவரை ஸ்பெயின் அரசராகச் செய்தார். ஸ்பெயின் நாட்டினருக்கு இதிற் கொஞ்சமேனும் சம்மதமில்லை. ஆதலால் அவர்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடினார்கள். இவ்வாறு இங்கிலாந்து ஸ்பெயின் கட்சியில் சேர்ந்துகொண்டு பிரெஞ்சுக்காரருடன் ஸ்பெயின் தீபகற்பத்தில் போர்புரிந்தது. இதற்குத் தீபகற்பப் போர் (Peninsular War) என்று பெயர். இப்போர் ஆறு வருஷகாலம் (1808-1814) நடந்தது. ஆங்கிலேயர் ஆர்தர் வெல்லெஸ்லி* (Arthur Wellesley) என்ற ஒரு தளகர்த்தரை ஒரு பெரிய சேனையுடன் அங்கே அனுப்பினர். அவர் பிரெஞ்சுக்காரர்களுடன் ஸ்பெயினில் அநேக சண்டைகளைப் புரிந்து வெற்றியடைந்து வந்தார். பிறகு ஸர் ஜான் மோர் என்ற ஓர் ஆங்கில தளகர்த்தர் கோரன்னு என்ற விடத்தில் பிரெஞ்சுக்காரர்களோடு சண்டை செய்தார். இச்சண்டையில் அவர் கொல்லப்பட்டு இறந்து போனார். ஆனால் ஆங்கிலேயர்களுக்குத்தான் இச் சண்டையில் வெற்றியேற்பட்டது. அவர் ஸ்பெயின் தேசத்துக்குள் சென்று டலவீரா (Talavera) என்ற விடத்தில்

* அவர் தம் (இந்தியா) நாட்டில் கவர்னர் ஜெனரல் பதவியில் இருந்த 'மார்க்குவிஸ் ஆவ் வெல்லெஸ்லியின் தம்பிதான்.

; பிரெஞ்சுச் சேனையைத் தோற்கடித்தார். இவ்வெற்றிக் ; ஆங்கில ராஜாங்கத்தார் அவருக்கு வெல்லிங்டன் பிரபு uke of Wellington) என்ற ஒரு பட்டத்தை அளித் ர். இதற்குப் பிறகு தமது படையுடன் அவர் இரண்டு ன்டைகளில் பிரெஞ்சுக்காரர்களுடன் வெகு தைரியத்துடன் ார் புரிந்து வெற்றி யடைந்தார்.

ஐரோப்பா தேசங்களில் கலகங்கள்:—ஸ்பெயின் தேசத் ில் போர்புரிந்து வந்த பிரெஞ்சுப் படைகளை யெல்லாம் நெப் ோலியன் அழைத்து ஒரு பெரிய சைன்யத்தைச் சேகரித் தார். ரஷியாவின்மீது படையெடுக்கவேண்டும் என்பது அவரது எண்ணம். இந்தப் பெரிய சைன்யத்துடன் அவர் மாஸ்கோ நகருக்குச்சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டார். இதைக்கண்ட ரஷியர்கள் கோபங்கொண்டு அவருடன் பயங் கரமான சண்டைகளைச் செய்யத் தயாரானார்கள். மாரிக்கால மானதால் அதிகக் குளிர் தாங்க மாட்டாமல் அவரது போர் வீரர்கள் அதிக கஷ்டமடைந்தார்கள். இக்காரணங்களால் அவர் தம் சைன்யத்துடன் மாஸ்கோவிலிருந்து பின்னடைந்து வந்தார். பின்னடைந்து வருகையில் ரஷியர்கள் எதிர்த்தபடியா லும் குளிரினாலும் பிரெஞ்சு வீரர்களில் அநேகர் மடிந்து போயினர். இவ்வாறு இந்த சைன்யம் அழிந்து விட்டது. பிறகு ஜர்மனியர்களும் நெப்போலியனுக்கு விரோதமாய்க் கலகம் செய்தார்கள். அவர்கள் ஒரு பெரிய படையுடன் பிரெஞ்சு சைன்யத்தை லிப்ஸிக் என்ற விடத்தில் சண்டை செய்து தோற்கடித்தார்கள். அதற்குப் பிறகு ஜர்மனியர்கள் பிரெஞ்சுக்காரர்களை ரைன் நதிக்குத் தெற்கே துரத்திவிட்டார் கள். இச்சமயத்தில் ஐரோப்பா முழுவதும் நெப்போலியனின் கொடிய ஆட்சியைக்கண்டு அவரை வெறுக்கலாயிற்று. பின்னர் அவர் ரஷியர்களுடனே போர்புரிய வேண்டியிருந்ததால் நெப் போலியன் ஸ்பெயினில் நடந்த போரில் அதிக சிரத்தை எடுத்



துக்கொள்ள முடியவில்லை. வெல்லிங்டன் பிரபு இச்சமயம் அறிந்து பிரெஞ்சுக்காரர்களை விட்டோரியா (Vittoria) என்ற விடத்தில் தோற்கடித்து ஜோஸப் என்பவரை ஸ்பெயினி லிருந்து துரத்திவிட்டார். இதற்குப்பின் பிரெஞ்சுக்காரர்கள்





தீபகற்பப் போர்

தங்கள் சேனையுடன் பிரான்ஸையே பாதுகாத்துக் கொள் ளும்படி நேர்ந்தது. இம்மாதிரியாக தீபகற்பப் போர் முடிந் தது.

வாட்டர்லூ சண்டை (1815):—ஸ்பெயினில் பிரெஞ் சுக்காரர்கள் தோல்வியடைந்ததைக் கேட்ட ஜர்மனியர்களும் ரஷியர்களும் சேர்ந்துகொண்டு பிரான்ஸின்மீது படையெடு த்து பாரிஸ் நகருக்குள் புகுந்தார்கள். இச்சமயத்தில் வெல் லிங்டன் பிரபுவும் லோல் என்ற விடத்தில் ஒரு பிரெஞ்சு

சேனையைத் தோற்கடித்துவிட்டு தம் சைன்யத்துடன் பிரான்ஸின் தென்பாகத்துக்குள் புகுந்தார். ஆகையால் நெப்போலியன் தப்ப வழியொன்றும் புலப்படாமல் கி. பி. 1814-ல் தம் பதவியை விட்டார். பிறகு அவர் எல்பா (Elba) என்னும் ஒரு சிறிய தீவிற்கு அனுப்பப்பட்டார். ஆனால் கி. பி. 1815



மார்ச்சு மாதத்தில் அவர் எல்பா தீவிலிருந்து பிரான்ஸுக்குத் தப்பி ஓடிவந்து தாம் இழந்த அதிகாரத்தைப் பெற நினைத்து வெகு எளிதில் ஒரு சேனையைக் கூட்டினார். பிரெஞ்சுக்காரர்கள் அதிக சந்தோஷத்துடன் அவரை வரவேற்று பதினெட்டாவது லூயியைச் சிங்காதனத்திலிருந்து துரத்தி



விட்டு நெப்போலியனை தங்கள் நாட்டின் சக்கரவர்த்தியாகச் செய்து கொண்டார்கள். இதையறிந்த வெல்லிங்டன் பிரபுவும், ஜர்மனியப் படைத்தலைவரான ப்ளூச்சர் (Blucher) என்பவரும் தம்முடைய படைகளுடன் பெல்ஜியம் நாட்டிலுள்ள வாட்டர்லூ (Waterloo) என்னும் கிராமத்தின் அருகில் நெப்போலியனைச் சந்தித்தார்கள். அங்கே ஒரு கடும் போர் நடந்தது. ஆரம்பத்தில் ஆங்கிலக் கட்சிக்கு வெற்றி ஏற்படாததுபோல் தோன்றியது. ஆயினும் வெல்லிங்டன் பிரபுவின் விடாமுயற்சியாலும், ஜர்மானியத் தளகர்த்தரின் உதவியாலும் ஆங்கிலேயர்கள் இச்சண்டையில் வெற்றியடைந்தார்கள். பிறகு நெப்போலியன் கைதியாக்கப்பட்டு தென் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலுள்ள ஸெண்ட் ஹெலீனா (St. Helena) என்னும் தீவிற்கு அனுப்பப்பட்டார். இதன் பிறகு நேசக்கட்சியினர் பதினெட்டாவது லூயியை பிரெஞ்சு மன்னராகச் செய்து வைத்தார்கள். பிறகு நெப்போலியன் அத்தீவிலேயே (1821) இறந்தார்.

வியன்னா காங்கிரஸ்:-(1815) இந்த நீடித்த போர் பாரிஸ் சமாதானத்தினால் முடிவடைந்தது. நெப்போலியன் ஸெண்ட் ஹெலீனாவுக்கு அனுப்பப்பட்ட பிறகு பதினெட்டாவது லூயி பிரெஞ்சு மன்னராகச் செய்யப்பட்டார். பிரான்ஸ் சில நாடுகளை இழந்தது. இங்கிலாந்து ஜயித்த நாடுகளில் பலவற்றைத் திரும்பவும் கொடுத்து விட்டபோதிலும் பிரான்ஸிடமிருந்து மொரீஷியஸ் தீவையும் சில மேற்கிந்தியத் தீவுகளையும் அடைந்தது. மேலும் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிருந்த ஸிலோன் தீவையும் நன்னம்பிக்கை முனைக்கு அருகிலுள்ள ஆப்பிரிக்காவின் தென்கோடி நாட்டையும் ஆங்கிலேயர்கள் தாங்களே வைத்துக் கொண்டார்கள். இடலியில் ஆண்டுவந்த சிற்றரசர்கள் அவரவர்களுடைய நாடுகளைத் திரும்பவும் அடைந்தார்கள். ஆனால் மைலன், வெனிஸ் என்ற

இரண்டு குடியரசு நாடுகளும் ஆஸ்டிரியாவிற்குக் கொடுக்கப்பட்டன. போரினால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடுபண்ண பிரஷியாவிற்கு ரைன் நதியின் இடது பக்கத்தில் உள்ள பூமிகள் கொடுக்கப்பட்டன. ரஷியா சக்கரவர்த்தி போலண்டு நாட்டை அடைந்தார். நெதர்லாந்துகளைத் தனியாகப் பிரித்து அவைகளை ஓர் அரசர் ஆண்டுவரும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. தவிர ஒவ்வொரு மன்னரும் சுயேச்சையுடன் தம் நாட்டை ஆண்டுவருவது என்று ஆயிற்று. இந்த ஏற்பாட்டினால் தேசிய உணர்ச்சி அதிகமாயிற்று என்றாலும் ஐரோப்பிய தேசங்களுள் யுத்தங்கள் ஒழிந்து நீடித்த சமாதானம் உண்டாகவில்லை.

**கேள்விகள்:—**

1. சிறிய பிட் எவ்வாறு பார்லிமெண்டில் முதன்மையைப் பெற்றார்? அவர் இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்காகச் செய்த காரியங்கள் யாவை?

2. சிறிய பிட்டின் குணாதிசயங்களைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

3. பிரெஞ்சுப் புரட்சியின் காரணங்கள் யாவை?

4. ஏன் இங்கிலாந்து பிரெஞ்சுப் பெருங்கலகத்தில் தலையிடும்படி நேரிட்டது?

5. நெப்போலியன் போனபார்ட் என்பவரின் மேலான குணங்களைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக. அவர் பிரான்ஸில் குடியரசுப் பரிபாலகர் என்ற உன்னதப் பதவியை எவ்வாறு அடைந்தார்? அவருடைய நோக்கங்கள் யாவை?

6. பிரெஞ்சுப் புரட்சிப்போரில் கி. பி. 1808 வரையில் நிகழ்ந்த முக்கிய சண்டைகளைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.


7. தீபகற்பப் போர் எக்காரணத்தினால் ஏற்பட்டது? அந்தப் போரில் நிகழ்ந்த முக்கிய சண்டைகள் யாவை?

8. வியன்னா காங்கிரஸினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் யாவை?



## பாகம் 3. அயர்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியமாதல் (1800)

**அயர்லாந்தியரின் நிலைமை (1600—1700):—**முதலாவது ஜேம்ஸின் காலத்தில் ஆங்கில பிராடெஸ்டன்ட்கள் வட அயர்லாந்திலுள்ள அல்ஸ்டர் (Ulster) மாகாணத்தில் குடி




யேறினார்கள். அது முதல் அந்நாட்டில் கதோலிக்குகளுக்கும், பிராடெஸ்டன்ட்களுக்கும் அடிக்கடி மனஸ்தாபங்கள் நேரிட்டுக்கொண்டே வந்தன. க்ராம்வெல், அயர்லாந்திய (ஐரிஷ்) கதோலிக்குகளைக் குடியரசை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். இதற்குப் பிறகு ஸ்டூவர்ட் மன்னர்களின் சார்பாக அயர்லாந்தில் உண்டான கலகங்களை மூன்றாவது வில்லியம் அடக்கினார். அதுமுதல் ஐரிஷ் கதோலிக்குகள் நிலங்களை

இழந்ததும் உத்தியோகம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பார்லிமெண்ட் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் கிடையாது. பிராடெஸ்டன்ட்கள் அடங்கிய ஐரிஷ் பார்லிமென்டோ கதோலிக்குகளின் குறைகளை நீக்க ஒருவிதமான ஏற்பாடும் செய்யவில்லை. தவிர, ஆங்கில ராஜாங்கத்தின் அனுமதியின்றி ஐரிஷ் பார்லிமெண்ட் புதிய சட்டங்களைச் செய்யக்கூடவில்லை. மேலும், ஆங்கிலேயர் அயர்லாந்தியரின் வர்த்தகம் ஓங்காமல் செய்து வந்தனர். இத்தகைய குறைகள் ஐரிஷ் கதோலிக்குகளுக்கும், பிராடெஸ்டன்ட்களுக்கும் இருந்து வந்தன.

அயர்லாந்தியரின் கலகம் (1798):—இத்தகைய குறைகளினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அயர்லாந்தியர் (1798) ஒரு பெரிய கலகம் செய்தனர். நெப்போலியன் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்துக் கலகம் செய்யும்படி தூண்டிக்கொண்டு வந்தார். அயர்லாந்துக்கு அனுப்பப்பட்ட ஓர் ஆங்கிலச்சேனை அக்கலகத்தை எளிதில் அடக்கிவிட்டது. அக்காலத்தில் பிரதான மந்திரியாயிருந்த பிட் விசாலமான நோக்கமும் புத்தி நுட்பமும் உள்ளவராதலால், அயர்லாந்தியரின் குறைகளை நீக்கும் வரையில் அவர்கள் கலகம் செய்துகொண்டேயிருப்பார்கள் என்று நினைத்தார். ஆகையால் அவர் அயர்லாந்தை இங்கிலாந்துடன் ஐக்கியமாக்கி அது முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தார். அவர் ஐரிஷ் கதோலிக்குகளின் குறைகளை நீக்குவதாகச் சொல்லி அவர்களைத் தமது ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கும்படி செய்தார்.

ஐக்கியச் சட்டம்:—அப்பால் அவர் ஐரிஷ் பார்லிமென்டில் ஐக்கியச் சட்டம் (Act of Union) ஒன்றைப் பிறப்பிக்கும்



படி செய்தார். அதன்படி, ஐரிஷ்பார்லிமெண்ட் ஆங்கில பார்லிமெண்டுடன் ஐக்கியமாக்கவேண்டும்; 32 பிரபுக்களும், 100 பொதுஜனப் பிரதிநிதிகளும் அந்த ஐக்கியப் பார்லிமெண்டுக்கு அயர்லாந்தின் அங்கத்தினர்களாக அனுப்பப்படவேண்டும்; வியாபார விஷயங்களில் அயர்லாந்தியர் ஆங்கிலேயருடன் சமத்துவமாக பாவிக்கப்படவேண்டும் என்பன ஏற்பட்டன. அதுமுதல்தான் (1800) யூனியன் ஜாக் (Union Jack) என்னும் ஐக்கிய பிரிட்டிஷ்க் கொடி பாக்கத் தொடங்கியது.

ஐக்கிய ஏற்பாட்டில் உள்ள ஒரு பெருங்குறை:—இவ்வாறு அயர்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியமானபோதிலும் ஐரிஷ் கதோலிக்குகளின் குறைகள் ஒழிக்கப்படாமலே இருந்து வந்தன. பிட் தமது வாக்கை நிறைவேற்ற கதோலிக் விடுதலை மசோதா (Catholic Emancipation Bill)வைக் கொணர்ந்தார். ஜார்ஜ் அதற்கு உடன்படவில்லை. ஆகையால் பிட் தமது வார்த்தைக்கு மதிப்பில்லாமல் போனதைக்கண்டு தமது பதவியை கி. பி. 1801-ல் ராஜிநாமா செய்தார். அதனால் ஐரிஷ் கதோலிக்குகளின் குறைகள் நிவர்த்தியாகாமலே (1829) வரையில் இருந்து வந்தன.

கேள்விகள்:—

1. ஐரிஷ் கதோலிக்குகளுக்கும் பிராடெஸ்டன்ட்களுக்கும் பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியிலே உண்டான குறைகள் யாவை? அக்குறைகளைப் போக்க பிட் செய்த ஏற்பாடு யாது?

2. ஐக்கியச் சட்டம் எக்காரணத்தினால் பிறப்பிக்கப்பட்டது? அதன்படி ஏற்பட்டவை யாவை?

3. ஐக்கிய ஏற்பாட்டில் உள்ள ஒரு பெருங் குறை யாது?

## பாகம் 4. தொழிற் புரட்சியும் மெதேடிஸ்ட் இயக்கமும்.

தொழில்முறை மாறுபாடுகள்:—மூன்றாவது ஜார்ஜின் ஆட்சிக்காலத்தில் கைத்தொழில்கள் சம்பந்தமான சில மாறுபாடுகள் உண்டாயின. பத்தொன்பதாவது நூற்றாண்டு ஆரம்பம் வரையில் ஆங்கிலேயர்கள் குடியானவர்களாகவும், வியாபாரிகளாகவும் இருந்து வந்தார்கள்; இப்பொழுது இருப்பது போல பல தொழில்களையும் அறிந்திருக்கவில்லை; சாமான்களையும் அதிகமாகச் செய்யவில்லை. ஆனால் ஏழை ஜனங்கள் தங்கள் தங்களுடைய சிறிய குடிசைகளில் சில கைத்தொழில்களைச் செய்துகொண்டு வந்தார்கள்.

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில் சில நூதனமான விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜோஸயா வெட்ஜ்வுட் (Josiah Wedgewood) என்பவர் பலவிடங்களிலும் மண் சட்டி, பானைகள் செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார். ஆர்க்ரைட் நூல் நூற்பதற்காக ஒரு யந்திரத்தை முதலில் கண்டுபிடித்தார். இந்த இயந்திரம் தண்ணீரின் உதவியைக் கொண்டு வேலை செய்ததால் அதற்கு ஆங்கில பாஷையில் Waterframe என்று பெயர். இதன் பிறகு ஹார்கிரீவ்ஸ் (Hargreaves) என்பவர் ஒரே காலத்தில் அநேக நூல்களை நூற்பதற்கு ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அதற்கு ஆங்கில பாஷையில் (Spinning Jenny) என்று பெயர். பிறகு க்ராம்ப்டன் என்ற ஒரு ஆங்கிலேயர் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளவைகளைச் சேர்த்து ஒரு புதிய இயந்திரத்தைச் செய்தார். இதேகாலத்தில் கார்ட்ரைட் என்பவர் நூல்களைக்கொண்டு துணிசெய்வதற்கு வேண்டிய தறிகளைச் செய்யத் தொடங்கினார். இதன் பிறகு ஜேம்ஸ் வாட் நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்ததால் தண்ணீருக்குப் பதிலாக



நீராவியின் சக்தி நூல் நூற்கும் இயந்திரங்களையும் தறிகளையும் ஓட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது.

ஆகையால் குடிசையில் ஏழை ஜனங்கள் செய்துவந்த தொழில்கள் போய், தொழிற்சாலைகள் ஏற்பட்டு, அங்கு இயந்திரங்களின் உதவியால் தொழில்கள் நடந்துவந்தன. ஆகையால் பொருள்கள் முன்பு இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு குவிந்தன; விரைவாகவும் செய்யப்பட்டன. ஆனதுபற்றிச் சாமான்களும் மலிவாய்க் கிடைத்தன. ஆகவே ஆங்கில வியாபாரம் செழித்து ஓங்க ஆரம்பித்தது. அதேகாலத்தில் வியாபாரம் பெருகுவதற்கு நல்ல சாலைகளும், பெரிய வாய்க்கால்களும் புதிதாய் ஏற்பட்டன. அவைகள், பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்குச் சாதனமாய் இருந்தன. இந்த மாறுபாடுகளுக்குத் தொழிற்புரட்சி (Industrial Revolution) என்று பெயர்.

தொழிற்புரட்சியின் பயன்கள்:—இத் தொழில் முறை மாறுபாடுகள் இங்கிலாந்தையே ஒரு பெரிய தொழிற்சாலை (A great workshop) யாகச் செய்துவிட்டன. பெரிய தொழிற்சாலைகள் அநேக இடங்களில் ஏற்பட்டமையால் கைத் தொழிலாளர்களுக்குச் செய்ய வேலை இல்லாமற்போயிற்று. இயந்திரங்களை ஓட்டுவதற்கு சொற்ப மனிதர்களை வைத்துக்கொண்டு, அவைகளின் உதவியால் பொருள்கள் வெகு விரைவாயும், மலிவாயும் செய்யப்பட்டு வந்தன. ஆனதுபற்றி ஆயிரக் கணக்கான ஏழை ஜனங்கள் தம்முடைய குடிசைத் தொழில்களை இழந்தவர்களாகிப் பிழைக்க வழியின்றி தவித்து நின்றார்கள். தொழிற்சாலைகள் ஏற்பட்ட இடங்களில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் சென்று வசிக்க ஆரம்பித்தார்கள். ஆகையால் இங்கிலாந்தில் பெரிய மிராசுதார்களைப்

போல தொழிற்சாலைக்காரர்களும், வியாபாரிகளும் தனவான்
களானர்கள். ஆனல் ஏழை ஜனங்கள் தொழிலின்றித் தவித்
தார்கள். இவர்களுடைய கஷ்டங்களை நீக்க சில சட்டங்கள்
பின்னர் பிறப்பிக்கப்பட்டன.

மெதேடிஸ்ட் இயக்கம்:—கி. பி. 1729-ல் ஆக்ஸ்பர்ட்
நகரிலுள்ள சில மனிதர்கள் ஒரு சிறிய சங்கத்தை ஏற்படுத்தி
ஞர்கள். அச்சங்கத்தின் மெம்பர்கள் மிகச் சிறந்த வாழ்க்கை
யுள்ளவர்களாய் இருந்ததால் அவர்களுக்கு ஆங்கில பாஷை
யில் (Methodists) என்று பெயர். அவர்களுடைய தலை
வர் லிங்கன் காலேஜின் சபை அங்கத்தினரான ஜான் வெஸ்லி.
அவருடன் இந்த இயக்கத்தில் ஒத்து உழைத்தவர்கள் அவ
ரது சகோதரரான சார்ல்ஸ் வெஸ்லியும், ஜார்ஜ் ஒயிட்பீல்ட்
என்ற ஒரு மதப்பிரசங்கம் செய்பவரும் ஆவர். இச்சங்கம்,
ஜான் வெஸ்லி வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் குடி
யேறின நாடான ஜார்ஜியாவிற்கு ஒரு முக்கிய காரியமாக
கி. பி. 1735-ல் சென்றபோது, கலைந்துபோயிற்று. ஆனல்
அவர் கி. பி. 1738-ல் இங்கிலாந்திற்குத் திரும்பி வந்ததும்
அவரும் அவரது சிநேகிதர்களும் மதசம்பந்தமாய் வெகு சிரத்
தையுடன் உழைத்து வந்தார்கள். ஆங்கில சர்ச்சைச் சேர்ந்த
குருமார்கள் அவர்களை சர்ச்சுகளில் மதப்பிரசங்கங்கள் செய்
யக்கூடாது என்று தடுத்தார்கள். ஆகையால் கி. பி. 1739-ல்
மெதேடிஸ்ட் வகுப்பினர்கள் தாங்களே சிறிய கோவில்களைக்
கட்டிக்கொண்டு மத உபந்நியாசம் செய்தார்கள். ஆயினும்
அவர்கள் இங்கிலாந்து பிராடெஸ்டன்ட் சர்ச்சிலிருந்து வில
கிக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்கள். அவர்கள் உபந்
நியாசங்களில் சோம்பேறித் தனத்தையும் சிரத்தை யின்மை
யையும் கெடுதலான நடத்தையையும் தொலைக்கும்படிக்கும்
மேலான வாழ்க்கையைக் கைக்கொள்ளவேண்டும் என்றும்
வற்புறுத்தினர்கள். சிலகாலம் சென்றபின் ஜான் வெஸ்லி



தமது உபந்நியாசங்கள் பயன் அளிக்கவேண்டுமானல் சாசுவத
மாய் மதசம்பந்தமாய் பாடுபடுவதற்கு ஒரு நிலைத்த சபையை
ஏற்படுத்த வேண்டுமென்று தமது புத்தி நுட்பத்தினலும்
சாமர்த்தியத்தினலும் கண்டறிந்தார். ஆகையால் அவர் தம்
உபந்நியாசங்களில் அடங்கியுள்ள கொள்கைகளை பரவச்
செய்யவேண்டு மென்ற நோக்கத்துடன் ஒரு நிலைத்த சபையை
ஸ்தாபித்தார். இச்சபையைச் சேர்ந்தவர்கள் பிராடெஸ்
டன்ட் வகுப்பினர்கள். அவர்கள் இன்றும் மதத்திற்காக
உழைத்து வருகின்றார்கள். அச்சபையோர்கள் அநேக பள்
ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தி யிருக்கின்றார்
கள். அவர்களால் ஏற்படுத்தின காலேஜ் ஒன்று சென்னையில்
இருக்கின்றது. அதற்கு 'வெஸ்லி காலேஜ்' என்று பெயர்.
அச்சபையோர் செய்துவரும் காரியம் புகழத் தக்கது.

மூன்றாவது ஜார்ஜின் மரணம்:—மூன்றாவது ஜார்ஜ்
(1810) முதல் சித்த ஸ்வாதீனம் இல்லாமல் இருந்தா[illegible]
ஆகையால் பார்லிமெண்ட் பிரதிநிதி துரைத்தன மசோதா
(Regency Bill) ஒன்றைப் பிறப்பித்தது. அதனபடி [illegible]
ருடைய முதல் புதல்வரான ஜார்ஜ் இங்கிலாந்தைப் பிரதி
யரசராகவிருந்து ஆட்சி புரிவது என்று ஏற்பட்டது. மூன்றா
வது ஜார்ஜ் பத்துவருஷ காலம் மதிமயக்கம் கொண்டவராய்
இருந்து பிறகு (1820) இறந்தார்.

கேள்விகள்:—

1. பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில் நூதனமாகக்
கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் யாவை?

2. தொழிற்புரட்சி என்பது யாது? அஃது இங்கிலாந்தில்
எவ்வாறு ஏற்பட்டது?

3. தொழிற் புரட்சியின் பயன்கள் யாவை?

4. பிரதிநிதி துரைத்தன மசோதா எக்காரணத்தினல் பிறப்
பிக்கப்பட்டது? அதன்படி என்ன ஏற்பாடாயிற்று?

5. மெதேடிஸ்ட் இயக்கத்தைப்பற்றி தெரிந்த வரையில்
எழுதுக.

# அத்தியாயம் 4.

## நான்காவது ஜார்ஜ். (1820—1830)

ஜார்ஜின் டோரி மந்திரிகள்:—நான்காவது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்ததும், அவர் விக் மந்திரிகளை நீக்கிவிட்டு டோரிக் கட்சியிலிருந்து தம்முடைய மந்திரிகளை நியமனம் செய்து கொண்டார். டோரிக் கட்சியில் இப்பொழுது இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. ஒரு பிரிவினர் 'யாதொரு விதமான சீர்திருத்தங்களையும் செய்யக்கூடாது; சீர்திருத்தங்கள் கலகங்களை உண்டாக்கும்' என்று எண்ணினர். இப்பிரிவினரின் தலைவர் ராபர்ட் பீல் (Robert Peel) என்பவர். மற்றொரு பிரிவினர் கதோலிக்குகளின் குறைகளை நிவர்த்தி செய்வதில் இஷ்டமுள்ளவராய் இருந்தனர். ஆனால் அவர்கள் பார்லிமெண்ட் சீர்திருத்தங்களைச் செய்யச் சம்மதிக்கவில்லை. இப்பிரிவினரின் தலைவர் ஜார்ஜ் கானிங் (George Canning) என்பவர். விக் கட்சியினரோ அரசியலில் அதிகாரம் இழந்து பார்லிமெண்டில் எதிர்க்கட்சியில் இருந்து வந்தனர். க்ரே பிரபு இக் கட்சியின் தலைவர்.

லிவர்ப்பூல் பிரபு நான்காவது ஜார்ஜ் சிங்காதனம் ஏறினது முதல் ஏழு வருஷ காலம் முதன் மந்திரியாய் இருந்து வந்தார். அவர் பழய டோரிக் கட்சியின் தலைவர். அவர் புதிய டோரிக் கட்சியினருக்கு உயர்ந்த பதவிகளை துரைத்தன நிர்வாகத்தில் கொடுத்தார். ஜார்ஜ் கானிங் அயல் நாடுகள் சம்மந்தமான விஷயங்களைக் கவனிக்கும் மந்திரியாகவும் பொது ஜன சபையின் தலைவராகவும் ஆனார். அதே காலத்தில் பழய டோரிக் கட்சியார்களுள் மிகத் திறமை வாய்ந்தவரான ராபர்ட் பீல் உள் நாட்டு விஷயங்களைக் கவனிக்கும் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். ராபர்ட் பீல் லங்காஷயர் என்னும் ஜில்லாவில் வியாபாரத்தினால் தனவான் ஆன ஒரு



பிரபுவின் புதல்வர். பீல் துரைத்தன முறையில் பல சீர்திருத்தங்களைச் செய்ய இஷ்டப்படாவிட்டாலும் கிரிமினல் சட்டத்தில் சில மாறுதல்களைச் செய்தார். அக்காலத்தில் கிரிமினல் சட்டத்தின் பிரகாரம் இருநூறு மிகச் சிறிய குற்றங்களை ஒருவன் செய்தால் அவன்மீது கொலை தண்டனை விதிக்கப் படலாம் என்று ஒரு சட்டம் இருந்தது. அச்சட்டத்தின் கொடுமையை உணர்ந்த ராபர்ட் பீல் உள் நாட்டுக் காரியதரிசியாய் இருக்கையில் சில சட்டங்களை இயற்றி அதை நீக்கினார். மேலும் பீல் நாட்டில் ஒழுங்கு அமைதி ஏற்படுத்த எண்ணி போலீஸ் இலாகாவில் சில சீர்திருத்தங்களையும் கி. பி. 1829-ல் செய்தார்.

ஜார்ஜ் கானிங் என்பவரும் கிரேக்கர்களும்:—ஒரு நாட்டார் மற்ற நாடுகளின் ராஜீய விஷயங்களிற் பிரவேசித்தல் பிசகு என்று கானிங் கருதினார். ஆகிலும் கிரேக்கர்கள் துருக்கியர்களின் கொடிய ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் செய்து தங்கள் சுதந்தரத்தைப் பெற முயன்றபோது, அவர் ஒரு ஆங்கில சேனையைக் கிரேக்கர்களுக்கு உதவிபுரியும்படி அனுப்பினார். அச்சேனையில் சுதந்தரத்திற்காகப் போர் செய்தவர்களில் பைரன் (Byron) என்ற ஆங்கிலக்கவி ஒருவர். ரஷியர்களும் சுதந்தரம் பெற நினைத்து துருக்கியர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்த கிரேக்கர்களின் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் துருக்கியர்களின் ராஜ்யத்தை அழித்த பிறகு தங்களுடைய அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் கிரேக்கர்களின் சுதந்தரப் போரில் சேர்ந்து கொண்டார்கள் என்பது பல ஆங்கிலேயர் களின் அபிப்பிராயம். ஆயினும் ஆங்கிலேயர்கள் ரஷியர் களுடனும் பிரெஞ்சுக்காரர்களோடும் உடன்படிக்கைகள் செய்துகொண்டு ஒரு கப்பற்படையைச் சேகரித்து கிரீஸ்

நாட்டின் மேற்குக் கடற்கரையிலுள்ள நவாரினோ குடாவில் வைத்தார்கள். அக்குடாவில் நடந்த கடற் சண்டையிற் துருக்கிய கப்பற்படை சின்னபின்னமாக்கப் பட்டது. இந்த வெற்றி கிரேக்கர்கள் சுதந்தரம் அடைவதற்குப் பேருதவி செய்தது. இம்மாதிரியாக கானிங் அயல் நாட்டுக் காரியதரிசியாய் இருக்கையில் கிரேக்கர்கள் சுதந்தரத்தை அடைய உதவி செய்தார். இதன் பிறகு அவர் (1827) சில மாதங்கள் முதன் மந்திரியாய் இருந்து இறந்துபோனதும் வெல்லிங்டன் பிரபு பிரதான மந்திரி யானார்.

கதோலிக் விடுதலைச் சட்டம் (1829):—வெல்லிங்டன் பிரபு (1828-1830) பிரதான மந்திரியாயிருக்கையில் ஐரிஷ் கதோலிக்குகள் தங்களுடைய குறைகளை ஒழிக்க ஒரு பெரும் கிளர்ச்சியைச் செய்தார்கள். சிறிய பிட் அவர்களின் குறைகளைத் தீர்க்கச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகப் போயின. அயர்லாந்தில் கதோலிக்குகள் சர்க்கார் உத்தியோகங்களைப் பெறமுடியாமலும் பார்லிமெண்டின் அங்கத்தினர்களாக முடியாமலும் இருந்தார்கள். அக்காலத்தில் அயர்லாந்தில் கிளர்ச்சி செய்தவர்களின் தலைவராக டேனியல் ஓ கானல் (Daniel o' Connell) என்ற ஒரு பாரிஸ்டர் இருந்தார். வெல்லிங்டன் பிரபுவுக்குப் பரந்த நோக்கம் இல்லாவிடினும் அவர் (1829) ஐரிஷ் கதோலிக்குகளின் குறைகளைப் போக்க கதோலிக் விடுதலைச் சட்டம் (Catholic Emancipation-Act) ஒன்றைப்பிறப்பித்தார். அதன்படி கதோலிக்குகள் பார்லிமெண்ட் அங்கத்தினர்களாக ஆகலாம் என்பது ஏற்பட்டது. சோதனைச் சட்டம் முதலிய பல கொடுமையான சட்டங்களும் ரத்து செய்யப்பட்டன. இவ்வாறு கதோலிக்குகள் பிராடெஸ்டன்ட்களைப்போல எல்லா விஷயங்களிலும் உரிமைகளைப் பெற்றார்கள். ஆயினும் டேனியல் ஓ கானல் ஐரிஷ் ஐக்கியச் சட்டத்தை ரத்து செய்ய ஒரு பெருங் கிளர்ச்சியைச் செய்யத் தொடங்கினார்.



**கேள்விகள்:—**

1. ஜார்ஜ் கானிங் என்பவரின் கொள்கை யாது?

2. கானிங் கிரேக்கர்களுக்கு உதவி புரிந்ததைப்பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.

3. எக்காரணத்தினால் கதோலிக் விடுதலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது? அதனால் கதோலிக்குகளுக்கு உண்டான நன்மைகள் யாவை?

---

## அத்தியாயம் 5.

### நான்காவது வில்லியம் (1830—1837).

வில்லியம் சிங்காதனம் ஏறுதல்:—நான்காவது ஜார்ஜ் சந்ததியின்றி கி. பி. 1830-ல் இறந்த பிறகு அவருடைய இளைய சகோதரரான வில்லியம் பட்டத்திற்கு வந்தார். அவர் நற்குணம் வாய்ந்தவர். ஆனால் அவருக்குத் தமது தந்தையைப் போல அரசாளும் திறமை சற்றேனும் கிடையாது. இருந்த போதிலும், அவர் விக் கட்சியின் தலைவரான கிரே பிரபுவை முதல் மந்திரியாக நியமித்துக்கொண்டு அவரைத் தமது இஷ்டப்படி ராஜ்யபாரத்தைத் தாங்க இடங்கொடுத்தார். அவருக்குக்கீழ் ஐரிஷ் பிரபுவான பாமர்ஸ்டன் அயல் நாட்டு காரியதரிசியாக இருந்து வந்தார். இவ்வாறு விக் கட்சியார்கள் மறுபடியும் அரசாங்கத்தில் அதிகாரம் பெற்றார்கள்.

பார்லிமெண்ட் சீர்திருத்தத்தின் அவசியம்:—வில்லியமின் ஆட்சியில் விக் மந்திரிகள் பொது ஜனங்களின் நன்மைக்காக பல சட்டங்களை இயற்றினார்கள். அவற்றுள் பார்லிமெண்டின் அமைப்பில் சீர்திருத்தம் செய்த சட்டம் ஒன்றாகும்.

பார்லிமெண்டின் அமைப்பு முதலாவது எட்வர்டின் காலத்தில் எவ்விதம் இருந்ததோ அவ்வாறே நான்காவது வில்லியம்காலம் வரையில் இருந்து வந்தது. இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவும், பெரியதாயிருந்தாலும் சரி, சிறியதாயிருந்தாலும் சரி, ஜனத்தொகை அதிகரித்தாலும் சரி, குறைந்தாலும் சரி, பார்லிமெண்டுக்கு இரண்டு அங்கத்தினர்களை அநேக ஆண்டுகளாக அனுப்பி வந்தது. தொழில் மாற்றங்கள் ஏற்பட்ட பிறகு புதிதாய் உண்டான மாஞ்சேஸ்டர் (Manchester), லீட்ஸ் (Leeds), பர்மிங்காம் (Birmingham), ஷெபீல்ட் (Sheffield) முதலிய பெரிய பட்டணங்கள் பார்லிமெண்டுக்குள் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை (Vote) இல்லாமல் இருந்து வந்தன. மேலும், பழைய காலத்தில் ஜன நெருக்கமுள்ளனவாயும், இக்காலத்தில் ஜனங்களே இல்லாதனவாகவும் உள்ள பழைய ஸாரம் (Old Sarum) போல சில கிராமங்கள் பார்லிமெண்டுக்குப் பிரதிநிதிகளை வழக்கம்போல் அனுப்பிக்கொண்டே வந்தன. தவிர, இங்கிலாந்தில் பார்லிமெண்டின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர்கள் (Voters) சிலர் தான் இருந்தனர். அவர்களும் பிராசுதார்களாக இல்லை. இத்தகைய குறைகளை நீக்க இங்கிலாந்தில் நடுத்தர ஜனங்களும், தொழிலாளிகளும் பெருங்கிளர்ச்சியைச் செய்யத் தொடங்கினார்கள்.


பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம் 1832:—மூன்றாவது ஜார்ஜின் காலத்திலேயே சிறிய பிட் பார்லிமெண்டின் அமைப்பில் சில மாறுபாடுகளைச் செய்ய முயன்றார். ஆனால் பிரெஞ்சுப் புரட்சியால் இச்சீர்திருத்தம் சிறிது காலம் தடைபட்டிருந்தது. வில்லியமின் ஆட்சியில் வெல்லிங்டன் பிரபு பிரதான மந்திரியாக இருக்கையில் பார்லிமெண்டில் சீர்த்



திருத்தம் செய்யவேண்டி கிளர்ச்சிகள் உண்டாயின. அவர் டோரிக் கட்சியின் தலைவரானதால் இச்சீர்த்திருத்தங்களைச் செய்ய முதலில் சம்மதிக்கவில்லை. ஆனால் அவர் பொதுஜனங்களின் விருப்பத்துக்கு விரோதமாய் நடக்கமுடியாமல் பார்லிமெண்டின் அமைப்பில் சீர்த்திருத்தம் செய்யச் சம்மதித்தார். பொதுஜன சபையில் 'விக்' கட்சியின் தலைவராயிருந்த ஜான் ரஸல் (John Russel) என்பவர் வெகு சிரமப்பட்டு ஒரு சீர்திருத்த மசோதா (Reform Bill) வை கி. பி. 1831-ல் கொண்டு வந்து அதைப் பார்லிமெண்ட் அங்கீகரிக்கும்படி செய்தார். அதன்படி குடிகளில்லா ஊர்கள் பார்லிமெண்டின் அங்கத்தினர்களைத் தேர்ந்து எடுக்கும் உரிமையை இழந்தன. தொழில் மாற்றங்களுக்குப் பிறகு புதிதாய் உண்டான பெரிய பட்டணங்கள் அவ்வுரிமையை அடைந்தன. கிராமாந்தரங்களில் நிலச் சொந்தக்காரர்களுக்கு £ 50 குத்தகைத் தொகை செலுத்துகிறவர்களுக்கும் பட்டணங்களில் வருஷா வருஷம் வீட்டு வரியாக £ 10 செலுத்துபவர்களுக்கும், கிராமங்களில் வருஷந்தோறும் நிலவரியாக £ 10 செலுத்துபவர்களுக்கும், 'வோட்' கொடுக்கப்பட்டது. ஆகையால் பயிரிடுகிறவர்களும், வர்த்தகர்களும், தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும் ஆன நடுத்தரமான ஜனங்கள் இச்சட்டத்தினால் வோட் உரிமையைப் பெற்றார்கள். இவ்வாறு பார்லிமெண்டின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளவர்கள் (Electors) முன் இருந்ததைக் காட்டிலும் அதிகமானார்கள். ஆனால் கூலி வேலை செய்பவர்கள் மட்டும் இன்னும் இவ்வுரிமையை அடையவில்லை.

இதர சீர்திருத்தங்கள்:—பொதுஜன நன்மைக்காக 'விக்' கட்சியினர் இன்னும் பல சட்டங்களை இயற்றினர். அவர்கள்

ஹனேவீரியன் அரசர்களின் வம்சாவளி.






கி. பி. 1833-ல் இரண்டுகோடி பவுன்களை அடிமைகளின் சொந்தக்காரர்களுக்கு அளித்து பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்திலுள்ள அடிமைகளுக்குச் சுவாதீனம் அளிக்கும்படி செய்தார்கள். இவ்வாறு பிரிட்டிஷ்காரர்கள் குடியேறின நாடுகளில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது. மேலும் கி. பி. 1834-ல் மெல்போர்ன் பிரபு பிரதான மந்திரியாக ஆனபிறகு, அவர் நகரபரிபாலன சீர்திருத்தச்சட்டம் (Municipal Act) ஒன்றைப் பிறப்பித்து, ஒவ்வொரு நகரத்திலும் வரிகொடுப்பவர்கள் தாங்களே நகரபரிபாலன சபைக்குத் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார்.

வில்லியமின் மரணம்:—வில்லியம் (1837) சந்ததியின்றி இறந்தார். அவருக்குப் பின் காலஞ்சென்ற அவருடைய தம்பியாகிய கென்ட் கோமகனூரான எட்வர்டின் (Duke of Kent) ஒரே புதல்வியாகிய விக்டோரியா (Victoria) ஆங்கில அரசியானார்.

கேள்விகள்:—

1. பார்லிமென்டின் அமைப்பில் உள்ள குறைகள் யாவை? அக்குறைகளை நீக்க யாது செய்யப்பட்டது?

2. பார்லிமென்ட் சீர்திருத்தச் சட்டத்தினால் உண்டான நன்மைகள் யாவை?

3. மெல்போர்ன் பிரபு பொதுஜன நன்மைக்காகச் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

---

## அத்தியாயம் 6.

### விக்டோரியா மகாராணியார் (1837—1901)

ராணியாரின் குணாதிசயங்கள்:—பட்டத்திற்கு வரும்பொழுது விக்டோரியா மகாராணியாருக்கு வயது பதினெட்டுதான். ஆகிலும் அவருக்கு புத்தி நுட்பமும சாமர்த்தியமும்

அதிகம். அவர் சுயநலம் பாராட்டாமல் பொதுஜன நன்மைக்கே எக்காரியத்தையும் செய்து வந்தார். அவர் பட்டத்திற்கு வந்தவுடன், "ஈசனின் அருளால் நான் இப்பதவியை அடைந்தேன். நான் ஒரு சிறுமியாய் இருந்தாலும் என்னால் இயன்றமட்டில் பொதுஜன நன்மைக்காக ஆட்சி புரிவேன். பொது ஜனங்களுக்கு நன்மையைத் தரக்கூடிய விஷயங்களையே செய்வேன்" என்று கூறினார்.

மெல்போர்ன் பிரபு:—(1837—1841) விக் கட்சியின் தலைவரான மெல்போர்ன் பிரபு பிரதான மந்திரியாக இருந்து ராணியாருக்கு ராஜீய விஷயங்களில் உதவிபுரிந்தார். ஆயினும் ராணியார் தமக்கு எக்காலத்திலும் ஆட்சி புரிவதில் உதவி செய்யக்கூடிய ஒருவரை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆகையால் விக்டோரியா ராணியார் ஆல்பர்ட்(Albert) என்ற ஒரு ஜர்மனிய ராஜகுமாரரை மணம் புரிந்தார். மெல்போர்ன் பிரபுவுக்குப் பிறகு ராபர்ட் பீல் (1841—1846) பிரதான மந்திரியாக இருந்தார்.

சுதந்தரவாதிகள் (The Chartists):-மகாராணியார்பட்டத்துக்கு வந்தபின் நாட்டில் பொதுஜனங்கள் அநேக காரணங்களால் அதிருப்தி அடைந்து இருந்தார்கள். டேனியல் ஓகானல் பொதுஜனசபையில் ஐரிஷ்ஐக்கியச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென வாதாடிக்கொண்டு வந்தார். அவரும் அவரது கட்சியினர்களும் ஆங்கில ராஜாங்கத்துக்குத் தொந்தரவை விளைவித்து வந்தார்கள். ஆனால் விக் கட்சியினர்கள் அவர்களைச் சமாதானப்படுத்தப் பல முயற்சிகளைச் செய்தார்கள். இங்கிலாந்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்கள் சீர்திருத்த மசோதாவுக்குப் பிறகுகூட அநேக கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். அவர்களுடைய கூலியோ மிகக் கொஞ்சம். ரொட்டித்துண்டின் விலையோ, தானியச் சட்டங்களினால் அயல்நாட்டு தானியங்கள் பிரிட்டிஷ்த் தீவுகளுக்குக்



கொண்டுவரக்கூடாமற் செய்ததும், அதிகரித்துவிட்டது. அதனால் ஏழைக் கூலியாட்கள் சொல்லக்கூடாத கஷ்டங்களை அடைந்தார்கள். ஆனதுபற்றி அந்நகரிலிருந்த ஜனங்கள் அதிக சுதந்தரம் பெற நினைத்து ஆங்கில ராஜாங்கத்தாரிடம் பார்லிமெண்ட் தேர்தல் விஷயங்களில் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென கி. பி. 1888-ல் ஒரு பெருங் கிளர்ச்சியை உண்டாக்கினார்கள். ஆகையால் அவர்கள் சுதந்தரவாதிகள் என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஒரு பத்திரத்தை எழுதி அதில் கண்ட ஐந்து சுதந்தரங்களைத் தங்களுக்கு அளிக்கும்படி ராஜாங்கத்தாரை வேண்டினார்கள். அதற்கு "மக்களின் சுதந்தரப் பத்திரம்" என்று பெயர். அதில் (1)ஒவ்வொரு மனிதருக்கும் வோட் உரிமை கொடுக்கப்படவேண்டும் (2) ஒவ்வொருவரும் வோட் உரிமையை இரகசியமாய் அபேக்ஷகர்கள் அறியாதபடி அளிப்பதற்கு வேண்டிய முறையை ஏற்படுத்த வேண்டும். (3) பார்லிமெண்ட் மகா சபைக்கு ஒவ்வொரு வருஷமும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். (4) பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு ஜில்லாவும் சம ஜனத்தொகை உள்ளதாய் இருத்தல் வேண்டும் என்பன போன்ற அநேக ஷரத்துக்கள் காணப்பட்டன.

பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்தல்:—டோரிக் கட்சித் தலைவரான ராபர்ட் பீல் பிரதான மந்திரியானவுடன் ...க்கிவிட்டு கன் டோரி என்னும் தமது கட்சியின் பெயரை ... ஸர்வேடிவ் (Conservative)—பழைய ஏற்பாட்டில் பற்றுள்ளவர்கள்—என்னும் ஒரு புதிய பெயரைக் கொடுத்தார். அவர் ஒரு கொள்கையை குருட்டுத் தனமாக அனுஷ்டித்து வரவில்லை. அவர் தம்முடைய கொள்கைகளும் அபிப்பிராயங்களும் பொதுஜன நன்மைக்கு விரோதமானவை என்று தெரிந்து கொண்டால் அவைகளை மாற்றிக் கொள்வார்.

இது அவர் செய்த முக்கிய சீர்திருத்தங்களுள் ஒன்றில் நன்கு விளங்கும்.

பிரெஞ்சுக்காரர்களிடம் உள்ள விரோதத்தினால் ஆங்கிலப் பார்லிமென்டில் அதிகாரம் பெற்றிருந்த மிராசுதார்கள் (1815) தானியச் சட்டங்களை (Cornlaws)ப் பிறப்பித்து வெளிநாடுகளிலிருந்து வரும் தானியங்களின்மீது கொடிய வரியை விதிக்கும்படி செய்தார்கள். அதனால் அவர்களுக்கு நன்மை ஏற்பட்ட போதிலும் ஏழை ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகரித்தது. பார்லிமென்ட் சபையின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் மிராசுதார்களாய் இருந்தபடியால் இரண்டு ராஜீயக் கட்சியார்களுள் தான்யச் சட்டத்தை ரத்து செய்ய இஷ்டப்படாமல் இருந்து வந்தார்கள். ஆகையால் தானியச் சட்டங்களை எதிர்ப்பதற்காக ஒரு சங்கம் (Anti-Corn-Law League) (1839) மாஞ்செஸ்டர் நகரில் சில வியாபாரிகளால் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தில் ரிச்சர்ட் காப்டன் (Richard Gobden), ஜான் ப்ரைட் (John Bright) என்ற இருவர்களும் முக்கியமானவர்கள் ஆவர். வெளிநாட்டுத் தானியம் பிரிட்டிஷ்த் தீவுகளுக்கு வரி கொடாமல் வரவேண்டும் என்பதுதான் இச்சங்கத்தின் முக்கிய நோக்கம். டோரிக் கட்சியைச் சேர்ந்த பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்யத் தயங்கினார். ஆனால் அயர்லாந்தில் உருளைக்கிழங்கு விளையாததால் ஒரு கொடிய பஞ்சம் (1845) ஏற்பட்ட பொழுது, தானியச் சட்டங்களால் வெளிநாட்டுத் தானியம் கிடைக்காமற் போயிற்று. அதனால் போதுமான உணவுப் பொருள் இல்லாமல் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தவித்தார்கள். இதைக்கண்ட பீல் அவைகளின் தீமையை உணர்ந்து, விக் கட்சியினரின் உதவியைக்கொண்டு அவைகளை கி. பி. 1846-ல் ரத்து செய்துவிட்டார். இவ்வாறு செய்ததால் கன்ஸர்வெடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவரை வெறுத்தார்கள். இம்மாதிரி



யாக பீல் இங்கிலாந்திற்கு வெளிநாட்டுச் சாமான்களை வரி கொடாமல் கொண்டுவந்து வியாபாரம் செய்யலாமென்று ஏற்படுத்தினார். தானியச் சட்டங்களை ரத்து செய்து வரியற்ற வியாபார (Free Trade) த்தை ஏற்படுத்துவதற்கு பேருதவி செய்தவர் வில்லியம் ஈவர்ட்கிளாட்ஸ்டன் (William Ewart Gladstone) என்ற லிவர்பூல் நகரத்து ஒரு வியாபாரியின் புதல்வர். தானியச் சட்டங்களை ரத்து செய்யக்கூடாதென்று வாதம் செய்த கன்ஸர்வெடிவ் கட்சியார்களுள் யூத குலத்தைச் சேர்ந்த பெஞ்ஜமன் டிஸ்ரேலி (Benjamin Disraeli) என்பவர் முக்கியமானவர்.

பொருட்காட்சி (1851):—டோரிகள் தங்களது கட்சியின் பெயரை மாற்றிக்கொண்டது போலவே விக் கட்சியினர்களும் தமது கட்சிப் பெயரை மாற்றி லிபரல் (Liberal)—பரந்த நோக்கமுடையவர் என்ற புதிய பெயரை வைத்துக்கொண் டார்கள். கி. பி. 1846-ல் பீல் பிரதான மந்திரிப் பதவியை ராஜிநாமா செய்ததும் விக் கட்சியின் தலைவரான ஜான் ரஸல் பிரபு பிரதான மந்திரியாக ஆனார். அவர் (1846—1852) இருக்கையில் லண்டன் நகரில் (1851) ஒரு பெரிய பொருட்காட்சி* (Exhibition) நடைபெற்றது. அதற்காக அநேக தேசங்களிலிருந்து பலவிதமான விளைபொருள்களும் அங்கு கொண்டுவரப்பட்டன. பல நாடுகளிலிருந்து கூட்டம் கூட்டமாய் வந்து அக்காட்சியைக்கண்டு ஆனந்தித்துச் சென் றார்கள். இதில் அதிக முயற்சி எடுத்துக்கொண்டவர் மகா ராணியாரின் கணவரான ஆல்பர்ட் பிரபுவே. பல நாட்டார் களும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடாமல் சிநேகத்தன்மை

* வெம்பிளி (Wembley) யில் அத்தகைய காட்சி ஒன்று (1924) நடைபெற்றது. நமது நாட்டிலிருந்து காட்சிப் பொருள்கள் அனுப்பப் பட்டன.


யுடன் இருப்பதற்கு இதுவே ஒரு சிறந்த வழி என்பது அவருடைய நோக்கம்.

கிரிமியன் போர் (1854—1856):—ஜான் ரஸலுக்குப் பிறகு அபர்டீன் கி. பி. 1852-1855 வரையில் பிர்தான மந்திரியாய் இருந்தார். அப்பொழுது கிளாட்ஸ்டன் பொக்கிஷ விஷயங்களைக் கவனிக்கும் மந்திரியாக இருந்து, வரவு செலவு திட்டக் கணக்குகளை வெகு திறமையுடன் தயாரித்து வந்தார். இச்சமயத்தில் ரஷ்யாச்சக்கரவர்த்தியான முதலாவது நிக்கலஸ் துருக்கி ஸாம்ராஜ்யத்தை ஜயித்து ஐரோப்பிய மன்னர்கள் பங்கிட்டுக்கொண்டு விடலாம் என்று கெட்ட எண்ணம் கொண்டார். ஒரு சமயம் அவர், "ஒரு வியாதியஸ்தன் நம் கைவசத்தில் இருக்கின்றான். அவன் நம்மைவிட்டு நழுவி உயிர் பிழைத்தால் அது ஒரு பெரிய துர் அதிர்ஷ்டமாகும்," இந்த வார்த்தைகள் நிக்கலஸின் கெட்ட எண்ணத்தை [illegible] மேலும் நிக்கலஸ் துருக்கி ஸாம்ராஜ்யத்தி[illegible] பெரும்பாகத்தை ரஷ்யா எடுத்துக் கொள்ளவேண்[illegible] என்று விரும்பினர். ஆனால் அவர் துருக்கி [illegible]ம்ராஜயத்தில் கஷ்டங்களை அனுபவித்து வந்த கிறிஸ்தவக் குடிகளைப் பாதுகாக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு வந்தார்; கடைசியில் (1853-ல்) மால்டேவியா, வலேச்சியா என்ற துருக்கிய சுல்தானின் அதிகாரத்திற்கு உட்பட்ட நாடுகளை கைவசப்படுத்திக் கொண்டார். இதைக் கண்ட பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் ஒரு சிநேக உடன்பாடு செய்து கொண்டு ரஷ்யாவைத் தான் புதிதாகக் கைவசப்படுத்திக் கொண்ட நாடுகளிலிருந்து சென்றுவிடும்படி கேட்டன. அதற்கு ரஷ்யா உடன்படாததால் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் துருக்கியரின் கட்சியில் சேர்ந்து கொண்டனர். இவ்வாறு ரஷ்யருக்கும் துருக்கியருக்கும் ஒரு போர் தொடங்கியது. இந்த யுத்தம் ரஷ்யாவின்



தென்பாகத்திலுள்ள கிரிமியா (Crimea) என்ற ஒரு சிறிய தீபகற்பத்தில் நடந்ததால், இதைக் கிரிமியன் போர் (Crimean War) என்று சொல்லுகிறோம்.

நேசக் கட்சியினரின் படைகள் (1854) கருங்கடலைக் கடந்து கிரிமியாவில் யூபடோரியா (Euphatoria) என்னுமிடத்தில் வந்து இறங்கின. பிறகு ஸெபாஸ்டபூல் (Sebastapool) என்னும் ரஷியர்கள் கோட்டையைப் பிடிக்க எண்ணி அப்படைகள் தெற்கு நோக்கி வந்தன. ஒரு ரஷ்யச் சேனை அவைகளை ஆல்மா (Alma) நதிக்கரையில் சந்தித்துப் போர்புரிந்தது. இச்சண்டையில் நேசக்கட்சியினர் வெற்றியடைந்தனர். இதற்குப்பிறகு அவர்கள் ஸெபாஸ்டபூல் கோட்டையைப் பத்து மாதங்களுக்குமேல் முற்றுகை செய்தார்கள்.




ஆ—ஆல்மா நதி. யூ—யூபடோரியா. ஸெ—ஸெபாஸ்டபூல். இ—இங்கர்மன். பா—பாலக்லாவா.

பிறகு ரஷியப் படைகள் அதைப் பாதுகாப்பதற்கு ஆங்கிலேயருடன் பாலக்லாவா (Balaclava), இங்கர்மன் (Inker-

mann) என்ற இடங்களில் போர்புரிந்தன. இவைகளில் ஆங்கி லப் போர்வீரர்கள் வெகு ஆண்மையுடன் போர்புரிந்து வெற்றி யடைந்தார்கள். பிறகு மழைக்காலம் தொடங்கியது. பிரெஞ்சு, இங்கிலீஷ் சேனைகள் அமிதக்குளிரினால் கஷ்டம் அடைந் தன. மேலும், ஆங்கில சேனையில் கொடிய வியாதி பரவிய தால் அநேக போர்வீரர்கள் மாண்டார்கள். இச்செய்தியைக் கேட்ட ஆங்கிலேயர்கள் ராஜாங்கத்தார்மீது கோபம் அடைந் தார்கள். இச்சமயத்தில் பாமர்ஸ்டன் பிரபு (1855) பிரதான மந்திரியானார். அவர் இந்தப் போரை வெகு திறமையுடன் நடத்தி நேசக்கட்சியினருக்கு வெற்றி உண்டாகும்படி செய் தார். ஸெபாஸ்டபூல் நகரை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண் டனர். இதற்குப் பிறகு ருஷியர்கள் நேசக்கட்சியினருடன் (1856) பாரிஸ் நகரில் சமாதானம் செய்துகொண்டு கிரிமியன் போரை முடிவுக்குக் கொணர்ந்தார்கள். அதன்படி ருஷியர்கள் கருங்கடலில் தங்களது போர்க் கப்பற்ப[illegible]யை வைத்துக் கொள்ளக்[illegible]ட்டது.

சி[illegible]யக கலகமும் மகாசாஸனமும்:—இப்போர் முடிந்த வுடன் ஆங்கிலேயருக்குத் திகில் உண்டாகும்படி இந்தி யாவில் (1857) சிப்பாய்க் கலகம் (Sepoy Mutiny) நடந் தது. ஆங்கிலேயர் அதை வெகு திறமையுடன் அடக்கிவிட்ட னர். இதற்குப் பிறகு பார்லிமெண்ட் இந்தியாவில் கம்பெனி யாரின் ஆட்சியை ஒழித்து ராணியாரின் ஆட்சியை ஏற்படுத் தியது. மகாராணியார் இந்தியர்களால் 'மஹாசாஸனப் பத்தி ரம்' என்று கொண்டாடப்பட்டு வரும் 'அரசாங்க அறிக்கை' (Proclamation) ஒன்றைப் பிரசுரம் செய்தார்.


இரண்டாவது பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம் (1867):— பாமர்ஸ்டன் பிரபு பிரதான மந்திரியாய் கி. பி. (1865) வரை யில் இருந்து பிறகு இறந்துபோனார். அதன்பின் ஜான் ரஸல்



பிரபு மறுபடியும் பிரதான மந்திரியானார். இச்சமயத்தில் கிளாட்ஸ்டன் பொதுஜன சபையில் முதன்மைபெற்று இருந் தார். அவர் ஒரு சீர்திருத்த மசோதாவைத் தயாரித்து அதைப் பார்லிமெண்டின்முன் கொண்டுவந்தார். ஆனால் அந்த மசோதா பார்லிமெண்டாரின் பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப் படவில்லை. இதனால் ரஸல் பிரபுவும் கிளாட்ஸ்டனும் தங்க ளுடைய பதவிகளை ராஜிநாமாச் செய்யவே, கன்ஸெர்வெடிவ் கட்சித் தலைவரான டர்பி (Derby) பிரதான மந்திரியாகவும், டிஸ்ரேலி பொதுஜன சபையில் முதன்மை பெற்றவராகவும், ஆனார்கள். டிஸ்ரேலி கிளாட்ஸ்டன் கொண்டுவந்த மசோதா வில் சில மாறுதல்களைச் செய்து அதைப் பார்லிமெண்ட் அங்கீ காரம் செய்யும்படி செய்தார். அதன்படி ஒவ்வொரு பட்ட ணத்திலும் வீட்டுச் சொந்தக்காரர்களும் சர்க்காருக்கு வருஷத் தில் £ 10 வரியாகச் செலுத்துகிறவர்களும், ஜில்லாக்களில் வருஷத்திற்கு £ 12 நிலவரி கொடுப்பவர்களும் பார்லிமென் டின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் 'வோட்' உரிமை யைப் பெற்றார்கள். சிறிய பட்டணங்கள் அந்த உரிமையை இழந்தன. ஆனால் ஜனத்தொகை மிகுதியுள்ள பெரிய நகரங் கள் அதிக அங்கத்தினர்களை அனுப்பும் உரிமையைப் பெற் றன. இச்சட்டம் தொழிலாளர்களுக்கு 'வோட்' உரிமையை அளித்தது. ஆனதுபற்றி அரசாட்சியில் வேலையாட்களுக்குக் கொஞ்சம் அதிகாரம் உண்டாகியது.

கிளாட்ஸ்டன் பிரதான மந்திரியாதல் (1868—1874):— லிபரல் கட்சியின் தலைவரான கிளாட்ஸ்டன் பிரதான மந் திரியாயிருந்து ராஜ்யபரிபாலனம் செய்து வந்தார். அவர் மகா புத்திமான். அவர் ஆக்ஸ்பர்ட் நகரில் கல்விகற்றுத் தேர்ச்சி யடைந்தவர். அவர் தானியச் சட்டங்களை ரத்து செய்வதற்கு ராபர்ட் பீலுக்கு உதவிபுரிந்தார். மேலும், அவர் அயர்லன்

பிரதானமந்திரியாக விருக்கையில் பொக்கிஷத்தலைவர் (Chancellor of the Exchequer) பதவியிலிருந்து இங்கிலாந்தின் பொருள் நிலையை விருத்திபண்ணப் பாடுபட்டார். தவிர, அவர் நாட்டில் அமைதியை உண்டாக்கிப் பொதுஜன நன்மைக்காகப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அவைகளுள் முக்கிய



மானவை மூன்று. 1. ஐரிஷ் நிலச்சட்டம் (Irish Land Act) கி. பி. 1870-ல் பிறப்பிக்கப்பட்டது. ஐரிஷ் மிராசுதார்கள் தங்களுடைய குடியானவர்களைக் கஷ்டப்படுத்தாமல் இருப்பதற்காக இச்சட்டம் ஏற்பட்டது. 2. கட்டாயக் கல்விச் சட்டம் (The Compulsory Education Act) பிறப்பிக்கப்பட்டது. இவ்விஷயமாக வெகு பாடுபட்டவர் பார்ஸ்டர் (Forster) என்ற ஒரு ஆங்கிலேயர். இச்சட்டத்தின்படி இங்கிலாந்திலுள்ள பன்னிரண்டு வயதுக்கு உட்



பட்ட எல்லாச் சிறுவர்களும் ஆரம்பக் கல்வி*யைக் கற்க
வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டது. 3. பார்லிமென்
டின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தலில் 'வோட்' உரிமை
பெற்ற ஒவ்வொருவரும் தமது இஷ்டப்படி பிறர் அறியாமல்
அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இரகசிய வோட்
உரிமைச் சட்டம் (Ballot Act) (1871) பிறப்பிக்கப்பட்டது.
இச்சட்டம் பார்லிமெண்ட் தேர்தலில் உள்ள பெரும் கெடுதல்
களை ஒழிக்க ஏற்பட்டது. வோட்டர்களுக்குப் பணம்கொடுத்து
அவர்களுடைய 'வோட்' களை அடைய முடியாமற் போய்
விட்டது. ஏனெனில் வோட்டர்கள் யாரிடத்திலாவது பணம்
பெற்றால் அவருக்குத்தான் தங்களது வோட்களைப் பதிவு செய்
வார்கள் என்று நிச்சயமாகச் சொல்வதற்கு இடமில்லாமற்
போயிற்று. ஆகையால் 'வோட்' உரிமை பெற்றவர்கள் தமது
இஷ்டப்படி 'வோட்' களைப் பதிவுசெய்ய இச்சட்டம் உதவி
செய்தது.

கிளாட்ஸ்டனும் அன்னிய நாடுகளும்:—கிளாட்ஸ்டன்
தம்மால் இயன்றவரையில் அன்னிய நாடுகளுடன் யுத்தம்
ஏற்படாமலிருக்க முயன்றார். ஐரோப்பாவில் ஏற்படும் போரில்
இங்கிலாந்து கலக்காமல் அங்கே ஏற்படும் வழக்குகளை மட்டும்
தீர்மானம் செய்து அமைதியைப் பரவச் செய்யவேண்டும் என்
பது அவரது நோக்கம். இங்கிலாந்து ஐரோப்பிய விஷயங்
களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையை அநுஷ்டித்து
வந்ததால் ஆங்கிலேயர்களுக்குச் சில கெடுதல்கள் சம்ப
வித்தன. ருஷியர்கள் கி. பி. 1856-ல் செய்துகொண்ட உடன்
பாட்டின் பிரகாரம் [illegible]க்கச் சம்மதிக்காமல் கருங்கடலில் தங்
[illegible] போர்க் கப்பல்களை மறுபடியும் வைக்க உத்தேசித்தார்

* பின்னர் (1891) அநேகமாய் எல்லாப் பாடசாலைகளிலும் சம்பளமின்றி ஆரம்பக் கல்வி சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்பட்டது.

கள். ஆங்கில ராஜாங்கத்தார் ரஷியர்கள் உடன்பாட்டின்படி நடக்கவேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்த ஒரு காரியமும் செய்யவில்லை. மேலும் கிளாட்ஸ்டன் பிரதான மந்திரியாயிருக்கையில் அமெரிக்கா உள்நாட்டுப் போர்க்காலத்தில் இங்கிலாந்தின் செய்கையால் வியாபாரத்தில் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்திற்கு ஈடாக இங்கிலாந்து £ 3,000,000 அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அதனால் ஆங்கிலேயர்கள் கிளாட்ஸ்டனிடம் அபிரீதி அடைந்து அவரைத் தம் பதவியை ராஜிநாமாச் செய்து விடும்படி செய்தார்கள்.

பிரேஞ்சு ஜர்மனியப் போர்:—அவர் பிரதான மந்திரியாக இருக்கையில் (1870) பிரான்ஸுக்கும் பிரஷியாவுக்கும் ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டது. பிரஷியர்கள் பிரான்ஸின்மீது படையெடுத்து பாரிஸ் நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் இப்போரில் தோல்வியடைந்ததால், பிரான்ஸின் கிழக்குப்பாகத்திலுள்ள ஆல்ஸஸ் (Alsace), லோரேய்ன் (Lorraine) என்ற மாகாணங்களை ஜர்மனியர்களுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். பிறகு பிரான்ஸில் குடியரசு ஏற்பட்டது. இப்பொழுது ஏற்பட்ட குடியரசு இன்றைக்கும் நீடித்திருக்கின்றது. இக்காலத்தில் மத்திய ஐரோப்பாவிலுள்ள சிறிய மாகாணங்கள் எல்லாம் பிரஷியா மன்னரான வில்லியமின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு அவரை ஜர்மனிச் சக்கரவர்த்தியாகச் செய்துகொண்டன. இதுமுதல் மத்திய ஐரோப்பாவில் ஜர்மனி மிகவும் அதிகாரம் படைத்த தேசமாக இருந்து வந்தது.

டிஸ்ரேலி பிரதான மந்திரியாதல் (1874—1880):— கி. பி. 1874-ல் கிளாட்ஸ்டன் பிரதான மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்ததும் கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவரான



டிஸ்ரேலி முதன் மந்திரியானார். தமது கட்சியைப் பலப்
படுத்தவேண்டும்; பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தை விருத்திசெய்ய
வேண்டும் என்பன அவருடைய நோக்கங்கள். அவர் தானி
யச்சட்டங்களை ரத்து செய்யக் கூடாது என்று போராடிய
தாலும், இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தைப் பிறப்பித்த
தாலும் தமது கீர்த்தியை இங்கிலாந்து முழுவதும் பரவும்படி
செய்திருந்தார். அவர் பிரதான மந்திரியானவுடன் கிளாட்ஸ்
டன் செய்த சீர்திருத்தங்கள் போதுமானவையென்று
நினைத்து, வேறு சீர்திருத்தங்களைச் செய்யச் சம்மதமில்லாதவ
ராய் இருந்தார். ஆனால், அவர் இங்கிலாந்து ஐரோப்பாவில்
முதன்மையைப் பெற முயன்றார். அப்பொழுது பொதுஜன
சபையிலுள்ள ஐரிஷ் சுயராஜ்யக் கட்சியினர் வெகு திறமை
வாய்ந்த பார்னல் (Barnell) என்பவரின் தலைமையின் கீழ்
இருந்து டிஸ்ரேலிக்கு அதிகத் தொந்தரவை விளைவித்தனர்.

டிஸ்ரேலியும் பர்லின் உடன்படிக்கையும் (கி.பி.1878):—
கிரிமியன் போருக்குப் பிறகுகூடத் துருக்கி மன்னர்கள் தங்
ளது கிறிஸ்தவக் குடிகளை இம்சை செய்து வந்தார்கள். ஆகை
யால் துருக்கி அரசரின் ஆட்சியின்கீழ் உள்ள கிறிஸ்தவர்கள்
கலகம் செய்தார்கள். கஷ்டம் நேர்ந்த காலையில் அவர்கள்
வழக்கம்போலவே ரஷியாவின் உதவியை நாடினார்கள். பல்
கேரியா (Bulgaria) வில் உண்டான கிறிஸ்தவர்களின் கல
கம் துருக்கியர்களால் வெகு கடுமையாக அடக்கப்பட்டது.
இச்சமயத்தில் ஐரோப்பிய மன்னர்கள் ஒன்று சேர்ந்து
கொண்டு பால்கன் தீபகற்பத்தில் துருக்கியர்களின் ஆட்
சிக்கு உட்பட்ட நாடுகளிலெல்லாம் சுய ஆட்சியை ஏற்படுத்த
வேண்டுமென கட்டாயப்படுத்தி யிருக்கலாம். ஒரு ரஷியச்
சைன்யம் (1877) பால்கன் மலைக்கணவாய்களின் வழியாகச்
சென்று, கான்ஸ்டான்டிநோபில் என்ற நகரைப் பிடித்துக்
கொண்டது. துருக்கியர்களின் கொடுமையைக் கண்ட ஆங்

சில ராஜாங்கத்தார் அவர்களுக்கு உதவிபுரிய இஷ்டப்படவில்லை. ஆகிலும் ரஷியாவின் பலத்தைக் குறைக்க எண்ணி டிஸ்ரேலி (பீகன்ஸ்பீல்ட் பிரபு) மார்மோரா கடலுக்கு ஒரு பெரிய கப்பற்படையைத் துருக்கிக்கு உதவி செய்ய அனுப்பினார். இதைக்கண்டு ரஷியர்கள் துருக்கியருடன் சமாதானம் செய்துகொள்ள இஷ்டப்பட்டார்கள். ஐரோப்பிய தலைவர்கள் எல்லாரும் பர்லின் (Berlin) நகரில் கூடி ஓர் உடன்பாட்டைச்செய்து கொண்டார்கள். அதன்படி பீகன்ஸ்பீல்ட் பிரபுவும் ஸாலிஸ்பரியும் பிரிட்டிஷ்த் தீவுகளின் பிரதிநிதிகளாகச் சென்றார்கள். அதன்படி பால்கன் மலைத்தொடருக்கு வடக்கேயுள்ள பல்கேரியாவின்பாகம் துருக்கி சுல்தானுக்குக் கப்பம் செலுத்திவிடுவது என்ற நிபந்தனையின் பேரில் ஒரு குடியரசு நாடாக செய்யப்பட்டது. அம் மலைத்தொடருக்குத் தெற்கேயுள்ள பல்கேரியாவின் பாகம் ஒருகிறிஸ்தவ மன்னரின் ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டது. மாண்டிநீக்ரோ, ஸர்வியா, ரௌமேனியா முதலிய நாடுகள் சுயேச்சையைப் பெற்றன. பாஸ்னியாவை ஆஸ்டிரியா வைத்துக்கொள்வதென்று ஏற்பாடாயிற்று. ரஷியாவும் கிரீஸும் சில நாடுகளைப்பெற்றன. இங்கிலாந்து ஆசியாமைனரைப் பாதுகாப்பது என்ற நிபந்தனையின் பேரில் ஸைப்ரஸ் என்ற தீவை அடைந்தது. இவ்வாறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் விஷயங்கள் ஒருவாறு தீர்மானம் செய்யப்பட்டன. பீகன்ஸ்பீல்ட் பிரபு கண்ணியத்துடன் சமாதானம் செய்துகொண்டதாகவும் ரஷியர்களின் பேராசையினின்று ஐரோப்பிய கீழ்நாடுகளில் ஆங்கிலேயர்களின் உரிமைகளைப் பாதுகாத்துவிட்டதாகவும் கர்வத்துடன் கூறினார். இந்த உடன்பாட்டின்படி அநேக வருஷகாலமாக க்ஷீண தசையை அடைந்து அழியும் நிலைமையிலிருந்த துருக்கி சா



ராஜ்யம் அநேக சிறிய சுயஆட்சி பெற்ற நாடுகளாக மாறிற்று. இதனால்தான் பர்லின் உடன்பாடு முக்கியமானது எனக் கருதப்படுகிறது.

டிஸ்ரேலியும் எகிப்தும்:—பிரெஞ்சுக்காரர்கள் ஸூயஸ் கால்வாயை வெட்டி எகிப்தில் தங்களது அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். இச்சமயத்தில் கெடிவ் வீண் செலவுகள் செய்து கடனாளியாகி விட்டதால் டிஸ்ரேலி (1875) எகிப்து மன்னரான கெடிவ் (Khedive) இடமிருந்து ஸூயஸ் கால்வாயில் £ 4,00,000 மதிப்புள்ள பங்குகளை வாங்கினார். அதனால் ஆங்கில அதிகாரம் எகிப்தில் வளர்ந்துகொண்டு வந்தது. மேலும் அவர் எட்வர்ட் இளவரசரை இந்தியாவிற்கு விஜயம் செய்யும்படி அனுப்பினார். இம்மாதிரியாக இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்கும் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதற்கும் டிஸ்ரேலி உழைத்ததால் அவர் பீகன்ஸ்பீல்ட் பிரபு (Earl of Beaconsfield) என்ற பட்டத்தைப் பெற்றார். தம் பதவியினின்று விலகிக் கொஞ்ச காலமான பிறகு அவர் (1881) இறந்தார்.

கிளாட்ஸ்டனின் இரண்டாவது ஆட்சி (1880—1885):—டிஸ்ரேலிக்குப் பிறகு கிளாட்ஸ்டன் மறுபடியும் (1885) பிரதான மந்திரியாயிருந்தார். அவர் காலத்தில் கி. பி. 1879-ல் பீகன்ஸ்பீல்ட் பிரபுவும் பிரெஞ்சுக்காரர்களும் சேர்ந்து கொண்டு எகிப்தின் அரசாங்கத்தில் தலையிட்டு கெடிவைத் தங்களது அதிகாரத்துக்குட்பட்டு ஆண்டுவரும்படி செய்தார்கள். ஐரிஷ் சுயராஜ்யக் கட்சியினர் ஆங்கில ராஜீய காரியங்கள் நடைபெறாமல் தடுத்துவந்தனர். அயர்லாந்தியரின் குறையைப் போக்க கிளாட்ஸ்டன் அநேக சீர்திருத்தங்களைச் செய்தபோதிலும், அவர்கள் தங்களது நாட்டுக்குச் சுயராஜ்யம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தார்கள். முதலில்

கிளாட்ஸ்டன் அயர்லாந்துக்குச் சுயராஜ்யம் அளிக்க மறுத்தார். ஆனால் சிலகாலம் சென்றவுடன் அயர்லாந்துக்குச் சுயராஜ்யம் அளிக்காவிடில் அந்நாட்டில் அமைதி ஏற்படாததோடுகூட ஆங்கில ராஜாங்கத்துக்கும் தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் என்று அவர் தெரிந்து கொண்டார். ஆகையால்தான் அவர் அயர்லாந்துக்குச் சுயராஜ்யம் அளிக்கப் பொதுஜன சபையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதற்கு "ஐரிஷ் சுய ஆட்சி மசோதா" என்று பெயர். அச்சபையினர் அதை அங்கீகரித்தபோதிலும் பிரபுக்கள் சபை அதைத் தள்ளிவிட்டது. இதற்குப்பிறகு அயர்லாந்துக்குச் சுயராஜ்யம் அளிக்க இஷ்டமில்லாத லிபரல் கட்சியினர்களும் கன்ஸர்வெடிவ் கட்சியினர்களும் சேர்ந்துகொண்டு இங்கிலாந்தில் ஒரு புதிய கட்சியை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஐரிஷ் ஐக்கியச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்பது இக்கட்சியாரின் நோக்கமானதால் இக்கட்சிக்குக் கூட்டுக்கட்சி (Unionist Party) என்று பெயர். இக்கட்சியின் தலைவரான ஸாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) கி. பி. 1886-ல் பிரதான மந்திரியானார்.

**மூன்றாவது சீர்திருத்தச் சட்டம்** (1884):—கிளாட்ஸ்டன் (1884) மூன்றாவது சீர்திருத்த மசோதாவைப் பார்லிமென்டின் முன் கொணர்ந்தார். அதைப் பார்லிமெண்ட் அங்கீகாரம் செய்தது. அதன்படி நாட்டுப்புறத்திலுள்ள ஒவ்வொரு வீட்டுச் சொந்தக்காரரும் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் 'வோட்' உரிமையைப் பெற்றார். மேலும், இங்கிலாந்து சமஜனத் தொகையுள்ள அநேக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் அங்கத்தினர் என்பது ஏற்பட்டது. இச்சட்டத்தின்படி ஏழைக் குடிகள் 'வோட்' உரிமையைப் பெற்று பார்லிமெண்டில் அதிகாரம் படைத்தவர்களானார்கள்.



**சேர்க்கைக் கட்சியின் ஆட்சி** (1886-1901):—சேர்க்கைக் கட்சியினர் (1886—1901) பார்லிமெண்டில் அதிகாரம் பெற்றிருந்தனர். ஆனால், (1892-1895) லிபரல் கட்சியினர் பார்லிமெண்டில் வலிமை பெற்றதால் கிளாட்ஸ்டன் நான்காவது தடவை பிரதான மந்திரியாயிருந்தார். அப்பொழுதுதான் ஐரிஷ் சுயராஜ்யக் கட்சியினர் கிளர்ச்சி செய்து கொண்டே வந்தனர். பின்னர் (1894) அவர் இறந்தபின், ரோஸ்பரி பிரபு (Lord Rosebury) லிபரல் கட்சியின் தலைவரானார். ரோஸ்பரி பிரபு ஒரு வருஷம் பிரதான மந்திரியாய் இருந்து ராஜீநாமாச் செய்ததும் ஸாலிஸ்பரி பிரபு மூன்றும் தடவை கி.பி. 1895-ல் பிரதான மந்திரியானார். கி. பி. 1895 முதல் 1901 வரையில் J. பால்பர் பொதுஜன சபைத்தலைவராகவும், சேம்பர்லேன் ஆங்கிலேயர் குடியேறின நாடுகளின் விஷயங்களைக் கவனிக்கும் காரியதரிசியாகவும் இருந்துவந்தார்கள். இக்காலத்தில் லிபரல் கட்சியினர்களுக்குள் சில சண்டைகள் நேரிட்டதால் ரோஸ்பரி பிரபு லிபரல் கட்சித்தலைவர் பதவியை விட்டு விட்டார். அதன் பிறகு ஹென்றி காம்பெல் பானர்மன் லிபரல் கட்சித் தலைவரானார்.

**கேள்விகள்:—**

1. தானியச் சட்டங்கள் எக்காரணத்தினால் பிறப்பிக்கப்பட்டன? எப்பொழுது? பீல் அவைகளை ரத்து செய்வதற்குக் காரணம் யாது?

2. எந்த வருஷத்தில் லண்டனில் பொருட்காட்சி நடைபெற்றது? அதைப்பற்றித் தெரிந்த வரையில் எழுதுக.

3. கிரிமியன் போரின் காரணங்கள் யாவை? அப்போரின் வரலாற்றைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

4. இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தினால் ஏற்பட்டன யாவை?

5. கிளாட்ஸ்டன் பொதுஜன நன்மைக்காகச் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

6. கிளாட்ஸ்டன் அன்னிய நாடுகளுடன் எவ்விதமாய் நடந்துவந்தார்?

7. டிஸ்ரேலியின் நோக்கங்கள் யாவை?

8. 'கூட்டுக்கட்சி எவ்வாறு ஏற்பட்டது'? ராணியாரின் காலத்தில் அக்கட்சியின் தலைவராக இருந்தவர் யார்?

9. மூன்றாவது சீர்திருத்தச் சட்டத்தின்படி ஏற்பட்டன யாவை.

---

## அத்தியாயம் 7.

### விக்டோரியா மகாராணியார் (தொடர்ச்சி)

இந்த அத்தியாயத்தில் விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக்காலத்தில் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யம் விஸ்தீரணத்திலும் பலத்திலும் எவ்வாறு பெருகியது என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

**கனடா:**—பாரிஸ் சமாதானத்தில் (1763) ஆங்கிலேயருக்கு வட அமெரிக்காவில் கனடா கிடைத்தது என்பது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு சில ஆங்கிலக் குடிகள் அமெரிக்கன் சுதந்தரப்போரில் கலந்துகொள்ள இஷ்டப்படாமல் கனடாவிற்குச் சென்று குடியேறினார்கள். அதுமுதல் கனடாவின் மேல் பாதியில் வசித்து ஆங்கிலேயருக்கும் அதன் கீழ்ப்பாகத்தில் வசித்துவந்த பிரெஞ்சுக்காரருக்கும் அநேக சச்சரவுகள் ஏற்பட்டுவந்தன. கி.பி. 1837-ல் பிரெஞ்சுக்காரர்கள் ஓர் கலகம் செய்தார்கள். ஆங்கிலேயர்கள் அக்கலகத்தை அடக்கிவிட்டார்கள். ஆங்கில ராஜாங்கத்தார் (1838) டர்ஹாம் பிரபு (Lord Durham) வை அந்நாட்



டுக்கு அனுப்பி அதன் இருபாகங்களையும் ஓர் ஆட்சியின்கீழ் வைத்து சிநேகத் தன்மையாய் வாழும்படி செய்தனர். பின்னர் (1867) பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு உட்பட்ட சுய ஆட்சி (Dominion Status) அளிக்கப்பட்டது. அதுமுதல் இதுவரையில் ஆங்கிலப் பார்லிமெண்டுக்கு உட்பட்ட சுயேச்சைத் துரைத்தனம் கனடாவில் வழங்கி வருகிறது.


**ஆஸ்திரேலியாவும் நியூஸீலாந்தும்:**—பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில்தான் ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியா என்ற ஒரு கண்டம் இருப்பதாக குக் (Cook) என்ற ஒரு கியாதிபெற்ற மாலுமியின் கடற் பிரயாணத்தினால் தெரிந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு ஆங்கிலக் குற்றவாளிகள் அக்கண்டத்திற்கு நீர்மேல் ஏற்றி அனுப்பப்பட்டார்கள். இவ்வாறு ஸிட்னி, பிலிப் துறைமுகப்பட்டணம், டாஸ்மேனியா, ஸ்வான் நதிப்பிரதேசம் இவைகள் ஆங்கில குற்றவாளிகள் தங்கின இடங்கள் ஆயின. அவர்கள் தங்கின காலத்துக்குப் பிறகு புல்தரைச் சமவெளிகள் மலைச்சாரல்களிலும் நதிகள் பாயும் சமவெளிகளிலும் பரந்து கிடப்பதைக் கண்டு ஆடு மாடுகளை வளர்ப்பது என்ற தொழிலைக் கைக்கொண்டார்கள். மேலும் அவர்கள் இங்கிலாந்திலிருந்து குற்றவாளிகளை இனிமேல் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பக்கூடாது என்றும் தடுத்தார்கள். பிறகு அக்கண்டத்தில் தங்கம் ஏராளமாய் அகப்பட்டதைக் கேட்டு அநேக ஆங்கிலக்குடிகள் அங்குசென்று குடியேறினார்கள். இம்மாதிரியாக ஆஸ்திரேலியாவில் ஆங்கிலேயர்கள் குடியேறின சில மாகாணங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு மாகாணமும் சுயஆட்சி பெற்று விளங்குகின்றது. பிறகு, (1901) ஆஸ்திரேலியாவில் ஐக்கிய துரைத்தனம் ஏற்பட்டு அது ஒரு பெரிய குடியரசு நாடாக ஆயிற்று. ஆஸ்திரேலியாவுக்குத் தென் கிழக்கேயுள்ள நியூஸீலாந்துத் தீவுகளில் கி. பி. 1835-ல் ஆங்கிலேயர்கள் முதல் முதலில் குடி

யேறினார்கள். இப்பொழுது அவைகள் சுயஆட்சியைப் பெற்று பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாக விளங்குகின்றன.

தென் ஆப்பிரிக்கா:—பதினேழாவது நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள கேப்காலனி (Cape Colony) யில் குடியேறினார்கள். அவர்கள் போயர்கள் (Boers) என்று அழைக்கப்பட்டார்கள். பிரெஞ்சுப் பெருங்கலகம் நடந்தபொழுது போயர்கள் நெப்போலியனுக்கு உதவி புரிந்ததால், ஆங்கிலேயர் அவர்களின் மீது போர்தொடுத்து கேப்காலனியைக் கைப்பற்றிக்கொண்டனர். இதற்குப் பிறகு டச்சுக்காரர்கள் நேட்டால் (Natal) என்ற ஒரு சிறிய மாகாணத்துக்குச் சென்று குடியேறினார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் கி. பி. 1848-ல் அந்த நாட்டையும் ஜெயித்துக்கொண்டுவிட்டார்கள். அதுமுதல் பிரிட்டிஷ்காரர்களுக்கும் போயர்களுக்கும் அநேக சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. ஆனதுபற்றி போயர்கள் ஆரஞ்சுநதி சுயேச்சை நாடு (Orange River Free State) என்ற பிரதேசத்தில் குடியேறினதோடுகூட வால் (Vaal) நதியைக் கடந்து வடக்கே சென்று ட்ரான்ஸ்வால் (Transvaal) குடியரசு நாட்டையும் கி. பி. 1852-ல் ஏற்படுத்திக்கொண்டார்கள். இவைகளில் தங்கமும், வைரக் கற்களும் அகப்பட்டதைக் கண்ட ஆங்கிலேயர் அவைகளின்மீது படையெடுத்து அவைகளை (1877) ஜயித்துவிட்டனர். இதற்குப் பிறகு போயர்கள் சுதந்தரப் போர் புரியவேண்டியதாயிற்று. அவர்கள் மாஜுபாமலை (Majuba Hill) யின் அருகில் ஒரு பிரிட்டிஷ் சேனையைத் தோற்கடித்தார்கள். இதற்குப் பிறகு போர் சிலகாலம் நடக்கவில்லை. சில வருடங்களுக்குப் பிறகு ட்ரான்ஸ்வால் மாகாணத்தில் ராண்டு (Rand) என்ற ஜில்லாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைக்கேட்ட ஆங்கிலேயர்கள் பொருள் சம்பாதிக்க எண்ணி ட்ரான்ஸ்வால் மாகாணத்தை



ஜயிப்பதற்கு உத்தேசித்தார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் தங்களது அதிகாரத்தை விருத்தி செய்துகொள்ள இஷ்டப் படவில்லை. இச்சமயத்தில் (கி. பி. 1889-ல்) ஸெஸில் ரோட்ஸ் என்ற ஒரு ஆங்கிலேயர் பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்கா கம்பெனியை ஸ்தாபித்து ஸாம்பஸி நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தைக் கைவசப்படுத்திக்கொண்டார். அதற்கு ரோடீஷியா என்று பெயர். இதற்குப் பிறகு அக் கம்பெனியின் உத்தியோகஸ்தர்களில் ஒருவரான ஜேம்ஸன் (Jameson) கி. பி. 1895-ல் ட்ரான்ஸ்வால் நாட்டினுள் ஒரு படை





யுடன் புகுந்தார். அவர் ஜோஹானஸ்பர்க் (Johannesburg) என்ற பட்டணத்திற்கு அருகில் செல்லும்போது ஒரு பெரிய போயர்களின் படை அவருடைய சேனையைச் சூழ்ந்துகொண்டது. ஆகையால் ஜேம்ஸன் போயர்களிடம் சரணம்

அடைந்தார். இது முதற்கொண்டு ஆங்கிலேயர்களுக்கும் போயர்களுக்கும் அதிக விரோதம் ஏற்பட்டு எந்த சமயத்திலும் அவர்களுக்குள் ஒரு பயங்கரமான போர் ஏற்படும்போல் இருந்தது.

**போயர் யுத்தம்**:—(1899-1902):—ஜேம்ஸன் ட்ரான்ஸ்வாலின்மீது படையெடுத்த பின் போயர்கள் பெரிய படைகளைத் திரட்டி ஆங்கிலேயர்களுடன் போர் புரியச் சித்தமானார்கள். கி. பி. 1899-ல் தொடங்கின யுத்தத்திற்குப் போயர் யுத்தம் (Boer War) என்று பெயர். ட்ரான்ஸ்வால், ஆரஞ்சு சுயேச்சை நாடு என்ற நாடுகளில் குடியேறின போயர்கள் 20,000 போர்வீரர்கள் அடங்கிய ஒரு பெரிய சைன்யத்தைச் சேகரித்து வைத்திருந்தார்கள். ஆங்கிலேயர்கள் அவர்களை எளிதில் வெல்ல முடியும் என்று எண்ணினார்கள். போயர்கள் திடீரென நேட்டால் மாகாணத்தின்மீது படையெடுத்ததால் அம்மாகாணத்தில் போர் வெகு கடுமையாக நடந்தது. போயர்கள் லேடிஸ்மித் (Ladysmith) நகரை முற்றுகை செய்தார்கள். ஆங்கில சேனைகள் அம்முற்றுகையை விடுவிக்க முடியவில்லை. இதே சமயத்தில் மேவ்கிங் (Mateking) கிம்பர்லி (Kimberley) என்ற இரண்டு பட்டணங்களும் போயர்களால் முற்றுகை செய்யப்பட்டன. இச்சமயத்தில் ஆங்கில ராஜாங்கத்தார் ஒரு பெரிய சேனையை போயர்களுடன் போர்புரிய தென் ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார்கள். ஆப்கானிய யுத்தத்தில் வெற்றியடைந்து கியாதி பெற்ற வீரரான ராபர்ட்ஸ் (Roberts) இச்சேனையின் தலைவராய் இருந்தார். இவருக்கு உதவி செய்ய ஸூடானை ஜயித்த வீரரான கிச்சனர் (Kitchener) அனுப்பப்பட்டார். போர்த்திறமை வாய்ந்த இவ்விரு தளகர்த்தர்களும் கேப்காலனியிலிருந்து ஆரஞ்சு சுயேச்சை நாட்டுக்குள் ஒரு பெரிய சேனையுடன் சென்று, போயர்களைத் தோற்கடித்து, ப்ளோயம்பாண்டின் (Bloem-



fontein) என்ற அதன் பிரதான நகரைக் கைப்பற்றிக்



கொண்டார்கள். பிறகு அவர் அவர்கள் லேடிஸ்மித், மேவ்கிங் பட்டணங்களை முற்றுகை செய்து வந்த போயர் படை

களைத் தோற்கடித்து முற்றுகைகளை விடுவித்தார்கள். பிறகு ராபர்ட்ஸ் பிரபு ஜோஹானஸ்பர்க், பிரிடோரியா (Pretoria) என்ற இரண்டு பட்டணங்களையும் கைப்பற்றிக்கொண்டார். இவ்வாறு ஆங்கிலேயர்கள் எல்லா விடங்களிலும் வெற்றியடைந்தார்கள். ஆனால் போயர்கள் ஆங்கிலேயர்களுக்கு அநேக இடையூறுகளைச் செய்துகொண்டே வந்தார்கள். இந்தப் போர் மகாராணியாரின் ஆட்சியில் முடிவிற்கு வரவில்லை.

எகிப்து:—டிஸ்ரேலி கெடிவ் இடமிருந்து ஸூயஸ் கால்வாய் பங்குகளை வாங்கின பிறகு ஆங்கில ராஜாங்கத்தார் அக் கால்வாயின் அருகிலுள்ள நாடுகளில் தமது பலத்தை அதிகப்படுத்திக்கொள்ள முயன்றார்கள். ஏனெனில் ஸூயஸ் கால்வாயின் வழியாக ஆங்கிலக் கப்பல்கள் இந்தியாவிற்கு எளிதிலும் சீக்கிரத்திலும் செல்லக்கூடும் என்பது பார்லிமென்டின் எண்ணம். அச்சமயத்தில் எகிப்[illegible] கடனாளியாகி தமது நாட்டைச [illegible] ஆட்சிபுரியாமல் இருந்து வந்தார். ஆகவே ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் கெடிவைச் சிங்காதனத்தினின்று நீக்கிவிட்டு எகிப்து தேசத்தில் தங்களது ஆட்சி*யை ஏற்படுத்திக் கொண்டார்கள். எகிப்தியர்கள் (1882) அரபி பாட்சாவின் தலைமையின்கீழ் அயல் நாட்டார்களின் ஆட்சியை வெறுத்துக் கலகம் செய்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் எகிப்து விஷயங்களில் தலையிட்டுக்கொள்ள இஷ்டமில்லாமல் விலகிக் கொண்டார்கள். ஆகையால் ஆங்கிலேயர்கள் மட்டும் அந்நாட்டை ஆளும்படி நேரிட்டது. இதற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் ஒரு சேனையை அனுப்பி கலகங்களை வெகு திறமையுடன் அடக்கிவிட்டு நாட்டை யாண்டு வந்தார்கள். ஐரோப்பியப் பெரும்போர் (1919) முடிந்த பிறகு

* இதற்கு இரட்டையாட்சி (Dual Control) என்பது பெயர்.



ஆங்கில ராஜாங்கத்தார் எகிப்து நாட்டுக்குச் சுதந்தரம் அளித்தார்கள்.

ஸூடான்:—எகிப்துக்குத் தெற்கேயுள்ள ஸூடான் (Sudan) என்றநாட்டை எகிப்து மன்னர் ஜயித்து சிலகாலம் ஆண்டு வந்தார். பிறகு Mahdi என்ற ஒரு மகம்மதியமகானின் தலைமையின் கீழ் அந்நாட்டில் ஒரு கலகம் ஏற்பட்டது. மஹதி எகிப்தியர்களைத் தோற்கடித்து ஸூடான் முழுவதையும் ஜயித்துக் கொண்டு விட்டார். பிறகு (கி. பி. 1884) ஆங்கில ராஜாங்கத்தார் எகிப்தில் கலகங்களை அடக்கியபின் சார்லஸ் கார்டன் என்ற ஒரு தளகர்த்தரை ஸூடானின் தலைநகரான கார்ட்டூம் நகருக்கு படைகளைத் திருப்பியழைத்து வந்து விடும்படி அனுப்பினர். ஆனால் அவர் கெடிவுக்குப் பதிலாக ஸூடானை ஜயித்து ஆண்டு வரலானார். ஒரு சமயம் அவர் கார்ட்டூம் நகருக்குச் சென்றபொழுது மஹதியின் சைன்யங்கள் அந்நகரை முற்றுகை செய்தது. அந்நகரைப் பிடித்த பிறகு அந்த தேசத்தினர்கள் அவரை கார்ட்டூம் (Khartoum) நகரில் சிறையில் அடைத்துவைத்துப் பிறகு கொன்றுவிட்டார்கள். பிறகு ஆங்கிலேயர்கள் ஸூடானை விட்டுச் சென்றுவிட்டார்கள். பிறகு கி. பி. 1898-ல் ஸூடானை ஜயிக்க எண்ணி ஆங்கில ராஜாங்கத்தார் கீர்த்தி பெற்ற கிச்சனர் பிரபுவை ஒரு சேனையுடன் அனுப்பினர். அவர் அம்டார்மான் என்ற விடத்தில் தோற்கடித்துவிட்டு அம்மாகாணத்தையே ஜயித்தார். அதுமுதல் ஸூடான் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாய் இருந்து வருகின்றது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் கல்வி:—தொழிற்புரட்சிக்குப்பின் ஆங்கில வாணிபம் செழித்தோங்கியது. அநேக ஆங்கிலேயர்கள் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி சாமான்களைச் செய்து அயல்நாடுகளுக்கு அனுப்பி வியாபாரம் செய்து லாபத்தை அடைந்து வந்தார்கள். வியாபாரம் பெருகவே சாமான்

களை கடல்தரை மார்க்கங்கள் வழியாய் எடுத்துச்செல்வதற்காக சில நூதனமான விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. நீராவி யின் சக்தியினால் படகுகளும் வியாபாரக் கப்பல்களும் கடல் மார்க்கமாய்ச் செல்லத் தொடங்கின. நீராவியின் சக்தியைக் கொண்டு புகைவண்டிகள் ஓடத்தொடங்கின. ஆகையால் சாமான்கள் பலவிடங்களுக்கும் சொற்ப நேரத்திற்குள் கொண்டுபோகப்பட்டன. புகைக்கப்பல்கள் எப்படி சமுத்திர மார்க்கமாய் வியாபாரம் செய்ய அனுகூலமாக இருந்தனவோ அதேமாதிரி புகைவண்டிகள் உள் நாட்டு வியாபாரம் பெருகு வதற்குச் சாதனமாயிருந்தன. தந்தி, பைஸிக்கில், மோட்டார்வண்டி இவைகள் நூதனமாக இக்காலத்தில் கண்டு பிடிக் கப்பட்டதால் அவைகளும் மேன்மேலும் ஆங்கில வாணிபம் வளர்வதற்கு சாதனங்களாய் இருந்தன.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் அநேக கவிகள் சிறப்புற்று விளங்கினார்கள். அவர்களுள் ஆல்ப்ரெட் டென்னிஸன், ராபர்ட் ப்ரௌனிங், ராஸெட்டி, சார்ல்ஸ் ஸ்வின்பர்ன், வில்லியம் மாரிஸ் முக்கிய மானவர்கள். வசன நடையில் அநேக அருமையான கதைப் புத்தகங்களை எழுதின அநேக கலைஞர்கள் இருந்தார் கள். அவர்களுள் ஸர் வால்டர் ஸ்காட், சார்ல்ஸ் டிக்கன்ஸ், வில்லியம் மெக்பீஸ் தாக்கரே, ஜார்ஜ் மெரிடித், ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் மிகக் கியாதி பெற்றவர்கள். வியாசங்களை எழுதின கலைஞர்கள் தாமஸ் டீகுவின்ஸி, சார்ல்ஸ் லாம் மிகப் புகழ்பெற்றவர்கள். ஜான் ஹென்றி நியூமன், தாமஸ் கார்லைல், ஜான் ரஸ்கின் முதலிய மிகக் கியாதி பெற்ற கலைஞர் களும் சிறப்புற்று விளங்கினதும் இக்காலத்தில் தான்.

கேள்விகள்:—

1. பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் பிரிவுகள் யாவை?

2. போயர்கள் யாவர்? தென் ஆப்பிரிக்காவில் அவர்கள் குடியேறின நாடுகள் யாவை?



3. தென் ஆப்பிரிக்காவில் போயர்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும் எக்காரணத்தினால் ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டது? அப்போரின் வரலாற்றைப் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக?

4. எகிப்து எவ்வாறு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டது?

5. ஆங்கிலேயர்கள் ஸூடான் நாட்டை எவ்வாறு ஜயித் தார்கள்?

---

## அத்தியாயம் 8.

### ஏழாவது எட்வர்ட் (1901—1910)

**அமைதி ஆக்குவோர்:**—இளவரசராய் இருந்த எட்வர்ட் [illegible]யின் மரணத்துக்குப் பிறகு ஆங்கில வேந்தரானார். அப்பொழுது அவருக்கு வயது அறுபது. அவர் தமது தாய்க்கு ஆட்சிபுரிவதில் உதவி செய்துவந்தார். ஐரோப்பிய வேந்தர்களில் அநேகர் அவருடைய உறவினர்களாய் இருந் தனர். அவர்களுடன் எட்வர்ட் சிநேகத் தன்மையுடன் இருந்துவந்தார். அவர் எங்கும் அமைதி பரவுவதற்குப் பாடுபட்டதால் அவரை எல்லாரும் அமைதி ஆக்குவோர் (Peace—Maker) என்று அழைத்தனர்.

**மூவர் நட்பு:**—பால்பர் (1903—1906) பிரதான மந்திரி யாய் இருந்தார். அவர் (1902) ஜப்பான் தீவுகளுடன் ஒரு சிநேகித உடன்பாட்டைச் செய்துகொண்டார். அதனால் பிரிட்டிஷ்காரர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் நட்பு ஏற் பட்டது. மேலும், அவர் பிரான்ஸ், ரஷ்யா தேசங்களுடன் (1904) நட்புச் செய்து கொண்டார். இதற்கு மூவர் நட்பு (Triple Alliance) என்று பெயர்.

**ஜர்மனியின் அதிகாரப் பெருக்கு:**—பத்தொன்பதாவது நூற்றாண்டின் பின்பாதியில் மத்திய ஐரோப்பாவில் ஒரு

பெரிய ஜர்மனிய சாம்ராஜ்யம் ஏற்பட்டது என்றும் அதன் முதல் சக்கரவர்த்தி விக்டோரியா மகாராணியாரின் மூத்த புதல்வியின் கணவரான பிரெடரிக் என்றும் கி. பி. 1870-ல் நடந்தபோரில் ஜர்மனி ஆல்ஸெஸ், லொரெய்ன் மாகாணங்களை பிரான்ஸிடமிருந்து பிடுங்கிக்கொண்டது என்றும் முன்னமேயே கூறப்பட்டுள்ளன. பின்னர் (1879) பிரஷியா ஆஸ்டிரியாவுடன் நட்புச் செய்துகொண்டது. இதையறிந்த பிரான்ஸ் ரஷியாவுடன் நட்புச் செய்துகொண்டது. இதற்குப் பிறகு தான் எட்வர்ட் (1904) பிரான்ஸ், ரஷியா இத்தேசங்களுடன் நேசம் செய்து கொண்டார்.

**வரவு செலவு கணக்கைப்பற்றிய வழக்கு**:—லிபரல் கட்சித் தலைவரான ஆஸ்குவித் துரை (1908) பிரதான மந்திரியானார். அவர் லாயிட் ஜார்ஜ் (Lloyd George) என்பவரை பொக்கிஷத் தலைவராகச் செய்து கொண்டார். பொதுஜன சபையில் (1919) லாயிட் ஜார்ஜ் வரவு செலவுக் கணக்கை அங்கிகரிக்கும்படி கொண்டு வந்தார். அச்சபை அதை அங்கிகரித்து பிரபுக்கள் சபைக்கு அனுப்பியது. அச்சபையினர் அதை அங்கிகரிக்காமல் தள்ளிவிட்டனர். ஆகையால் பொதுஜன சபை கோபங்கொண்டு தமது அதிகாரத்தை ஸ்தாபிக்க நினைத்து சில சட்டங்களை இயற்றியது. (1910) நடந்த பார்லிமென்ட் இலெக்ஷனில் லிபரல் கட்சியினர் அதிகமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த நிலைமையில் எட்வர்ட் மரணமடைந்தார்.

கேள்விகள் :—

1. ஏழாவது எட்வர்டுக்கு 'அமைதி ஆக்குவோர்' என்ற பட்டம் எவ்வாறு தகுதியுள்ளதாகும்?

2. எட்வர்டின் காலத்தில் வரவு செலவுக் கணக்கைப்பற்றி நடந்த வழக்கைச் சுருக்கமாய் எழுதுக. அஃது எவ்வாறு முடிந்தது?



| முக்கிய நிகழ்ச்சிகள். | வருஷங்கள். |
|---|---|
| பதினைந்து என்னும் கிளர்ச்சி | 1715 |
| வால்போல் பிரதான மந்திரியாதல் | கி. பி. 1721 |
| நாற்பத்தைந்து என்னும் கிளர்ச்சி | ,, 1745 |
| முத்திரைக் காகிதச் சட்டம் | ,, 1765 |
| சிறிய பிட் முதன் மந்திரியாதல் | ,, 1783 |
| நைல் நதிச் சண்டை | ,, 1798 |
| அயர்லாந்து இங்கிலாந்துடன் ஐக்கியமானது | ,, 1800 |
| ட்ரேபால்கர் சண்டை | ,, 1805 |
| தீபகற்பப் போர் | 1808—1814 |
| வாட்டர்லூச் சண்டை | ,, 1815 |
| கத்தோலிக் விடுதலைச் சட்டம் | ,, 1829 |
| முதல் பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம் | ,, 1834 |
| பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்தல் | ,, 1846 |
| பொருட் காட்சி | ,, 1851 |
| இரண்டாவது பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம் | 1867 |
| இரகசிய வோட் உரிமைச் சட்டம் | ,, 1871 |
| மூன்றாவது பார்லிமெண்ட் சீர்திருத்தச் சட்டம் | ,, 1884 |
| வரவு செலவு கணக்கைப்பற்றி வழக்கு | ,, 1909 |

---

# X. வின்ஸர் அரசர்களின் காலம்

(கி. பி. 1910 முதல்)

---

## அத்தியாயம் 1.

### ஐந்தாவது ஜார்ஜ் (கி. பி. 1910 முதல்)

**வின்ஸர் வம்சம்**:—ஏழாவது எட்வர்ட் (1910) இறந்த பிறகு அவரது இரண்டாவது புதல்வரான ஜார்ஜ் சிங்காதன மேறினார். அவருக்கு அப்பொழுது வயது நாற்பத்தைந்து. அவர் பட்டத்துக்கு வருவதற்கு முன் ஒரு மாலுமியாக இருந்து வந்தார். ஆனால் அவர் தமது தமயன் இறந்த பிறகு கப்பற் படையினின்று விலகிவிட்டார். அவர் தமது அத்தை மகளான மேரியை விவாகம் செய்துகொண்டார். அவர் தாம் வகித்துவந்த அன்னியப் பட்டங்களை (1917) விலக்கினார்;

அங்ஙனமே தம்முடைய உறவினர்களையும் விலக்குமாறு செய்தார். அன்றுமுதல் தங்களை வின்ஸர் வம்சத்தைச் சேர்ந் தவர்கள் என்று கூறிக்கொண்டார்.



சில சீர்திருத்தங்கள்:—ஜார்ஜ் பட்டத்திற்கு வரும்போது பிரபுக்கள் சபைக்கும் பொதுஜன சபைக்கும் உள்ள வாதம் தீரவில்லை. பார்லிமெண்ட் இலெக்ஷன் (1910) நடைபெற்றது. இப்புதிய பொதுஜன சபை அநேக சீர்திருத்தங்களைச் செய் தது. அது பணசம்பந்தமான மசோதா (Money Bill) வில் திருத்தங்களைச் செய்யவும், அதைத் தள்ளிவிடவும் பிரபுக் கள் சபைக்கு அதிகாரமில்லை என்று தீர்மானித்தது. மேலும், பொதுஜன சபை எந்த மசோதாவை மூன்று தரம் அங்கீ கரித்ததோ அந்த மசோதா பிரபுக்கள் சபையின் ஆமோதிப்பு இல்லாமலேயே சட்டமாகி விடலாம் என்றும், பார்லிமெண்ட் ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் கட்டாயம் கலைக்கப்பட்டு மறுபடியும் தேர்தல் நடைபெறவேண்டும் என்றும் தீர்மானங்



கள் செய்யப்பட்டன. மேலும், (1918) 21 வயதுக்கு மேல் பட்ட ஆண்களும், 35 வயதுக்கு மேல்பட்ட ஸ்திரீகளும் பார்லிமெண்ட் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் வோட் உரிமையைப் பெற்றார்கள்.

அயர்லாந்தும் சுய ஆட்சியும்:—அயர்லாந்துக்கு சுய ஆட்சி அளிக்கவேண்டுமென்று கொண்டுவந்த மசோதா சிலகாலமாக பார்லிமெண்டால் அங்கீகாரம் செய்யப்படாமல் இருந்து வந் தது. (1914) அம்மசோதா மூன்றும்முறை பொதுஜன சபை யால் அங்கீகாரம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு ஐரோப் பியப் பெரும்போர் நடந்ததால் கொஞ்ச காலம் சுய ஆட்சி தடைபட்டு நின்றது. இப்போர் (1919) முடிந்ததும் அக் காலத்தில் பிரதான மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் அயர் லாந்துக்குச் சுயராஜ்யம் அளிக்கும்படி செய்தார். இவ்வாறு அயர்லாந்தில் சுயஆட்சிப் போர் முடிந்து அது இப்பொழுது ஒரு சுய ஆட்சி நாடாக விளங்குகின்றது.

ஐரோப்பியப் பெரும் போரின் சில காரணங்கள்:—ஜர் மனிக்கும் பிரான்ஸுக்கும் (1870) நடந்த யுத்தத்திற்குப் பிறகு, ஜர்மனி மிக அதிகாரம் படைத்த தேசமாக ஆயிற்று. அது தனது வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டும், தனது கப்பற் படையையும் தரைப்படையையும் பலப்படுத்திக்கொண் டும், புதிய பிரதேசங்களில் குடியேறியும், சாமான்களை ஏராள மாய்ச் செய்து அன்னிய நாடுகளுக்கு அனுப்பி வியாபாரம் செய்து லாபத்தை அடைந்தும் வந்தது. இதனால் ஆங்கில வியாபாரம் குறைந்தது. மேலும், ஜர்மனி ஆஸ்டிரியா இடலி முதலிய தேசங்களுடன் நட்புச்செய்துகொண்டு தனது பலத் தைப் பெருக்கியும் வந்தது. இதைக்கண்ட இதர ஐரோப்பிய தேசவாசிகள் அஞ்சினார்கள். ஜர்மனியர்களோ ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை ஏற்படுத்த எண்ணி, போர்க்கப்பல்கள், ஆகா யக் கப்பல்கள், பீரங்கிகள், விஷவாயுக்கள் முதலிய போர்க் கருவிகளைச் சேகரித்து வந்தார்கள்.

ஸராஜீவோ படுகொலை:—இவைகளை யெல்லாம் தவிர இப்போருக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. ஆஸ்டிரியா இளவரசர் ஸர்வியா நாட்டில் 1914ஹூ ஜூன் மாதத்தில் பிர யாணம் செய்யும்பொழுது, அவர் ஒரு முரட்டுத் தனமுள்ள

ஸர்வியனால் ஸராஜீவோ (Serajivo) என்னும் இடத்தில் கொலை செய்யப்பட்டார். இச்செய்தியைக் கேட்ட ஆஸ்டிரியர்கள் கோபம் அடைந்து ஸர்வியாவின்மீது போர் தொடுத்தார்கள். உடனே ஸர்வியாவுடன் நட்புச் செய்துகொண்டிருந்த ரஷியா ஸர்வியாவின் கட்சியில் சேர்ந்து கொண்டது. இதையறிந்த ஜர்மனி ஆஸ்டிரியாவுடன் நட்பு செய்துகொண்டிருந்தமையால் ரஷியாவை ஸர்வியாவின் கட்சியிலிருந்து விலகிக்கொள்ளும்படி கேட்டது. அதற்கு ரஷியா சம்மதிக்காததால், ஜர்மனி ஆஸ்டிரியாவுடன் சேர்ந்துகொண்டு ரஷியாவின் மீது போர் தொடுத்தது. பிரான்ஸ் ரஷியாவுடன் நட்புச் செய்துகொண்டிருந்ததால், ஜர்மனி பிரான்ஸின்மீதும் போர் தொடுத்தது.

ஆங்கிலேயர் போரில் கலந்து கொள்ளுதல்: — ஒரு பெரிய ஜர்மனியப்படை பிரான்ஸின்மீது படையெடுப்பதற்கு பெல்ஜியம் தேசத்தின் வழியாகச் சென்றது. ஜர்மனியர்கள் இவ்வாறு செய்தது ஒரு பெரும் குற்றமாகும். ஏனெனில் ஜர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து இம்மூன்று தேசங்களும் (1839) பெல்ஜியத்தின் சுவாதீன உரிமைகளைக் காப்பாற்றுவதாகச் சம்மதித்து ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டிருந்தன. அதற்கு நேர் விரோதமாய் ஜர்மனி நடந்ததால் அதன் அநீதியான செய்கையைத் தடுக்க (4-8-1914) என்று எதிர்க் கட்சியில் சேர்ந்துகொண்டதாக ஜர்மனியரிடம் ஆங்கிலேயர்கள் தெரிவித்தார்கள்.

லாயிட் ஜார்ஜ் பிரதான மந்திரியாதல்:—இப்போர் தொடங்கும்பொழுது ஆஸ்குவித் துரை * முதன் மந்திரியாய் இருந்தார். பிறகு (1915) அவர் கன்ஸர்வெடிவ் கட்சித் தலைவர்களையும் காபினெட் மெம்பர்களாயிருந்து தமக்கு உதவி புரியும்படி செய்தார். மேலும், அவர் கிச்சனர் பிரபுவை ராணுவ இலாகா மந்திரியாகவும் செய்தார். சில மாதங்களுக்குப்

* இவர் இப்பொழுது 'ஆக்ஸ்பர்ட் பிரபு' என்ற பட்டம் பெற்று பிரபுக்கள் சபையில் ஒரு மெம்பராய் இருந்து சில வருடங்களுக்கு முன் காலஞ் சென்றார்.



பிறகு கிச்சனர் பிரபு ஒரு கப்பற் சேதத்தினால் இறக்கவே, லாயிட் ஜார்ஜ் ராணுவ இலாகா மந்திரியானார். பிறகு ஆஸ்குவித் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். இவருக்குப் பிறகு லாயிட் ஜார்ஜ் (1916) பிரதான மந்திரியானார்.

போரின் வரலாறு:—ஜர்மனியர் பெரிய படைகளுடன் திடீரென்று போர் தொடுத்ததால், நேசக்கட்சியினர் ஆரம்பத்தில் பின்னடையும்படி நேரிட்டது. பிரான்ஸை முதலில் நசுக்கிவிட்டுப் பிறகு ரஷியாவை ஜயிக்கலாம் என்பது அப்பொழுது ஜர்மனியச் சக்கரவர்த்தியாயிருந்த இரண்டா




வது வில்லியமின் நோக்கம். ஆகையால்தான் ஜர்மனியர்கள் பெல்ஜியத்தின் வழியாகச் சென்று பிரான்ஸின் வட பாகத்தின்மீது படையெடுத்தார்கள். பிரெஞ்சு என்ற ஓர் ஆங்கில தளகர்த்தர் ஒரு பெரிய பிரிட்டிஷ்ச் சேனையுடன் பிரான்ஸுக்குச் சென்றார்; அங்கே அவர் தமது சேனையை பிரெஞ்சுப் படையுடன் சேர்த்துக்கொண்டு வெள்ளம்போல் திரண்டுவந்த ஜர்மனியச் சைன்யத்தை மான்ஸ் (Mons) என்னுமிடத்தில் எதிர்த்து நின்றார். ஆனால் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் மார்ன் (Marne) நதிக்கரை வரையில் பின்னடைந்தார்

கள். இதற்குப் பிறகு மார்ன் நதிக்கரையில் ஒரு கடும்போர் நடந்தது. இதற்கு மார்ன் நதிச் சண்டை என்று பெயர். இதில் ஜர்மனியர்கள் தோல்வியடைந்தார்கள். ஆனதுபற்றி அவர்கள் பின்னடைந்து அநேக பள்ளங்களைத் தோண்டிக்கொண்டு, அவைகளுக்குள் இருந்துகொண்டு வெளியே பீரங்கிகளை மட்டும் வைத்து விரோதிகளின்மேல் குண்டு மழைகளைப் பெய்தார்கள். இதற்கு அரண்யுத்தம் (Trench Warfare) என்று பெயர்.

இவ்வாறு மேற்கு ஐரோப்பாவில் அரண்யுத்தம் நடந்து வருகையில் ஜர்மனி ரஷியாவுடன் வெகு கடுமையாகப் போர் புரிந்தது. ரஷியப்படைகள் (1915) தோற்கடிக்கப்பட்டுப் பின்னடைந்தன.

மறுவருஷத்தில் (1916) ஆங்கில அட்மிரலான ஜெலிகோ (Jellicoe) என்பவர் ஜர்மனியக் கப்பற்படையைத் தோற்கடித்தார். அதே வருஷத்தில் ஒரு ஆங்கில சைன்யம் ஸாம் (Somme) நதிக்கரையில் ஜர்மனியப்படை வரிசையைத் தாக்கிப் பின்னடையும்படி செய்தது. இவ்வெற்றிகள் பிரான்ஸை ஜர்மனியரிடமிருந்து காப்பாற்றியதோடு கூட, ஜர்மனியக் கப்பற்படையை வெளியே வரவொட்டாமல் தடுத்தன.

மறுவருஷத்தில் (1917) ஜர்மனியர் கடலின்கீழ்ச் செல்லக்கூடிய கப்பல்களை (Submarines) செய்து அவைகளைக் கொண்டு தமது விரோதிகளின் போர்க் கப்பல்களைக் கடலில் மூழ்கும்படி செய்தனர்; ஆங்கிலேயர்களுக்கு அன்னிய நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களும், போர்க்கருவிகளும் அனுப்பக்கூடாதபடி செய்து வந்தனர். இச்சமயத்தில் ரஷியாவில் ஒரு பயங்கரமான துரைத்தனப் புரட்சி ஏற்பட்டது. ஆனதுபற்றி ரஷியா போரினின்று விலகிக்கொண்டது. பிறகு அமெரிக்கன் ஐக்கிய நாடுகள் இப்போரில் ஜர்மனியருக்கு விரோதமாய்ச் சேர்ந்துகொண்டன. இச்சமயத்தில் பாஸ்ரா (Basra) விலிருந்து சென்ற இந்தியப் படைகள் துருக்கியர்களுடன் மேஸபடோமியா (Mesopatomia)வில் போர் செய்து அவர்களைப் பின்னடையும்படி செய்தன; பாக்தாத் (Bagdad) என்ற நகரையும் கைப்பற்றிக்கொண்டன.



மூன்று வருஷ காலமாய் அரண்யுத்தம் புரிந்துவந்த ஜர்மனியர்கள் அரண்களிலிருந்து திடீரென (1918) வெளிவந்து போர்புரியத் தொடங்கினார்கள். ஜர்மனியப் படைகள் பாரிஸ் நகரை நோக்கி வந்தன. பிரான்ஸை ஜர்மனியர்கள் ஜயித்துவிடுவார்கள்போல் தோன்றியது. இத்தகைய கஷ்ட நிலைமையில் லாயிட் ஜார்ஜ் ஒரு பெரிய பிரிட்டிஷ் சேனையைப் பிரான்ஸுக்கு அனுப்புவித்து, பிரெஞ்சுப்படையும், பிரிட்டிஷ் சேனையும் மார்ஷல் பாக்ஷ் (Marshal Foch) என்ற பிரெஞ்சுத் தளகர்த்தரின் கீழிருந்து போர் புரியும்படி செய்தார். மார்ன் நதிக்கரையில் நேசக்கட்சியினரின் சைன்யம் ஜர்மனியப் படையுடன் போர்புரிந்தும் அதனைத் தோற்கடித்தது. இச்சமயத்தில் போரில் சோர்வு அடைந்த ஜர்மனியர் நேசக் கட்சியினருடன் சமாதானம் செய்துகொள்ள விரும்பினர்.

வெர்ஸெ உடன்பாடு (1919):—நேசக் கட்சியினர் ஜர்மனியருடன் வெர்ஸே (Versailles) என்னும் இடத்தில் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டனர். அதன்படி ஜர்மனி பிரான்ஸுக்கு ஆல்ஸெஸ், லொரெய்ன் மாகாணங்களைக் கொடுத்துவிடச் சம்மதித்தது. ஜர்மனியர் தமது குடியேற்ற நாடுகளை இழந்து விடுவதாயும், தமது சேனையையும், கப்பற்படையையும் மிகச் சிறியதாகச் செய்து கொள்வதாயும் ஒப்புக்கொண்டனர். மேலும், ஜர்மனியர் நேசக் கட்சியினருக்குப் போரினால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடுபண்ணப் பெருந்தொகையைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். இவைகளையெல்லாம் தவிர, இவ்வுலகத்தின்கண் போர் நிகழாது அமைதியே பரவும்படி செய்வதற்காக ஒரு சர்வதேச சங்கம் (League of Nations) ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் சென்ற பத்து வருஷங்களாக எல்லாத் தேசங்களுக்குள்ளும் ஏற்படுகின்ற சகலவிதமான சச்சரவுகளையும் கலந்து ஆலோசனை செய்து தீர்ப்பதற்காக ஏற்பட்ட ஒரு பஞ்சாயத்து சபை போன்றது. இச்சங்கத்தில் நமது (இந்தியா) தேசமும் ஒரு மெம்பராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியப் பெரும்போர் முடிந்ததும் லாயிட் ஜார்ஜ் இந்தியர்கள் அதிக விசுவாசத்துடன் இங்கிலாந்துக்கு பேருதவி செய்ததை உணர்ந்து இந்தியா காலக்கிரமத்தில் சுய ஆட்சியை அடைய எண்ணி ஒரு இந்திய அரசியல் சீர்திருத்த மசோதாவைப் பார்லிமெண்டில் கொண்டுவரும்படி செய்தார். அப்பொழுது இந்தியா காரியதரிசியாயிருந்த மாண்டேகுவின் உதவியால் பார்லிமெண்ட் அம்மசோதாவை அங்கீகரித்தது. இச்சட்டத்தின்படி நமது நாடு தற்காலம் ஆளப்பட்டு வருகின்றது.

தொழிற்கட்சியினன் துரைத்தனம்:—கி.பி. 1921-ல் நடந்த தேர்தலில் கன்ஸெர்வெடிவ் கட்சி பார்லிமெண்டில் பெரும்பான்மைக் கட்சியாக ஆனதால் அக்கட்சியின் தலைவரான சார்ல்ஸ் பாட்வின் பிரதான மந்திரியானார். லிபரல் கட்சித் தலைவர்களுக்குள் அபிப்பிராயபேதத்தினால் விரோதம் ஏற்பட்டு அக்கட்சி பலமற்றுப்போய்விட்டது. தொழிற் கட்சியார்கள் சிறிது சிறிதாக தங்களது அதிகாரத்தை விருத்திசெய்து கொண்டே வந்ததால் பார்லிமெண்ட் மகாசபையில் தொழிற்கட்சி எதிர்க்கட்சியாக ஆயிற்று. பிறகு சில சமயங்களில் கன்ஸர்வெடிவ் கட்சியும் இன்னும் சில சமயங்களில் தொழிற்கட்சியும் பார்லிமெண்டில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்துகொண்டு வந்தன. சென்ற இரண்டு வருடங்களாக தொழிற்கட்சியினர் பார்லிமெண்டில் பெரும்பான்மைக்கட்சியாக இருந்துபிரிட்டிஷ் தீவுகளின் அரசியலை நடத்திவருகின்றனர். அக்கட்சியின் தலைவரான ராம்ஸே மாக்டனல்ட் பிரதான மந்திரியாக இருந்து வருகிறார். அவர் லிபரல் கட்சியைச் சேர்ந்தவரும் சட்ட நிபுணருமான ஸர். ஜான்ஸைமன் என்பவரைத் தலைவராகவைத்து ஒரு கமிஷனை இந்தியா சுயஆட்சி பெற்று பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்திற்குள் சிறப்புற்று விளங்கும்படி செய்ய எண்ணி நியமித்தார். அந்தக் கமிஷன் நமது நாடு சுயஆட்சியைப்பெற சில சிபார்சுகளை செய்திருக்கின்றது.

முற்றிற்று.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.